அரியக்குடி இராமானுஜதாசர்

சரிதை

ஒ22:4196
N1J
120973

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அரியக்குடி

# இராமாநுஜதாசர்

சரிதை.

---

இஃது

அரியக்குடி ஸ்ரீமாந்

சா. தி.

அரங்கநாதச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

அவர் குமாரர்

சா. இ. ரெ.

இலக்குமணச்செட்டியாரால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1910.

626 / IV

120973
Q22:4196
N10
922.945
2149

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம

அரியக்குடி

# இராமாநுஜதாசர்

சரித்ரம்.

இஃது

அபிமாந ஸ்ரீமாந்

கா. கி.

அரங்கநாதச்செட்டியாரவர்களால்

இயற்றியது

அவர் குமாரர்

கா. கி. மீ.

இலக்குமணச்செட்டியாரால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பித்தது.

1910.

676
1910

ஸ்ரீசைலவம்ச-புலிக்குன்றம் வங்கிபுரம்

# திருமலாசாரியார் இயற்றியது.

MADRAS

[illegible] (௨)

[illegible] (௩)

[illegible]

[illegible] (௪)

[illegible] (௫)

[illegible] (௬)

[illegible] (௭)

[illegible] (௮)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# முகவுரை.

பாண்டிநாட்டிலே, நகரத்தார்களாகிய வணிகர் வசிக்கும் பிரபல நகரங்களிலொன்றாகிய காரைக்குடியை அடுத்துள்ளதும் அரியக்குடி என்று வழங்குவதுமாகிய திருவரியை என்ற க்ஷேத்திரமானது, ஸ்ரீயபதியான திருவேங்கடமுடையான் செந்தமிழ்நாட்டார் உய்யும்படி திருவுளமுகந்து நித்யவாஸஞ் செய்தருளும் திவ்ய தேசமாய்ப் பிரசித்தி பெற்றது. இத்தலத்தில் திருக்கோயில்கொண்ட எம்பெருமான் இஷ்டவரதராய் எழுந்தருளியிருத்தலால் நகரத்தார்களால் மிகவும் ஆராதிக்கப் பெறுதலோடு, திருப்பணிகளும் உத்ஸவாதிகளும் சிறக்க நடத்தப்பட்டும் வருகின்றன. இவ்வூரில் வசிக்கும் வணிகருள்ளே, கல்வியுஞ் செல்வமும் நிரம்பித் திருமால்பத்தியிற் சிறந்து விளங்கும் செல்வர் பலரைக் காணலாம். இத்தகையோரில், யாவருங்கண்டு அதிசயிக்கத்தக்க குணஞ் செயல்களுடையராய், ஞானவைராக்கியங்கள் நிரம்பிய பக்தசிரோமணி ஒருவர் சமீபகாலத்தே விளங்கினர். அவரே, இந்நூலின் நாயகர்; இராமாநுஜதாஸர் என்று வழங்கிய இப்பெரியவர் பரமபதம்சென்றது சிலகாலத்திற்கு முன்னரேயாயினும், இவரது ஞானவைராக்கியாதி உத்தம குண விசேஷங்களை அப்பக்கத்தவர் இன்றும் மறந்தவரல்லர். தாஸரது அருமை பெருமைகளை அரியக்குடியில் நேரிற்கண்டு களித்தோரில் யானும் ஒருவனே. இப்பெரியாரது வாழ்க்கை வைபவங்களையெல்லாம் இந்நூல் நன்கெடுத்துக் கூறுகின்றது. இந்நூலியற்றியவர்:— அரியக்குடிக்கோர் சிரோபூஷணமாய் அதனை அலங்கரித்துவந்த கல்விச் செல்வரும் பிரபுவுமாகிய ஸ்ரீமான், சா. கி. அரங்கநாதச் செட்டியாரவர்களே. அந்தோ! அருங்கலைவினோதரும் பெருங்குணக்கடலுமாகிய செட்டியாரவர்களை நாம் இழக்க நேர்ந்து நெடுங்காலமாகவில்லை! செட்டியாரவர்களது அருமை பெருமைகளை நேரில் அறிந்த தமிழ்மக்களெல்லாம், அவர்களது பிரிவு தம் நாட்டிற்கு நேர்ந்த பெருந்தநஷ்டமாகவே கருதித் துக்கிக்கின்றனர். அவர்களால் இயற்றப்பெற்ற இந்நூல் சொற்செறிவும் பொருட்பொலிவும் வாய்ந்த சிறிய வாக்காய்த் திகழ்தலோடு, தாஸரது பெருமைகளைக் கூறுமுகத்தானே ஸ்ரீ வைஷ்ணவதர்சனத்தின் தத்துவ நுண்பொருள்கள் பலவற்றை

நன்கு விளக்குவதுமாய் உள்ளது. இந்நாவிற்கண்ட நாடு நகர வருணனைகளும் ஆழ்வார் வைபவச் சுருக்கமுதலியனவும் மேற்கூறியவற்றுக்குத் தக்க சான்றாகும். சுருங்கவுரைக்குமிடத்து, செட்டியாரவர்களது தமிழாராய்ச்சித் திறனையும் சமயஞான வன்மையையும் இந்நூல் விளக்குதலேயன்றி, சிறியஒழுக்கநடையையும் உயர்ந்த செய்யுள் நடையையும் இது புலப்படுத்த வல்லது என்னலாம்.

செட்டியாரவர்களால் பல்லாண்டுகட்கு முன்பே பாடப்பெற்ற இச்சரிதை இப்போது வெளியிடப்பட்டிருப்பது, நமக்கு மகிழ்ச்சி விளைப்பினும், அவர்கள் அந்நூல் அச்சிடப்பட்டிருப்பதைக் கண்டு களிக்காமற்சென்றது பெரிதும் விசனிக்கத்தக்கதாம். இவ்வாறே அரியக்குடி மும்மணிக்கோவை, இராமாயணசுருக்கார்த்தசங்கிரகம் என்னும் வேறிரண்டு நூல்களும் அவர்களால் முன்னரே இயற்றப் பெற்றுள்ளன. ஆயினும், செட்டியாரவர்களுடைய அருமைப் புதல்வர் ஸ்ரீமாந் லக்ஷ்மணச் செட்டியாரவர்கள் அவற்றை இப்போது விரைந்து அச்சிட்டுவருதல் மகிழ்ச்சிதருவதாம். இவர்கள் ஆண்டிளையராயினும், "மகனறிவு தந்தையறிவு" என்ற முன்னோர் மொழிப்படி, தம்மைப் பெற்ற தந்தையாரைப்போன்று குணவிசேடங்களும், தமிழ்க்கல்விச் சிறப்புமுடையராய் விளங்குதல் அரியக்குடிக்கே ஒரு பெருமையாகும். தேசத்தின் கைத்தொழிற் சிறுமையை நோக்கி, மலைநாட்டுப் புனலூரிலிருந்த காகிதத் தொழிற்சாலையைக் கிரயம்வாங்கி அதனை நம்மவர்பொருட்டு ஊக்கத்தோடும் நடத்திவந்த தம் தந்தையாரைப் பின்பற்றி, லக்ஷ்மணச் செட்டியாரவர்கள் அக்கம்பெனியை இப்போது நடத்திவருவதோடு, தம் தந்தையாரியற்றிய அரியக்குடி மும்மணிக்கோவையை அப்புனலூர் மில்லுக்காகிதத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தியிருப்பதும் யாவரும் புகழத்தக்கது. இவ்வாறு, தேசாபிமானமும் பாஷாபிமானமுங்கொண்டு நிற்றலுவரும் ஸ்ரீமாந் லக்ஷ்மணச்செட்டியாரவர்கட்கு நீடிய ஆயுளையும் அறிவாற்றல்களையும் கொடுத்தருளுமாறு திருவரியையிற் சேவைகொண்டருளும் ஸ்ரீநிவாசப்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்

1—11—10. மதுரைத் தமிழ்ச்சங்கம் }

ரா. இராகவையங்கார்.
"செந்தமிழ்ப்" பத்திராசிரியர்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# சிறப்புப்பாயிரம்.

## இந்நூலாசிரியரின் ஆசிரியரான அரியக்குடி ஸ்ரீமத்: ஆ. கிருஷ்ணமாசாரியாரவர்களியற்றியவை.

உலகிய லொருவிப் பாஞ்சுடர் வடிவா மொருதிரு மாலியல் புணருந்
தலைமரு குணரா மாநுஜ தாசர் சரித்திர வமுதைநற் றமிழாற்
புலவர்கள் ருசிப் புகழுநன் கவிதான் பொருவிலாக் கிருட்டின வணிக
னலமுற வுதவு மரிநறு மரங்க நாதப்பேர்ப் புலவர்கோ மானே. ()

வேறு.

மருவாரு மினியமது வுடனுள் பாலும்
வாரிபமு தங்கரும்பு மருவிக் கூடி
யொருவாது தினந்தினமு மகிழு வண்ணஞ்
சொருங்குபடர் செயலதனை யுணர்த்தி நேர்ந்து
தருபோத கதைமொழியத் தரணி மீது
தாசனிந் திரமெனப்பேர் தந்து தன்னான்
றிருவாழு மரியக்குடி யினிது வாழ்வோன்
சீரங்க நாதனெனச் சிறந்துளானே. (உ)

## சென்னை கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்: கா. ஸ்ரீ. கோபாலாசாரியாரவர்களியற்றியவை.

தென்றிசைவேங் கடமென்னு மரிவைக்க ரத்தாரத் தெய்வமென்ன, தென்றிசைதொ டாசமேறும் பெரியவர்மெய்ச் சரிதையையிந் நிலத்தோர் தேர்வான், முன்றிசையோ டியன்மருவு தாசர்புராணம்மெனுமோர் தூய்நூ றன்னு, னன்றிசைய மறைப்பொருளிலுட்பமெலாஞ் செந்தமிழி னவின் றிட்டானால். (க)

இன்னநல புலமைதிரம் புகாரி தனையொர்பரி சியம்பக் கேண்மின், மன்னியவான் மீகசருக் கார்த்தசங்கி ரகமெனுநூல் வண்டமிழ்க்கட், சொன்னவன்சீ ரியையாகர்ச் செல்வனென்போல் வார்க்கெளியன் ஆய்மைம் நாளு, மன்னியமெய் சேரங்க நாதனிதப் புவிமிசையே வாழ்க நன்றே. (உ)

செங்கோட்டை,

ஸ்ரீமத்: சுப்பராய ஐயரவர்களியற்றியது.

மாசறவிப் பூவில்வந்து மாதவன்றான் மன்னுமரி
தாசர்சரி தந்தமிழிற் றந்தனனே—னேசமிலாக்
கூரரங்கஞ் செற்றதிருக் கோபாலன் பத்திநிறை
சீரரங்க நாதனெனுஞ் சேய். (௧)

---

வலயமாநகரம் விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்
போதகாசிரியராகிய
நெடுங்குவை திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்களா
லியற்றப்பெற்றன.

மணிநிலாந் தரங்கப் பெருங்கடல் குடித்த மாண்புமை தவக் கடலினைய, பணிநிலாம் புலவர் தொகுமவைக் களத்துப் பரன்றிரு மாலெனல் விளக்கிப், பிணிநிலாஞ் சனனத் தொடக்கொடு சூனாப் பெய்தபொற் கிழிபறுத் திட்ட, தணிநிலா மனத்துப் பெரியரைப் பேணுந் தென்னவ னன்னர்கொ ணாட்டில். (௧)

ஓங்கிய விழுச்சீர் வடமொழி தமிழெனு மயிரு மொழிக் கொரு வரம்பாய்த், தீங்கற வெவர்க்குந் திருவரு ணீர்க்காய்ச் செங்கண்மா லுறைந்தருள் சீர்த்தாய்ப், பாங்குற வொளிரும் வேங்கட மெனச்சொல் பதிநின் றகிர்புயிர்க் களிப்பான், றுங்கிய திகிரி வளைக்கையெம் பெருமான் றங்கருள் பொங்குவ தொருநூர். (௨)

அன்னதற் பதிப்பே ரரிவையென் பதுவா மாவயிற் புகார்ககர் தணந்து, மன்னிய வணிகர் மரபினு ளவர்க்காம் வனத்தனி யொன் பதின் வடுகன், றன்னுடைக் கோயிற் றெய்யிருர் வகுப்பைச் சார்ந் தவ ரொர்ந்தறற் குணத்தா, லென்னரும் புகழ விளங்குளிட் டினங்க விப்பரே ரெப்பருந் தவத்தால். (௩)



தோன்றினை ரொருசே யெனப்பமற் றவன்சீர் சொற்றிடன் மற் றரி தரிதாற், றேன்றிக ழலங்கற் றுழாய்முடிப் பரமன் சேவடிக் கடியவர்க் கடிமை, சான்றவ ரிக்குத் தரணியோ ரெவர்க்குந் தாயி னு மினியதன் னளியோன், ஆன்றசீர் விசிட்டாத் துவைதசித் தாந்த மறிந்ததிற் செறிந்தசெம் மனத்தான். (௪)

தாழுகொள் கவுட்டா மொருதனி கரியாத் தன்னிலை யிந்நில மளந்து, தேறிய வுணர்த்துந் திருவளர் மார்பன் றிருமண்முற் காப்பினி தணிந்து, வீறுறத் தனரா மாதுச தாச னெனப்பலர் விளம்பிட மேலாம், பேறுகொள் பரம வைணவ ளுகிப் பெரியவி டடைந்தன ன் மன்றே. (௫)

ஆங்கவன் பெருமைச் சரிதையைத் தமிழா லறைகென யாவரும் வேண்ட, வாங்கிதன் மேலோர் பெறும்பய னின்றென் றுன்னு பு மன்னயாத் தளித்தான், றுங்குசீ ரிராமா யணசருக் கார்த்த சங்க்ரகந் தமிழ்க்கினி துதவி, தீங்கவில் திருவொ டரியைவா ழரங்க நாதனெ னிறைகுணத் தவனே. (௬)

---

௬

மதுரை வித்தியாபானுப் பத்திராதிபர்
மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களியற்றியவை.

---

நன்னரி னயப்பதியா நாட்டமுறும புலவர்பலர் நாளும் வாழும், பொன்னகர மெனுமரிவைச் செழும்பதியில் வணிகர்குலம் பூத்துப் பொற்ப, மன்னுதிருட் டிணநாமக் கற்பகத்தின் றவப்பலனா வந்த தோன்றல், தென்னரங்கன் கழன்மறவா மன்னரங்க நாதனெனுஞ் செல்வச் சேயான். (௧)

இருநிதிய மகத்தெய்திப் பூதலத்து பேரனென விருப்போ னே ற்றூர்க், கொருநிதியை யளித்துமனங் களித்துறல்போன் மாணவக ருவந்து கல்விப், பெருநிதியி லிலக்கியமு மிலக்கணமுஞ் சாத்திர முமு பெறப்போ திக்குங்,குருநிதி கலாநிதிநேர் குளிர்சுமுக சமுகமய குணப்பொற் குன்றம். (௨)

திருக்கருணை வான்மீகி மொழிந்தவிரா மாயணத்திற் றிகழு
மொவ்வோர், சருக்கமுறுங் கதைமுழுதுந் திரட்டிவடித் தோரொரு
செந் தமிழ்விருத்த, வருக்கமுள சருக்கார்த்த சங்கிரக நூலொரு
வாழத் தந்தோன், பெருக்கமுறு தன்மரபின் முன்மருவிப் பல்கலை
யும் பேணி யோர்க்கே. (௩)

திருமாலுக் கடிமைசெய்யென் றுரைத்தமுது மொழிப்படியே
சிந்தை செல்லத், கருமாலைக் கடந்தனந்தாழ் புதுமிகுந்திப் பாசுரங்
களிக்க வாழும், பெருமாண்பி னொருதாசர் சரித்திரமா வியற்ற
மனம் பேணிச் செல்வந், தருமாவின் றிறனுசான் றகையாழ்வார்
கலனமுத சார மென்ன. (௪)

எல்லவரு நாடுகக ளொனுமரிமை நாடுகக பேற்ற முழ்மை
மல்குமர புன்மைசே வகமாண்பு தாசர்புவி மயங்கத் தோன்ற
லொல்சமயத் தெருட்சிகுரு வைப்பணிதல் குருவருளை யுறவு
னல்வகைய தல்யாத்திரை சக்குசக்க ராங்கனத்தை நன்னு மாட்சி

மந்திர ராதனச்சீ ராழ்வார்கள் மாட்சிபதி பதியார் சீர்த்த
முந்துசர ணாகதிகைங் கரியவகை பரமபத முதவாழ் வென்ன, வித்
வகை பதினைந்து சருக்கமா யிரத்திருபத் தெட்டுப்பாவா, லைந்த
மால் விசிட்டாத்து விதநெறியின் முறைமுழுது நன்கு வாய்த்தே

ஒருங்கமையும் படிபாடி மாலடியா ரெல்லவரு முவப்பத்
தான், பெருங்குணமா மிவன்புதல்வ னெல்லார்க்கு முபகாரப் பெற்
றி வாய்ப்பத், தருங்கவிகைக் கரமுடைய னெனக்கினிமை தரு
நேயன் றமிழ்ப்பா வாணர், நெருங்கமகி ழிலக்குமண பூமனிதை
யச்சியற்றி நிலைப்பித் தானால். (௭)

உள்ளமுத மிகப்பெருகத் தெள்ளமுத கவிபகர்வோ னுவாமுற்
றோன் றித், துள்ளமுத லையத்தடிந் தாட் கொள்ளமுதல் வருமுத
ல்வன் றுணைத்தாண் மீது, பள்ளமுத கம்பகல்போற் றெள்ளமுத
லன்பையுய்ப்போன் பாரியாதி, வள்ளலென வருமாறுக நாதகவி
நாவலவன் வாழி வாழி. (௮)

---



மதுரை தேவஸ்தான கமிட்டியார், அமராவதிபுதூர்,
வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார
வர்களியற்றியவை.

இனிக்குநறுஞ் செழுந்தமிழின் வடவெல்லைக் கல்லைநீர்த் திணை
யொன் றின்றிக், தனிக்குமுய ரியதிருவேங் கடமுடைய நெடுமா
யன் றன்னைக் காணச், சனிக்குமுயி ரனைத்தும்வழி வருந்தமெலாந்
தவிர்த்துறினுந் தான்வைத் தேறப், பனிக்குமெழு மலையேற்ற மரி
யதெனப் பெரியவுளம் பரிந்து மாதே. (௧)

தமிழ்நாடு புரிதவத்தாற் பரிவாரம் யாவுமுடன் சார வோவா,
திமிழ்நீடு குணகடற்கு மேதினிவின் மரைக்காதத் திரைக்குநீரு
க், கமிழ்தேயுஞ் சிறிதொவ்வா மதுரகதியின் வடகரையி லம்பொற்
காத்தி, யுமிழ்மாடஞ் செறிபரியைத் திருப்பதியில் வேண்டிவந்த
னுறைவ னம்மா. (௨)

அந்தநகர் வணிகரிலே முகப்பெருந்தி குலைப்பொருந்தி யமரு
ந்து சீர்த்திச், சந்தமலி பெருங்குடியிற் றெய்வநா யகன்மரபு தழை
ந்து வாழ, சிந்தையுற பேரடிமைத் திறனேயோ குருபுகொடு செ
ந்நா வத்து, வந்தவிதனைப் பெரியசேவகனென்பான் றோன்றியிசை
மன்னி னானால். (௩)

பின்பு சொலற் கருந்திறிய திருவடியே யெனப்பணிசெய் பெ
ரிய ஞான, வன்புவடி வுடைத்திறிய சேவகப்பே ரனுப்பிறந்தாங் க
ழியா றற்றான், முன்புவரு மிவனையர் பலர்துலங்கத் திருட்டினனு
முடிவி லாதான், அன்புதவி லக்குமணை நாமநல மிக்கையென வயங்
தொழுக்கந் தானால். (௪)

இவன்றருமஞ் செறிபுயிரா மநாதநா சய்யேர்வாய்த் திணைவி
லாமா, தவன்சாரு கதிவழியோ யழியாது திருநாடு சார்ந்து வாழ்வ,
னவன் செயலில் லார்தாச சரிதவியன வழிதான மமைத்து நாளு
நவன்செய்கொழுஞ் செழுந்தமிழி னருந்தமிழ்தின் செய்யுளினை
... னானால். (௫)

தேறும்வழி யெனப்புகல்வ ரிலக்கியத்துக் குதுகற்றோர் திகைப்
பொன் றின்றி, யேறும்வழி யெனப்புகல்வ ரிலக்கணத்துக் கதுவல்
லோ ரிணையில் வாய்மை, கூறும்வழி யெனப்புகல்வர் வைணவர்க்கவ்
வாகமத்தே குறின் பத்தி, யூறும்வழி யெனப்புகல்வர் சோகமுறு
பா த ரொருக்கு மன்னே. (௬)

வன்செய்தா னித்தகைய பேரொளிய காவியத்தை யெனிற்சி
தப்போ, தவன்செய்தான் புவியினையா தவன்செய்தான் சவியினை
மற் றவைபோ லச்சூழ்க், திவன்செய்தான் றனித்தெனவக் குலத்து
வரு திருவடிணைப்பே ரிப்ப னெப்பி, றவன்செய்தா னதனுல்வந்
தவனரங்க நாதனென்க தான்செய் தானே. (எ)

---

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

ஸ்ரீராமஜயம்.

# இராமாநுஜதாசர் சரிதை.

## பாயிரம்.

### கடவுள்வாழ்த்து.

செய்ய சலசத் திகழ்திருவின் றிருத்தாட் பூவி னலத்தகத்தி
னைய சுவட்டி னெளிவிரவி யழகு செய்யு மணிசிறந்து
வைய மடங்க வுளவெல்லா மன்னிப் பொலியு மங்கலமாந்
துய்ய தாய வொப்பில்பரஞ் சோதி தினைத்து தொழும்பொருளே.

வேறு

மின் னுன் மேக மெனமிளிர் மேனியான்
றன் னுள் யாவுந் தரிக்கும் பரம்பொரு
ளொன் னு ளொன்று மிருப்பவ னீறிலான்
பொன்னந் தாமரைத் தாட்டுணை போற்றுவல்.

வேறு

புண்டரீ காக்க னென்றும் பொறிபுரி மணாள னென்று
மெண்டரு குணங்கள் மூன்றி னிலையுமுற் குணத்த னென்றுங்
கண்டபில் பிரம மென்றுங் காரண னுலகுக் கென்றும்
பண்டைநான் மறைக ளோதும் பரம்பொருட் கடிய மென்றும்.

### திருமகள்.

பதுமும் பொருந்தும் பேற்பரனை யகலா தகலப் பரப்பி லுறைந்
திதமே நோக்கி யகிதமொழித் தெய்தி னுரை யினிதோம்பும்
விதமே பகவன் றனக்கோதி மேவு மோக்க மளிப்பிப்பாள்
பதமாக் துணையே புணையாகப் பற்றிக் கடத்தும் பவக்கடலே.

### நம்மாழ்வார்

போதிமலர்ப் பிண்டிநீழல் பொருந்தியற மெனவுரைத்தோர்
பொலாதிந்த, மேதினிசெய் தவமாகப்பற் றவிடன்மெய்ப்பொருளைப்

பற்றலரேனே, இதில்பெரு மகிழ்கொள்ள தெரிவிப்பான் திருப்புளி
கீழ்த் திருந்த மேவி, யாதியிறை யகமருவி யரியமகிழ் கொண்மா
னடிகள் போற்றி.

அவையடக்கம்.

ஒப்பில் பத்தி நிறைஞான முடையார் கவிஞர் பலராலுஞ்
செப்ப அரிய புகழ்த்தாசச் சரிதை சிறிதும் பத்தியுடன்
தப்பின் ஞான கவித்தலைக்க டழுவேன் புகன்ற தனைப்புலவர்
செப்ப மமைய நோக்கியிறை செய்கை வியந்து மகிழ்வுப்ப.

பாயிரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௧.

## ௧ நாடுநகருரைத்த சருக்கம்.

நாடு.

பொற்புறு *படைப்படைப் புனிதர் போலெழுந்திவர்த்
தற்புதக் கடற்படிந் தம்புள் †ளம்புதந்
தற்பொரு மிராகவ னிறத்தைச் சார்ந்துதன்
வெற்பினை நோக்கிமேற் கெழுந்த விண்ணினே. (௧)

வேனிலே நோக்குறு விழுமி துன்செய
லானவர் நெனகை யாடல் போன்மினி
நுனமா மினியுறி லென்று ருத்தல்போல்
வானிடை யதிர்ந்து‡செல் வழங்கி நின்றதால். (௨)

எந்தையவ் விராகவ னெய்து §மாநிறம்
வந்தது ஒற்றமை வாய்த்த தாமெனச்
சந்தன மலையமாச் சயில மீதுவான்
இந்திய தாரைகள் செறிந்த திக்கெலாம். (௩)

வள்ளலா மிராமனற் கருணை வாய்த்துளாற்
றுள்ளுறு தாபங்க ளொதுக்கு மாறுபோற்
கொள்ளையின் வருடத்தாற் கோடை போய்க்குளிர்
புல்லொடு மரங்களும் ||பொழிலும் போர்த்தவால். (௪)

* படைப்படை - அலாயுதம். † அம்புதம் - மேகம். ‡ செல் - மேகம். § மாநிறம் - கரியநிறம். || பொழில் - பூமி.



ஆரமார் பற்பல்சோ டன்ம மாமணி
சேரயிக் கொலியுறத் தென்றல் வெற்பிழிஇ
வார்தரு மருவியம் மலையின் *வட்டையாற்
பார்வரு †வாருவைப் பாண்மை பேயுந்துமால். (௫)

ஒழுகிய வருவிகள் கலவி யொன்றிடுஞ்
றுதிவிரைப் பொருநையா றுதி யெங்கணுந்
செழியவாச் செய்யுமித் தேசத்துச் செம்மையைச்
செழியனென் றரசனுக் கேற்றிச் செப்புவார். (௬)

வருபுன லேக்கியுள் மகிழ்வின் மன்னர்க
டருமொலி நதியொலி தாழ வோங்கின
விருகரை யினுமலை பெற்று மாமணி
விரியுமிக் கரைநிரை விளக்கங் காட்டுமால். (௭)

பொருநியமா முமயிடைப் பிறந்து பொங்குறீ
ரதிகமார்க் கலியுற்றி யண்மி னூர்வெண்மை
விதியொடு போக்கியும் விளங்கு மிக்கதி
லதியுயர் முடிப்பிறந் தாரி நேருமால். (௮)

பிறந்தவில் விடைப்பொருள் பேணி யுள்ளுநர்
திறந்தரு முனிவுறுன் விளக்க மீறியவுந்
திறம்பெறக் கொடுகட லன்பற் சேர்தலான்
மறம்பயில் விழியினர் வழக்கங் காட்டுமால். (௯)

தீர்சிறை செய்தலா னிமிரு மோனதும்
பாரிற வழுதலாற் பட்ட மோனதும்
மேர்பாம் பியற்றலை வியது மோனதும்
வார்கட லோனதை மாய்க்கு மோனதே. (௰)

வேறு.

அங்க ‡ணாங்கனை மாய்கந்து நல்வினை
செங்கை கொண்டு §செறுவிற் செறித்துமா
னெங்க ளும்பணி யிந்திர தெய்வதந்
துங்க மெய்த்தொழுவர் தொழுவரே. (௧௧)

* வட்டை - வழி. † வாருவை - வெள்ளாவி. ‡ அங்கணாங்கனை ஆய்தக் - சேற்றின் செவி ஆராய்ந்து. § செறு - வயல்.

வேறு.

உத்தம விலக்கணத் துயர்ந்த தீர்த்தன்பாற்
பத்தியு ஞானமும் பல்கி யோதுவான்
வித்தக ரொடொரு மேற்கொ ளாறுபோ
லெத்துழு வயலிடை நாறு *வீறுமால். (கஉ)

உளமகிழ் முழக்கிய ருழுநர் நாறுகொண்
டிளநிலாப் பணிலமுத் தீனுஞ் செய்யிடை
வளமுற நட்டனர் வலிய கோட்கள்சென்
றளவிய நாட்டிற னமைய நோக்கியே. (கங)

தங்கள்கண் முகத்தினை தந்த வாயினும்
பொங்குநல் லாதியம் போக்கல் செய்வரோ
கொங்கலர் தாமரை குவளை யாதிய
பங்கய மலர்களைப் பறிப்பர் பேதையார். (கச)

கன்னலின் மதுவினைக் கனியின் தேறலை
யுன்னதக் கோட்டிரு ளொழுக்கி னேந்துநீர்
பன்னிசை வண்டொடு பரந்து பாய்தலிற்
செந்நெலா காயமீச் செறிய வோங்குமால். (கரு)

நீடிய †சொற்பயிர் நிரைத்த ‡செங்குரல்
கோடிபொல் லொலியுட னுடங் கொள்கைநீ
ரூடுறு மலர்மண முவந்து நன்றெனு
வீடுறச் சிரந்துளக் கின்ற தேய்க்குமால். (கசு)

கண்ணுகர் மள்ளர்கள் களிப்புக் கைம்மிகத்
திண்ணிய குயங்கொடு குறைத்த செந்நெலைக்
கண்ணுதல் வரைத்திட மேருக் காட்சிபோன்
மண்ணிடைப் போர்பல வயங்க வேய்ந்தனர். (கஎ)

போரினைக் களம்பெறப் பரப்பிப் பொங்கிருட்
பாரிய கடாக்களாற் §பலால நீத்தநெற்
றூரியுண் மன்னிறை தந்து பண்டியி
னூரிடை நிலமுது குளக்க வுய்ப்பரால். (கஅ)

* வீறும் - செருக்கினவரும். † சொல் - நெல். ‡ செங்குரல் - செவ்விய கதிர்கள். § பலாலம் - வைக்கோல்.



சொல்லிய கடவுளர் பிதிரர் சுற்றத்தார்
கல்வியல் விருந்தினர்க் களித்து நான்குகூ
றெல்லுடையோர் கூறுதா முவந்து கொள்ளினு
மெல்லையில் செல்வமிந் நாட்டி லேயுமால். (ககூ)

வேறு.

சோலை மாமலை தோறும் *புளினமே
சால வார்நதி தங்கும் †புளினமே
சீல மைந்தர்கள் செங்கை யிராமனே
யேலு மாதர் முகங்க ‡ளிராமனே. (உ0)

மாலை கோக்கி வளைகுவர் மாலையே
காலை மீதிவர் தாழ்வது மாலையே
பால விற்பனர் பாடுவர் மாலையே
மூல நீக்க முடிப்பது மாலையே. (உக)

மாதர் கோதை வளைகுவர் கோதையே
காது விரர்கைக் கொள்வதும் §கோதையே
யோது மாண்ப ரொழிக்குவர் ||கோதையே
வீதி தோறும் விழாநெருக் கோதையே. (உஉ)

இயங்கு மின்னிடை யேய்வள் கமலையே
நயங்கொண் மைந்தர்சொ ¶ள்ளரில் கமலையே
முயங்கு விரர்தோள் *முன்னில் கமலையே
வயங்கு வார்குழன் மாறுங் †கமலையே. (உங)

வேறு.

வயலுறு சங்கத் தானும் வாவிதோய் பதுமத் தானு
மயலுறு தருக்க ளானு மாளிரைப் பெருக்கி னானு
மியலுறு நிதியந் தாரு சுரபிகள் பலவா யேய்ந்த
செயலுறு வானு டென்னச் செப்பலாம் பாண்டி நாடே. (உச)

* புளினம் - புள் இனம். † புளினம் - மணற்குன்றுகள். ‡ இராமன் - இராவுக்கு அரசனாகிய திங்கள். § கோதை - விரற்றோற்கட்டு. || கோதை - குற்றத்தை. ¶ கள்ளரில்கமலை - களவொழுக்கில்லாக்கமலை, கலை. * முன்னில் கமலை - மலை. † கமலை - கம், அல்லது மேகத்தையும் இருளையும்.

## வேறு.

சேவிருக்குந் *திருக்கினா மகளிரொடு மைந்தர்களுஞ் சிலம் பாற்றுடி, காவிருக்குங் கொடிபோற்றி காட்டாரும் வழிபாடு கண்டி றைஞ்சும், பாவிருக்கு மொழிவேலைப் பணியிருக்கை மேவியவெம் பரம னூர், மாவிருக்கு மொழிற்சோலை மலையிருக்குந் தென்னாடு வா ழ்தென் னாடு. (௨௫)

†உருக்கோட்டி யுயிர்க்களிப்பான் குறைகளைந்தந் தானோர்க்க வோங்கு கைம்மாப், பருக்கோட்டி னிணையொடித்தான் றன்பப்பரவு மன்பரிடம் பரிந்து செய்யுந், தருக்கோட்டி யினிதான்வான் குமரை யான் சேர்சிறந்துத் தையின் வாரி, திருக்கோட்டி யெனும்பதியுஞ் சேர்ந்திருக்குந் திருநாடு செழிய நாடு. (௨௬)

ஐயனடி யடைந்தாரை வெள்ளாறு மணிப்பதென்று மதற்குச் சான்றாய், வையமிசைப் பரிபூர்த்து விதையுரைத் தடுபோரில் வயங் கு நேமி, வெய்யவன்பால் விடுத்தாண்டா னருச்சனையும் விரும்பிவா னே மேவு மம்மான், மெய்யமெனு மலையுடைத்தாய் விளங்குதமிழ் நாடு ‡தமிழ் மிக்க நாடு. (௨௭)

பொல்லாத திருதர்ப்பிரபிகள்புக §வதுந்திபற்றல் புணர்ப்பாக் கொண்டு, பல்லாருங் கண்டுபவம் பாற்றியுயர் கதியடையப் பரிந்தி ராமன், செல்லாரு மொலிகடல்வாய் களைந்துசெய் திணையுமுள சேது மூலப், புல்லாணிப் பதியுமுடைத் தாயபின்ன ரேதிலதிப் பொருநை நாடு. (௨௮)

எண்காணும் வானிலனு ||மெழுகாவு மப்புமிவை யாவு மாகிக் கண்காணுங் கமலமெனக் கொண்டென்று காத்தளிக்குங் கடவு ளப்புண் பண்காணு மொழிப்பாவான் மங்கையர்கோன் பாடலகம் பரிந்து மேய தண்காணுமுடைத்தாய தவமுடைத்தாற் செழியனுறை தமிழ்நா டென்றும். (௨௯)

---

* திருக்கு - விழி. † உருக்கோட்டி - தருவினைப்பிணிகளை. ‡ தமிழ் - இனிமை. § வதுந்து - வழி. || எழுகா - நெருப்பு.



மாகூரு மறிவடைந்து மறிவரிய பொருண்மறைகள் வாழ்த்தஞ் சோதி, பாகூரு மொழிமலர்மின் னொடுகான மேகமெனும் படிவந் தாங்கி, *நேகூரு முயிர்கண்மனைக் கழுவியநற் கருணைமழை நிறை த்து நிற்கு, மோகூரு மறந்தாறே கோல்கொள்ளுங் கைதவனார் முது நாட் டென்டால். (௩௦)

பழியறுத்த வுயர்கோலன் பாண்டியன்முன் கொண்டாடப் பரமா லென்ன, வழியறுத்துத் திரிபவருந் தெருளடைவான் சங்க மீறி மறைகளோதிக், கிழியறுத்த பட்டர்பிரான் கிளர்பாக்கொண் டழகளிருந் தருளுங் கூடல், செழியருக்குத் தலைமைபெறு நகராகச் சிறந்தளிக்குந் தென்னாட் டென்றும். (௩௧)

அல்லிசுற்று மலர்மாலை தொடுத்தளகத் தணிந்துமுகி தென்ன வாய்த்து, சொல்லியற்றும் பாமாலை புடனிரண்டு தொக்கதுமுன் னூட்டுப், பல்விசைச்செம் மணமாலை புனைந்தாண்ட வரங்கனுளம் பரிந்து மேவும், வில்லிபுத்தூர் தருமுடைத் தாயதுதென் னாடுதன் சீர் விளம்பற் பாற்றே. (௩௨)

இருக்கினுறு பொருளினைத்துங் கருணையினின் றமிழாக்கி யிந்த மாறன், வருக்கமுறு மாயைமுனிக் கவதரித்த வளமதிக் கட வுண் மாறுட், பெருக்கினுட னுறைமேன்மை யிவ்விரண்டு மொருங் குறலாற் பேறு மிக்க, திருக்குருகைப் பதியுடைய தென்னாட்டை டப் பிறநாடெத் திறத்தினேரும். (௩௩)

மலைவில்லி காமலந்தோன் மாயனென முக்தொழிலின் மருவி நின்றுங்
கலைபல்ல தெரிந்துக்கா வியாதன்முத லோருருவங் கலந்து நின்று
முலைவில்ல வுயிர்கடொறு மந்தரியா மியுமாகி யூட்டு மாயோன்
றொலைவில்லி மங்கலமும் வழுதிதிரு நாட்டினைநேர் சொல்வ தென்னே.

†மீனமார் தனமாதர் மக்கள்பொரு ளழியாத பெருப்பேறென்று
ஊனமா முடலினையே யுயிரென்று மறிவுகெடு முலகின் மாக்க
ளீனமா வியபவத்தி லாழாம லாள்வதற்கே யென்னவிண்ணும்
வானமா மலைப்பெருமான் சிவரமங் கையுமுடைத்திவ் வழுதி நாடு. ( )

---

* நே - அன்பு.
† மீனம் - பருமை.

* ஒன்றிரும்பே சிகருமன முடையோரா யுயிரனைத்து மொடு க்கு கோவக், கொன்றிநப்பே மென்றிருக்கு மறிவிலிக ளாறேனுங் கொண்மு வண்ணன், நன்றிருப்பேர் புகன்றதனைச் சார்ந்தாரேற் காக்கவரு டாக்கி மேவுந், தென்றிருப்பே ரைப்பதியுங் கொண்டிருக் கும் பாண்டியனார் சீர்கொ ணாடு. (௧௬)

காவைகுந் தலமெனக்கொண் டமரர்கணம் போற்றவுறை கட வுட் கோமான். பூவைகு வாமனைத்து மொழித்திடு மூலைசரப்பப் †பொருது கொண்டான், மாவைகு மருமத்தா னெனத்தொழு முத் தோன்றியருள் வளர கின்ற, சீவைகுந் தப்பதியு மகத்துளதாற் சிறப்புடைத்திச் செழிய னாடு. (௧௭)

அருணமணி வெயிலொளிசெ யரவின்மிசை யிருமாத ரருகு போற்றக், கருணைமழை பொழியுமுகில் ‡ கனருசிபோ டுமியல்பு காட்டச் சேர்வான், றருமனுயர் வருணனெறி திருநிதொழத் தோ ன்றியரு டக்க மாயோன், பொருவரிய புளிங்குடியா மொருபதியு முளதுசிதன் § போற்று நாடு. (௧௮)

விரவிவிரை சேர்கமல மலரிலிருந் துலகளிக்கும் விமலை நாதன்
பரவவரு கடவுளர்கா தன்பழைய வருமறைகள் பகரு நாதன்
பிரமிருமைம பூகமுயிர் முதனைத னுயர்விண்டு சேர்ந்து மேவும்
வரகுணமங் கையுமுடைய வழுதிதிரு நாடெவரு மதிக்கு நாடே. ()

செருக்குளங்கொண் டியாங்கடவு ளியாங்கடவு ளென்றுதிரி தேவரெல்லாக், கருக்குளரிற் கராங்கதுவு கயமாதி மூலமெனச் சார்ந்தாரில்லை, யிருக்குளவா றோதுபரன் றிருமாலென் றறிவதற் கே யென்று காத்தான், றிருக்குளந்தைப் பதியுடைத்தாற் பொரு நைவளங் கெழுமுதிருத் தென்னாடு. (௨௦)

* ஒன்று இரும்பு எ - ஒன்றிய இரும்பாலாகிய அம்பினை; தோற்றத் தாற் செல்விதுபோன்று செயலாற் கொடிதாகும் தன்மையாலும் வன்மை யானும் மனத்திற் குவமையாயிற்று.

† பிருது என்பான்; "புவிமடந்தை மூலைசரப்பச் சாதித்த பெருந்த கை" என்பர் கம்பர்

‡ கனருசி - மின்னல். § உசிதன் - பாண்டியன்.



கறங்குதிரைக் கடல்புடைசூழ் காசினிவாழ் மன்பதைபாற் கரு ணைபூப்பப், பிறங்குமனத் தெனையொருவா கினைந்தடைத லிதிவர்க் கென் பெற்றி யோர்ந்து, திறங்குலவு மலர்மகளோ டினிதாள*வரு ச்சையுரு வேர்ந்து மன்னுங், குறுங்குடியு முளதாதலாற் குடிகள்பல பொலிசெழியன் கொற்ற நாடு. (௨௧)

†தோளுரு பகந்திகிரி யரம்பைபங்க ரனுமடைவார் சொன்ன மேனி னேறு முடனுமில்லை யிலவரிக்கே யுயிரடிமை சித்த மென்னத் [குங் தாளுருமன்புடையார் தமதுளம்போன் ஹிறைமைறயுந் தனவா தோங் கோளுரு முளதாகு மகரகே தன்மகிபன் கொற்ற நாடு. (௨௨)

வேறு

பரம்பொருளீ தென்றுலகை மறிந்துய்யப் பண்டொருநா
ளிரம்புகடாம் பொழிகளிறுய் தின்றுவிளித் தழிவித்துத்
திரம்பெறுவான் கிழிபறுத்துப் பின்றொருந் தெரிவித்த
வரம்பில்பெரு நன்றியுடை வழுதியர்நா டிந்நாடே. (௨௩)

வேறு

இத்தகைச் சிறப்பு வாய்ந்த விசொன்பான் பதிக டோறும்
வித்தகக் கமலை சேள்வன் மேவிய மேன்மை யோடு
புத்தமு தனைய நீரார் பொருனைசூழ் வளனு மார்ந்த
வுத்தமப் பாண்டி நாட்டி னுயர்வெறு துரைக்கற் பாற்றே. (௨௪)

## நகர்.

வேறு

சீரினுயர்ந்து வானளவிச் செல்லுமாடம் பற்பலகொள்
டோரி னெவையுந் தனைநேரா வுயர்வேய் காம மரிபுரமென்
றோரும் போற்ற மன்னியந்த வமரா வதியுந் தினம்விரும்பு
நீரி னிறைந்த நகரொன்ற தென்று கிற்கு நீர்மைத்தால். (௨௫)

வேறு

அப்பதிக் கியைந்து தன்னென் றுழிய வகழி நோக்கிற்
றிப்பிய வுருவம் வாய்ந்த திருமக ளொன்பால் வந்தா
லிப்பொழு தினியை யுள்ளான் யானவட் காண்ப லென்னச்
செப்பருங் கடலே வந்து சேர்ந்ததை மானு மன்றே. (௨௬)

* அருச்சை - விக்கிரகம். † தோள் பகந்திகிரி ஊரு, அரம்பை.

மாற்றல ரடையா வன்ன மாற்றுயர் பொன்னி னுக்கி
யேற்றொளி விரித்த நீல மிணமணிப் பதும ராக
மேற்படக் குயிற்றி நின்ற *வாரலின் றுமம் மேவத்
தோற்றுறு தாரு மென்று மிரவிக்கன் சொல்வ தென்னே. (௪௭)

மண்டலக் கிரணச் சோதி மதியென்பான் பற்றொன் றில்லாக்
†குண்டலத் தலைவ லாலே கூடிய மம்மர் நீப்பான்
றெண்டிரைச் சிந்து வெழுந்து சேர்த்தெனக் கிடங்கு சூழ்ந்த
வெண்டரு‡மகப்பா மேவி யிருந்தமின் னேசு வானல்: (௪௮)

||பாம்புரி யாடை சுற்றிப் படிகத்தி னமைக்கப் பெற்ற
மேம்படு புரிசை சிற்றல் விரிதிரை யனிக மேற்றி
வாம்பெரும் பௌவ மேவி வார்புன லருந்த நிற்ப
தாம்பெரு முகிலே மானு மன்னதற் கையமின்றால். (௪௯)

இந்திர நீலக் கல்லி னிடையிடைத் தரள மேற்றித்
தந்திடு மிஞ்சி யென்னிற் றுரகை வானு நேருந்
சுந்தர முருமம் போலத் தலைக்கிக்கே முதிகம் வாய்ந்து
சந்திரற் சிரித்து நிற்குந் தன்மையு மேய மன்றே. (௫௦)

இரவலர் குறிப்பு நோக்கி யீகின்ற செல்வர் வாழும்
விரவிய மனைக்கண் மேய மின்னிடு புருட ராக
மரகதம் படிக நீல மாமணி யொழுக்க நோக்கி
னுரவியல் காயத் துற்ற விந்திர தனுவொப் பாமால். (௫௧)

மகரவா ரிதியிற் றோன்றி மாசில வலய முற்றும்
புகரற வமர வென்றும் போகின்ற§வென்று மிந்தச்
சிகரியின் சிகரத் துற்ற சித்திரத் தரளைக் காணுடத்
திகிரியின் மறைவான் மிக்க கதியொடு செல்வ னம்மா. (௫௨)

வானிடைப் பரந்து நீண்ட மாடத்தி னுச்சிவைத்த
கானுடைத் தரள பந்தி விடுமொளி கதுவித் தோன்ற
றேனுடைத் துளவத் தொங்கல் மிலேச்சிய திருமாற் செய்ய
கானடைப் பாதந் தோன்றுங் கங்கைமற் றென்னே போலும். (௫௩)

*ஆரலின்றுமம் - மதிலிலொளி.
†குண்டலம் - ஆகாயம். ‡அகப்பா - மதில்.
|| பாம்புரி - அகழி. §என்று - சூரியன்.



சந்திர காந்தக் கல்லாற் சமைந்தன மனைக ளெல்லாஞ்
செந்திரு வனைய மாதர் சேயர் நீரில் வேட்கை
வந்துறு தோறுந் தங்கண் முகமெனு மதியா னோக்கி
யந்தகல் விந்து காந்தந் தருகின்ற வறலே யுண்பார். (௫௪)

அரதனக் குழுவாற் செய்த வம்மனைச் சாலஞ் சால
விருளினைப் போக்கி நிற்ப தென்பதென் றுறும் வியா
வருகதிர்ப் பருதி *யாலோன் மன்னிய வொளியு மாக்கு
மருவுறச் சமழ்க்கு மென்னின் மற்றிதற் குளதோ வொப்பு. (௫௫)

மனைகளிற் குயிற்றி யுள்ள மரகதத் தொளியை யாயாப்
புனிதமாத் தேவ ராவும் புல்லெனக் கருகட்டிச் சாலைக்
கனிபயன் பெறுது வாளா மாழ்குதல் கடப்ப தில்லை
தனிமதி யூக மின்றே யுயர்கதி சார்ந்த மென்னே. (௫௬)

ஆடிக்கலைப் போன்று நிற்கு மனைகமா மாடம் வேகந்
தடிக்கலாற் றனர்ச்சி யுற்ற சந்திர நித்தர் விந்தம்
படிக்கறுமன் றுற்றி நின்ற முனிவனைப் பதிப்ப ருள்ள
மிடுக்கணைத் தீர்க்கிற் போனை யாவரே மினைய ரம்மா. (௫௭)

மாதரும் வனப்பு வாய்ந்த மைந்தரு மருவி யாடும்
போதனிற் † அருமசாலம் பொருந்துதல் லுத்தி யானத்
தோதுறு மிசைகள் பாடி யுகந்துதேன் பருகித் தேன்கள்
காதலித் தளிகொண் டாடச் சுரும்பினங் களுவ மாதோ. (௫௮)

குளிர்தரு தருவும் யானங் குலவுபு சுலவு மென்மை
மினிர்பசுங் கொடியிற் பூத்த விரைநறுந் தணாரின் மன்றும்
வளியினம் பிரச மாந்தி யணியினை பயிலத் தொக்க
களிர்மலர்க் கனையான் செய்கை குறைவறு நிமிர்வ காணும். (௫௯)

வண்டர்க ளுன்னா மேவு மஞ்சரி கொங்கை யானைக்
கண்டனிர் புல்லும் வல்லி‡பிருகுடிக் குவளை சாக

* ஆலோன் - திங்கள்.
† அருமசாலம் - மரக்கூட்டம்.
‡ பிருகுடி - புருவம்.

முண்டக குசுமங் தூய முகத்தினை நேரச் சாகை
வண்டலம் புறந்தோன் மான மங்கையர்ச் சிவணுஞ் சோலை. (௧௦)

வேதனை யுற்றுப் போக்கி மேவுநந் தனத்தா ராரு
போதகின் சாகை யென்னுங் கரங்களாற் பூக்க ணேவி
மாதவப் பலத்தா லந்த வானநாட் டுறைகின் றுறை
மேதகச் *சபரி யாற்றி விண்ணிட மின்றி நிற்கும். (௧௧)

அந்தரத் துற்ற தேவ ரத்தலத் தெய்தி போங்கி
யிந்தநற் றருக்க ளீயு மின்சுவைக் கனிக டுய்த்து
முந்தருந் துறப லத்தி னவாவினைத் துறந்தன் முன்னில்
விந்தையென் மிக்க நன்மை மேவுறின் விழையார் யாரே. (௧௨)

வளைபயி றடத்தின் கூல மிரைநிரை மருவி நிற்குங்
கிளைமிகு தருக்கள் வானிற் கெழுமலா விடையிற் றோன்றி
யொளிவிடு முடுக்க ணத்தை யுயருமவ் †விடபி பூக்க
வளியுறு மலரே யென்ன வனைவரு நினைவ ரம்மா. (௧௩)

ஓதமு மழகு நல்ல வுருவியுந் தெளிவு மார்ந்து
காதுறு தரங்கஞ் சூழக் கணக்கில குவளை யாம்ப
றுதுறு கமலஞ் செய்ய வுற்பலந் தளிர்த்துப் பூத்துப்
போதவிர் விரைய வாவிப் பொலிவன பல்ல வாவி. (௧௪)

கங்கைகா விரியே யாதிக் கடவுண்மா தீர்த்த மெல்லா
மிங்குற வெம்மான் முன்னஞ் செய்தனை வேது கன்றுந்
தங்கிய தீர்த்த ராச சாமிபுட் கரணி யென்னப்
பொங்கபி தானங் கொண்ட புண்ணிய தீர்த்த முண்டால். (௧௫)

மண்படைப் பிப்பான் மேலை மாதவ னுந்தி தந்தான்
சண்பகங் கமலந் தொண்டை சந்திரன் வல்லி நாக
மெண்பெறு மின்ன கொண்டே யிக்கர் மாதர்ச் செய்தனன்
பெண்பிற ரிவரை யொப்பா ரெங்குளர் பேசற் கென்றால். (௧௬)

* சபரி - பூசனை.
† விடபி - மரம்.



கொள்ளைவண் டென்னுங் கூர்தற் கோதைய குந்தி யாய
பள்ளமார் வாவிப் பாங்கர்ச் சக்கர வாகம் பற்ற
வுள்ளவா றெனலா மன்றி யொளிர்நிளம் பிறையின் பாங்கர்க்
கள்ளவிழ் கமலம் பூக்குங் காட்சிமா வியப்பிற் றுமால். (௧௭)

நீரவே ளனைய ராகிச் செருக்குறு மஞ்சர் நோன்மை
மாரவே ளொக்கி வெல்லன் மதியிரு லன்றி யாகா
தோரிலொன் றிவர்பான் மாத ரல்குலா முயர்தே ரேறி
நேரலு மயங்கி நிற்ப நித்தலும் வென்றி யெய்தும். (௧௮)

வாளென மிளிருங் கண்ணார் *வயினிடை வல்லி போல
நீளுறு முரோம பந்தி நிலையுந்தி யனைய னீங்கிக்
கோளுறுங் கரிய நாகங் கொங்கையா நாக நோக்கித்
தாவில தேனு †முற்றுந் தாளொடு மேற லொக்கும். (௧௯)

என்கொலோ விடையே யின்றி யெழிலியி னிடையே தோன்று
மின்களே யனைய ராக மாதரை விதித்தான் றுறை
தன்பெரு மனத்தான் மிக்க ‡பாடவத் தன்மை யார்க்கு
மின்புறத் தெரிப்பான் செய்த வியல்பென மதிக்கற் பாற்றே. (௨௦)

மாரனைச் சூட்டு கின்ற மணிமுடிக் கொக்குங் கொங்கைச்
சீரணங் கனைய மாதர் திருமுகச் செவ்விக் கொப்ப
வாரிடை மேவி மேலாம் §வதத்தினை நிகழ்த்தற் கேயோ
நீரச மனைத்தும் புக்கு நின்றன கயங்கடோறும். (௨௧)

இடுகிடைப் பெரிய கொங்கை யேந்தக லல்குன் மாதர்
வடுவொழி வதன மென்னும் மதிதின மலர்த லாலே
கடல்சூழ வுலகுக் கெல்லாங் ‖கருடரு மபர பக்க
மடைதரக் காண்பா ரில்லை யந்நக ரிடத்தே யாரும். (௨௨)

பூதலத் தேவ ராய புண்ணிய சரிதர் மேனி
மேதகு மொளியாற் கோடி யாதபர் விளக்கங் கோடப்
பேதமி லறிவு நீங்கா விளமையும் பெற்றுப் பொன்று
மாதலத் துலவு நித்த சூரிகண் மாறு வாரால். (௨௩)

* வயின் - வயிறு. † முற்றுந்தாள் - காரியமுற்றுதற்குக்காரணமான முயற்சி.
‡ பாடவம் - சதுரப்பாடு. § வதம் - விரதம். ‖ கருள் - இருள்.

கொங்குசேர் * காகதுண்டங் குங்கும மார கானம்
பொங்குவா விறந்த பூரம் புகலி சந்த மாதி
யெங்கணு நிறைந்து மிக்க வெழில்செயுங் கூல சால
மங்குள வளத்தின் றன்மை யுரைப்பரி தொருங்கி யார்க்கும். (௩௪)

காவகம் பலவு நீண்டு கனிபடிவ வகலம் வாய்ந்து
மேவுமொன் விடையொன் றின்றி விரவுமொல் லொலிய வாரித்
தாவில்வித் துருமஞ் சங்கந் தரளமா மணிக ளின்ன
யாவையுங் கொள்ளு நீரா னாவலாங் கடல்போன் மென்ப. (௩௫)

அந்தர நலமிச் சென்றங் கழகுசெய் மாட வீதி
சுந்தர மணிகள் வெய்யோ னொளியினைக் குழுமிச் சார்ந்த
விந்தநன் னகரா மங்கைக் கிசையபன் மலர்கள் கொண்டு
விந்தைசேர் தொங்கல் செய்து மிலைச்சிய தன்மை மானும். (௩௬)

காத்துன்ற மிலைபெண் டென்னைக் கவின்றரு பொன்னிற் செய்த
வேற்றின்ற கொடியால் வானி யனைவிடு மிரத பந்தி
சூழ்கொண்ட கொண்டல் செய்யுந் துணையுட் சுருங்கச் சென்று
மேற்கொண்ட வொலிய வாவி விரைகின்ற மறுகு தோறும். (௩௭)

மாகமீ தோங்கித் தூய வாங்கிடுதங் கோடி தாவி
மோகத்‡மாக் குழுமிச் சூழ்ந்த கடகதி மினிய மெய்க்கு
நாகமாக் குழுவை § நாக நாட்டவர் பதிப்போர் வாய்ந்த
பாகமா மணிமாக் குன்ற மெனமனம் பதிப்பர் பயமர். (௩௮)

முறச்செவித் தடிகன் யானை மும்மத கிரி யெனு
நிறத்தினை முயர்ந்து சென்று நீடிய வுருவி னானும்
புறத்துள விரியல் போகப் பொங்குபு மிளிர வாயு
மறப்புயல் கிழிதென் றென்ன வாக்கிமே லோங்கு மாதோ. (௩௯)

விண்டலம் படர்ந்து செல்லும் பவனமும் விசைதெ தந்த
வெண்டகு புள்ளி கோடு மனமுமென் றிவைக வீட்டிக்

* காகதுண்டம்-அகில்.
† வித்துருமம் - பவளம்.
‡ மா-வண்டு. § நாகநாட்டவர்பதி-இந்திரன்; அவன் யானையாந்தனிக்
குன்றம்- இந்திரவெருப்பதம்.



கொண்டதொல் புகழு மெல்லாங் கொய்யுளைப் பரிகள் முற்றத்
தண்டலில் வேகந் தன்னுற் றழந்தித்தா முயர்வ மன்னோ. (௪0)

வாயுநாற் பரிக்கூட் டங்கள் வன்குரத் தெழுந்த நீற்றான்
மேயவா னகமாய்ப் பாராய் விளங்கிடப் புரிந்தப் போகி
தேவமா வதனைத் தம்பிந் சிறப்பில தாகச் செய்து
பாவுமாப் புகழு யாங்கும் பயன்படத் தோங்கு மன்றே. (௪௧)

வேலைநீத் தாவங் கன்னை மீட்கினை வெய்ய வாழ்க்கை
மாலெதிர்த் தோங்கும் போரின் மறப்படை † விரவாதங்
கோலெதிர் தென்னாக் காதிற் கொண்டமா றவர்களை மானின்
மேவிவர்க் கேகுங் காற்றின் மெய்ப்பிறப் பவாவு வாரால். (௪௨)

மாறுறு மனிச்சை நீத்தார் மனமெனத் தெளித்து தாய்தாய்ப்
பாறுறுங் கங்கை மானப் பரவித் தாழ்ந்து தண்ணென்
றேறுற விளிதா யார வெழிலுடைத் தாகி நீண்ட
சேறுறு கடலிற் சேருந் தேனதி திகழுந் தென்பால். (௪௩)

அன்றவர் கழுநீ ரோர்பா லழகுசெய் திருத்த வாம்ப
லன்றிமேர் பாலிற் குழுக் குலவிய துக்கமல மோர்பா
னின்றுசெந் தோதி வீச நிரைத்தனி விசைக்க நீல
மன்றவை நேற விற்ற வயங்குமம் மதுவி னுய. (௪௪)

கூத்தன்னை வலமா வியறுங் கொங்கையா கேமிப் புட்கள்
செங்கொடாவிர் வனச மென்பூச் செவ்விய முகமாக் கண்கள்
போந்துறு மீன மாகப் பொலிந்துமா மாத ரரின்
காந்தெழின் மேனி காட்டுங் கரைபொரும் வேணி யாறு. (௪௫)

பாங்கிரு பாலு நிற்கும் பராரைமா மரங்க ளின்றுந்
தேங்குதேன் றுளிப்ப வீழுந் திறையணி மயிரின் குப்பை
வீங்குநீ ரலையாங் கைமிற் கொண்டுரு மருங்கு மேவு
மோங்கிய தலத்தார்ப் போற்றி யுருத்துமுந் தவியல் வாறு. (௪௬)

* போகி தேவமா-இந்திரனுடைய தெய்வக்குதிரை.
† விரவாதம்-வஞ்சினம்.
‡ கல்லோலம்-அலை.

அந்தர தலத்து மீப்போ மகன்பனைத் தருக்கள் கோட்டிற்
றந்தசீர் வரிசைத் தாகித் தழுவிய மலரினின்று
முந்துறு தேனை வாவி யொலிசெய் ‡கல் லோல மன்று
நந்தலி லொழுக்கத் தாற்ற நதியியல் கூற வற்றே. (௧௭)

நேரொரு நகரு மில்லா விந்திரன் குபேர னேனும்
பேரிரு பதியு மொன்றிப் பிறங்கிட வெவ்வணி வானிற்
காரினந் துஞ்ச வோங்குங் கடிமலர்ப் பொழில்கள் சூழ்ந்த
சீரிய வரியை யென்னுந் திருநக ராயிற் றம்மா. (௧௮)

ஆயிரங் கணக்க வாய கரமுகங் கண்க ளார்ந்த
பாயொளிப் பானு சேடன் பாகசா தனனு மின்றே
ரேயுமிந் நகரின் சீர்த்தி யெழுதிட விசைக்கக் காணா
வாயகல் வலத்த ராவர் மற்றையர்க் காவ தின்றால். (௧௯)

மூவர்செந் தமிழ்வேந் தர்க்குள் முதன்மையாம் பாண்டி மன்னன்
மேவியா ணகர மீது விதப்படை யைந்து மேந்தி
மாவல கெய்தி னேருங் காதலிப் பெய்த மாலாந்
தேவரு ணிறைந்து விடுந் தருவனு தின்ன மாதோ. (௨௦)

நாடு நகருரைத்த சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௨௦.

---

## ௨-மரபுரைத்த சருக்கம்.

அலகில்சீர்த் திகிரி காரியையை யொருபரி சறைந்தா
மிலகு மன்னவர் பின்னவர் யாம்புக ழுசாக்
குலகின் முன்னவ ருயர்புகழ்ப் புகாரினின் னெளிமிக்
குலவு பாண்டிய ரேற்றது முதற்பல வுரைப்பாம். (௧)

நேரி வெற்பினன் வளரிவி னகரமு நேராச்
சீரி லூர்பெருங் குடியினர் சேர்தர வோங்கும்
பாரின் முற்றிய விசையுடைப் புகாரெனும் பதியை
யாரு நேர்கிலா தறத்துட னாண்டவர் தனனுல். (௨)

பொதினை வெற்பினன் றன்னகர் குடிகளாற் பொலிதற்
கதிக வாவலன் றனமொடு மணிமர பழியா
மதியு டைக்குடி பற்பல வேண்டுமால் வளவ
விதுகல் காரியெனக் கேட்டன னிசைகெழு முறவான். (௩)

அன்ன வாரியற் றளத்தனுச் சோழனந் நகரின்
மன்னு செல்வத்தின் வணிகரை நோக்கிநீ ரென்பாற்
றுன்னு மன்பின ராதலாற் சொல்வெளிக் கூடல்
மன்ன னன்மன மகிழுமா செய்மினென் றுரைத்தான். (௪)

வேறு.

பொங்குதிரைக் கடல்புடைசூழ் காவிரிப்பூம் பட்டினத்துப்
பொருந்தி வாழ்வார், வங்கமிவர்ந் தறநெறியிற் பொருடேடிப்
பலதருமம் வழாஅது செய்வார், செங்கதிர்மா முடிச்சோழ னுரை
செவியிற் சேர்த்தினராய்த் திறத்தி னெண்ணிப், பொங்குகுல வணி
கரெலா மொருங்குகுழீஇ யதற்குள்ளம் பொருந்திச் சொல்வார். (௫)

தேன்றுளிக்கு *மாரலங்கல் புரண்மார்ப தென்னவன்பாற்
சேர்ந்த வன்பா, லென்றுரைத்த நின்னுரையின் வழிநிற்பே மிராச
தண்ட மெமக்கி டாதே, யான்றபெரு மன்பினொடு புரப்பனெனு
மருள்வாக்கொன் றனன்பாற் கொள்கென், றான்றவிவ ருரைக்கினங்
கிக் கைதவனுக் குணர்விக்க வெவனு நேர்ந்தான். (௬)

* ஆரலங்கல் - ஆத்திமாலை.

உரைகடவான் விரைகடவா மலர்மாலை மணியார யோங்க வோங்கி, வரைகடவா வளர்புயத்தான் வையையதித் துறைவனென வளவு னன்றூற், கரைகடவா நெறிமெய்ம்மை வளர்த்தமை யன் பிறெறி கவிந்து நோக்கி, நிரைகடவாப் புகழுடையீர் பாண்டியன் பிற்போயிவன்போ லிலவு மென்றான். (எ)

அந்தவுரை கடைப்பிடித்தா ரந்தமிலா மறைதன்முனை *மைக்க ஞரு, தந்தசெனும் வருணத்தார் புகாரினிடை மும்மையுகு சார்ந்த மேலோர், வந்தனரத் † களவட்டப் பதிமன்னன் மாகவி லாத்தி நேர்ந்தித், செந்திருவான் மிகப்பொலிய விவர்வாழ்க்கை யாறுவர்ந் திறந்த மன்னே. (அ)

கைதவனூர் செய்கவுத்தாத் காக்கின்ற தமிழ்நாட்டித் கனிப் பின் மாடம், மைதவழ்வா னெருங்கும் சைப்பெயர்கொள் பதியினி டை வினகர் கோடி, செய்தவமும் புகார்நின்று சேர்த்தாரி லோர்ம துறிச் சிறந்த ‡ விப்ப, மெய்நியிரு தனத்தினரா மிசைபலவுந் திசை பலவு மிசைய வாழ்ந்தார். (கூ)

அப்பதியிற் பற்பலநாட் செலப்பின்னா ரங்குள்ள மவர்கள் கூடி, யிப்பதியோன் தேயமக்குப் போதாதில் கொளவாசத் திசைத்த வோடுநேர், செப்பரிய கர்பலவு மந்திரங்க ளிருநான்குந் தென்ன ரீந்தா, ரெப்புயர்வி யிலவொன்பா னுமைத்த வெனப்பெயர்கொண் டிருந்தார் மன்னே. (க0)

சிலகரங்க ளொன்பானிற் சிறந்தவிறு ராவங்கோயில் செப்பு நென்று, விளமிருந்த வதின்மூன்று பகுப்பினார்க் குளரென்ன விசைப்ப ரங்குந், தினம்வளரு மதியுடையன் றெய்வமக லை யப்பேர் சேர்ந்த சிலன், § தனபெயர்கொள் வகுப்பினராய் வழி வருவார் தமைப்பகரத் தான்முன் வந்தோன். (கக)

* அந்த வருதச்தசெனும் வருணத்தார் - அத்தனை யயச்தசென்னும் சாதியார்; வணிகர். † களவட்டம் - பாண்டியன் குதிரை. ‡ இப்பர்-வணிகர். § வழிவருவார் தமைத்தனபெயர்கொ[illegible]குப்பினராய் பகர்ந்தான் முன்றோன் என்க.



குலம்விளக்கு மணிவிளக்காய்க் குறைவிறவ முடையோனைக் குலவு ஞான, நலமிகுத்து வண்ணடியா னெய்வுயிர்க்குந் தண்ணளியே கக்கி னாரு, மிலகுஞ்சபதங் தருசதக்கங் கடமாதி பல்தரும மியற்றிச் சீர்த்தி, யவர்தமைமா நிலத்திருமாப் புறம்போக்கி யெங்கிலத்து மமைய வாழ்வான். (கஉ)

தன்னடையான் றன்னடையால் விதிவிதிக்கு மாற்பொருளை நன்கு காட்டப், பின்னடையான் முனிவர்தொழு †காரணன்பாற் பத் திமிகப் பெருகப் பேணிப், பொன்னடையுந் தக்கன்குல தெய்வ மென மீகெபுரி பொருந்தி யென்றும், தன்னடைவார்க் கருள்புரியும் வயிரவன்பால் வழிபாடு தழுவி னான். (கங)

வேறு.

பங்க யக்கணன் பாதமு பத்திமை
மங்கு மாறுசெய் வல்வினை முற்றவுந்,
சங்கை யின்றித் தபித்துங் கடவுளர்க்
கங்கண் மந்திரஞ் செய்பு மருத்தியான். (கச)

மணியிற் பொன்னினன் மண்டபங் கோபுர
மணிகொள் வர்ப்பக் கிருகம தாதியா
விணையி லாவொளி யேயுந் திகைரத்
தணியி லம்பிது சமைத்தன னன்பரால். (கரு)

அங்குங் கோயி லணியிவை வாணிகர்
நோக்கிக் கொண்ட மகிழ்வி னுவல்வரால்
பாக்கி யம்மிவ் விவற்குப் பலித்தவா
வாக்கி னாலுரை வைக்கவுங் கூடுமோ. (கசு)

என்று கூறி யிவற்கிது செய்வதென்
றொன்று பட்ட வுளத்த ருரைப்பரா
யின்று தொட்டு மிங்க னிறைவனார்த்
துன்று மன்பினை யென்பது தோன்றவே. (கஎ)

* பதக்கரு சதக்கம் - அன்ன சத்திரம்.
† காரணன்பாற் பத்திமிகப்பெருக வயிரவன்பால் வழிபாடுதழுவினான்.

சிலையி னின்றுருச் செய்து வயிரவ
னிலைகொள் கோயிலின் முன்ன ருறநிறீஇ
யுலைவி லாதுற வோங்கு முருவதற்
கிலகு நல்லுப சார மியற்றியே. (கஅ)

பூதி சாந்தம் புனைபு மலர்தினைக்
காதி யாக வளித்தயி னம்மவர்க்
கோது *பண்பினோ டெய்க்குத லிம்முறை
நீதி யாகுக நின்வழி யோர்க்கெலாம். (ககூ)

என்னச் சொற்றவ வின்சொ லிருசெவி
துன்னக் கேட்டுளந் தோன்று முவப்பினன்
வன்னச் செஞ்சடை வள்ள லருளிது
முன்னர்ப் பெற்ற முறைமையென் றோர்ந்தனன். (உ0)

ஞான பூர்த்தியை நாடு மகத்தினன்
மோன நல்லுணர் முற்றிய சிந்தையா
னூன மன்னவ னாரு ளாலரி
தான வன்பு தழைத்தன னுளமே. (உக)

செய்யு மாதவஞ் செய்யிட லேடினன்
கையி லாழிய னுள்ளங் களிப்புறத்
துய்ய முத்தியைத் துன்னினர்க் கீவது
மெய்யி னாகு மரியையை மேவினான். (உஉ)

நண்ணி யவ்வயி னற்கரு மத்தினாற்
கண்ணன் றன்னைக் களிப்பினா லுக்குவா
னெண்ணில் பற்பல வாவிதொட் டெம்பிரா
னண்ணுஞ் †சத்திய மாமலை நாடினான். (உங)

நாடும் பத்தியை நாளும் வளர்ப்பவ
னோடுஞ் சத்திய வாவித் திருப்பணி

* பண்பு என்றது பாடறிந்தொழுகலை, "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" (கலித்தொகை.)

† திருமெய்யமலை.



வீடின் மண்டப மேயகன் மாமதி
லோடுஞ் செய்துறை யுத்தமற் போற்றினான். (உச)

போற்றி மீண்டு மரியை புருந்தரி
தோற்ற நீக்குந் துணைமலர்த் தாள்களி
னாற்று மன்னை யொழுக்கி னிடையறா
தாற்று மன்பினன் சத்துவத் தார்ந்தனன். (உரு)

ஈதில் கேசவ னின்பதத் திச்சையான்
மாதுந் தன்னைய தேவர்கள் வான்பதங்
கூறி வந்து கொடுப்பினுங் கொள்ளுதற்
கேது சிந்தையி லானிவ னென்பவே. (உசு)

பாவின் வேலையின் பாலுறு *வேலையி
னேல வுற்று மறிவி னியைந்துளான்
சீல மேவும் பயங்கொளச் சேணுள
போது மாயர்கள் பாடியிற் போவனே. (உஎ)

தேட லின்றி யெதிர்வன சீர்த்தநாற்
றோட மன்றெனச் சொல்லுவ வாமெனில்
வீட லின்றி †யசகர விர்த்தியிற்
கோடல் செய்குவன் கோதில் குணத்தினான். (உஅ)

தன்னை யொக்க வருளுத் தயாபர
னன்னரித் தெய்வ நாயக னெச்சமு
மென்னி லன்புடைத் தாக்குவெ னென்றவற்
குன்னி யொப்பின் மகவையு தவினான். (உகூ)

மாய னல்கிய மைந்தர்க ளேவரி
லேயு மூன்றுங் குமரற் கிராமனென்
றாய நாம மறைந்தன னன்னவன்
சேய திக்கிற் செலுமிசைச் சீரினான். (ங0)

* வேலை - கரை.

† அசகரவிர்த்தி - மலைப்பாம்பு கிடந்தழிக்கிடந்து தன்பாலெய்து முணவுகளை வாய்க்கொள்வது; அதுபோலத் தானும் ஒருழியிருந்து தன்பால் எய்து முணவுகளை உண்டு சீவித்தல்.

காய மீதுறு கங்கை கலாநிதி
மேய மாதிர மெல்லிய லார்முகத்
தாய வில்லைகை சேட *னரத்தினி
மேவு மிவ்விவன் மெய்ப்புக ழென்னவே. (௩௧)

மாத வன்றிருத் தாள்களின் மன்னிய
வோது பத்தியெ னாதியத் தானுளத்
தாக ரத்த வறிஞர்க் கரும்பொருள்
போத வுற்றது போன்மகிழ் வெய்துவான். (௩௨)

தேவர் யாரையுஞ் சிந்தையிற் கொள்ளலை
னேவ லின்றி யரிபத முன்னுவான்
பாவ நாச பகீரதி விட்டயன்
மேவு மங்கை நீரெவர் வேண்டுப. (௩௩)

இனைய தன்மைய னாகி யிருந்துழி
வனை†க விப்பர்கண் மாக்குலக் கோர்விளக்
கனைய குப்பா னெனும்பெய ராண்டகை
தனைய னாகப் பிறந்து தழைத்தனன். (௩௪)

ஓது மன்னவ னைப்பின் றுயரிய
மாத வற்குப் பணிசெய்த மாண்பினுந்
தீதில் தேவ மடந்தையர் செங்கையிற்
கீத வீணைகள் பாடக் கிடப்பதால். (௩௫)

வேறு.

மூன்றும் வருணமிது வென்றுனு முன்னென்றே
யான்றோரு மேத்த வழகியவா ணப்பெயர்கொ
டோன்றுக தோன்றலக் குப்பாற்கு முற்றோன்ற
வின்றோ டெல்லா விருநிலமும் பூத்தமகிழ். (௩௬)

தந்தை யொடுதாயுந் தமர்களம்பர் சோதரரு
நந்தமிலா நற்பொருளு நாயகனுங் காப்பானுங்

* அரம் - பாதலம்.
† கவிப்பர் - வணிகர்.



அந்தமல ரம்புயக்கட் கண்ணனே யென்றெண்ணுஞ்
சிந்தையினு நன்றே யடியார்க்குச் செய்பணியான். (௩௭)

தேனுமொடு கற்பகமுஞ் சிந்தா மணியுமம்ம
வான விவன்சீர்த்திக் காற்று தலாயிந்த
வானை யுறைதரு மென்றாலின் காத்திலவேன்
மானமகல் வேற்றம் வகுத்துரைக்க வல்லுநர்யார். (௩௮)

எத்திக்கும் போற்றுபுக ழின்றே னடைந்தார்க்கு
முத்திக்கு வித்தா மரியையெனு மூதாரி
லத்திக்கு முன்வந் தளித்தா னடியனையீ
தித்திக்கு மானந்தத் தேனுண் டிருந்தனனால். (௩௯)

மேதக்க வன்றோற்கு வேனின்மிகு செவ்வியின
னோதப் பெறுவாடைய னேக்கமுத மென்மொழியன்
மாதக்கார் போற்று முருகப்பன் வந்துதித்துச்
சீதக் கலாமுகத்து மானதமனஞ் செய்திருந்தான். (௪௦)

மனைமக்க ளாமயலிற் பட்டுழலு வார்க்கிரங்கித்
தனையொப்பி லான்காக்கத் தக்கவர்த மாவிரசை*
நினையினையிரு செய்த்தனித்தாய்த் தீண்டுபர விடளிக்கு
மினையகற்க் கோனேரி யென்றபுனற் பித்தனனால். (௪௧)

விண்ணோ ரிட்டனை மேவிச் சின்றுசரித்துந்
தண்ணார் மதியுமிவன் றந்த புகழ்த்தவளங்
கண்ணார நோக்கிக் கரைந்துடல மாமதியா
வென்றோ வகக்களங்க னாயிரு ளின்றளவும். (௪௨)

உண்மை ஞானமய வுறுபொருளீட் டித்தினமு
மெண்மையுற மேசெய்யு விப்பர் குலமேவி
யொண்மை மணிகளென வுற்றனரின் றேற்கைவர்
†கண்மெய்த் திருமாலை யுள்ளுமனக் கற்பினரால். (௪௩)

* விரசை - பிரகிருதி மண்டலத்துக்கும் அப்பிராகிருத லோகத்திற் கும் இடையிலுள்ளதோர் யாறு.
† கண்மெய்த்திருமால் - கருதப்பட்ட மெய்ப்பொருளாகிய திருமால்.

ஆய புகழ்ச்செட்டி யப்பனிரா மன்சீர்மை
மேயமொழி மெய்யப்பன் சாத்தப்பன் சேவகனென்
றேயுமபி தானமிவர்க் கின்றேரி லேதுவிதன்
றாயமதி வண்மைமிக்கோன் றோன்றுமிரா மன்மன்னே. (சச)

தீதி லனந்த னுருக்கொண்ட திருமலையின்
மீது மணியாய் விளங்குதிரு மால்செய்ய
போதா ரடிக்கமலம் போற்றிப்பல் போதமெலாங்
கோதார்த லின்றியென் றுங் கொண்டுகளிப் பார்த்தனனால். ()

போற்று பலவான் குடியென்னும் பொன்னகராம்
வேற்றாரின் மேயான் விரிஞ்சற் றருதாதை
பாற்சிறந்த மன்பர் சிகாமணிதன் பண்புதெரிந்
தேற்றமிகு மன்னு விருப்புறக்கோர் காட்சென்றான். (சசு)

சென்றப் பதியி னுறை தெய்வமக யோகியைக்கண்
டொன்றப் பணிமகத்தோ யோக்கு*சிங்க வத்திரியார்
மன்றக் கருணைமென்பால் வைக்கவருள் செய்தியென
நின்றப் பெரியோனை நேர்ந்து பணிந்தனனால். (சஎ)

இவ்வண்ணம் போற்றுமுரை யேய்ந்த திருச்செவியா
னவ்வண்ண முன்னடிக் குரு†காரி காளுற்று
மைவண்ண மார்பிறத்து மாதவனைப் போற்றுகெனச்
செய்வண்ண நீக்கிலேன் செப்பியவா றென்றுரைத்தான். ()

பலவான் குடியென் பதிக்கேகிப் பன்னாளும்
நிலவு மிடபமலை நீடு கதிர்மணிபோ
உலைவிறவத் தாசா னுரைவழியிற் போற்றியுள
மலைவின்றி யம்மா லடிக்கமல மெண்ணுவனால். (சகூ)

என்னால் சிறிது மிகவாமெவ் வேதுவினோ
வண்ண லடியினையா தாங்கொருநாட் செல்லுநெறி
விண்ணை விழுங்கும் விரிதலைய பூதமொன்று
கண்ணி னுறநோக்கிக் கண்ணன் றனைநினைந்து. (ருo)

* சிம்மாத்திரியெனபது திருவேங்கடத்திற்கு ஒரு பெயர்.
† காரிவாரம் - சனிக்கிழமை.



வேதங்க ளேத்தும் விழுப்பொருளே யென்றனனு
ளாதங்கந் தன்னன்பர்க் காதற் கிசையாமற்
பூதங்க டோறும் பொருந்து மவனருளாற்
பேதஞ்செய் பூதப் பிணக்கறப்பா ரையினான்.* (ருக)

சென்றிந்த வண்ணந் தினம்போற்றி ராமனங்கு
நின்றியசீர் யோகீசு யுற்றவரி னைப்பணிமே
யின்றரியை யேத்துகென நேரும் விடைகொண்டு
மன்ற வரிவையகர் வந்துபணி கானுன். (ருஉ)

நன்னெறிசே ரைவர்களி னுலாவான் சாத்தப்பன்
முன்னரிய பாண்டவரின் முன்னவனே யாகநூ
மென்னபழு மேவு மிவனுந் திருமாது
தன்னிறைநா தன்சீர்த்தி போக்கித் தழைத்தன்றே. (ருங)

பத்திமிகு மின்றேன் றிருக்குலைதப் பாம்பணைசேர்
முத்தி யளிக்கு முகுந்தனையே யெண்ணியன்பாற்
சித்த முருகி யுடல்புளகஞ் சேர்ந்துகளிப்
பொத்தார் மனமகிழ்த்தா ருய்யவுல கோரேழும். (ருச)

மாபுரைத்த சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் ருச.

---

* இப்பூதத்தைக் கொன்றவிடம் பேயின்பட்டி என இப்போது வழங்கின்றது.

## ௩-சேவகச் சருக்கம்.

சோதரர்க ளவரெனச் சொற்றரி லத்தத்திற்
சாதமுறு வோனுமஞ் சேவகனே யால்புடைத்திகள்
ரேதவுடை யாரெனியா லதித்த னெய்வதான
சீதமதி போல்வதனச் செங்கமலக் கண்ணினான். (க)

வள்ளலிவன் முற்பவத்தின் மன்னியசீர் யோகத்த
னுள்ளபரி சோரா னுலகத் தியல்பன்றே
பிள்ளைமையிற் சாம்பவிலாம் பெற்றித்தாய்க் கொண்டாடத்
தெள்ளுபிறை யென்னச் சிறந்துவளர்ந் தேறினன். (உ)

இந்திரிய வெற்றிமிகு மின்னறும் பன்னுட்போய்
முந்தியசீ ரில்லறமே முன்னு மறமென்னும்
புந்தியினா னன்றகுலப் பொற்பின்மிகு கற்புடைய
செந்திருவை நேர்வாளைத் தேர்ந்துமணஞ் செய்திருந்தான். (௩)

கள்ளொழுகு மம்புயம்போல் கண்ணனடிக் கட்புகுதா
உள்ளொழுகு காட்சியின வுற்றபயம் புற்றவிலான்
கொள்ளுமிடை யின்றியகங் கொண்டகக வெள்ளத்தா
னெள்ளுபுற் றின்பங்க ளின்னவெனக் கண்டிலனே. (௪)

யோகத்தி னானை யுன்னியசை வின்றியம
ராகத்த னக்கிலைமை யாய்தந்த பட்கெனவா
மாகத்தா ரேவந்து மன்னுமிட மென்றுரமா
னாகத்தார் நாகங்க ளன்னியிழி யுஞ்சிரத்தின். (௫)

மிக்கவொளி யால்விளங்கி மேவியபே ரின்பத்தி
லொக்கவிளை யாடல்செயு மோங்குதவத் தோங்களுக்குத்
தொக்க*கர மார்த்தாண்டன் சோமன்கால் கொள்ளுவாற்
புக்கவயர் வோடுகளிப் பொங்கிலும் போந்திலவால். (௬)

வேறு.

பின்னொரு பற்று மின்றித் தன்னையே பெட்பிற் பற்றி
மன்னுமெய்ப் பின்றி யன்பின் மார்புறக் கொண்டு நாளு

* கர மார்த்தாண்டன் - கிரணங்களையுடைய சூரியன்.



முன்னிநேர் நோக்கு மன்னன் யோகத்தின் மேம்பா டோர்ந்து
பொன்னையே யர்பின் மாயன் போந்தருள் செய்ய வெண்ணி. (௭)

இலக்குமி பூமின் போற்ற விசையமி வாரஞ் சூழத்
தலத்தினி லடியார்த் தேடித் தன்மைகள் குடைய வெம்மான்
கலைக்குலம் பிரம னாதி கடவுளர் காண்டற் கெட்டா
விலக்குடை யொருவ னேனு மின்னவன் முன்னர் நின்றான். (௮)

அன்னவப் *பகுதிக் கெட்டா னணிபொளி விரிக்க நிற்பான்
பன்னுமேழ் பரித்தேர்ப் பானு கோடிமேற் பரந்த வேனு
மென்னவினே ரனுவு மொவ்வா விவனையக் கத்தே யன்றிப்
புண்ணியம் புறத்துங் காணப் புரிந்ததெத் திறமென் போமால். (௯)

விழுமெழும் பணிந்தும் பாடி மேற்கரங் கூப்பிக் கூப்பி
யழுமகங் கனையுஞ் சோரு மாட்டும்புரிபு மேகத்
தொழுதருஞ் சோதி நோக்கு மெளியனே யடியார்க் கென்னுந்
தொழுமவன் செயலை தென்னே சொல்லிடை யமையற் பாற்றே. ()

கருணையி னிலைய மாய கமலைவாழ் திருத்த மாயன்
பொருவரு மிழ்ய வெள்ளப் புணரிபுக் கோங்கு வானுந்
திருநூ பிறவிப் பௌவந் திழித்திடாப் பதத்தை யிவா
னருளுமா முளத்த னாகி யனறகுவானெரிய தென்னே. (கக)

திருமறை நான்கு மின்னந் தெள்ளிநு னுகி தேற்றுக்
கருமுகி லென்ன நின்ற கடவுளர் கருதும் யோகத்
தருமுறை யொருவ னேனு மாற்றிலர் மகிழ்ந்தே யைய.
தருமுறை வேண்டிற் றெல்லாந் தக்கவா கேட்க வென்றான். (கஉ)

இன்னணம் புண்ட ரீகத் தெழினுறு கண்ணன் கூற
மன்னவர் பின்னர் வந்த மாக்குல முனிய னானு
மன்னதூர் பவனே முன்னு மவரூல கழியும் வேட்ட
னன்னிலை யறிவு நின்ற னாக்கலில் பதமு மென்றான். (கங)

அடியவர் வேண்டிற் றீயு மண்ணலெம் மமல மூர்த்தி
நெடியவன் கரிய கோல நிரஞ்சனை நோயி யக்கன்

* பகுதி - பிரகிருதி.

வடிதுழாய் மொய்ம்பனண்ணல் வேண்டிய வரங்க ளீந்து
முடியுமே யளித்த தின்றன் முற்றிய தவத்திற் கென்றே. (௧௪)

பின்னர்த்தேர் தவத்தின் மிக்க பெருந்தகை யானை நோக்கி
யின்னைத்தன் றொப்பின் முகி நிலவுமிக் குலத்துத் தோர்வோர்
பொன்னைப்பெற் றொழுக்கங் குன்றாப் புகழையும் பெற்றுப் போத
வென்னைப்பற் றுடையா ராரும் வரமைப மீந்தே னென்றான். (௧௫)

இவ்வுரை கேட்ட வேந்த னிறைவனைப் புறத்துக் காணான்
கவ்விய வொளிய கோடி கதிரவ ரொருங்குற் றென்னத்
திவ்விய வுருவ மோடு திகழ்தருஞ் சோதி தன்னை
யவ்விய மவித்து நின்று வகக்கணை யன்பிற் கண்டான். (௧௬)

கண்டவன் பரம ஞானக் கட்டுறுங் கருணை மாற்றால்
விண்டவன் மலங்க ணென்று மேய்ப்பம் கனைந்து கோயிற்
றெண்டருக் கருள மாயன் றுணையடி தூளைக் கொடுத்
தண்டலிர் மலர்க ளாங்கிற் சபரியைப் பரிவா னொடும். (௧௭)

பெற்றியி னொருவ ரொவ்வாப் பெருந்தகை நன்கே யாற்றி
யுற்றசீர் யோகப் பேற்று வுருகனுற் றடைந்தார்க் கெல்லா
முற்றுறு மவாவின் வண்ண முன்னிய வுணர்ந்து நல்கிச்
சொற்றிக முரிமை யென்னுந் தொண்ணக் குறையவான் மன்னே. (௧௮)

ஐந்திவ்வா றிருந்து பூண்டு மியற்றுவான் வடாது திக்கி
னைந்துறு பள்ளத் துமிர வைபுரிக் கோர்நா ளண்மத்
தித்கொரு வடிவங் கொண்ட தென்னவா மென்னன் செட்டி
பாங்கிருந் திவன்மேற் றாமம் படைக்கருள் பருகி நின்றான். (௧௯)

தாங்குறுந் தன்மை மிக்க தாபத னவனை யொன்றுங்
காந்திய வுரைகள் கூறான் கண்ணனன் றுடைக் கூறிப்
போந்தனன் கண்டு சூழ்ந்த பொருளையிற் பலவாப் பேசி
யார்த்திட மதியாய் போது மறிவிப்பே னென்னச் சென்றான். (௨௰)

சென்றுதன் னிருக்கை மேவிச் சிந்தனை சிறந்த வெள்ளரி
நின்றுதன் னினைவின் வண்ண நிரப்புமா காரி தன்னை



யொன்றநல் லுரைக ணோதி யுங்கடை புவனி யின்னே
கொண்டுநீ வருதி யென்னக் கூறியே தாழ்ந்தான் மன்னே. (௨௧)

நோக்கிடு மவரு மந்த நோன்மையை யினை யெல்லா
மாக்கிடின் றனித்துப் போக்கு மன்னனுக் கடிமை பூண்ட
பாக்கிய முடையா னென்னும் பரிசறிந் திலளாய்த் தார்த்தன்
போக்கிய வண்ண நல்லோன் பொருந்திட தேடிப் புக்கான். (௨௨)

மேவரு முதன்மை பேய்ந்த வேதரச் சகனே யாதி
தேவரு மறிய வொண்ணாத் திருமகள் கொழுநன் சீர்மை
யோவலின் றுலவி நிற்கு மன்பர்பா லுதனைத் தாழ்ந்தோ
ரேவல்கொள் குலி யோரா னெனுமிது வியப்போ வம்மா. (௨௩)

தொக்கறு மொளியே கொண்டு தாள்நுமா லடியன் குழு
விகலொடு சென்ற ஞானி யிமையவ வங்கிக் காற்றுச்
சிவிகை யிடம் போலத் தெறலுறு மயர்வு கூடப்
பகலுறு விளக்க மென்னப் பரிபவப் பட்டா னன்றே. (௨௪)

அடைந்தவம் மடியார் குற்ற மாற்றிடு மமையுந் தன்மை
தொடர்ந்ததுமேலோர்பாலிற் பகருநர்தாழ்ந்தோர்க்குண்டோ
விடக தெரிந் தென்னை போவா ரிவனெனாச் சீறி யுள்ளங்
கடந்தனன் னென்னைம் போக விற்றுமை தொடங்கு கின்றான். (௨௫)

எட்டிமா தம்ம றற்றுங் கேய்ந்தவன் முயற்சி செய்யும்
பாடவ முடையா யல்லை *பாவகன் பற்றுங் குழு
றொடிய †பதங்கந் சென்று நச்சினேன் றுற்றுத் தீயின்
வீடுறு தன்மை யார்க்கும் விளங்கிய திடத்த தன்றே. (௨௬)

வழிமி னங்கி யொக்கு மொளியுமே ரொண்ணூர்க் குய்க்கு
மாழியா னிடத்து நீங்க வன்புங்கொண் டமைவான் பக்கல்
சூழிய விருந்த வற்று நோக்கிலத் துணைக்க ளாந்தோ
வாழிய வன்றோன் காந்தி வலிந்திட வருந்தி னேனே. (௨௭)

---

* பாவகன் - அக்கினி.
† பதங்கம் - விட்டில்.

வல்லவன் செயலை யோரா மதியினை யெனைய தந்தன்
செல்வியத் தெரிந்தேன் முன்னர்த் தேர்ந்திலை வாய்ந்தே னில்லை
சொல்லுமின் னுரையை மெய்யென் றுணரினு மொருவற் றேடிக்
கொல்லுமா றனைத்தே னந்தக் கொள்கையின் போவ தின்றால். ( )

ஆதலான் மிக்க வன்பி னருமைக ளுடையா யானைக்
காதலன் றன்னை யின்னே காவலர் பதிக்குச் செல்லு
மேதமில் விருந்தே யாக வியற்றுவை யென்று கூறிக்
கோதற வரத்தங் கக்க முடித்தனன் குமரன் றன்னை. (௨௯)

புரிந்தன நோக்கி யென்னைப் புரந்திடத் தெய்வ மன்றே
*அரிந்தம னன்பர்க் காக்கு மதுவன்றே வழுவி தன்றாற்
றெரிந்துறு மடியர் தம்முஞ் செம்மையே சேர்வ ரென்றுப்
பரிந்தனன் மகனை யேந்திச் சேவகன் பக்கல் புக்கான். (௩0)

மைந்தனை யேந்தி வந்து மலரடித் தலத்தில் வீழா
வெந்தையே காக்க வென்று மிவனையு மருவி னேக்கி
விந்தினை கொழுநன் றூச னிடரினை தோன்றச் சென்று
பைந்துழாய்த் தீர்த்தங் கொண்டு படிவமீத் தெளித்தான் மன்னோ.

கருவடி வடையா யோகர் கருத்தினி லிருந்தி நாளும்
வருவடி வடையா வேட்கை வரத்தொழுங் கமலக் கண்ணான்
றிருவடி விளக்கி யுள்ள தீர்த்தமீந் தனைய போழ்தே
பெருவடி வடைந்த மைந்தன் முன்னையிற் பிறங்கி னானால். (௩௨)

மாதங்கிக் கடிமை பூண்ட வானிக மென்ன வென்பா
லோதங்க பவனிற் போக்க தகன்றதற் குவந்து கந்த
மாதங்கு திறந்த மாயன் றொழும்பமே வாழ்வ ரென்றுப்
பாதங்கை கூப்பி மேலோன் பணிந்தனன் விடையிற் சென்றான். (௩௩)

ஈங்கிது நிகழும் வேலை யெழில்கொள்ளை சூழ்ந்த நாதன்
றேங்கம ழருவிச் சாரற் றிருமலை மீது போந்தே
யோங்கிய வடியார்க் காக்கு முண்மையை யுணர்ந்தோர் மாணி
யாங்குதன் மனைத்தை முற்று மவாக்கொடு பன்னாட் போற்ற. (௩௪)

* அரிந்தமன் - இறைவன்.



பின்பொரு தினத்திற் சேடப் பிறங்கலிற் பிறங்கும் பெம்மான்
மன்பதை வேண்டிற் றீயும் வள்ளறா னங்கா நில்லை
யென்பதைத் தெரிக்க வெண்ணி வேட்டனன் றிச்சை யனைத்த
வன்புறு மந்த ணாளர் கனவிடைத் தனைந்தா னின்ன. (௩௫)

ஆரியன் றும்ப யோனி யமர்தரு *அவாசித் திக்கிற்
சீரிய வரிசை யென்னுந் தென்றிருப் பதியி லெம்மைக்
கூரிய புரிவிற் போற்றுங் கொள்கையே தனத்தின் மிக்க
காரிய மென்று கானுங் கலைவலா னொருவ னுள்ளான். (௩௬)

மறையறி யந்த ணாள வள்ளன்மை யுடைய வந்தா
விறையிட நேடிச் செல்வி னெண்ணிய வினைத்து நல்குங்
குறையிலை யாமு மின்ன கூறுவாங் கனவி னென்றுற்
றிறையுமீ யைய மெய்தா தெய்துக விரைவி னென்றான். (௩௭)

மாதவ னுரையா லுள்ள மகிழ்தொழு குலத்து வந்தோன்
பாதவ ணங்க ளோடு பற்பல விரைந்து நீங்கிச்
சேதா றுவந்து மேவச் சேவகப் பெரியோன் மேய
வேர்தரு மனைய யென்னு மொருநக ரடைந்தான் மன்னோ. (௩௮)

அடிகடன் கனவிற் றோன்றி யறைந்ததற் கிலக்கா ரென்னச்
செடியவிப் பிறவி நீக்குஞ் சேவக யோகி நோக்கிக்
கடிகொள்கீழ்த் திசையு திக்குங் கதிரவ னுதீசி† தோன்றிப்
படியுற வருவான் போலும் பண்ணவன் வரவு பார்த்தான். (௩௯)

முன்பரின் முன்ப னருமுதறி வுடைய மேலோ
னன்பர்பா லன்பர்க் கென்று மன்பனே யுதிக டம்மை
யென்பெருந் தவத்தா னேர்ந்த வின்றன்றோ வெடுத்த தோற்ற
மின்புறு பலத்த தாகி யிசைந்தன னென்னத் தாழ்ந்தான். (௪0)

இடியுறு கொடிய னாதி யாவரு மினிது தங்கண்
முடியுறக் கொண்டு போற்று முண்டக மிரண்டே யன்ன
வடிகளின் பாத தூளி யடைதலா லெளிய னானே
வடியனேன் முடியு மிக்க வணிமுடி யாயிற் றையா. (௪௧)

* அவாசித்திக்கு - தென்றிசை. † உதீசி - வடக்கு.

அந்தண ரேறே மாயோ னருளினு ளிவர் கொண்டு
சிந்தனை முற்று மென்றுந் திருவினிற் குபோ னேனு
மிந்தமா மறையோர்க் கொவ்வா வென்றுல கேத்தச் செய்தான்
செந்திரு நாத னன்பர்க் கிதொரு பெரிதோ தேரின். (சஉ)

மங்கையா ளொருத்தி போர்கா னனத்தழுக் காறு மேயாள்
செங்கையோ னின் கித்தச் சேவகற் பிழைத்தா ளாகத்
தங்கிய சூல னீனுந் தருணத்து மீன்று ளில்லை
யிங்கிதென் விந்தை யென்று யாவரும் வியப்புற் றாரால். (சங)

வயாவுறு திங்கள் போயும் வயிறுவாய்த் திலளா லிந்த
வயாவுறற் கேது வென்னென் றகத்தினி லறிந்த தேற்றுஞ்
செயாவுறு கருமஞ் செய்யச் சிறிதோ தெய்வ மல்லாற்
றயாவுடை மாலி னன்பர் தம்மிடம் பிழைத்தாள் கொல்லோ. (சச)

கருவுயிர் மதியத் தன்னிற் காருத்தற் கடிமை பூண்ட
திருவுயர் மதிய னை சேவகற் றாறி நின்று
டருகிக ரன்றுற் போற்றுந் தன்மையே யுபாய மிந்தப்
பருவர னீக்கற் கென்றுப் பண்புடைக் கிளைஞர் தேர்ந்தார். (சரு)

பெண்ணைச் சேறி யந்தப் பெரியவன் பதத்தே யென்ன
வண்ணின னடிகள் போற்றி யவன்செயு மருளால் யார்க்கு
கண்ணரு மங்கை கல்லி நவையில ளாகி வாழ்ந்தா
ளென்றுமேலோர்ப்பிழைத்தல் பொறுக்கவென் றிரப்பினுண்டே. ( )

விண்டுவி னருளைக் கொண்ட மேன்மைசேர் யோகி தன்னை
யண்டின ரென்று மாறே யவருளம் வியப்பப் பொன்பூ
கொண்டனேர் கூந்தன் மாதர் குமரர்கோ மின்மை யாதி
தண்டலின் றனிப்பா ருநந் தனைவிக நில்லாச் சான்றோன். (சஎ)

மாயனுக் கன்பி னூட்டு மஞ்சன தீர்த்தங் கொண்டே
யாயவன் றேய்க ளுக்கு மற்புத மொன்றே கூறின்
பாயவெவ் விடத்த நாய பாந்தள்வாய்ப் பட்டோ மென்பார்க்
கேயவென் றுமஞ் சொன்மி னென்றுரை யாடிப்போக்கும். (சஅ)



இன்றமிழ் மாலிற் கன்ப ளிசைவழி வந்தோர் யாருந்
துன்றிய பிணிக டம்மைச் சூழினு மருந்து முன்னூர்
மன்றலன் கமல மேய மாதுசேர் மருமங் கொண்ட
தன்றிரு வடியிற் றீர்த்தந் தனையுண்டே யோக ராவார். (சகூ)

வேங்கட வாணற் கன்பு மேவினா் கருணை யுண்டேன்
மூங்கையும் பேசஞ் செல்லு முடவனு மில்லா குள்ளா
ராங்குற மலைமீ தூற மதியிலான் புலவ னாவா
னோங்கிவர் சீர்மைக் கம்ம வும்பருஞ் சிறிது மொவ்வார். (ருய)

சேவகச் சருக்க முற்றிற்று

ஆகச் செய்யுள் உ00.

## ௩—தாசர் பிறப்புரைத்த சருக்கம்.

இன்னிய பத்திமைச் சேவ கப்பிரா
னென்னிய சோதர விராம னென்றிவர்
கன்னுறுதஞ் சுற்றத்தைக் காடி நல்வழிப்
பன்னிய சிலவுரை பகர்தன் மேயினார். (க)

மன்னிய மாலரன் மற்றைத் தேவர்க
டன்னிய கருமங்க ளெய்கத் தோன்றுவ
ரின்னவர் தருபல னெளிதிற் போமென
முன்னிய மறையினர் மொழிவ துண்மையால். (உ)

பந்தமா மினைதெறப் பட்ட மாக்களைச்
செந்திரு நாதனே திருத்தி யாள்பவ
னந்தமில் பதமவ னல்கு மின்றதே
யிந்தநல் லுரையொருஞ் சியம்பு மோத்தெலாம். (௩)

தாங்கிய வொளியுடைத் தபன னென்றுரை
யீங்குமப் பிரதிபிம் பங்கள் கோடியும்
வாங்கலை சூழ்தரு *வசுந்த ரமுற்றபு
தாங்கிய விருளினைத் தாக்க வல்லவோ. (ச)

* வசுந்தர - பூமி.

காயமீச் சரிப்பது கலந்த வாயினும்
மாயசம் விளைதயின் வயிற்று மாதவத்
தாயவ னசலமும் வேகத் தாற்றலாத்
தூயவ னெடுகொணாத் தொடர வல்லவோ. (௫)

மதிதெரு வில்லவர் *வனமென் றென்னிட
வெதிர்தரு காவலங் கதர்சென் றெய்த்தவர்
முதிர்தரு தாபமு மினைப்பு முற்றற
வுதிர்தரச் செய்தமென் றுன்ன லொன்றுமோ. (௬)

ஆதலி னிவிரு மத்த வானவர்
மீதமர் நண்பினை விடுத்து மாமறை
போதுசெந் தாமரை நயனத் தாத்தமன்
பாதமே துணையெனப் பற்றி யுய்ம்மினே. (௭)

என்றிவர் சொற்றன விகத்தி யன்றியே
துன்றிய பயத்தினுந் தக்கதை யேதரும்
வென்றியொ ருரைமிக விழுமி தென்றவ
ரொன்றின ரிறைவன்பா லோங்கு பத்திமை. (௮)

மற்றைய தெய்வங்கண் மனத்தி லெண்ணிலார்
கற்றவர் புகழுரு கப்ப னாற்றவத்
துற்றவ னைவரு மோங்கு சுற்றமும்
பெற்றனர் மாதவன் பிறைப்பில் பேருளர். (௯)

மொய்வரு மொளிமணி முற்று சோதியான்
மைவரு மிருள்பொதி வழுக்கம் நீக்கிடுங்
கைவரு தொழிலைங் காட்டி மாறவ
னைவருங் கோயிலி னடைந்து கட்டினார். (௰)

வேங்கட மால்வீ டிருத்த வண்பரா
மாங்கவன் பாதுகை யமைத்துக் கோயிலி
னீங்கிய பொழுதொடு மிகிருங் காலையு
மோங்கிய பூசனை யுஞற்றி னாரரோ. (௧௧)

* வனம் - நீர்.



இத்தகைப் பூசனை யியற்று னாரிலோர்
சத்துவ குணத்தசாத் தப்ப வள்ளலும்
வித்தகன் பாதுகை மேய கோயில்வாய்
நித்தமும் விளக்கமா வெய்தி விட்டனன். (௧௨)

அன்னவன் றுன்டதித் தகுமெய்ப் பண்ணுறு
நன்னல மைந்தரோர் நால்வர்த் தந்தனன்
பின்னருங் கிருட்டினப் பெயர்கொண் மைந்தனைப்
பன்னரும் புகழ்கொளப் பணித்திட் டானரோ. (௧௩)

தந்தவக் கிருட்டினன் றன்ம னத்தினை
வந்தவர் குலத்துளாள் வாய்மை யின்னுரை
அந்தரங் குணநலந் தொக்க தோகையை
மந்திர முறைவழி மணந்து வாழ்ந்தனன். (௧௪)

இப்பரின் குலவிளக் கென்னுங் கன்னனுக்
கொப்புறு சாயைபோ லடங்கு வைகிய
மைப்படி கண்ணினாள் வயிற்று மூவராத்
திப்பிய குமரர்கள் சிறப்பத் தோன்றினர். (௧௫)

துணையர்கள் மூவரைத் தந்த பின்னரு
மிணையவன் முற்பவத் தியற்று நோன்பினு
னிணையுமா லடியின் கூட்ட நேர்ந்தவர்ப்
புணையுமா வொளியுடைக் கருப்பம் பூண்டனள். (௧௬)

கடுகிக திருவினுங் கழித்து மீப்பட
குடிபதி யென்னவில் வதித்திட் டாலென
வடிவொளிர் இன்றவம் மாதை நோக்குபு
படிபொரு ளுணர்த்துளார் பரிவு கூர்ந்தனர். (௧௭)

சாத்திய குணத்தொடு சாரு மாப்புகழ்
தோற்றுறு மிடிவினைத் துலங்க மாயவற்
போற்றுமல் லறிவுடைப் புதல்வற் பேற்றையே
யாற்றுவ னிங்கையென் றறிஞ ரோதினர். (௧௮)

வெள்ளிய வொளிவிடு மங்கை மேனியு
முள்ளுறை மைந்தனுக் குற்ற சத்துவ
வெள்ளருங் குணநிறைத் திவர்த்தி யாங்கனுங்
கொள்ளைகொண் டதுவெனக் கூறி னுக்குமால். (௧௯)

மாயவன் றனைமன மலரின் மன்னிட
மேயவன் சுகம்பிற விரும்ப லற்றவ
னேயுமப் புதல்வனை யொப்ப வென்னல்போ
லாயுநல் லுணவெலாம் வெறுக்கு மங்ஙனம். (௨௰)

அணங்கவ ளகட்டிடை யமரு மைந்தனிக்
குணங்கொடி தெனத்தனக் குலைந்து தாமத
மிணங்கவுள் ளிடனிலா தெட்டிப் பார்த்தல்போற்
சுணங்கமர் முலைமுகங் கறுத்துத் தோன்றிற்றால். (௨௧)

தன்வயிற் றிடைவரு தனய னின்னனம்
பொன்மணி யாதியி லுள்ளம் போக்கில
னென்னுமத் தன்மைமா தெடுத்து ரைத்தல்போன்
மின்னிய வணிகளின் விருப்ப நீத்தனள். (௨௨)

இட்டிடை பெருத்ததா லென்றுந் தன்னிடைக்
கிட்டிய *வயினலங் கிளரு மைந்தற்பெற்
றெட்டருஞ் சித்தியிக் கெய்து கின்றதென்
றொட்டிய மகிழ்விற்பூ ரித்த தொப்பது. (௨௩)

பன்னுமாப் †பகடியிற் பரந்த பூவிது
வென்னுமவ் வறிவிறு மியங்க வின்பில
னென்னகட் டுறைபவ னென்று தேற்றல்போன்
மன்னுமா தடிமிக வருந்திப் பேர்க்குமால். (௨௪)

கங்கையின் னணங்கரு வளர்க்கு நாளிடைப்
பொங்குவண் டினமதுப் புதிதுண் டாடவும்
புங்கவர் மகமிகப் பொலிவி னோங்கவுந்
தங்கிய வசந்தமா மிருதுச் சார்ந்ததால். (௨௫)

* வயின் - வயிறு.
† பகடி - பிரகிருதி.



* என்னுமேழ் பத்துமூன் றிரிசை யாயிர
தன்னுமான் டெங்கலே நருச யித்திர
மொன்னுநா †ளாயிலி லொப்பின் மைந்தனைக்
கன்னனின் மனைபுவி களிப்ப வீன்றனள். (௨௬)

நன்னிலை நாள்வர நங்கை பால்வரு
மின்னியன் மைந்தன்றன் னிசையி னெம்முகம்
மன்னிய தேசடைத் தாக வைப்பனென்
றுன்னிய மகிழ்விநோ வொளிர்த்த திக்கெலாம். (௨௭)

அப்பொழு ததந்திய வசலம் விட்டுநீஇ
யொப்பரு மாயனுக் கொருவ னன்பினென்
றிப்பெரும் புதல்வனைக் காண்டற் செய்தல்போற்
றிப்பிய விரைகொடு தென்றல் சேர்ந்ததால். (௨௮)

ஆதிய மறைபுக லத்த னுனரா
லோதிய மகம்பல வுஞற்று விப்பனிப்
போதக மதியுடைப் புதல்வ னென்றெனி
வேதியர் ‡வேதியின் §முளரி விம்மிற்றால். (௨௯)

கிளப்பருங் கொடையுடைத் திருட்டி னப்பெயர்
வளப்பெரு நாயகன் மனைவி மைந்தனை
யிளப்பற வீன்றன ளென்று சொற்றனர்க்
களப்பரும் பரிசிலீந் தகம கிழ்ந்தனன். (௩௰)

மைந்தனைப் பெற்றவம் மகிழ்வி னுன்மறை
யந்தணர் முதலினோர்க் கனிபொ ருடைபூ
பந்திகொள் சுரபிகள் பரிந்த வுள்ளத்தோ
டந்திலீந் தோங்கின னதிரு வேறனென். (௩௧)

தானமர் தவத்திறற் றனயன் றோன்றநா
மானவ னிலக்குவன் வந்து தித்தநா

* எழுபத்து மூன்று இரிந்த ஐயாயிரம் - நாலாயிரத்துத் தொள்ளா யிரத் திருபத்தேழு.
† ஆயில் - ஆயிலியம்.
‡ வேதி - யாககுண்டம். § முளரி - அக்கினி.

ளானதா லொப்பனென் றுசை கொண்டிரா
மாநுச னெனும்பெயர் வைத்த ழைத்தனன். (௩௨)

தினந்தொறும் வளர்தரு செல்வச் செம்மலா
கினம்பெறு மழலொழி னினிய சொற்களான்
முனம்புவி யுறுமரி முராரி யாதியாய்க்
கனம்பொரு மேனியா னுமங் கற்றனர். (௩௩)

இப்புவி வருமகா ரிற்றை ரன்னவரை
யப்பவென் றம்மவென் றழைத்த லேவழக்
கிப்பெரு மகவுரை யெண்ணின் மாவியப்
பொப்பதொன் றிலையென வுள்ள மோங்கினர். (௩௪)

மூன்றுயாண் டாண்டுற முற்று மைந்தரோ
டேன்றுற மாட்சி னெய்தி யெந்தைமால்
போன்றமைத் தனவுருப் போற்றிப் பூவெறி
சான்றசாந் திவைதினஞ் சார்த்தி யாடுவார். (௩௫)

ஒழுந்தரு புலவர்பாற் கொண்டு நாடொறும்
வழுத்தமாப் புகழ்பெறு தந்தை மைந்தரை
விழுத்தவத் தகத்தியன் றந்த மெய்த்தமி
ழெழுத்தறி வித்தன னுண்டைந் தேயநாள். (௩௬)

இத்தகை மைந்தனர் கற்க வென்னல்போ
லுத்தம மிலேகமக் கென்ன வுள்ளி நீர்
தத்தலை கதிபல கடவிற் சார்ந்தென
வித்தைக ளிவர்வயின் விரைந்து மேவின. (௩௭)

கற்றுயர் வடைந்தவக் கண்ணன் மைந்தனு
ருற்றதங் குலத்தினுக் கொத்த நன்னடை
பெற்றனர் புலன்களை யடக்கும் பெற்றியா
லிற்றிவர் நிலையென யாரு மோர்க்கிலார். (௩௮)

மனையற னடைந்துதன் மைந்தர் மாதொடு
வினையரி புவப்பன விருப்பிற் செய்கெனும்



நினைவினுள் ளுலகொடு நுனைவு நேருமா
றினையனம் பொருத்தினன் றுதைந் சீர்பெற. (௩௯)

மனையறன் விதித்தவா புரியு மாண்புடை
யினையவர் தாமரைக் கண்ணனெம்பிரான்
புனைமல ரடியிணை பூக்கொண் டேத்திய
மனனுறக் கொண்டுமா மகிழ்வி னெய்வரால். (௪௰)

இரண்டெனுங் குறிபிறு வினைக்கு நாடுவே
திரண்டுமம் மலமறச் செறித்த பாண்டமே
யரண்டரு மங்கைய ரங்க மென்றுளாந்
தெருண்டன ரிருடிகே சனையுள் சிந்தையார். (௪௧)

அழிவிலா மோக்கமே யவாவி யச்சுதன்
கழலிணை தொன்மையுங் கருத்திற் காண்கிலார்
இழிவன விடையபீ டிச்சை வைத்தில
கொழிவறுன் மதியென வுள்ளத் துள்ளுவார். (௪௨)

மாயவன் பதமலர் மலர்கொண் டர்ச்சனை
யோய்விலா தொருத்துதழ் கூடுவார் நாள்வரி
லாயவந் நாளையோ ரன்ப ருண்டிலை
தேயுகா னெனநினைத் தினைந்து விம்முவார். (௪௩)

அன்னவர் நாரணற் கன்பர்க் காதுறி
னென்னமா தவமிதென் றெதிர்கொண் டேத்துவார்
மன்னுமன் பிலார்களை நோக்கில் வாளரா
வுன்னிபற் றினமென வருந்து மெய்ம்மனம். (௪௪)

இல்வழி யிழிக்கெலா மென்று முள்ளதென்
றல்லவே யுழலுமிவ் வறிவி லாதர்கள்
புல்லொடு தருமமாப் புன்மை சேர்வரா
னல்வழி யடைதகைந் நூன்றன் றுன்னுவார். (௪௫)

மாதர்பொன் மண்ணிடை வந்து போதன்மெய்
யிதறி விலாதவர்க் கின்பம் போதுமால்

ஓதரும் பவக்கடல் கடக்க வுன்னலே
மேதகு செயலென விரும்பி னாரரோ. (௪௬)

வித்தக ராயினு மனைக்கண் மேவுவார்
முத்தியிற் செலலரி தென்று முன்னிமா
வுத்தமர் மனைதுறந் துவந்து சென்றனர்
தத்துறு தழலினின் றேறுந் தன்மைபோல். (௪௭)

ஆதியி லரியையி லமரு மச்சுதச்
சோதியை யடியிணை தொழுது தொன்மறை
யோதுமந் தணர்மக மொழியின் றேம்பிடு
மாதவன் கோட்டியூர் மருவி னாரரோ. (௪௮)

ஆவயிற் றூமறைக் கண்ணு மாழியுங்
கோவியல் சங்கமுங் கொண்*டென் றுயிர
மேவிய வொளியினும் விளங்கு காரணன்
றேவிய ருடனமர் சிறப்பை நோக்கினார். (௪௯)

காடொறு நாரண னடிய தாமரைத்
தாடொழு தெழுந்துளந் தழைப்ப நன்பினா
லீடொரு வருத்தமக் கில்லை யாயினார்
சேடனென் றறிந்தபின் செய்வ தென்னையே. (௫௦)

தாசர் பிறப்புரைத்த சருக்க முற்றிற்று.
ஆகச் செய்யுள் ௨௫௦.

## ௫-சமயந்தெருண்ட சருக்கம்.

வண்டுவீழ் துளபத் தொங்கன் மாதவன் மதத்தே யன்பு
கொண்டன ராயும் ராமா நுசர்மறை குறித்துக் கொள்ளா
வெண்டரு சமய சாலத் தியல்புக ளறியப் புக்கவர்
தொண்டருண் மழிசை மன்போற் றுலங்கறி வுடைய தூயார். (௧)

புக்கறி வுற்ற மேலோர் பொன்னவன் சமய மாதி
தொக்கபன் மதமு மவ்வப் †புலத்துறை தொகுத்த வூறு

* என்று - சூரியன். † புலம் - நூல்.



நுக்கவ ராய்ந்து மற்றச் சமயங்க ளெறிய லாமை
யிக்கணர் தேர்ந்த வண்ண மொருசில விளம்ப லுற்றேன். (௨)

அக்குரு மதத்திற் றேட மகன்றனை காட்சி யொன்றே
முக்கிய மாகி நிற்கும் பிரமாண மொழியி னேடு
தொக்கனு மான மின்ன சொலிற்பிர மாண மாகத்
தக்கன வில்லை யென்னுந் தன்மைய துடைய தம்மா. (௩)

பேசிய காட்சி யொன்றே பிரமாணங் களிலே யென்று
மாசிலா தாகி நிற்கு மாற்றல்கொண் டிருத்த றேக்கித்
தேசுள் வியாழப் புத்தே டேர்ந்துமற் றிரண்டு மொத்த
மாசடைத் தென்று விட்டார் மதியுளார்க் கரிய தென்னே. (௪)

காமமொ டிராச நீதி களினுற் கொத்த தாகி
யாமனு மான மாதி யாலறி வடைய மின்றிப்
பூமரு மாந்த ருள்ளப் போக்கினுக் கியைவ தானு
மேமுறு கின்ற லோகா யதத்தினு மினிய தின்றால். (௫)

வேறு.

தேடும் பொருளை யழிப்பதுவாய்த் தினமு முடலை வருத்துவதாய்
நாடின் மிகவு மற்பமதாய் நன்றுங் குமதி யுடையார்க
ணீடின் றிதனுக் கெனத்தங்க ளுதர நிறைக்க வெணிச்செய்த
தோடங் துறுத்த பிறமதங்கள் சுகத்தை விரும்பு மவர்தொடரார். ()

எண்ணும் பற்ப லவையவத்தா லியைபு மிக்க வுடலன்றி
நண்ணும் பிறப்பு மிறப்புமுற நாடு மான்மா விலனதனா
லொண்ணும் பாவ புண்ணியமென் றேதா கின்ற தொன்றுமிலை
விண்ணிற் பகட்டின் மிசையிவர்ந்து மேவும் யமனும் பயமுமிலை. (௭)

குழுதக் தளவங் கழுநீருங் கொண்ட கமல முகமடவா
ரழுந்த விதழுண் டங்கவரை யண்பிற் றுய்த்த லைத்துவிரை
திமிர்தல் களித்த லிஃதன்றிச் செய்பிற் சுவர்க்க மொன்றிலைநா
*லிமிழ்நசன நோன்பெடுத்த லென்னே பலன்மற் றிலையவமே. (௮)

* இமிழ்நசன நோன்பு - நாள்கள் பழுக்கும் உண்ணுநோன்பு.

வேறு.

பாலியத்தைக் கமருகுத்த பயங்கர வாக்காமே
வாலங்கர் விழிமடவா ரல்குலெனுங் கடத்தாடிக்
கோலமுலைக் குவடணைந்து கொவ்வையிதழ்த் தேன்கொண்டு
சாலமதன் பூசைபுரி தவமன்றோ பெறும்பேறு. (௯)

வேறு.

ஓதிற் பெருத்தே னென்றுத்தே னென்ன வுணரு முணர்விதனு
லேத மில்லாத் திறன்ஞானி யான தன்மை யிவ்வுடற்கே
போத வுடைய தல்லாது பொருந்து முடலை விடவுடலிற்
றீதி லறிவை யுடைத்தாய வான்மா வொன்று சேர்கிலதால். (௧௦)

என்ற னுடம்பீ தெனுஞான மெய்து கின்ற படியாலிங்
கொன்றும் பேத முண்டென்ன வொன்று தென்றே யுரைத்திடுவாம்
மன்றச் சுகித்த தெனதான்மா வென்னு மிடத்து வருபொருள்பே
றின்ற விவனும் பொருள்கொள்ள னீர்மையென்ன நினைதறகும். (௧௧)

வையமப்பு முளரிவளி வாய்ந்த நான்கே தத்துவத்தின்
செய்ய விவைகளிடம்பியல்பாற் சேர்ந்த வாயி னறிவுடைய
மெய்ய தாகுங் கரிதற்கு வேறொன் றுரைக்க வேண்டுவதோ
மொய்ய தாய சுவேதசங்கண் முன்னிற் சான்றாய் முற்றிடுமால். (௧௨)

குருவாற் செய்த விம்மதத்திற் கூறின் மோக்க முடல்வீடுதல்
பொருவி லின்ப மாதரொடு புணர்தல் கலவிச் சுகமளிக்கும்
பருவ முடைய மங்கையரே பரப்ப றெய்வ மினமாகுந்
திருவி னிறைந்த விச்சமய மறைக்கு மொப்பச் சிறந்துளதால். (௧௩)

வேறு.

இத்தகைய பொன்னன்மத மின்பமளி னாதாற்
சத்தமனு மானமிவை தக்கபிர மாணந்
தொத்தவைக ளென்றறிஞர்க் கொப்புவ தரிக்தே
நித்தமிரண் டானுமுற நேர்தல்பல காண்டும். (௧௪)

உண்டுபசி தீருமென வுண்பருல காயத
ரண்டினர்கள் போத்தால மாங்குசில வோதக்
கொண்டுறுதி யென்றுமகிழ் கூர்ந்ததனை யெண்ணித்
தண்டுதலி லாதுபல தானமும ளிப்பார். (௧௫)



மருந்தாபிணி மந்திரமெய் மன்னுவிட நீக்குந்
திருந்துசகு னந்தருவ தீமைநல நாலின்
வருந்திறமி துன்மைவிழி மன்னவெதிர் காணு
திருந்துறுமொர் தெய்வமென வெண்ணாவிசை வாமால். (௧௬)

ஏலவுல கீசனிலை யேனுநமர்க் கெல்லாந்
சாலவுல காயதருரை தந்தசுக முண்டான்
மூலமுள தேகவுலகு முற்றிலவர் கெட்டார்
போனுயிரு நானுவுரைகள் போற்றல்வழக் காமால். (௧௭)

காமமுறை நால்பொருள்சொ னூல்களவி னூல்கள்
சேமமனை யோடணைதல் சேரவற மீட்ட
ஞமுற வஞ்சர்பொரு ணல்லரசர் வௌவற்
காமெனவு ரைக்குமதி னலைத்து ணிந்தாம். (௧௮)

வேதமுறை சந்திமுதன் மேன்மையுறு கன்ம
மாதரவி னைப்புரித லாவசிக மாமால்
வேதனைபொ ருட்செலவு மேவுமென நீக்கி
லோதுபெரி யோர்நெறியை யொத்தநெறி யன்றால். (௧௯)

வேறு.

வித்தக மடைந்து * கர்த்தா மேவனு போக்தா வாகி
நித்தனு மாகி யொன்று மவயவ நேரா னாகிச்
சுத்தமாம் † பிரத்தியக்காய்ச் சுயஞ்சோதி யாகி ‡ யங்கி
யொத்தன னங்கத் தென்று முவன்வேறே யென்னு நூல்கள். (௨௦)

வேறு.

வின்னுறல கவானில வேள்விபல செய்யென்
றெண்ணின்மறை கூறுதவி னேய்ந்தபல நோன்பு
நண்ணுதலும் வேண்டுமெதிர் நாடவில வேனு
மொண்ணுமுல கங்கள்பல வுண்டெனினும் வேண்டும். (௨௧)

---

* கர்த்தாவாகி அனுவாகிப் போக்தாவாகி யென்க. † பிரத்தியக்கு—தானே தன்னையறிவது.

‡ அங்கி—அங்கத்தையுடையவனாகிய ஆன்மா.

என்னதென லாய்விழிமு னெய்திவிழி யின்றேல்
மன்னுதலி லாதுசட மாய்வளர்வு தேய்வாய்ச்
சொன்னநிலை யாமையிவை துன்னியவிம் மெய்தா
முன்னரிய நித்தியம தாற்றவுயி ராகா. (உஉ)

எனக்குளது நோயுடலி லென்னலறி வோனுய்
நினைக்கில் *லொரு தன்மையினை நேர்ந்துமொரு தானு
யனைத்துமறி யோகிளிடை யன்றியறி யானுய்
தனிக்குமுயிர் வேறதனி னுய்யவுடல் வேறால். (உங)

கூறுமனல் வெந்த†வய கோளமெரி யென்றே
காறுதனி லப்பவுயிர் நன்குமரு வுற்று
வேறறித லின்றியெழில் மிக்கவுடல் தன்னை
யூறிலுயி ரென்னவிவ ணேதவுறு மன்றே. (உச)

தோய்ந்ததென தின்னுயிர்க ளந்தனையெ னுங்கால்
வாய்த்துளவவ் வான்மவுரை மன்னுதனை யோது
மேய்ந்தவுட லென்னதெனின் யானுடலென் றுசா
வேய்ந்த‡கிரு காதிகளின் வேறெனலை யொக்கும். (உரு)

பூதமவை யைந்திறுதி போதவுள தத்வம்
வேதமுத னூலுரை விளக்குவன கொண்டே
ஞாதமுற வின்றபெரு ஞட்டமெதி ராதா
லாதலினவ் தில்லையென வாயுமதி யோவ்வா. (உசு)

மல்லலுறு தத்துவமோர் காலுமரு வுற்றுப்
புல்லுதலி னுலறிவு பூணுமுட லென்னுஞ்
சொல்லுவது மிக்கறிவு தொக்கவர்மெய் வாதத்
தில்லையென நீக்குமெதிர் நிற்குமவ லின்றி. (உஎ)

யாந்தமுற சிவனவை பற்றவொரு வித்தான்
சந்தானவை குண்டகர் துன்னிமகிழ் வெய்தி

* ஒரு தன்மை—வளர்தலீதேய்தலில்லாத்தன்மை.
† அயசோளம்—இரும்பாலாய உண்டை.
‡ கிருகம்—வீடு.



வந்துபிற வாதநிலை மன்னுதனல் விடா
விந்தமெய் யலாதுமெய் யிகத்தலது வன்று. (உஅ)

ஆதலின்வி யாமுன்மத மந்த*வப வர்க்கச்
சாதகமன் றுசூரர்கள் சார்வதுமே யின்பத்
தோதுமன மேயதுணத் துத்தமர்கள் சாரார்
தீதுதரும் நீத்தறிற மென்றுதெருள் வாரால். (உகூ)

வேறு

இன்னவா தாச ரெண்ணி யிணையிலா வரியை யென்னு
மன்னகர்க் கணித்தா யோங்கி வன்பலை தாங்கி நாளும்
மன்னிய மாயா வாத சமயிகள் வைகப் பெற்றுப்
பொன்னிலம் பொருவுங் கோவி லுமெனும் பதியிற் போந்தார். (கூ0)

ஒருபொரு ளறிவா யென்று முண்மையாய்க் குணமொன் றின்றிப்
பொருவிசே டணையிலாம லுளதுமற் றனைத்தும் பொய்யாம்
வருமொரு மோக்க நூலின் வழியறி வதனு லென்னத்
தருமுறை மதத்தைச் சின்னுட் டாசராங் காய்ந்தார் மன்றே. (கூக)

இம்மத மீசன் பாதத் தேயுமா வடிமைப் பேற்றை
யம்மவோ தந்த தில்லை யாதலி னுயர்ந்த தின்றாற்
செம்மைசேர்ந் துள்ள வேறு மதத்திய றெரிது மென்னுத்
தம்மனத் தெண்ணிப் பாசு பதமதந் தாச ராய்ந்தார். (கூஉ)

சங்கரன் சூல பாணி தானுவி னெழில்சேர் பாத
பங்கய மலர்க ளென்றும் பத்தியிற் பணிவா ராகித்
தங்கிய நண்ப ரோடு சம்புவைக் காண வெண்ணிப்
பொங்குபூம் பொழில்சூ லாய சாக்கைமா புரியை யுற்றார். (கூங)

அவ்வயி னுற்றதாச ரறிவுள ராய முன்னோர்
கவ்வையில் பிரம னந்தக் கமலைசேர் மார்ப னென்றே
யெவ்வயி லளவை காட்டி யிசைக்குநீ தங்க ளுண்மை
தெவ்வரான் கடந்தா யென்பாற் கருணையாற் றெரிக்க வென்றார். ()

முராரியே பரம னென்ன முற்றுணர்ந் தறிந்த முக்கட்
புராரியத் தாச ரையம் போக்கிய கருணை யாலே

* அபவர்க்கம்—மோக்ஷம்.

விராவவர் தோழர்க் கெல்லாம் வில்வமே கரத்தி லுய்த்துப்
பராவுத லுடையார் கையிற் பைந்துழாய் பணிக்கச் செய்தான். (௩௫)

ஏற்றவ ரதனை நோக்கி யின்பமிக் குடைய ராகித்
தோற்றுயிர்த் தன்மை யெண்ணித் தோழரைப் பார்த்து மூக்க
ணேற்றவர் கருணை யென்னே யுங்கட்கு மெனக்கு மிங்ஙன்
வேற்றுமை தோன்று கின்ற தென்றுற விளம்பி னாரால். (௩௬)

கூவிள மதற்கே யென்றுங் கூறிய தான மாகிக்
காவியங் கண்ணி யோடு கலந்தவ னன்பர்க் காக
மேவிய கோயி றன்னில் வியப்பித வெனது பக்க
நீவிய விரையு யிர்க்குந் திருத்துழாய் சேர்ந்த தம்மா. (௩௭)

ஆதலி னறிவின் மிக்கி ரனைவரு மொருங்கே யாய்ந்து
தீதறு நீருள்ளத் தீர்காள் செய்வதென் னினியா மென்னப்
பேதமி லாதுகண்டு தேவரின் பிறவிப் பௌவத்
தோதுமோர் கணம தேனு முறமன முடைய னல்லேன். (௩௮)

எனவிவ ருரைத்து நிற்க வெங்களூன் றந்தை யூடும்
வளமிவர் திருக்க ரத்தின் மன்னனு மான நோக்கிற்
றினகரற் கிரிக்குஞ் சோதிச் செங்கண்மாற் கடிய ரன்றே
முனமுறு தவத்து வந்து முனைத்தன ரென்ன வுன்னி. (௩௯)

சொற்றனர் தாசர் தம்மைத் தோழர்க ணோக்கி யைய
பற்றுதல் பணித லென்றும் பாப்பனைப் பரமன் செய்ய
பொற்றிரு வடியே யென்னப் புண்ணியர்நன்பர்ப் போக்கிக்
கொற்றநீள் புரிசை சுற்று மரியையைக் குறுகி னாரால். (௪௰)

தாமரைக் கண்ணே யன்றிச் சார்புமற் றில்லை யென்று
மாமதி யுடைய ராகி வளமலி யரியை யென்னுந்
தாமமேல் விருப்பி னூற்ற தாமரைக் கிழத்தி நன்பன்
பூமல ரடிக ளென்னம் போற்றி[illegible] குறைந்தார் மன்னோ. (௪௧)

கத்தொடு வினைகோ தண்ட ராத்தகக் கதைகைக் கொண்ட
வத்தனித் தாசர்க் காக்க வவாவிபத் திரிகு லத்து



மெய்த்திரு வேங்க டாசா ரிப்பெயர் மேலோன் பக்க
லொத்தமெ தொண் டைய ராக வூங்கிவர்ப் புரிந்தான் மன்னோ. (௪௨)

தத்துநீர் வறந்த காறு மில்வரு தாப நீப்பா
னத்திரி குலத்து வந்த வாரியன் றாசர்க் காங்குப்
பத்தியின் மாலை பெய்தல் பயனென்று முபாய மென்றும்
தத்துவ மென்று மாயோன் சரண்சர ணென்றுஞ் சொற்றான். (௪௩)

தத்துவ விளக்க மாதிச் சாத்திரப் பொருளை யோதி
யுத்தம வடியார்க் காக்க வுன்னியக் கமலை கேள்வன்
வித்தகக் குருக்கள் மெய்யை விருப்பொடு பரிப்ப னென்று
சத்துவ குணத்த சான்றோர் சாற்றுவர் தெளிக வென்றான். (௪௪)

பற்றிய கால மூலப் பகுதிகட் கெட்டா தாகிச்
சுற்றுமா தித்த னங்கி சுடர்மதி விளக்க முட்க
முற்றிய வொளிய தாய மூதல காசா னெக்கம்
பெற்றவர் பவத்தி னீங்கிப் பேறுறப் பெறுவ ரென்றான். (௪௫)

மாசறு மறிவி னுசான் மலர்க்கணேக் கமுத வாரி
வீசறு மலைபி லாழ்ந்த மெய்த்தவர்க் களிக்கும் பேற்றைப்
பேசிய காண்கொ டைத்து பெறுமாறு முகத்த ரீயுந்
தேசுடை யார்க ளல்லர் தேசிகர்க் கொப்பி லென்றான். (௪௬)

சத்துவஞ் சமநோக் கீசன் சரணுறு பத்தி நூலா
யுத்தம ஞானம் பாவ முறுமைநற் சரித மோடு
சித்தியை யடைந்து தீர்த்த பரம்பரைத் திருவா சானை
நித்தலுந் தன்னைக் காக்க நினைப்பவ னடைக வென்றான். (௪௭)

சாற்றுநற் குணங்கட் கெல்லாந் தாரணை லயமா யெற்குப்
போற்றுறு குருவா யில்லென் பொங்கிய காள நூங்க
வேற்றவோ டதியாய் மிக்க விசையுளா ரொருவ ருள்ளார்
வேற்றுரு வேற்று வந்த வேதாந்த குரவ ரென்றான். (௪௮)

இலக்குமி புரத்தி னல்லான் குலக்கடற் கேயுந் சோதிக்
குலக்கவுந் துவமாய்த் தோன்றிக் கூறுமாப் புகழ்ப டைத்த

கலந்தசக் கிரவர்த் திப்போர் நாயகக் குரவ னேக்கங்
கலத்தலி னன்றோ மேன்மை கடைபெறு மடைந்தே னென்றான். ()

அன்னவர் விடைய வாசை யகந்தொரீஇப் பாமன் பாத
முன்னியா னந்தத் தென்று முறைதரு வருளகை யோம்ப
கன்னிலை யரங்க ராமா னுசனெனு நாமந் தாங்கிச்
சொன்னவா மறைகண் முன்னந் தூரியவாச் சிரமம் பெற்றார். (௰)

தாசரே கேட்பீ ராக வுடையவர் தாஞ்செய் துள்ள
மாசறு நூல்க ளெல்லா மண்ணிடை விரித்த வந்தத்
தேசிக வெதியாய் வந்தார் திருவடி யடையி னின்றே
பேசிய மோக்கங் கையிற் பொருளெனப் பெறுவி ரென்றான். (௰௧)

எனப்பல தன்னைக் காக்க விருக்குமா யொத்த வோதி
மனப்படத் தாசர்க் காசாற் போற்றுமா மாலை யொன்றை
யுனப்பெறு மறிஞ ருள்ள முவப்புற வுபதே சித்தான்
றனைப்பொரு வேங்க டாசா ரிப்பெயர்த் தகைமை யோனே. (௰௨)

௫-வது சமயந்தேருண்டசருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௧௦௨.

---

# குருவைப் பாராயசருக்கம்.

அத்திரி குலத்து வேங்க டாரியப் பெரியோன் சொற்ற
வித்திய வினையாம் பங்க முலர்த்திட வெயிலோன் போன்ற
இத்துதி மாலை தன்னை யெளியனேன் முன்னாட் செய்த
வத்தவ மகிமை யானே யறைகுவ லென்று சொல்வான். (௧)

வேறு.

எதிரா சருந்தே சிகரும் மெனவே
மதிசேர் பெரியார் மலர்வா யுரைசெய்
முதியா யிராமா நுசமா முனியே
கதிநீ யெனவுங் கழலே புகுவேன்.



சரணு கதிதந் தருளத் தரணிக்
கரணாய் வருவா யலர்பங் கயநேர்
சரணு வெதிக டலைவா புகழா
பரணு மறைதேர் பணவா பணிவேன். (௨)

உனதாள் பணிவா முயர்மா திதியா
ரெனயா வினையின் னிசையா ரமுதந்
தனையார்க் குளதாற் றருமென் றருளாற்
றினமென் னுவ்ராற் றிருமா லடிபோய். (௩)

பொருளா சையினாற் புவிமீ துடையார்
தெருவா யலைபத் தெறுநோ யறுமா
குருலக் குமணக் குரிசில் புகழா
மொருநற் சிந்தையே யுறவுண் குவெனால். (௪)

மதனார் வினையான் மடவார் தமையே
துதியே புரியுந் தோமோ விடயான்
கதிரங் கவிலக் குமரு கலைதேர்
யதியார் பதியே யெனவேத் துவெனால். (௫)

விரியுங் கடல்போல் மிகுசீர் புகழைத்
தெரிவொன் றிலனுந் தெரிவோ ரிகழப்
பரிவிற் புகறல் பரவுங் குணனல்
வருநற் செயலா மறைதேர் தவனே. (௬)

கலையுங் குணனுங் கலவும் மிடனே
யலைகத் தனமுன் டவனே பரமென்
றுலகுக் குரைசெய் பவர்க் காசே
விலவென் மனநேர் வனநீ யருள்வாய். (௭)

புறமேய் சமயப் புதல்வா முரவைத்
திறமார் கினசொற் சிகியா விரிசெய்
யறவோ வெதிகட் கரசே யுனைநான்
மறவா துரைசெய் வதுமுற் றவமே. (௮)

கவியைப் புனையுங் கலையோர் பலருந்
திவியத் தவமிற் சிறிதும் திகரார்

நவில்கத் தியோத நாமம் பெறினுஞ்
சவிதா பொருமோ தருமின் மினியே. (௧௦)

திருவாய் மொழியின் றிகழ்பா டியநாற்
கொருசா ரசங்கி ரகமென் றுயர்நூ
றருமா ரியனின் றனையே தொழுமால்
வருமென் னுடலம் மனம்வாக் கிவையே. (௧௧)

சீரங் கரமா நுசதே சிகனே
நாரந் துயில்வார் நரனுக் குரைநூல்
பார்தங் குயர்வோர்க் கருளாற் பகர்வா
யாரிங் கிதன்மெய் யறியும் வலரே. (௧௨)

இல்லா மறையோற் கியற்றிக் கிரியை
செல்லார் பொழிலத் திகிரிக் கரியோன்
நல்லா னெனமுன் னவினும் பெயர்கொள்
வல்லார் குலமா மணியே பணிவேன். (௧௩)

இரவைக் கடவ லிரவிக் கலதில்
லரவக் கடல்சூ ழுகிலத் தெனல்போற்
பரவப் பவநோய் பாறற் கொருவ
குரவர்க் கரசே குணவா ரிதியே. (௧௪)

பூதா ரெதியார் புகல்பா டியநூன்
மீதே செலலான் விரியும் மதியோய்
இதோ யிருவே தசிரங் கடமக்
காதா ரகிலன் னறவோ யலதார். (௧௫)

பூவாய் கொளுமா லடிசேர் புனிதா
மேவா வுனசொல் விரிசா னவியா
லாவா விலமா தியபந் தமதாந்
* தாவா னலமாய் தரவெற் கருள்வாய். (௧௬)

மிகுமா ழுமுடன் சுவையும் விளின்மே
தருகங் கையினுந் தழுவுந் திறனுற்

* தாவானலம்-காட்டுத்தீ.



நெருகின் கவியோர் தரமே சொலினு
முருமெய்ப் பவமு முபர்தே சிகனே. (௧௭)

மனத்தா மரைதா மலரப் படலா
வினத்தா ரகமே விருளிக் குதனால்
*வனத்தா ரரியுண் மனலால் முனியே
நினைத்தா னினனாய் நினைத்தேத் துவனால். (௧௮)

இலர்பா துளர்பா லிசைவிற் பகையிற்
றலனுர் துகளிற் றகைசேர் நிதியி
னுலகில் லொருநோக் குடையார் பலரா
னிலவுன் னடியார் நெறிசேர் தவனே. (௧௯)

வினையின் † னரலை மிசையுந் திறனிற்
றனைசேர் பொதியிற் றவனே நடையின்
மனனத் துறைசேர் வசிட்டன் முதலோர்
நினையொப் பவராய் நினையப் பெறுப. (௨௦)

மதவா ரணமா கியவா திகளை
யதமா வரியே ரெனவே யழிசெய்
புதனே யொளியாற் புகழ்மா மதிநேர்
வதனு வெதிகள் வரனே பணிவேன். (௨௧)

‡மூவா றெனவே மொழிவித் தையெலாந்
தாவா துறையத் தருமா கரனே
நாவாய் கொடுநு மகவிற் றமெனைக்
காவாய் விரகக் கனல்போ யறவே. (௨௨)

கண்டா ரிதயங் களிசெய் தவினுள்
ளுண்டா மிருளோச் சுதலிற் சனனப்

* வனத்தாரரியுண்மனல்-துளவமாலையையுடையஅரி உள்ளே நிலைபெறுதல்

† நரலை-கடல்

‡ மூவாறவித்தை-வேதம் ௪, வேதாங்கம் ௬, உபவேதம் ௪, உபாங்கம் ௪

பண்டார் கடறிந் கொளுவும் பரிசால்
விண்டோய் கடர்மூன் றெனவின் ளுடுவனால். (உ௩)

வேறு.

இரணிய கருப்பம் பாச பதமத மிரண்டும் போக்கி
முரணிய தாகி நிற்குஞ் சங்கரர் மொழியுந் தாழ்த்தத்
தரணியின் முனிநீ செய்த சாத்திரத் தொகுதி காண்பாத்
சரணநீ யெனவப் போழ்தே சார்வது சரத மம்மா. (உ௪)

பெரியரிற் பெரிய ஞான பெருமவே தாந்த மார்க்க
முரியதா யழியா வண்ண மோங்கநீ காத்த லானே
சொருபத்திற் கிசையா பத்தி யெனச்சொல லழித லோடு
விரிபிர பத்தி யாகா சாதன மெனவும் வீயும். (உ௫)

நல்லியற் பூதூர் வந்த நாதனு மெதிசெய் நாவேற்
செல்விய களித்த லோடு தேசிகன் றிருத்தாட் பூவிற்
புல்லுத லென்று நீங்காப் பொருவரு முனத்து மேலாம்
பல்லிசை யோடும் வாழி பலவிணண்டு பல்லாண் டாக. (உ௬)

தாமத நிலையை நீக்கித் தக்கவே தாந்த வித்தை
யாமதை யென்பா லாக்கி யருள்நிக மாந்த வாசான்
றுமறைச் சரண நீங்கா வுளத்தையுந் தந்தே யாருங்
காமுறு குணச்சீ ரங்க விலக்குவக் குரவ காப்பாய். (உ௭)

எனவிவா றுத்தி ரேய மிசைத்தவித் துதிகள் மாலை
தனையரி புரத்திற் றுசர் சாமிபுட் கரணி சூழ்கி
நினைவொரு வழித்தா யாக்கி நிச்சலுஞ் செபித்து நங்கள்
வினைதெறு வேங்க டேசன் விரைகழல் போற்று வாரால். (உ௮)

குருவைப்பராயசருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள், ௨௮௦.

# குருவருள் பெறமுயல் சருக்கம்.

மனத்தகத் தன்பினை மருவித் தாசரெத்
தினத்திலு மடிகள்சீர் செப்பு தோத்திர
முனத்தறு பவப்பெருக் கோய வோங்கினு
மனத்தயில் செய்துளாரக் காரு ணன்மையே. (௧)

வேறு

சீரங்க ராமா நுசனெனுமத் தேசிகனார்
வாரங்கொண் டன்பர் மகிழுவிரு வேதாந்த
சாரங்க ளோதியுறை தந்தவரங் கஞ்சென்றார்
நாரங்கொண் டித்தாசர் நாடியன்றுற் போற்றுதற்கே. (௨)

வேறு.

அப்பதி யிடைப்புகுந் தரங்க நாதனை
யொப்பறு பூமினு ரோடு தாழ்ந்தெழீஇச்
செப்பரும் பொன்னியின் றீரத் தாரிய
விப்பிர யதியுறை யகத்து மேவினார். (௩)

* சாரிகை சுகமுதற் சகுந்த நீடொலி
சேரிய தவவனச் சிறப்பை நோக்கிமே
மாரியற் குறையுளா யமர்த லாலிதற்
கோரிலொப் பிலையென வுன்னித் தாழ்ந்தனர். (௪)

பெரியரிற் பிழைத்திடாப் பெற்றி யேதமக்
குரியதென் றெண்ணுவா ரொப்பி லாரியன்
விரிதரு கடாக்கமே மேவ நிச்சலுந்
தரியன்வாழ் தாபதந் தொழுது நிற்பரால். (௫)

நிலப்பணி வுடையரைத் தெய்வ மாமுனி
நினைத்திலனே க்கில வெடிய நாட்டரு
வினைத்திறள் பெரியரை மேவல் போக்குமா
லெனக்கொடு மனநினைக் தின்ன வெண்ணுவார். (௬)

* சாரிகை - பூவைப்புள்.

வணங்கினர்க் கருள்தர *வசுதை தோற்றிய
மணங்கமழ் கற்பக மனைய மாதவ
னிணங்கிய கருணையென் பாங்கி லென்னையோ
பிணங்கிய தெனவுளம் பேதுற் றாரரோ. (எ)

இரங்குமிம் மதியினு லாவ தில்லென
வுரங்கெழு மனத்தரா யுற்ற நற்றவத்
திறம்பெறு குருவருள் சேர வொப்பிலா
வரங்கனு ரடியரா ளைப் பற்றினர். (அ)

எவைகினுங் கெவர்சர ணெய்தி னுமங்
கவையவர்க் களிக்குமவ் வரங்க நாதனு
முவைதர மிகமகிழ்ந் தொப்பி றசர்பா
னவையிரு மடிகளு ளுடச் செய்தனன். (கூ)

பின்னரக் குரவனும் பெருகு நாளிவன்
மன்னுநம் பதியிடை வந்து போற்றுவா
னென்னெனி யாயினு மாக வென்றுகொண்
டின்னணந் தன்னுளத் தெண்ணி னனரோ. (க0)

சங்குவந் தனைதின மியற்று வோனுளந்
தாங்கிய வவாவினைத் தந்து முற்றுற
மோங்கும திதுவென வுரைத்த பின்னரென்
றுங்கவ னகத்திடை யமைத்திட் டானரோ. (கக)

இவ்வழித் தாவிய வெண்ண மென்பதை
யவ்விய மவித்தவத் தாச ராய்ந்திலர்
ரெவ்வழி யாண்டுழன் றெய்த யாமுனி
யவ்வயி னின்றழுந் தூரை யண்மினன். (கஉ)

மாணவக் குழுவொடா மருவி யெம்பிரான்‡
காணிகொ டவமுனி காண்டற் கெய்தலும்
பேணிய சத்துவ குணம்பின் சென்றென
மாணுறு தாசரு மகிழ்வொ டேகினர். (கட)

* வசுதை - பூமி.
‡ ஆமருவியப்பன் - அழுந்தூர்ப்பெருமான்.



திருவழுந் தூருறச் சென்று தாசருங்
குருவரு ளென்வயிற் கூட வென்றுகொன்
மருவிரி துளவணி மால்செய் வானெனு
மொருபொழு தொழிவிலா துறவும் போற்றுவார். (கச)

போற்றமாண் டாறவன் புகுந்த நாளிடை
யேற்றமார் தாசர்முன் னொதிக டம்பிரான்
றோற்றனு மவனடித் துணைகள் பன்முறை
மாற்றரு மன்பினல் வணக்கி னாரரோ. (கரு)

தன்னடி போற்றிய தாசர் மாட்டருண்
மன்னிய குரவனு மருக்கு சூழ்வரத்
துன்னிய வடியரைத் துணைக்க ணோக்குபு
பன்னின னொருரை பரிவி னலரோ. (கசா)

பூவுறை தேவர்காள் போற்று மின்னவ
னேவயி னிருப்பவ னெக்கு லத்துளான்
சேவையால் வேட்பதென் றெரிய நீவிரே
யாவையுங் கேண்மினென் றெதி விளம்பினன். (கஎ)

யதிவர னுரைசெவி யேற்ற மாணவர்
துதியுறு தாசரைச் சொன்மி யாவென
மதியுளார் முடியிசை மலர்க்கை கூப்பிநின்
றதிபணி வுடனிவா றறைதன் மேயினர். (கஅ)

விண்டுவந் துறைதரு மெய்ய மாமலைக்
கெண்டரு மோசனை யியலு மொன்றரை
கொண்டது திருமகள் கொழுநன் வாழ்வதா
யுண்டரி புரமெனும் பெயரி னேர்பதி. (ககூ)

வேறு.

உலகு புகழு மப்பதியி லுயரும் வணிகர் குலத்துதித்தே
னிலகு பெரியோ ரடிச்சார்பே யெளியேற் கென்றும் வாழிடமாற்
பலரும் வணங்கு மெதிமணியின் பண்பேய் கருணை பெறநினைத்தே
யலகி றினங்க ளிகவாம லடியேன் வழிபா டாற்றுவெனல். (உ0)

வேறு.

மெய்ம்மையின் மலர்மகள் விருப்பு வாலடிக்
கெம்மையுந் தொண்டுசெய் திருப்ப வென்றுவேற்
கம்மனிம் முனியரு ளெழுத மன்றியோர்
செம்மைசேர் பொருளிலைச் செப்பி னுண்மையால்.

மண்ணொடு பெண்ணையு மற்றவற்றையு
மெண்ணில தென்மன மெதிசட் கீசனார்
கண்ணருள் கருணையாங் கனிப்பி னாப்பொரு
ளொன்றுமோர் திறத்தனையே நாடி யுள்ளதால். (௨௨)

ஆண்டுபற் பலமுனி யருளை நாடியே
யீண்டின னின்னமு மெய்திற் றில்லையான்
மாண்டதந் துணைகொடு தீர்த்தன் மாலடி
பூண்டனன் சரணிது பொய்ப்ப தாகுமோ. (௨௩)

இத்திறம் பூசுரர்க் கினிய தாசராங்
கொத்துள வுரைத்தவாய் புதைத்து நின்றனர்
வித்தையிற் பெரியர்பால் விரித்து ரைத்திடற்
றத்துற வுறுமெனச் சார்ந்த தானுளம். (௨௪)

கிளர்தரு தாசருட் கிடக்கை யாவையும்
வளம்வி யத்தனர் வகுக்க மாமுனி
யுளமுறு மவைகண் டருள வுன்னுபு
விளங்கிலா முகமலர்ந் திதனை யோதினன். (௨௫)

மறைவலீ ரிவரெண மகிழ்த் தக்கதே
யறைபல பிறவையி லாகு மாதவ
நிறைவினா லல்லது நெடிய மால்பதத்
திறைகெழு தொண்டுசெய் திடவெய் துமோ. (௨௬)

பவப்பெருங் கடற்கரை பற்ற வம்பியாத்
தவத்துறை சற்குணர் தானி யிற்பல
ரவத்தொழி னீக்கிய வலரைச் சார்தலே
யிவர்க்கிதி னல்லனன் வியம்பி னன்முனி. (௨௭)



இம்மொழி யாரிய னிசைக்கக் கேட்டுபு
வம்மவத் தாசரு மகிழ்நெகிழ்ந்தன
ரெம்மையுங் காப்பவ ரியாரு ரேயென
விம்மித முற்றிவை தம்முளே வின்னுவார். (௨௮)

பற்பல பகர்முனி பாத பங்கய
நற்கதி நான்மறை நவிற்று நாரணன்
பொற்பத மடைதற் கென்று போற்றியுள்
ளொற்கமி லாமிரு முதமுற் றேங்கினன். (௨௯)

இவ்விடை யாரிய னிசைத்த வாசகஞ்
செவ்விய திருவடிக் கன்பு செய்தலில்
வவ்விய தோவென மனத்தை யாயவோ
வெவ்விய வுரைகொலோ வென்று மோர்ந்திலேன். (௩௦)

முனிவர னென்னவா முற்று முற்றுமா
றினியருள் புரிநு மில்லை யென்னினும்
புனிதவ னடிமலர் போற்ற லோவிலே
னெனமன வுக்கமோ டுறைந்த துற்றனர். (௩௧)

இன்னணம் பணிபல ரிருந்து மாமுனி
தன்னடி குறுகிநிற் றவிர்த்தோர் செல்லுறு
முன்னவ னெதியர சிதனை யோர்ந்தனை
யென்வயி னருட்கடை நோக்க மீதியால். (௩௨)

என்றுரைத் தனரதிற் றிசைகொ ளாரியன்
அன்றிய கருணையாற் சொல்வ னென்னிடை
நன்றுநீ யன்பினை நாட்ட லுண்மையே
யின்றறி வியுநீ யென்னிற் றென்றனன். (௩௩)

இம்மொழி குருபர னிசைப்பக் கேட்டவு
மம்மலோ நிரப்பினர் செல்வ மார்ந்தென
வெம்மையு மகப்பெறு மினிது பெற்றெனத்
தம்மன மகிழ்ந்தனர் தாச ரங்கனம். (௩௪)

பவவனம் பற்றறப் பற்று மங்கியாந்
தவமுனி மலர்க்கணி லேக்கஞ் சார்ந்தபி
னெவையெவை யடைதர வென்று கின்றன
னவையவை கையடை யாகு மெற்கரோ. (௩௫)

எனநினைந் திவரமுந் தூரி குக்குநான்
மனைதனைக் களித்ததங் குலத்து வாணிப
ரினையவிச் செயலிவ ரெய்தல் கேட்டுமா
மனமுறு சினத்தராய் வந்து தேடினார். (௩௬)

தேடினர் திருவமுந் தூரிற் றாசரை
நாடினர் தடுக்கவுஞ் ஞயந்து தேசிகன்
பீடுறி பெற்றியைப் பெற்றி லாமையாற்
றாடண மோடகங் கரித்துச் சொல்லுவார். (௩௭)

சிவமதத் தரியராய்த் திகழு நங்குலத்
திவருநன் மேன்மையை யிழித்து நங்கனை
யவமதித் தனையெனு வறிவி லாமைநீ
நவநடை கொடுபுறச் சமய நண்ணினை. (௩௮)

பொருண்மிகக் கொண்டுளா ரென்று புந்தியிற்
றெருளுதீஇ யவாவினும் சிலவர் கைக்கொள
விருளுறு பொய்ம்மொழி யிசைப்ப மெய்யென
மருளுத லுற்றனை மதியி லாமைநீ. (௩௯)

எனப்பல வாறிவ ரியம்பித் தாசரைத்
தனப்பெரு வணிகர்தம் பாலிற் சார்கென
வனைத்தையு முணர்ந்தவ ரமைதி லாமைகண்
டினத்திவ ணிதுசெய லெதியி லைனெனா. (௪௰)

இவ்வணந் தேதியோ ரெதியின் சீடர்பா
லெவ்வயில் சிந்தையெம் மினத்த வன்றனைச்
செவ்வன மெம்முடன் செல்கென் றேவுமா
றவ்வர முனிவனுக் கறிவிக் கென்றனர். (௪௧)



எதிபதி சீடர்சொல் லேற்றெனார் சூழ்ச்சியாற்
*றதியுறு மன்புடைத் தொண்டர் தாசரை
*நதிபதி யிடைத்துயில் நாதன் கோயில்கொள்
பதிகள்போய்த் தொழுதுறப் பணிதி யென்றனன். (௪௨)

வேறு.

மாதவனு ருரையிதென மகிழ்விறைஞ் சிதாசரெழுந்
தாதரவிற் றிருப்பதிக ளவைதொழுவான் சென்றனரா
லோதரிய ஞானமெலா மொருங்கேய்ந் தோர்குரவன்
பாதமலர் பழிச்சிவழி படுவார்கட் கெய்தாதேன். (௪௩)

௭-வது குருவருள் பெறமுயல் சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௩௭௩.

## ௮-தலயாத்திரைச் சருக்கம்.

குரவ னுரைத்த வுரைசிரத்திற் கொடுபோய்ப் பெருமான் றிருப்பதி
யிரவி வருவான் விரைகின்றார் விரிநீர்ச் சேது முதலெனுக்கிற் [கள்
பரவி வருமெய் பவப்பெருக்கும் பாறு மென்ன வுளநினையா
விரவி நிகருங் குறுமுனிவ னிசையுந் திசையி லேகினரால். (௧)

தாச ரேகு நெறிநோக்கித் தடுப்பான் வந்த வணிகரெலா
மாசொன் றிலரா னற்காலம் வரவே வந்தார் நமதுவழி
வீசி யகலா ரையமினி விடுமின் விடுமி னெனவுரைத்துப்
பேச வரிய மகிழ்விறைஞ்சி பின்னர்த் தொடர்ந்து சென்றனரே. (௨)

தன்னைத் தனைவா துடன்றொடர்ந்து சாருங் கிளைஞர் தமைநோக்கி
யென்னை யாகு மிவர்செயன்மற் றினிநா மெனனித் திருப்பதுவே
யுன்னி லுயரு முபாயமென வுளத்திற் கருதி யிவர்நம்பா
லென்ன விடயம் வினவிடினும் விடையின் றெனவே திடம்படுத்தார்.

இவ்வா றடிமைத் திறத்துயர்ந்தா ரிருக்கு மோனந் தியல்ப
தனைச், செவ்வே யுணர்ந்து மற்றவிவன் றிருப்பக் கருது நமதுனத்

* நதிபதி—கடல்.

ஆம், கொவ்வா னெக்க வித்தமென வோர்ந்தே பழங்க ளுடனு
றையவா, ரெவ்வாற் ருறுந் தன்கருத்தை யிவன்போன் முடிப்பா ரிலை
யென்றே. (௪)

பொறையிற் பொதிந்த மனத்தவரும் போற்றி யாசா னடிமலரை
முறையிற் றினம்பூ சனைபுரிந்து முற்றும் போகப் பொருளிலொ
மிறையு நசைபற் றிருந்தனரா லென்னே யசை யிகந்தோர்க்கு
கிறையி னுலகம் பலபலவு நிகழ்த்திற் றிரண நிகராமே. (௫)

ஆறு படரு மாறுபடா வடிமைத் திறத்தா ராயடனொன்
றேறு பரியோ னுதயகிரி பேறு மளவி னாறுபதம்
மூறு நறவ முண்டிசையே மொலிக்குங் கமலந் துறைக *வெண்மை
யாறொன் றங்க ணெதிர்தோ வதனிற் குளித்தா ரைந்தவித்தார். (௬)

மாயை வடிவே யிவரெனலா மாறு கந்த வினைத்திறரும்
பாய வில்லத் தொடர்பதனிற் பற்றே யில்லாப் பெரியோரின்
றூய மனத்தி னிலையறிந்து சோவின் றென்ன செய்திடினு
மாய பலனொன் றில்லையென வவரைத் துறந்தே யகன்றனரால். (௭)

சுற்ற மகல வகலாழி துலங்குஞ் சேது கண்டுவப்ப
பற்றற் றொழிவான் செல்கின்றார் பரந்த மெய்ய மலைநாதன்
முற்றக் குயிற்று மரகதத்தால் மொய்கொள் சோதி விமானமதைக்
கற்ற மனத்தாற் கண்ணாரக் கண்டவ் வயினே பணிந்தனரால். (௮)

ஆங்கு நின்றம் வழிவருவார் †வாய்மைப் பெயரா றவிமருங் [யிக்
கோங்கி விளங்கு மெய்யமென வுரைக்கு மோங்க லொளிவிளக்க
தாங்கு தேசம் பொருள்காலர் தம்மா லாகு மனவிலதைப் [றைப்
வீங்கு சித்தோ டகத்திலத்தன் மெய்யாய்க் கொண்டு விளங்குவ

கருணைத் தடங்கட் சத்தியநா யகியின் கலவுங் கருமுகிலா
மிருமை யளிக்கும் பெருமானு மெவர்க்குந் நலமை புரிவானு
மருமை யுடைச்சத் தியநாத னவனை யணிமெய்யத் திருந்தளிக்க
லொருமைமனத்தோடிடல்வாக்குமொன் றடபணிந்தாருயர்ந்தாமே.

---

* வெண்மையாறு—வெள்ளாறு.

† வாய்மைப் பெயராவி—சத்யபுஷ்கரணி.



மெய்ய நகருக் குரியோனுப் விரும்பித் தொழுவார் மெய்யனுமா
யைய மின்றி வேண்டுவன வளிக்குங் கருணைக் கடலினை
யைய வணங்கிப் பன்னாட்பின் வைமார் வடவேங் கடப்பெருமான்
செய்யு மருளாற் பொலிகின்ற திருவா ரிணியப் பதிசேர்ந்தார். (௧௧)

அந்தப் பதியிற் சின்னாளங் கான்றோ ருரைத்த வுரைகேட்டுந்
சிந்தைக் கினிய நூல்கள்பல தெரிந்தாங் கிருவேங் கடநாதன்
சுந்தக் கமலக் கழலிணைகள் கையாற் றொழுதுங் கருத்தகத்தி
லெந்தப் பணிகள் செயல்கருதி யிருந்தார் தவப்பே றனைவெண்ணலி.

ஆண்டப் பெரியோர் தன்மையினை யவர்தம் மினத்தா ரறிந்துமிகப்
பூண்ட வியப்போ டித்தகைய புந்தித் திறத்தோர் தங்கிளையாக்
காண்டற் கருமை யெனவிருப்புக் கலந்த மனத்தோ டவராடிக்க
ணீண்டி மிடைந்து வணங்கிடவு மிவரை யிறையு நோக்கிலராய். ()

ஆர்க்கும் வியப்பை யளிப்பதனை டசையா நிலைய மனத்தினராய்ப்
பார்க்கு ளுயரு மரியைநகர்ப் பதும மகளோ டணைந்தவனைத்
தேர்க்கட் பார்த்தன் பரிகடந்தச் செங்கைக் கோல்கொள் சிதரனைச்
சேர்த்த வொத்தி யுறத்தாங்கிச் சேது நோக்கிச் சென்றனரே. ()

வணிக மரபு சிறக்கவரும் வள்ள லாகும் புகழ்த்தாசர்
தனிவில் கீர்த்தித் தயரதன்றன் றலையன் கண்டோர் பிறப்பிறப்புந்
இனிய பவத்தின் சுமைகளுந் தீர்க்க வமைத்த திருவணையை
மணிக வலைக்குந் திரைக்கடல்வாய் மனங்கள் மகிழ வந்துகண்டார்.

எந்தப் பவங்க ளாறுவு மெய்தா தொழிக்குஞ் சேதுவினிற்
சந்தக் குரவர் தமையடையத் தடுக்கும் பவத்தைக் கடந்திடுவான்
பந்த மறுக்கு மடியவரிற் பரக்கச் சிறந்த மெய்யன்பர்
சிந்தை மகிழ்ந்து கடலாடித் திருப்புல் லாணிப் பதிதொழுதார். (௧௬)

இன்ன பரிசு திருவணைசென் றெய்தி யலையுங் கடலாடி
முன்னை யறிவார் முதியாரு முறையிற் புரிந்த தவத்தியல்பு
சொன்னோ மிப்பா லாழ்வார்கள் சொல்லின் மாலை புனைபதிக
ளென்னச் சென்ற முருகுந்தனடி நாடிப் பணிந்த நலமுறைப்பாம்.

வாசங் கலந்த பூம்பின்கண் மன்னி யிருபா லினுந்திகழ
வீசு திரைநீர் மதித்தடத்தின் பாங்கர் விளங்கு மோங்காரத்
தேசு நிறைந்த விமானத்திற் சேட சயனத் தரங்கனைக்கண்
டாசை யுடன்றே வரும்பிறப்பு மறுமை யீதி யெனப்பணிந்தார். ()

பூந்தண் பொன்னி வளம்வாய்ந்த பொருவி லுறந்தைத் திருப்பதியி
காந்த மணிப்பூ ணிளையுடன் கமலத் திருவும் பூமாது [ற்
மாந்துந் திறத்தி னெழில்வாய்ப்ப மன்னிப் பொலியும் பரம்பொருளை
யேந்து மார்வத் துடன்மனமே யிறைஞ்சி யுய்க் வெனத்தொழுதார்.

கஞ்சத் திருக்குங் கொடிமின்னைக் கலவி புல்லைக் கனற்றிடுமத்
*தஞ்ச னென்னும் பகைக்கோடை தணப்பக் கருணை மழைபொழி
விஞ்சு நீல மேகத்தை விளங்கு நரா சிங்கமதைத் [யும்
தஞ்ச மாக வடைமனமே யென்று தஞ்சைப் பதிதாழ்ந்தார். (௨௰)

வடிவ மழகி யாரென்னு மாலை யரவிற் றுயில்வாரைப்
படியிற் பிறருக் கருளழகு வல்லிக் கொடிசேர் பரவொளியை
நெடிய மாட மலியன்பிற் பதியிற் சென்று நிலவியக [ந்தார்.
முடிடப் பிணித்து நெகிழ்க்கரிதாய் முன்னின் றிறைஞ்சிப் புறம்போ

செந்தா மரைக்கட் கடைநோக்காற் செகத்தார் பவத்தை யொழித்த
நந்தா வொளிசேர் மணிச்சுடிகை நாகத் தணையி லமர்ந்தபிரா [ருளி
விந்தார் சடிலத் திறைவிவர்கட் களிசெய் புருடோத் தமப்பொருளை
நந்தார் வயல்சூழ் திருக்கரம்ப னூரி னண்ணி மனைப்பதித்தார். ()

கள்ளா ரம்போ ருகமலரான் கருத்துங் கிளைய முத்தொழிலுந்
தள்ளா தெந்த வுலகினுக்குந் தந்தான் புண்ட ரீகாக்கன் [யாண்
புள்ளா ரொலிக ளோவாத பொழில்சூழ்ந் தெழில்செய் வெள்ளறை
றெள்ளார் மறையுங் காண்பரிய திருத்தா ளுளத்துப் பரித்தாரே. ()

கற்பிற் சிறந்த சானகியைக் களவிற் கொடுபோ மிராவணனை
வெற்பின் சிகர பந்தியென விளங்குந் தலைக ளறவீட்டிப் [னைச்
பொற்பப் புகழார் கார்முகத்தைப் பொருத்தே வல்வில் லிராமனை
சொற்பெற் றுயர்புள் ளம்பூதங் குடியி னடிக ளடிதொழுதார். (௨௪)

* தஞ்சன்—ஓரசுரன்.



அப்பக் குடத்திற் கரம்புகுவித் தனந்த *தற்பத் திடைக்கிடந்த
வொப்பில் கமல வல்லியுட னொருவா துறையு நெடியவனைச்
செப்பு மப்பக் குடத்தானைத் திருப்பேர் நகரிற் சிறந்தானைத்
தப்பி றுணையா யுறமனனே தாழ்தி யென்னத் தாழ்ந்தனரே. (௨௫)

அடியார் செய்த தவப்பேற்றிற் கருள்வா னெழுந்த பரவொளியைப்
பிடிநே ரரங்க நாயகியைப் பிரியா துறையும் பெருமானைப்
படியாண் டளக்கு மப்பனெனப் பகரு மாத னூரிறையை
யடியே னென்னை யாள்வாயென் றடியிற் பணிந்தா ரறிவுடையார்.

வானூர் சோலைத் தேன்பெருக்கை வழங்குங் கால்கள் பலவினுக்கு
மானுந் திரையின் கரங்கொடுமுத் தளிக்கும் பொன்னிக்கரைவாய்ந்த
மேனீர் மாடந் தொழுந்தார் மேவா மருவி யப்பனைச்செம்
மானேர் நோக்கின் செங்கமல வல்லி துணையை வணங்கினரே. (௨௭)

ஒளிசெய் காத வர்த்தனமென் றோங்கு விமானத் திருத்தளியி
லளிசெ யோதி யித்திரையோ டமரு மருமா கடலோனுந்
தெளிசெய் தரிய மறையறியாத் தேவை வளமார் சிறுபுலியூர்
களிசெய் காயா நிறத்தானைக் கருத்தி லிருத்திக் கரங்குவித்தார். ()

ஏரார் வனசத் திருக்கரமாந் தேத்து மடியார் தவப்பேறாய்
நீரார் பொன்னி தனைக்குறித்து நேருந் தவனுக் கெதிர்தோன்றிப்
பேரார் தனது திருவடியிற் பிறந்த நதியின் பிடரிடத்த
சீரார் சேறை நாயகனைச் சென்று காணூடக் களித்தனரே. (௨௯)

வேறு.

தலைச்சங்க நாண்மதியந் தவஞ்செய்யத் திருமகளோ
டலைச்சங்கக் கடனீங்கி யவதரித்துத் துழாய்மாலை
மிலைச்சங்க மேவியநாண் மதியமென்னும் பெயரானைக்
†கலைச்சங்க மதிமானங் கலந்தானைக் கைதொழுதார். (௩௰)

* தற்பம்—படுக்கை.

† கலைச்சங்கமதி—கலையின் றிரளையுடைய திங்கள். மதிமானம்—சந்திர விமானம்.

மடந்தைகோ மளவல்லி மணாமுகனுக் காதவனாய்
விடம்பையே யனந்தன்மிசை மேவியவிற் கரத்தானை
யடர்த்தேபு மொளியாரா வமுதையெங்க ளம்மானைக்
குடந்தைமா நகருறையுங் கோமானைக் கும்பிட்டார். (௯௧)

குண்டிகையிற் காவிரிநீர் கொணர்ந்தளித்தான் மலையாளன்
றெண்டிரைநீ ராசமித்தான் செய்தவங்கொண் டருள்வானை
வண்டிசைசெய் மலர்க்கூந்தற் றிருமருவு மார்பினனைக்
கண்டியூ ரரன்சாபந் தீர்த்தானைக் கரங்குவித்தார். (௯௨)

ஒருவிண்ணி னதித்தாளி னுப்பிலியப் பனையெங்கள்
கருவிண்ணின் மணிநிகருங் காந்தியனைக் கருப்புகுதாப்
பெருவிண்ணைக் கறையாளும் பெற்றியரு மிறைஞ்சுமவாந்
திருவிண்ணகரைச்சேர்ந்து சிதரனைச் சேவித்தார். (௯௩)

செங்கமலை சேர்சவுரி ராசனைநற் றிருமாலை
யங்கமலை மூலமென வன்றருளும் பரம்பொருளைப்
பொங்கமலை நீங்காத புனற்கண்ணபுரத்துறையைச்
*சிங்கமலைக் குமைத்தானைச் சென்றுமகிழ்ந் திறைஞ்சினரால். (௯௪)

ஒருவாலி தனைக்கணையொன் றேவியுயி ருண்டபிரான்
குருவாலிப் பசுக்கடனை யடையுநெறி கொடுத்தருள்வான்
மருவாலி வரிவரிகள் மதுவுண்ணு மலர்ச்சோலைத்
திருவாலி மணவாளன் றிருவடியன் பொடுபணிந்தார். (௯௫)

†உருநாகை யனுமனுக்கங் குதவியபைக்கண் ‡டிறைஞ்சேத்த
வருநாகை விறிபலவா வாய்த்திலனென் றகங்குழைந்து
கருநாகை யலையுந்த மணியின்று கரைதவழுந்
திருநாகை யழகியார் சேவடிக்கீழ்ப் பணிந்தெழுந்தார். (௯௬)

---

* சிங்கமலைக் குமைத்தான் -மல்லனரசிங்கக் குமைத்தான்.
†உருநாகை-உருவின் இளமையைக் கண்டு இறைஞ்சியேத்தவரும்விழி,கை கள
‡ இறைஞ்சேத்த - இறைஞ்ச என்பது-வசிப்பினை பக்தென்றதுபோல் இறைஞ்சி என்னும் வினையெச்சப் பொருளில் வந்தது.



அணிமுத்தம் பலவரன்றி யருகலையின் காக்கொழிக்கு
மணிமுத்த நதியுடைசூழ் திருநறையூர் பாதவனை
நணிமுத்தர் பணிந்தேத்து நம்பியைத்தம் பிறவியெனும்
பிணிமுற்ற றவிர்த்தொழியப் பேரன்பால் வணங்கினரே. (௯௭)

வம்பியலுஞ் சோலைநறை மணிமுத்த நதிமல்கிப்
பம்பியெழுந் திருநறையூர் பத்தர்பிரான் சென்றணைந்து
நம்பிதிருந் தாண்மலரே நமதுவினைக் கடல்கடத்து
மம்பியென நம்பியைத் தாரன்பி னொடுபணிந்தார். (௯௮)

செந்திருவை யொருவாத செகநாதப் பெயரானை
நந்திபுர விண்ணகர நாயகனை நந்திசெபிக்
கந்திலருள் புரிந்தானை யாரணமோ தரும்பொருளைப்
புந்திமகிழ் வொடுபரவிப் போற்றினார் புகழ்த்தாசர். (௯௯)

பெருவிந்த கிரிமுலையார் பிறங்குவயிற் றிடைப்புகுதுங்
கருவிந்தப் பிறவியொடு காணுமை யைட்கொள்வா
*தொருவிந்தப் பவநீக்கு மலர்மகளி னுடங்குறையுந்
திருவிந்த ளூரரங்கை திருவடிக்கீழ்ப் பணிந்தெழுந்தார். (௱)

இல்லைச் †சித் திவற்கடிமை யில்லாத வெனத்தேவர்
கல்லைச்சித் திரமாதாக் காட்டினான் றிருவடிப்பாற்
றொல்லைச்சித் திகள்பெறுவான் றொழுதுநிற்கத் துயில்வானைத்
தில்லைச்சித் திரகூடத் திருமாலைப் போய்ப்பணிந்தார். (௱௧)

ஓராம லோராம வெளவுரைக்கி லெவர்க்கும்வினை
சேராமற் பவநீக்கித் திருவடிக்காட் கொள்ளுதற்கே
யாராமம் விண்ணகரை யண்மியெழில் செயுங்காழிச்
சீராம விண்ணகரஞ் சேர்ந்தாரைத் தாழ்ந்தாரால். (௱௨)

போரானைக் கோட்டினைகள் பெயர்த்தானைத் திருக்கூட
லூரானைப் புள்ளரசை யூர்ந்தானை யொண்ணிலவத
தாரானைத் தானைபல தந்தானைப் பாஞ்சாலிக்
கோரானைத் தன்பெருமை யோர்ந்திறைஞ்சி யுவந்தனரால். (௱௩)

---

* ஒருவிந்து-அப்பவம் நீக்கும். † சித்து-ஆன்மா.

முடியானைப் பாரதப்போர் முடித்தானை முன்னளந்த
படியானை யாரணங்கள் படிப்பானைத் திருக்கண்ணங்
குடியானைப் பேய்ச்சிமுலை குடித்தானை வரதெவர்க்கு
மடியானை நரவரியாய் மடித்தானை யடிதொழுதார். (௬௪)

பெண்ணமர்ந்த திருமார்பிற் பிறங்கொளிய கவுத்துவமு
மெண்ணமர்ந்த முந்நூலு மிலங்குபத்த வற்சலனை
விண்ணமர்ந்த வுற்பலமா விமானஞ்சேர் பெருந்தளியிற்
கண்ணமங்கைத் திருநகர்போய்க் கைதொழுதார் பொய்தழுவார். ()

களித்தலத்தி லரவணையிற் கண்டுயில்வ னருளித்துப்
புளித்தலத்து வானத்துப் பொருந்துமின்பம் பொய்யெனவே
செவித்தலத்து நாலறிஞர் செப்புமுறை தேர்ந்தவர்கை
குவித்தலர்த்தி கரிவரதக் கோமானைக் கும்பிட்டார். (௬௬)

திருவெள்ளியங்குடியாந் திருப்பதியி லமரர்பதி
யொருவெள்ளி* யங்கமலத் தநுபிரமன் பராசரனுங்
†கருவெள்ளி யியற்றுதவக் கெதிர்வந்து கருணையெனும்
பெருவெள்ளம் பெருக்கியசீர்ப் பெருமானைப் பேணினரால். (௬௭)

கனிமாடு மாதனமுங் கலவியிரு ளோரச்செபரளி
யணிமாடம் பலவின்றங் கழகுசெயு காக்கூரி
னணிமாடு சென்றாறு நற்கதிக்கே யுய்க்குமென
மணிமாடக் கோயிலெனு மாப்பதியுக் கேத்தினரால்.

‡வைகுந்த விழிமடவார் மயனீக்கி யழியாத
வைகுந்த விண்ணகர்க்கே மன்னும்வழி யாதரிப்பார்
வைகுந்தன் விண்ணகர்போன் மலர்மாதோ டுறைபரனை
வைகுந்த விண்ணகரின் மருவிமல ரடிபணிந்தார். (௬௯)

கரிமேய விண்ணகரக் காவலனு மோதிமவெண்
பரிமேய நான்முகனும் பரம்புமொழி நிரம்பும் வெள்ளிக்

---

* வெள்ளி-சுக்கிரபகவான.
† கருவெள்ளி-பிறவியை யிகழ்ந்து
‡ வை குந்த விழி-கூர்வேல்விழி.



கிரிமேய வைம்முகனும் கிளக்கரிய புகழ்ப்பொருளிவ்
வரிமேய விண்ணகரத் தமரரியே யெனத்தொழுதார். (௭௦)

பெருத்தேயுந் திறத்துமுறை பெற்றியுடைத் தாளுடலங்
கருத்தேயு விளையிலதென் காட்டித்தா வினியேனு
மருத்தேர்வன் றெவ்வனியு மாயனையாம் பணிதுமென்
றிருத்தேவ னார்தொகைக்குச் சென்றிறைஞ்சிப் பயன்பெற்றார். ()

ஒண்புருவச் சிலைமடவா ருடைமையுட னேமனை
பண்புருவ முடையமனை மகிழ்பகை யமனூரா
லெண்புருடோத் தமப்பெயரி னெம்மானைத் திருமாதை
வண்புருடோத் தமத்தொழுது மனப்புக்கு வாழ்த்தினரால். (௭௨)

வம்பொன்று மரைமலர்மே னான்முகனை நிகர்த்தவர்பா
சம்பொன்றத் தவமிழைத்து நாங்கைநகர்த் தலத்தெய்த்து
வம்பொன்செய் விமானமதி லமர்ந்தானை யலர்மகளைச்
செம்பொன்செய் கோயிலிடைச் சென்றுபணிந் தகமகிழ்ந்தார். (௭௩)

வெற்றியந்த வைப்பெரியார் வேதமொடு புராணமுறை
கற்றியம் பொலிபெருகு கடுமுரசோ டிகளுங்கூ
ருற்றியங் கொளிச்சுடிகைப் பரகவனை மீதுயில்
தெற்றியம் பலத்தமர்ந்த செங்கண்மால் பதம் பணிந்தார். (௭௪)

தனிக்கூடு நானைந்து நாமுடலே யுயம்பிணமா
லெனிக்கூடு நாமெயம மெனச்செய்து மெனவெள்ளிட்
பிணிக்கூட மருதனுருப் பேறுபெறத் திருநாங்கை
மணிக்கூட மருவியமால் மலரடிகள் வணங்கினரால். (௭௫)

தருக்காவ லந்தாங்கிச் சமரில்வரு மல்லரைமுன்
முருக்காவ னார்தொக்கு மொய்ம்பினனை நாங்கைநகர்
மருக்காவ ளக்கல மன்னுதட மலர்ப்பொய்கைத்
திருக்காவ ளம்பாடித் திருமாலைப் போற்றினரால். (௭௬)

குளத்தானை மூலமெனக் கூவியரந் தளித்தருளுங்
குளத்தானை யென்மானவ் அரங்கனையோ தொருமாகின்

ஞானத்தானை மிகநீளக் கொடுத்தானைத் திருவெள்ளக்
குளத்தானை யடைக்கலமின் னடியவனைக் கும்பிட்டார். (௫௭)

* இருப்பார்த்த நெஞ்சுடையே னிதனைய பொன்றிலென
இருப்பார்த்துப் பொருட்பார்த்தே யுலக்குமதி யுதைபொழித்து
விருப்பார்த்துன் னடியிணைக்கே மெய்யன்பு செய்யவருள்வாய்
திருப்பார்த்தன் பள்ளியா யெனத்துதித்துச் சேவித்தார். (௫௮)

வேறு.

இவ்வண்ணஞ் சோணாட்டி லிருப தெனும்பதியு மெய்தித்
தாசர், மைவண்ணத் தெழின்மேனி மலர்மகளார் திருநிறத்தெம்
மாலைப் போற்றி, யுய்வண்ண முடையோரா யுயர்பாண்டிப் பதிநா
ழுவா னுள்ளன் பிர்க்கக், கொய்வண்ண மலர்ச்சோலை குலவியமா லிரு
ஞ்சோலை குறுகி னரால். (௫௯)

சோலைமலை யினிதேறித் தொடர்ந்துவரும் வாசனையாற் குழுஞ்
செம்மை, மேன்மலை நாபுரப்பேர் விழுக்கதியிற் றுளைத்தெழுந்து விண்
ணினோங்கிக், காலைமலை மீதிவருங் கதிரவனு மிகரிலொளி கருதுஞ்
சோதி, நீலமலை யெனவளர்ந்த வழகர்திருத் தாள்போற்றி நின்றார்
மன்னோ. (௬0)

அம்மலையி னின்றுதிருக் கோட்டியெனும் பதியண்மி யலர்வாழ்
மாதைக், கைம்மலைமுன் னளித்தானைக் கழறொழுது புறம்போந்து
ககனத் தோங்கு, மெய்மலையு நிகரிலெழிற் சத்தியமா மலையெய்தி
யிமையோர் கோவை, மும்மலமு மொழிப்பானை யுய்யவந்த நாயகி
யையுமுன்னின் றேத்தி. (௬௧)

புல்லைநகர்த் திருப்பதியிற் போந்துதெய்வச் சிலையானைப் பூவை
ழ் மாதை, மல்லன்மலர்த் தாள்பணிந்து மனத்திருத்தித் திருத்தண்
கால் மன்னு மப்பன், சொல்லரிய புகழன்ன நாயகியா ரிருவரையுந்
துதித்து வானிற், செல்லுநறை மலர்ச்சோலை புடையுடுத்த திருமோ
கூர் சென்றார் மன்னோ. (௬௨)

அப்பதியி னுறுகாள மேகமெனும் பெயரானை யழகார் நீல,
மைப்புயலுங் கையாவு மரகதமு மரிகடலும் வடிவு கொண்ட, வொ

* இருப்பு நெஞ்சு - ஆர்த்த நெஞ்சு வைவரைக்க.



ப்பரிய பரம்பொருளை யுலகினுறு காத்தழிக்கு மொருவன் றன்னைத்,
துப்பிதழார் திருமோகூர் வல்லிதுணைத் தாடொழுது தொழுதார்
மன்னோ. (௬௩)

திருக்கூடற் பதியணுகி யழகரொடு வகுளவல்லி திருத்தாள்
போற்றிக், கருக்கூட லறவொழிக்கும் வில்லிபுத்தூ ரெனும்பதியைக்
கலந்தே யாவின், றருக்கூடு மிலைத்தாரினு மொருவமெனு கோதை
திருத்தாளுந் தாழ்ந்து, மருக்கூடு பொழிற் குருகை மாறனைய தரித்
தமனை மகிழ்ந்து சென்றார். (௬௪)

குருகைநகர் தனிற்பொலிந்து நின்றபிரா னடித்துணைகள் கும்
பிட்டேத்தி, யிருகைபடைத் துளபலன்க ளின்றேயா னெய்தினெ
ன்றெண்ணித் தாசர், வருகையொடு போக்கறுக்கும் வழியுலகோரெ
ளிதுணர்ந்து வாழ வேண்டிப், *பெருகைபெறு மறைவடித்துத் தமி
ழாக்கி யிந்தவன்றாள் பேணி னரால். (௬௫)

பேணியமர் தொலைவில்லி மங்கலஞ்சென் றுயர்தேவ பிரானார்
தாளும், வாணிமுத லோர்வணங்கு மரவிந்த லோசனியின் றாளும் வா
ழ்த்திக், கேணியுறு தயிலத்தா னுடற்பிணியும் பவப்பிணியுங் கிளரா
தோட்டுஞ், சேணிவ்வு மெழில்வான மாமலையி லமர்திருமா றிருத்
தாள் போற்றி. (௬௬)

மலர்மகளைப் புளிங்குடியின் மன்னியகா சினிவேந்தை வந்து தா
ழ்ந்து, பலர்புகழுந் திருப்பேரை மகரநெடுங் குழைக்காதர் பதுமச்
செல்வி, யலர்துணையு மடித்துணைகட் கன்பிழைத்து முன்பிழைத்த
யாவும் போக்கி, யிலகியொளிர் மதிமான மேவியசீ வைகுந்தத் தெ
ய்தி னரால். (௬௭)

அவ்விடைவை குந்தபதி யெனும்பெயரி னம்மானை யம்மானோ
வும், வெவ்விடக்கோ டொசித்தானை வைகுந்த வல்லியுடன் விளங்கு
வானை, யெவ்வமறப் பணிந்துவர குணமங்கைப் பதியெய்தி யெம்
மோய் மாலைக், கவ்வையொழித் தருள்கவெனக் கழறொழுது திருக்
குளந்தை கலந்தார் மன்னோ. (௬௮)

* பெருகைபெறு மறை—பெருமைய அழகுபெற்ற வேதம்.

குளந்தைநகர்க் கண்மாயக் கூத்தனொடு கமலையையுங் கும்பிட்டம் பரு மலர்த்தரிய வரியபுகழ்த் திருநாங்கூரின் மன்னுநம்பி யையர் செல்வி யுளந்தவிரா திவரடிக ளுறத்தாங்கி யுவந்தேத்தித் திருக்கோளூரில் வளர்ந்தெழிற்செய் திருமாதை வைத்தமா நிதியோடு வணங்கினரால்.

பாண்டியநாட் டெசோன்பான் பதிபணிந்து மலைநாட்டிற் பதும நாபன், வேண்டியகல் கனிக்கனந்தன் மிசைத்துயிலு மனந்தபுர மேவிப் போற்றி, யாண்டிருந்து வன்பரிசா ரம்புகுந்து திருவாழு மகலத் தெம்மான், ஆண்டசடை யோனிமேனி தொழுதுதிருக் காட்க ரைக்குந் துன்னி னரால். (௭௰)

துன்னியப்ப னூட்டுங்குறையும் பெருஞ்செல்வ காயலிரின் றுணைதந்தா ளினைத்தி, மன்னுமெழிற் றிருமூழிக் களத்தானை யப்பதியின் மருவிப் போற்றிப், பன்னுதிருப் புலியூரின் மாயனொடு போழ் கொடியாள் பாதந் தாழ்ந்து, சென்னிமறை புறையவனைத் தேவர்க டம்பெருமானைச் செங்குன் றூரில். (௭௧)

சென்றிறைஞ்சித் திருநாவாய் நாரணனை மலர்மங்கை தேவை வாழ்த்தி, வென்றிவளர் மதிலல்லல் வாட்கோலப் பிரானைமன்ன் மேவி னானை, நின்றுபணிந் தரவணைமீத் துயில்வானைக் கமலவல்லி நீங்கா தானை, பொன்றுமன நெடுவண்வண் டிருமாருந் பரமனையு முச்சி வைத்தார். (௭௨)

கேட்டாலும் பவமொழிக்குங் கேசவன்மா வுரகமிசைக் கிளரா வோங்கும், வாட்டாறுங் கைதொழுது வித்துவக்கோட் டெம்மானைக் கமலைப் போற்றிப், பாட்டாருந் துளவணியுங் கடித்தான நாரணனைப் பரவி யார்க்கும், வீட்டாரு நெறியளிக்குந் திருவாறன் விளைவாழ்த் தி மேவி னரால். (௭௩)

மலைநாட்டிற் பதியொருபான் மூன்றினையும் வணங்கிக்கொடு மன்னிக், கலைநாட்டு மயிந்தைநகர்த் தெய்வநாயகனொடு கமலை பாதந், தலைநாட்டிப் பெரும்பேறு தணவாது திருக்கோவ லூரிற் சார்ந்து, இலைநாட்டுங் குடையாயன் திருக்கோவல் வல்லியிவர் திருத்தாள் சூழ்ந்தார். (௭௪)



நடுநாட்டிற் பதியிரண்டு முன்னாட்டிப் பணிந்தேத்தி நங்கடா சர், தொடுநாட்ட மொடுதொண்டை வளநாட்டு தொழும்பேட்டை நிரம் பச்சென்றங், குடநாட்டி லொளிர்வானம் விதானமென மேலோங்கி யுயருங் குன்றிற், படநாட்ட மெட்டினையான் பணிந்தெழூஉ மத்திகிரிப் பல்வலத் துற்றார். (௭௫)

அத்திகிரிக் கரிவரதன் பெருந்தேவி யாமெங்க ளன்னை பாதம், பத்திமையிற் பணிந்தாசிங்கப் பெருமானைத் தேவியொடு பரவி யின்ப, முத்திதரு மட்டபுய கரத்தானைக் கேசவனை முனிமாதைத், தத்தியடி பணிந்துதண்கா விளக்கொளியை மரகதத்தை நன்று டாழ்ந் தார். (௭௬)

அன்னமதிக் கனித்தாய ரப்புல்வரு திகமாந்த வாசரப் போற்றி, முன்னவரும் வேளுக்கை முகுந்தனிரு சரணமலர் முடிமேற் றாங்கிப், பன்னுதிருப் பாடகத்துப் பாண்டவர்க்குத் தூதுபரி பரமனொடு, மன்னுருக்கு மிணிதந்த பாமையடி வணங்கிமன மகிழ்ந்தார் மன்னோ. (௭௭)

நீரகத்து நிலமங்கை சகதீசற் பணிந்துநிலாத் திங்கட் டுண்டப் பேர்மருவு பதித்திங்கட் டுண்டனொடு நிகரில்லாட் பேணிப் போற்றி யூரகத்தி துலகளந்த பெருமானொ டமுதவல்லி யுவர்தா ளேத்திச் சீரகத்தா ரணிவணிக குலதிலகர் திருவெஃகாச் சென்றார் மன்னோ.

சென்றுசொன்ன வண்ணஞ்செய்த பெருமானைக் கோமளத்தைத் திருத்தாள் போற்றிக், கன்றுகொடு விளவெறிந்த காரகத்தி லுறுக ருணை காரை வாழ்த்தி, நின்றொழிற்செய் கார்வானக் கள்வனையுங் கமலையையு மேயத் தேத்தித், துன்றுபொழிற் றிருக்கள்வ னூராதி வராகன்மா துணைத்தாள் போற்றி. (௭௯)

திருப்பவள வண்ணப்பதியிற் பவளவல்லி பவளவனன் செம்பொற் பாதம், விருப்பமிகத் தொழுதுபர மேச்சுரவிண் ணகர்க்கேகி விமலை யோடிங், கருப்பமுறு தொழிக்கருளும் பரமபத நாதனிரு கழலுமேத்திப், பொருப்பையொரு குடையாக்கொள் புனிதனமர் புட்குழிக்குப் போந்தார் மன்னோ. (௮௰)

பேர்கந்தப் பதிச்சமர புங்கவனை மரகதப்பேர்ப் பொன்னைப் போற்றிப் பெருந்தேவித் திருநின்ற வூர்ப்பத்த வற்சலனை யெனைப் பெற்றானைச், செந்தாமரை மலரடிகள் பரசியெவ்வுட் டிருப்பதிபோ யச் சொன்ன வல்லி, காந்தனராத் துயில்வீர ராகவனைப் பணிந்துமனங் களித்தா ரன்றே. (௮௧)

நீர்மலிவீர் வண்ணன் மலர்மங்கை யடியிணைக டொழுது தாழ்ந்து, கடற்புகழி னிடவெந்தை நித்தியகல் யாணர்கோ மளமாங் கொம்பர், சீர்திகழும் பதயுகளம் பணிந்துதிருக் கடன்மல்லை சென்று பூவி, லேர்மலிய மேவுதல சயனனெடு நிலமாதை யேத்தி னரால்.

அப்பதியி னின்றல்லிக் கேணியம ருச்சனசா ரதியை யெங்க ளொப்பரிய வுருக்குமிணி யுடன்பணிந்து திருக்கடிகைக் குவந்து போந்து, செப்புமுல கருளமுத வல்லியுடன் யோகநர சிம்ம மூர்த்தி, துப்புறமு மம்புயத்தின் றாளிணை தாழுடை வினை தாழத் துலங்கி னின்றார். ()

தொண்டைவள நாட்டிலுறு நாலிரண்டோ டிரண்டுபதி தொழுது தாசர், ரண்டர்தொழும் வடநாட்டி லாறுபதிக ளடைந்துபணி யாசை மேன்மேற், கொண்டெழுந்த மனத்தினராய்ச் சிறப்பாகத் திருப்ப தியின்பேர் குறித்துக் கொள்ளுந், தண்டமிழி னிலத்தெல்லை யெனநவ லும் வடமலையைச் சார்ந்தார மன்றே. (௮௪)

வடமலையின் சாரல்புகுந் தாழ்வார்தீர்த் தத்தாடி மகிழ்முன் னாத், திடமலையா தாக்கமொடு மலையேறி மினிதேறிச் செனன நோய் கள், படமலையுங் கோனேரி படிந்தாதி வராகனிரு பாத மேத்திக், கடமலைமுன் காத்தானை யடியவருக் கருளாவானைக் கமலை யானை. ()

வேங்கடமா மலையானை யெங்கள்குல தெய்வத்தை விரும்பித் தென்பா, லரங்கனைவார் தமைப்பரக்க வரியையெனு மெங்கள்பதி யடைந்த மாலைத், திக்கொழியப் பணிந்தெழுந்து திருச்சகனூர் சென்றலர்மேற் றிருவின் செய்ய, பூங்கமலக் கழலிணைகள் றொழுதுசிங்க வேள்குன்றம் புகுந்தார் மன்னோ. (௮௬)

சென்றந்தப் பதியினர சிம்மனெடு மிலக்குமியைச் சிந்தித் தேத்தி, *யென்றொன்றுங் குலத்துதித்தா ரரசபுரி யயோத்திகர்க்

* எனறு—சூரியன.



செய்திக் காசர், குன்றொன்று மிணையில்புய தசரதர்க்குத் திருமக னாக் குலவி னானை, கன்றொன்று மெவர்க்குமரு டருசீதா பிராட்டி யுடனுங் போற்றி. (௮௭)

சேர்ந்துதவத் தின்குறையு கைசிசா ரணியத்திற் றேவ ராசன், வார்ந்தமதுப் புண்டரிக வல்லியொடு மடியிணைகள் வணங்கி யேத்திச், சார்ந்ததிரு மூர்த்திகிருத் தேவியொடு மிருவரையுஞ் சாலக் காமத், தார்ந்துபணிந் தனர்பதரி காசிரம மெனுமப்பதியை யடைந்தார் மன்னோ. (௮௮)

அடைந்திணையில் பதரிநா ராயணனைச் சடரிந்த வல்லி பாதந், மிடைந்தெழுந்த வன்புகொடு தொழுதுகங்கைக் கரைக்கண்ட மெயவி லேதங், தொடர்ந்தறிய வரியுருவே டத்தமலைப் புண்டரிகை தானை யைப் போற்றிப், படர்ந்திகழு மரவமிசைத் துயில்வானைத் திருப்பிரு திப் பதியு ளானை. (௮௯)

சென்று *பொறி யொடுவனங்கிக் கல்யாண காரணனைத் திரு வைச் சங்கத், துன்றுகடற் றுவாரகையிற் பணிந்துவட மதுரைநகர் துன்னி மாலை, யொன்றியசத் தியபாமை யுடனேபோற்றி யாய்ப்பாடி புகுந்து கண்ணன், றன்றுணைய வுருக்குமிணி யடிமலர்களைத் தேடிசிற் சார்ந்தனர் தாசர். (௯0)

பார்க்கடலிற் கடன்மகளோ டரவணையே றுதுறையர் பரவி நிற்பக், காக்கடலைப் பெனவாவிற் றுயில்வியூக மூர்த்தியைபரங் கருணை மாலை, வார்க்கடக்கா தெழுதனத்து மாதர்மய விகந்திகலா வழிபா டாற்றில், யார்க்கடங்கு நின்பெருமை யினிசெய்ய மெனமன னுக் கறிவித் தாரால். (௯௧)

சீர்பெருகும் பரமபதத் திருநாட்டிற் பரவாசு தேவன் றன்னைப், பேர்பெரிய பிராட்டியொடு நித்தியரு முத்தர்களும் பெட்பிற் சூழ, மேர்பெருகு மொளிப்பிழம்பை யனந்தாங்க மொளத்தி லிருக்கின் றானை, கேர்பெறக்காண் குவைநெஞ்சே யடிமையினிற் பிறழாது நிற் றியென்றார். (௯௨)

* பொறி— இலக்குமி.

இந்திரமீ ரைம்பதுட னிருநான்கு பதிகளுவக் தேத்தித் தாசர், மெய்த்திறத்துப் புராணங்கள் புகழ்தலமோ ராறுதொழும் விழைவு கொண்டே, யெத்தரமு மிணையிலெது கிரித்திருநா ராயணனை யெய்திப் போற்றிச், சித்திதருஞ்சிமுட்டத் தாதிவரா கன்பாதஞ் சென்று தாழ்ந்தார். (௯௫)

எல்லவன்றன் மகனொழுக்கஞ் செய்விருந்தா வனத்தினிடை யெய்தி ராதா, வல்லவனை வணங்கியெழிற் பாபகா சப்பதிவாழ் மாலை வாழ்த்திப், பல்லவஞ்சேர் சண்பகா ரணியமெனும் பதியினிற் கோ பாலற் போற்றிச், சொல்லுமெதி பதிவந்த பெரும்பூதூர்க்கேசவனைத் தொழுதார் மன்னோ. (௯௬)

௯-வது தலயாத்திரைச் சருக்க முற்றிற்று.

ஆகச் செய்யுள் - ௬௯௨.

---

## ௰-சங்குசக்கராங்கனச் சருக்கம்,

குருவி னுரையாற் றிருப்பதிகள் கும்பிட் டேத்தி மகிழ்தாசர்
பொருவி லாசா னிணையடிகள் பொருந்தி வணங்கு மவாவிர்ப்பத்
திருவை யகலா வாமருவித் திருமா லுறையுந் தொழுந்தார்
மருவி யரங்க விலக்குவனுங் குரவன் பாத மலர்பணிந்தார். (௧)

பணியு மடிமைப் பெருமையரைப் பரிந்து நோக்கிப் பகர்கின்றார்
மணியுந் திருவு முறைமார்பன் வதியும் பதிகள் வணங்கினை
நணிய சுற்ற மெனத்தொடர்ந்தார் நன்று தொழியப் பெற்றுமனந்
தினிய சாந்த மடைந்தனையோ திறம்பா நிலைமைத் தோவென்றார். ()

வேறு.

தேசிக னருணிறை திருக்க ணோக்கினேற்
காசில வினவிய வினைத்து மாயவான்
மாசிகந் துயர்கல மருவிற் றென்பிறப்
பிசகின் மாடி யின்னை தினைந்த பின்னையே. (௨)



இன்னணந் தாசரங் கியம்ப நற்றவன்
றன்னடித் தாமரை வணங்கிச் சாருமோ
குன்றுதல் லான்குலத் துதித்துச் சிமுட்ட
மன்னிய சக்கர வர்த்திக் கோனுவான். (௩)

சுற்றிய மனைமுதற் சுற்ற நீக்கியென்
பற்றையே யனைத்துமாயப் பற்றுந் தாசரை
நற்றனித் தாமரை நயனன் பத்தரி
லுற்றுறை யொருவராய்ச் செய்ய வுன்னினேன். (௪)

தீர்த்தனற் புகழ்சொலுங் கவியைச் செப்புதல்
பேர்த்தல்கை விரசினைப் பெயர்பொ றித்துமார்
பார்த்தலன் ஞன்பெயர் தனக்கு மார்தரச்
சார்த்தற சியமெனச் சாற்று நூல்களே. (௫)

* வளைவளை யந்தணர் வலத்தி டத்தினி
லளைருக பவமுக வன்ன வாறுபின்
விளைதிரி வருணர்க்கு மேவ லெப்பெனா
வுளவதர் வணவுட திடத்த் தோதுமால். (௬)

புண்டர மூர்த்தமும் பொறித்துச் சக்கரன்
கொண்டவன் பிரணவங் கூறி யொப்பில
வண்டிய பராற்பர னந்தர் யாமியாம்
பண்டைநா ரணன்றனைப் பற்று முன்னுளான். (௭)

அன்னவன் றனைமகா னென்ன வாரெசுர்த்
துன்னிய கடமெனுந் தொகை சொல்லுமான்
மன்னுசெந் தாமரைத் துணை மாப்பய
மென்றுமக் கடல்கடந் தேற நின்னதாம். (௮)

சங்குசக் கரங்கடந் தோன்க டாங்கிய
மங்கலி லாயுத வகையை முன்னையோ
ரிங்கரி தணிவரென் றிருக்கி லாய்நாத்
தங்குபாற் கலமெனுஞ் சமிதை சாற்றுமால். (௯)

* வளை - சக்கரம். வளை - சங்கு.

தோட்டுணை * வளைத்துளை துலங்கு வோன்பவம்
வாட்டில னென்னமற் றெளிகள் மாழ்கமேற்
காட்டுமா தேசுடைத் திகிரி தைத்தலத்
திட்டுதல் கடனென வெசாற் செப்புமால். (கக)

சக்கர மாதிய தரித்தோர் சேனமுஞ்
சக்கரத் தான்புரி வாரஞ் சார்ந்தரற்
† சக்கரத் துழல்பவ னீங்கத் தாங்குக
சங்கர மெனச்சொல வருக்குஞ் சாமமும். (கஉ)

மாயவ னுபுகக் குறிகள் வாய்த்திலன்
மேயினும் விண்டுவின் பதத்து மேவுவ
ராயதா லப்பொறி யணி யாழுமத்
தாயகந் தன்னுமென் றதர்வ ணஞ்சொலும். (கங)

தேவர்க்குப் பலஞ்செயுந் திகிரி பாவகன்
தாவமேய் தரவென் றரிக்க லுற்றனை
னுவின பவமொழித் தழுவில் வைகுண்ட
மேவுவ னெனுமுறை யிருக்கில் விள்ளுமால். (கச)

பவித்திர மென்பது பாவ கற்சொலுஞ்
‡ சவித்திரத் ததனுரை சகத்தி ரரத்தைத்
தவிர்த்தில தன்னது சாற்று மேமியப்
புவித்திரு நாயகன் பொங்கு நேமியால். (கரு)

உடலிடைத் தாபமுற் றடைய னேய்துவன்
றடையில்சா லோக்சா யுச்ய மென்றவை
யடைவுறு கிதத்தா லமல னிவ்யுற
லடைபெறு சாமமா மறைநவிற் றுமால். (கசு)

வேறு.

சங்கு கிறைந்து பவித்திரமென் றிசைக்குமாழிப் பெருமானை
தங்குஞ் சகத்தின் பதிமேனி தனவாச் சுழு முன்னுலே

* வளைத்துளை - சங்குசக்கரம்.
† சக்கரம் - பிறப்பு.
‡ சவித்திரம் - ஒளியின் கிலேப்பு.



பொங்குந் தாப மடையாத * புரத்த ரடையார் பிரமத்தை
யங்க தடைவோர் தரிப்பவரே யாமென் றறைபு மறைமூன்றும். ()

சரணம் விதகும் பவித்திரமாய்ச் சாற்று மொளிய தேகுவெதுறைற்
றரணக் குறியோன் பலகட்டைத் தாண்டப் பெறுவ னக்தவெழிற்
கிரணத் திகிரி யிறைசத்தி கிளர்ந்து பகவற் பத்திக்கு
முரணைப் புரியும் பவமினத்து முற்று தொழிக்குக் கிடக்கின்றும்.

ஒளிய மற்கு முடைத்தாகி யொப்பின் றுயர்ந்து பவித்திரமாய்
மிளிரு மோக்கந் தருமாழி மேவுஞ் சங்க னமக்குலகி
லளியோ டளிக்கக் கடவதென வறையு மந்தக் காடகத்திற்
றெளிய வின்னும பலநூல்கள் செப்பு மவைற்றுஞ் சிலசொல்வாம். ()

ஆக்கை யுடையா ராழிவளை படையக் கடவ ரவைகொண்டு.
சேக்கை யிருக்கை யொழிக்துமகார் சேரும் பசுக்க ளுடன்மனையிற்,
றூக்கும் பொருள்க ளெவற்றினுக்கும் பொருந்தக் குறிகள் புரிகவெ
னத், தாக்கி மறையி னுண்மையன்கு துணிக்க சாண்டி லியர்சொன்
னர். (உ0)

திருமா லாழி புயத்திலிடைச் செறிந்த மனித ரன்றியெவர்
வருமா லகவி வெமனுளை கடக்க வல்லா ரெனவின்று
தருமோத் தரத்தி லெமனெங்கிங் காசமுறப் புரியுஞ் சும்வாதந்
திருவா துரைக்கு மின்னுமிவர் செப்பல் செப்பும் பாராசரனை. (உக)

அவையா தென்னில் யமனுரைப்ப னறத்தா ரெழுகுங் கிங்கரினை
நவையு மழிவு மிலாச்சொருப நன்றும் விசுவம் பரனெவன்பாற்
கவையின் றுறைவா னவ்வுயர்க்கோன் சரத்தி லாழி நமது பலக்
குவையை யொழிக்கு மவனுக்கு மிடராங் கூட லரிதெனவே. ()

என்ற ழுழி புயத்திருத்தி யெனக்கே யடிமை யெனவொருவன்
றன்று முலகிற் கிடைப்பரிது †சூரன் புதல்வன் கொடியவுரை
யொன்று முலவா தவன்செவியி லுவனே பவனின் மேலாரே
னென்று மச்ச மெனுநாவி வெழில்சேர் திருமா லிசைத்தனனுவ். ()

* புரத்தர் - உடம்பினர்.
† சூரன்புதல்வன் — இயமன்.

வேறு.

அருச்சனை வேறு தெய்வ வாலயம் புகுதல் போற்ற
லரித்தல நீக்கியென்று முலகுடும் பாய வென்பா
விருத்திடு மனத்த ராகி யெனாதையர் யுதங்கள் மேனி
தரித்திடல் வேண்டு மெந்தத் தலத்திடைச் சார்கின் றாரும். (௨௪)

மங்கல வணியே மாதர் மகிழ்கரை யுடையா ரென்ன
வங்கறி வுறுத்தல் போல வணிவனை யாதி தோளிற்
றங்கிடத் தரித்த லீச சம்பந்தங் காட்டு மென்னப்
புக்கமெய் விண்டுதத்வ மென்பதிற் புகன்றான் மாயன். (௨௫)

விண்டுவி னடியாற் காணூஉ யமபடர் வெருவ நிற்ப
ரெண்டரு மலர்பாற் சூற்ற மியற்றிடி லுலகை மாய்க்குங்
கொண்டனேர் வணத்திதங் கோமான் பெருமையா னரக மன்றோ
கண்டமக் கெட்டு கிற்குங் காட்சிய தாகா தென்றும். (௨௬)

காண்பவர் பாவந் தீர்ப்பா ராழிசேர் கரத்தின் மூலி
மாண்பினர் கங்கை யாதி தீர்த்தங்கள் மாட்சி யெய்தச்
சேண்பெறு கூல மேவித் திகழ்கின்ற ரெனவுஞ் செப்பு
மேண்பெறு நூலிற் சிர்த்த விதிகாச சமுச்ச யந்தான். (௨௭)

வருணவாச் சிரமத் தப்பா வழியொழு குநராய் நாளு
மருணனேர் திகிரி தோளி லார்ந்தநால் வருணத் தாராற்
கருணைசேர் கமலை காந்தன் கைதொழற் குரியா னென்னப்
பொருள்பொதி யைந்தாம் வேதம் புகலுறும் பொருந்த மன்றே. ( )

வேறு.

பத்தன் புயத்தில் வளைகேமி பரித்தே திருமா லடியிணைக
ணித்தம் போற்றக் கடவனென்று நிகழ்த்து மிவ்வா றேபுரிவோன்
முத்த னாகி யடைந்திடுவன் மோக்க மெனவு மொழியுமெழிற்
கத்த னரியே பரமனென்னக் கழறும் பதும புராணநூல். (௨௯)

தவத்தை யிழைத்தல் செபம்புரிதன் முன்மீச் செய்யு மோமங்க
ளுவத்த றருமா தானங்க ளுவைக ளாதி யுஞற்றுகின்றோர்
பவத்தை நீக்குந் திகிரிபுயம் பதித்தோன் முன்னிற் செயிலொன்றே
யிவத்த பலன்கள் பலபலிக்கு மென்னவிசைக்கும் பாகவதம். (௩௦)



வேறு.

புயந்தனி திகிரி யாளன் புகுமிடஞ் சுரந்தி வெப்ப
மயக்குறு கள்ளர் துன்ப மன்னிடா வந்த மேலோன்
நயத்ததோ ளாழி காண்பார்க் காண்டுசெய் பாவ நன்றே
துயத்தரு மெனவும் பாக வதமினி துரைக்கு மன்றே. (௩௧)

விண்டுகாத் தகத்தை மார்பில் வில்லினைச் சிரத்திற் சேர்த்த
தண்டினை நெற்றி மீது சக்கரம் வலமார் தோளி
லண்டிய விடத்தோள் சங்க மணிருக பத்தி மிக்குக்
கொண்டிடு மனத்தோ டென்னக் கூறுமா லாக்கி நேயம். (௩௨)

ஐந்தெனு மாயு தங்கட் கம்மனுப் பதிட்டை செய்து
வெந்தூறு தீயின் வைத்து விதிமுறை பூசை யாற்றித்
தந்தம மேனி தோறுந் தருங்குறி கொளாக விவ்வாற்
செந்திரு மணாளன் வைகு முலகிடைச் சிறப்ப ரென்ப. (௩௩)

வரமுனி வரர்கள் சொற்ற வாமனம் வராகம் வாயு
நிரமுறு தித்தங் காந்தந் திகழ்தரு கருட மாதி
யுரமுறு நூல்க ளெல்லா மின்னவா றுரைக்கு மேலாந்
தரமிலா வற்ப நூல்கள் சாற்றுதல் குறிக்கோ ளன்றால். (௩௪)

புண்டரோர்த் துவத்த னாகிப் பொருந்துபல் போகத் தாலே
கண்டடை பரம வீசற் கருதிய யானஞ் செய்வோன்
பண்டைய பாவ தனமப் பற்றினைத் துறப்பா னென்னக்
கொண்டிப நிடதங் கூறுங் குவலயந் தெளிய வன்றே. (௩௫)

ஊர்த்துவ திலகந் தீட்டி யுபர்பர மேசனன் றனை
யார்த்திறிற் புருட சூத்த மந்திரர்க் கியங்க ளாலும்
பூர்த்திசெய் பூசை செய்வோன் பொருந்துமங் கவனை யென்றுச்
சீர்த்தகா டகந்தா னன்கு செப்பிடுந் தெரிய மாதோ. (௩௬)

யாகசீ ரிபூசை யென்பவை யூர்த்து வத்தோ
டேகமா மனத்திற் செய்வோ னிலக்குமி காந்தன் றனம்
வாளகியா டைவன் வந்த வழியெழு குலத்துள் ளாரைச்
சேகறு கதிக்க ணுய்ப்பா னெனப்பல்ல சாகை செப்பும். (௩௭)

மாலடி யார்க ளன்றி மற்றைய பேருந் தங்கள்
பாலமீ ராத்து வத்தைப் பரித்தலி செய்தா ளங்க
ளேனுமப் புரிவா ராயி னிவர்பல வெய்து வாரிந்
ஞாலமீ தெனவு நன்கு நவிற்றுமாற் பல்ல சானக. (௩௮)

சங்கண்மா லடிவைப் பென்ன சுடுமேனி யுளதா மோங்கும்
புங்கமாம் புண்ட ரத்தைப் பொருந்துமோன் புண்ய வானுய்ச்
செங்கண்மா லுவப்போ னாகிச் சேருவான் மோக்க மென்னச்
சங்கையி லாது சாற்று மதர்வண வேதந் தன்னில். (௩௯)

கிரீடை மூழ்கி மேனி நின்மல னாகிச் சிந்தை
யோரிடத் திருத்தி நேரே யூர்த்துவந் தரிக்க வென்று
நேரிய விஷ்ணு பேரும் ருதக்கிட னிக்க வென்றுஞ்
சீரினக் கினிவெச் சிய கிரகியந் செப்பு மன்றே. (௪0)

பூசனை செபமோ மாதி புரிகின்ற வந்த ணாளர்
நேசமோ ரூர்த்து வத்தை நிகழ்த்தன்று காலந் தப்பா
தாசரித் தனிக நந்தி யஃதன்றிச் சாரா தென்னத்
தேசினிற் சிறந்த போதா யனமுனி செப்பி னூல். (௪௧)

பூசுரர் நுதற்கே பூசிப் பூசனை புரிய லாகா
தாசிலா வூர்த்து வத்தை யணிகின மச்ச நூலு
மேனி யூர்த் துவத்தை யின்றி யின்னவர் பிறிந வென்னப்
பேசமா னூர நிய மென்னுமா னூலும் பேசும். (௪௨)

வெள்ளிய திருமண் கொண்டு வேதியர் முதல யாரு
மொள்ளிய லலாட மீதி லூர்த்துவ திலகந் தன்னை
நன்றுற வணிந்து வேத நவிற்றிய வாறு கன்மந்
தன்னுறு திறைக்க வென்று தட்டற வுரைத்த லோடு. (௪௩)

பகவனை மனத்தைக் கொண்ட பானஞ்செய் தனபு சித்த
மிகவுறு புண்ணி யத்தே மேவுவ திலைத்த தென்றுஞ்
செகமிசை யவற்றே யாரு நிவேதனஞ் செய்து சுத்தி
தருமவை புசிக்க வென்று மாவுய ரிதனுஞ் சாற்றும். (௪௪)



அன்புகொள் மனத்தின் மேலா மரியினைத் தியானித் தன்னோற்
கின்புடன் பாவித் தன்ன நிவேதன மியற்றி யஃதை
முன்புறு பிரான னாதி மொழிமறை களினு லோமந்
துன்பற முயற்று மென்ன வியாதர்மே தந்திற் சொன்னார். (௪௫)

முகுந்தன்முற் படைத்த வன்ன முதலிய புசிக்க வென்று
மிகுந்தசீ *ரிலேகர் போற்றும் விட்டுணு தாசர் கட்கே
யுகந்தத வன்ன மாதி யுண்ணிய வளிக்க வென்றுஞ்
சுகந்தகச் சொல்லும் போதா யனர்சொலும் விண்டு கற்பம். (௪௬)

சானகி யுடனி ராமன் றகும்வகை புலன டக்கி
யானநல் லயோத்தி நாரா யணற்கோமஞ் செய்து சேட
மான தக் கொள்கை முற்ற மகிழ்ந்துண்டு துயில்வா னென்ன
ஞானநன் கருளி ராமா யணநூலி னவிலு மன்றே. (௪௭)

நல்லவா மனத்த னாயி சகியா மகாயந் தன்னிற்
சொல்லிய வாறே யோம செபஞ்செயுந் தூய்மை யோர்க்கு
மல்லியங் கமலக் கண்ணா னடியர்க்கு மவன்கொள் சேட
மொல்லுதன் னளிக்க வென்ன வுரைக்குமா லந்நூல் பின்னும். (௪௮)

பற்பல வுரைப்ப தென்னே பகவனை வேத்தி யத்தை
யற்பொடு புசிக்க வென்ன வறைபிர மாணங் கோடி
முற்படப் புகன்ற வித்தப் பிரமாண மொழிகள் ஞான
விற்பனர் மேலோர் யாரும் மெய்யெனக் கொண்ட வாறும். (௪௯)

இன்னவா றீச னீண்ட பிருத்திவி லுதார திர
மன்னுநந் தாச ருக்கு வளைபுயந் தணிந்து மாலின்
றுன்னிய வடிய ராகச் செய்கவித் தூய கன்மம்
பொன்னனி மார்பி னற்கு மகிழ்தனி புரியு மென்றார். (௫0)

ஆரிய முனிவ னிவ்வா றறைந்தசொல் லமுத மூற்றுக்
தாரைநே ரெனவே வேத சாரமாய்ச் சக்ர வர்த்திச்
சீரியன் சிரமேற் கொண்டு திருக்கரு தாச ரோடு
நேரிய விடைபெற் றன்ற நெறியிற்றம் பதிக்கட் புக்கார். (௫௧)

* நிலேகர் - தேவர்.

ஆரியர்ச் சிறந்த சக்ர வர்த்தியா சாரியார் தாந்
சீரிய வரங்க ராமா னுஜமுனி செப்பும் வண்ணம்
நேருறத் தன்னைப் போற்றி நிற்கின்ற தாசர்க் காங்கே
சார்தரு விதிவ ழாது சக்கராங் கனத்தைச் செய்தார். (௯௨)

புண்டரந் தாப நாமம் புகலுமந் திரமி யாக
மெண்டரு மைந்தில் யாக மந்திர மிவற்றை நீக்கிக்
கொண்டனர் சக்ர வர்த்திக் குருபர னிடத்து மூன்றும்
பண்டையா கூழ்முன் னின்ற பாக்கிய மதனாற் றாசர். (௯௩)

வணிகர்தங் குலதீ பம்போல் வந்தவ தரித்த தாச
ரணிகலன் மணிபொன் னுசை யம்பரம் வெண்பட் டாரும்
பணிதருங் குருவிற் கம்ம பற்றுதம் மனத்தி னுசைப்
பிணிதவிர்ந் தொழியத் தந்து பெரிதுபூ சனைபு ரிந்தார். (௯௪)

சங்குசக்கராங்கனச் சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௯௪.

## ௧௦—மந்திராராதனச் சருக்கம்.

சக்கர வர்த்தி யாசான் சங்கசக் ராங்க னத்தால்,
மிக்கொளிர் புயத்தி னோடு மேவிய தாசர் தம்மைத்
தக்கசீ ரரங்க ராமா னுசமுனி தனையீக் கொண்டே
யக்கணந் திருக்க ணோக்கா லருள்புரிந் திட்டான் மன்னோ. (௧)

இம்முனி வேந்தன் பாத விணைமலர்ச் சார்பி னீங்காச்
செம்மையி னொழுகிப் பன்னாட் செல்லவோர் நாளி லன்ப
ரம்முனி யடிகை கூப்பி யாகமந் திரத்தை யாக்கைச்
சும்மைதான் கடியே னுய்யத் தெருட்டுக வெனத்து தித்தார். (௨)

துதித்திடு தாசர்க் கந்தத் தூயவாச் சிரம தீர்த்த
னுதித்தநற் கால மென்னைக் குறுகின்ற தன்று வானிற்
குதித்தெழுந் தருவி பாயும் வேங்கடக் குன்றத் தெம்மான்
கதித்தெழு மருளால் வேட்ட காரியங் கூடு மென்றான். (௩)



குற்றமு மொப்பு மில்லாக் குணகணு ளமர்ந் தாசர்
நற்றவத் தாசான் பாத நளினநா னுளும் போற்றி
முற்றுமந் திரமி யாக மொழிதரற் கடிக மென்பா
லுற்றருள் புரிக வென்றே வணக்கமுன் றனையு நாளில். (௪)

தேசிகன் கனவில் வந்து திருமகள் மணாளன் கூறு
மாசிக லன்புந் தன்பாள் மறைகொளு மவாவு நோக்கித்
தாசரிற் சிறந்து ளார்க்குத் தருகவெம் மந்திர மென்ன
நேசமோ டரங்க ராமா நுசமுனி நினைத்தா னன்றே. (௫)

வேறு.

நந்திரு நாதனுங் கடய னவன்
சுந்தர வடியினை தொழுது மேசெய
லந்தமில் லவைக்கவன் சரணஞ் சார்கென
மந்திரப் பொருளொடு மகிழ வோதினன். (௬)

நின்றிடைப் பகலிராத் திருத்த வேண்டுவ
வினைத்தகா மைவகை யாக மீதெனத்
தனைச்சரண் புகுந்துள தாச போருமா
அனைத்தகு குருபர னுணர்த்தி னனரோ. (௭)

கண்டியி லொளிர் இயடி கழுவி யாசமித்
தெண்டரு மெழுமுறை யரியென் றேதிப்பின்
கண்டிடே ரன்னையக் கரிக்கு வீடருள்
கொண்டலை யுளத்திடைக் கொள்ளல் வேண்டுமால். (௮)

முன்பல பிறந்தையின் முற்றி நீக்கொணுக்
கொன்பல கன்மங்கள் குறித்தி ரங்குறாப்
பின்பீத மணிப்பரு மம் பிரிய மீவது
மின்புற வுளத்திடை யெண்ணல் வேண்டுமால். (௯)

தாய்ப்பணி புரிந்திலேன் றந்தை யாதியர்
மேய்தருங் குரவரை யிறைஞ்சு கிற்றிலேன்
வாய்புக ழுறஞ்செயோன் மாலைப் போற்றிலேன்
ஏய்வுற வென்பவத் தொல்லை நீக்கமே. (௧௦)

நித்திய வின்பமாய் நிலையி லின்பினை
வைத்துள மயங்கினேன் மறுவி லன்னினர்
தொத்துறு கொடும்பவ மத்தச் சொல்லெனுங்
கத்துறு விடக்கடல் கடப்ப தெத்திறம். (கக)

இன்னணம் பவப்பல னெண்ணிப் பேரிடர்
மன்னிய திசையினை மாற்ற வேண்டியே
புன்னிய மனம்விருப் புதவு சத்துவர்
துன்னிய திடத்தினைத் தோய்தல் வேண்டுமே. (கஉ)

போனநீர் குறித்துளம் புன்க ணெய்தரு
தானநீர்க் கடன்செயு மவரின் முற்செயு
மீனமார் செயற்கிரங் காம லிம்மையின்
ஞானமோ டியற்றுவ நாடல் வேண்டுமால். (கங)

பின்னரத் திருமக டலைவற் பேணியே
துன்னிய பொழுதினைத் தூய்ப் லென்றெணிப்
பொன்னிகர் நூரவனைப் பூமின் ஞுதனைக்
கன்னிகர் மலமெனக் கழித்தல் வேண்டுமால். (கச)

மாலடி யார்படி வாவி யாதிய
சாலுமவ் வயிற்செலீஇத் தனக்கு மூழ்குதற்
கேலுநற் பொருள்களை யிழிவி லாததோர்
பாலுற வைத்தப்பின் னிருநி டக்கமாய். (கரு)

தென்றுறன் றிரண்டுவிற் கடைக்குச் சேணதா
யொன்றிய மகத்திலுங் கொழித்த புல்லிலே
யென்றிவை புவியிடை யிட்டுக் காலெலி
னன்றுற வடமுக மாக நண்ணியும். (கசு)

இரவிடை தென்முகத் திருந்து மாறதன்
பரவிய கரைமலை பாழி செல்வழி
விரவுவரப் பூமிமண் கட்டி மேவிய
துரைதொழு சாம்பரீர் தவிர்த்து வோர்வயின். (கஎ)



மலசலம் விடல்விதி மாதர் மாருத
நிலனனல் கதிர்துளி நியதி யந்தண
ருலைவுகொ லிப்பில முறைவக ளெக்கியே
சலமலம் விடுபவன் சார்வன் பாவமே. (கஅ)

இத்திற மோசன மியற்றித் தூய்துறச்
சத்திசேர் கரைமடு வாதி நண்ணியே
யெத்திறஞ் சாத்திர மிசைக்கு மவ்விதி
தத்துற லின்றியே சவுச மாற்றுக. (ககூ)

அடிகரஞ் சுத்திசெய் தடிய ரின்குழாம்
படிதரு நீர்நிலை யொன்றின் பாற்செலீஇ
முடிமறை முருந்தினை முன்னி யன்னவ
ரொடிவறு நியமன முற்று மூழ்குக. (உ0)

விதிமுறை மூழ்கிப்பின் னறுவை வேய்ந்துதான்
வதிதரு சுத்தறுப் வயங்கி யாசமித்
* ததிசித மண்ணினு லழகொ டேர்ந்துவம்
பதிதர வணிருக பன்னி ரண்டிடம். (உக)

வேறு.

நெற்றியிற் றரிக்கும் போது நிகழ்கர ளுன்னி லாழி
பற்றியுஞ் சுவண வண்ணம் பரக்கொளிர் மேனி கொண்டு
முற்றகே சவனென் றேது முயாபி தானம் வாய்ந்த
நற்றிரு மாலை யெண்ணி நன்பொடு வணங்கல் வேண்டும். (உஉ)

நீர்தருங் கொண்ட றன்னை நிகர்தருங் காளம் வாய்ந்த
வேர்தரு மேனியோடு மோங்குநாற் புயத்துஞ் சங்க
மார்தரத் தரித்த நாரா யணனெனு மவனை யெண்ணி
யேர்தரப் போற்றி நாமம் வயிற்றிடை யிடுதல் வேண்டும். (உங)

நீலமா மணியீ தென்ன நிகர்சொலு மேனி யானைச்
சாலவார் கரங்க ணான்கிற் கதைகளைத் தரித்து ளானை
யேலமா தவனை யெண்ணி யிறைஞ்சிநன் குக நாமங்
கோலமார் தரமே மார்பிற் குறித்தினி தெழுதல்வேண்டும். (உச)

* அதிசிதமண் - அதிகவெண்மையான திருமண்.

பூரண மதிய மென்னப் பொலிதிரு மேனி யானைச்
சீரணக் கரங்க ளன்கிற் சேர்ந்தசா ரங்கத் தானை
யாரணப் பொருளைக் கோவந் தாவென்றஞ் சலித்தே யெண்ணி
யேரணக் களத்தின் மீது நாமகன் கிடுக யாதோ. (உ௫)

வேறு.

செந்தா மரையின் கேசரம்போற் றேசிற் சிறந்த திருமாலை
கந்தா தொளிரு நாற்கரத்தி னலங்க டாங்கு நாயகனை
பந்தா திகளின் பற்றொழிக்கும் விண்டு வெனவே பராவுய் நினைந்து
முந்தார் நாமற் றனையயிற்றின் வலப்பா லணிக முறைபாக. (உ௬)

மட்டு நிறையுஞ் செங்கமல மலர்போன் மேனி சிறந்தானை
யிட்ட முடனாற் கரகனகி லிலங்க முசலந் தரித்தானை
துட்ட மதுவை யடிமதுசூ தனனே யெனத் துதித்தென்னிப்
பெட்ட வுளறுய் வலக்கரத்துப் பிறங்க வணிக திருநாமம். (உ௭)

அங்கி நிகருந் திருமேனி யழகு நிறையும் பரம்பொருளைத்
தங்கு மொளிய *நாந்தகத்தைத் தாங்கு நான்கு கரத்தானைத்
துங்கத் திருவிக் கிரமனெனச் சொல்லி வழுத்தி யுளத்திருத்திப்
புங்க முறுவான் காத்தில்வலப் புறத்தி லிடுக புண்டரமே. (உ௮)

பின்னை யிரவி யெனமேனி பிறங்கி யெழில்சேர் பெம்மானை
யுள்ள கரங்க ளிரண்டி லோங்கும் வயிரப் படைசேரக்
கொள்ளு மவனை வாமனனைக் குறிப்பிட் டுளத்திற் குறித்தெண்ணி
வெள்ளைத் திருமண் கொடுவயிற்றில் விளங்க வாமத் திடமிடுக. ()

வெண்டா மரைபோற் றிருவுருவம் விளங்கு முகுந்த காரணனைக்
கொண்டா ரொளிய †பட்டசங்கள் குலவு நான்கு பாணியனை
வண்டார் துளவச் சீதரனை வழுத்தி வணங்கி யிடக்கரத்திற்
பண்டா ரணங்கள் சொலுந்திருமண் பரிவி னிடுக பத்தியொடும். ()

மின்னி னொளிபோ லெழில்வடிவ மேவும் பரனை நாற்கரத்துந்
துன்னு ‡முற்க ராயுதனைத் துலங்கு மிருடி கேசனையுண்

* நாந்தகம் - வாள்.
† பட்டசம் - கத்தி.
‡ முற்கரம் - உலக்கையின்பேதம்.



மன்ன நினைந்து கரங்குவித்து வழுத்திக் கரத்தி னிடப்புறத்திற்
சொன்ன முறையின் விதிதழுவித் துலங்க விடுக திருநாமம். (௩௧)

கோடி தபன னுதயநிகர் கொள்ளும் படிவ முடையானை
யீடின் றிலங்க வைம்படையு மேந்து மிறையை யெத்தேவு
நாடும் பதும நாபனையுள் ளூட்டிப் பணிந்து வெரிந் மீது
பீடு பெறவே பூர்த்துவத்தைப் பிறழா தணிக வெழில் பெறவே. ()

செய்ய விந்த்ர கோபமெனச் சிறக்குங் காந்தி மேனியனை
வெய்ய பாசா யுதமதனை விரும்பு நான்கு திருக்கரனை
வைய தகர்த்த மோதரனை வணங்கி மனத்திற் றியானித்துத்
துய்ய திருமண் பின்கழுத்திற் றிலங்கும் வண்ண மணிகுகவே. (௩௩)

மதிய *மயுதஞ் சரற்காலத் துதிக்கா லொத்து விளங்கொளிய
துதிசெய் வியூக மூலமெனச் சொல்லும் வாசு தேவனையும்
பதிய விதய மலரகத்துப் படுத்திப் பாந்த வன்போடுங்
கதிவே றிலையெற் றெனவிரண்டு கரங்கள் குவித்தஞ் சலிபுரிக. (௩௪)

முன்ன குரைத்த படிமனுவின் முற்றும் பொருளை யறிந்ததனிற்
சொன்ன வழியிற் றியானித்துத் துலங்கூர்த் துவபுண் டரமதனை
மன்ன விடங்க டொறு மணிந்த பின்னர் மாலா ராதனத்தோ
டுன்னு மடியார் பூசனையு மொருவா தன்பி னுஞற்றிடுக. (௩௫)

இந்த வாற்றி லபிகமனத் தியற்றி யன்ப னுயவவன்
முந்து பூசைக் குரியமலர் முதல கொணர்க வவையுளவேற்
சிந்தை தெளிய வாழ்வார்க டிருப்பா சுரங்கள் பொருளாய்ந்து
புந்தி மகிழ்வா னுபாதான கால மதனைப் போக்கிடுக. (௩௬)

வெய்ய கதிரோ னன்றுறவே விளக்கும் போழ்திற் காலகங்க
துய்ய வாகவி மானியமத் தருசு சென்று துலங்கு மொளி
மெய்ய வனைந்த பரிசனங்கண் மேவ விளங்குங் கண்ணனைநன்
குய்ய மனத்திற் சிந்தைசெய் தாய்மை வணக்கஞ் செய்திடுக. (௩௭)

பற்றும் பவமும் பாற் றயழ குடைத்தாய் மனத்தாற் பற்றுவதாய்க்
குற்ற மொழித்துப் பகுதியரி ளுமமில்தாய்க் குலவியுயர்

* அயுதம் - பதினாயிரம்.

வுற்ற திருமா லடிவணக்கத் தோங்கு மகிழ்விற் கொருவிடவர்
முற்ற வவனு ராதனத்தை முறையி னோடுஞ் செயவேண்டும். (௩௮)

ஈச னாரா தனத்திடையூ றியலா தொழிக்க வாரியனை
னேச முடன்முன் னருவேய மனுவின்* பொருளை நினைத்தனுப்
வாச மரையின் மலரானை மன்ன மருமத் திடையேற்றான்
றேச திகழுந் திருவடியைச் சரணம் புகுந்து சிறந்திடுக. (௩௯)

இவ்வா றுகச் சரண்புகுந்த வியல்பிற் குவந்தான் றிருவருளாற்
செவ்வே யமல சிந்தையனுய்த் திகழுமதாகு தனன்மேனி
தவ்வா தெண்ணு தலில்வந்த பரமா னந்தத் தனையுந்த
வெவ்வா றுரும் விதியெனவாய்ந் தியற்ற றிருவா ராதனமே. (௪௦)

முன்னர்த் திருமா மகனிறந்து முதல்வ னருளாற் பூசனைக்கு
மன்னு நியன் மேனியனுய் மனத்தாற் பூசை தனைபாற்றிப்
பின்ன ரிறைவன் றனக்குவப்பாய்ப் பிடார் புறத்தி னுபசரிப்பாற்
அன்னு திருவா ராதனத்தைத் தறவா வன்பிற் செயல்வேண்டும். ()

வேறு.

அருக்கியபாத் தியத்தினுட னாசமன மஞ்சனஞ்சார் வார்த்த மெ
ன்றாம், வருக்கமுறு மைந்தினுக்கு முரியநீர் பெயவைத்து கலங்கண
மண்ணிப், பெருக்கமுறு மொருதிருக்கா வேரியெனும் பாத்திரத்தி
ற் பிறங்கு நீரைச், சுருக்கமுற நிருக்கும்வகை பாத்திரங்களோத்தினி
னுஞ் சொரிக மாதோ. (௪௨)

வேறு.

திருமா றனக்கங் குபசரிப்பான் சேர்க்கும் பொருள்க ளொன்
றினைபு, மொருவா தாக வருக்கியங் கீதனு லொன்றப் புரோக்கணி
த்து, வருமா லெட்டக் கரமதை மன்னு மூர்த்தி மனுக்கொண்டு,
தருசோ டணைமா நியபுரிந்து சாரு மன்போ டினிதளிக்க. (௪௩)

அளிக்கும் பொருளை வணக்கமுட னங்கை யேந்தி முகமலர்ந்து
களித்துத் திரியா மனனுகிக் கட்வு ளிதனைக் கட்டிக்க
வுளத்திற் பற்ற வுவைதரும்போ துற்ற பிழையும் பொறுத்தருள்க
வளத்தற் கரிய புகழானே யென்ன வவனை வேண்டிடுக. (௪௪)

* துவயமனு - த்வயமென்னுமந்திரம்.



யோக பீடத் தறைபரனை யுவந்துத் தொழுதா சனமிட்டு
யாகு முத்தி யுறுங்காலத் தடையுந் பயனை யதற் களித்து
மோக மகற்றுஞ் சாதனமாய் முன்னைற் கரிய தாயதிரு
வாகத் தாறுச் சையினைலே யடைந்தா னென்றேன் னிநீவன் டும்

கமலத் துறைபு மயன்முதலாங் கடவுள் போற்று மருத்துனைய
யமல மான குணக்கடலே யமரர்க் கருளு மண்ணருளில்
விமல காத விப்பூசை முடிய மளவுமெங் ணிற் றிருப்பாக
அமரி லொருவ னிவனென்னத் தருக வென்ற னருளெனக்கு. (௪௬)

ஈச மந்தி ராதனமை திங்க னுளதாற் போந்தருள
வாசி மெத்தப் பாதுகைக ளணிக வணிந்தி வாசனத்தில்
நேச திகழ வெழுந்தருள்க செவ்வே மதுர கம்பீர
வாச மலரின் கடைக்கணிப்பால் மன்ன வருளைத் தருக வென்க. (௪௭)

அடியே னளிக்கு மருக்கியபாத் தியத்தோ டாச மனமிரு
முடியக் கடைக்கண் பார்த்துவந்து முற்றுங் குற்றம் பொறுத்தருள்க
வெடிய கந்தந் திமிர்ந்தமலர் வேய்ந்து தூப முதந்திக
கடிய தீப சேர்க்கைமனங் கலந்து வடைக்கா யுகந்தருள்க. (௪௮)

செகத்திற் சிச னைதிரு மாலே திருமஞ் சனபீடத்
தகத்தி னுவப்போ டெழுந்தருள்க வடியே னதனுக் காமவற்றைத்
தொகுத்துக் கொடு வைத்துளனுந் தொல்லை யெனவே யன்றன்றனும்
மிகத்தகவில்லாத் தாசனென வென்னை யருள்க வெனவுரைத்து. ()

வேறு.

தந்திடபாத் தியமாச மனநீ ராட்டத் தனக்குரிய வழிவைமினு
ஞ் சாரும் பாத்ய, முந்தியமா சமனமெழிற் பாது கைகளை மூரவொடு
நாவிளக்க முற்றுங் காட்ட, மந்தமுறத் திருமுகம்வாய் தூய வாக்க
வாசமன மாடிகரந் தத்தஞ் செய்தல், சுந்தரமுறு மடைக்காய்ந்த முயி
லத் தேய்த்தல் கழுவுசிசைக் காய்கொள்ள றந்தச் சிக்கம். (௫௦)

உலர்ந்திருக்குத் தூசினுடன் றிருவொற் றுடை மஞ்சனொடு ம
ஞ்சன நீ ரொன்றொன் றனுட, நலத்திகழு முபவீத மமைந்த பாத்ய
நாடியுறு மாசமனங் குசையிற் செய்க, வொலத்திகழும் பரிபாவித்

கிரமார் சாத்தம் பூவிளொடு நற்றாய மொழிருந் திபஞ், சஙந்திகழு மாசமன பாடல் பாட *நனிதருமறும் பல்லியங்க டூவா திற்கும். ()

இத்தகைய வுபசாரங் களினி ராடி யிலங்குகருப் பூரத்தா லெழி லாலத்தி, யொற்றிடுதற் குரியதாகி யலர்ந்த வாடை யொளிர்விடு பொன் னுடைகுசை யுபசா ரங்க, ணத்தியுளம் பற்றியருள் புரிகரா யே ஞானநேந் தேவரீர் நளின பாதப், பத்திமிருந் திமுளத்தி லடிய ஞேவன் பரியுமன் தருளென்பாற் பதிக லாலே. (௫௨)

பங்கயக்கட் பரம்பொருளே பணிகண் மாலே பாடீர முடைகள் குடை கவரி யாதி, துங்கமுறு முபசாரப் பொருள்கண் மன்னத் துல ங்கியமுன் றுவதெனச் சொல்லு மிந்த, வங்கமுறு மலங்கார பீட மீ தி லமர்ந்தருளி யருள்புரிக வர்க்ய பாத்யந், துங்கமுறு சமனீய மம் பொ ஞைட் டுலங்கணிகண் முன்னூலா சமனங் கொள்க. (௫௩)

எப்பொருட்கு மிறைவமலர் நயன மீதி லிட்டிடுமை யூர்த்துவபு ண் டரங்கன் ஞடி, செப்புநறு விரைத்தூபந் திகழுந் தீபஞ் செய்த அமுது மாசமனம் பதாகை பிச்ச, மொப்பரிய சீகரமா மிவையு மேற்க வொண்பணிலத் திருச்சின்ன முரசெக் காளஞ், செப்பிடுமிவ் வியங்க ளாயு நிருத்த கீதஞ் செய்யுமிவை களையுமளஞ் சேர்க்க மாதோ. ()

கான்றியம்பிப் புரிந்ததற்பி னிணையி லாசா ரிசைத்தபடி யெட் டெழுத்தா மனுவே யாதி, தன்றியமந் திரங்கள்கொடு திருமால் பாதத் துணைமலரின் மலரணிந்து சூழ்ந்து தாழ்ந்திங், கொன்று திரு வாய் மொழியா திபபா வாலே யுறப்போற்றி யெனையடிமை கொள்ளென் றேதிக், குன்[illegible]டினு மெத்தகைய வுபசா ரங்கள் குறைநீக்குந் †சாலி யரி கொள்ளல் வேண்டும். (௫௫)

விரைமல்கு மடைக்காயர்க் கியமுங் கொள்க விரும்பிநித முனை ப்போற்றும் வேட்கை கொண்டே, னுரையெனியார்க் கோருறவே யமு துசெய்ய வரும்பொழுதிற் குற்றதுவாய் வகைக ஞன்காய்ப் புரைதபு நூல் உணவார்ந்த நான்காமிந்தப் போச்சியா சனத்தினிது போற்ற மேவி, வரைதருபீத் தியமாச மனமு நன்கு வைத்திருக்கு மருகனும் புடனே பின்னும், (௫௬)

* நனிதரம் - நல்ல †சாலி அரி - நெல் அரிசி.



சுவைமிழு சருக்கரைதேன் றயிர்பா லின்ன சொரிந்தவுண வா சமனந் தூகவர்ந் தான்ற, கவையுறு கோட்டினைச் சுரபி மைம்பொன் காத்திகளு மணி மையுமேற்றுக் கருணை செய்க, நவையொழிய வடிமன்னம் வியஞ்ச னங்கணாற்மிழுக்கு கனிதமிபா னமுக்கேத நூதி, யிவைகளை நான் முறையுனது சிந்தைக் கேற்ப லிந்துள்ளே னுளமுவ ப்போ டேற்க வென்க. (௫௭)

சத்தியததி னுடன்சவுசந் தனைத்தேமிக்க தாழ்வுடையேன் ஞானமிலேன் சாமிக் கேற்கேன், மெத்தியதுர்ப் புத்தியுள்ள வடிய னேனை மேவு பொருளா நினையல் கருணை மிக்கே, யொத்துறநா னமைத்த வன்ன முதலையாவு முயர் வாக்கியுளங்கு முடங் குறையு மாதார்க்கும், பத்தி யுடன் யானளித்த தெனவே கொண்டு பயன் படுமா திருவுள்ளம் பற்று கென்க. (௫௮)

திருக்கோக்காற்குறைதபுத்த செய்சா ரன்னந் திருவுளத்திற் கொ ள்கபாரசேட னத்திற், கருகனும் மிவையன்றித் தாகந் தீர்க்க வமைக் குடைய பானிய முஃவினீர்மேரர், பொருவின்முக சோதனைக்குக் கு வியதாகீர் புரியுமா சமனியுங் காந்துடைத்தன், மருமகியுந் சாந்த மடைக் காயென் றின்ன வகைகளையு முளம்பற்றி மகிழ்க வென்க. ()

நாட்டுமுயர் வொய்பிக்கத பரனே யீட்டு நறுங்குசையி னுற்று டைத்துச் சுத்தி யெய்த, சேட்டமுறு மைந்தாவ தாகு மந்தி ராச னத்தி லெழுந்தருளித் திகழும் பாத்யந், தேட்டமுறு சமனீயங் கந் த புட்பந் திபதா பாசமன் முகவா சந்தோ, மட்டமுறுந் தாம்பூல மெனியோன்றந்த வின்னவைகொள் டெனையடிய னுக்கு தென்க. ()

செங்கமலத் திருநயன திருவார் மார்ப செறியுமறு குணமுடையா ய் வின்று தேவே, யங்கருணை யம்புதியே விரையா ராறு யடுகியசை யாசனத்தை யடைந்து பாத்யம், பங்கமறு மாசமனம் பூவின் மாலை பணிபட்டு முன்னூலா சமனஞ் சாந்தந், கொங்குமலர் புகைவிளக்கா சமனத் தோடு கொண்டடைக்கா யருந்தியருள் கூர்க வென்க. ()

ஆழ்வார்கள் முதலாய மேலோர் பாவா மமுதவெள்ளத் தாலநந் தனமலை னென்றும், வீழ்வாருகும் பூரணை வந்த னென்றும் விளம்புபா மப்புமாக்களினு னின்னை யாதுந், தாழ்வேகப் போற்றியெந்த விடக்

காலத்துந் தருமவத்தை யொற்றினினுஞ் சலசநேருஞ், சூழ்வாரு
ங் கழலிணையா யுனக்கு நாயேன் றொண்டுபூண் டிருக்கவே துணி
ந்தேனென்க. (௧௨)

இவ்வகையா யுலகனைக்கு மீசனானை விலக்குமிகாத் தனையிலங்கு
மன்பி னேடுஞ் செவ்வையுற பணிதர்கள் பூசிக்க வேண்டுந் திறமெ
னைற் றூசருக்குச் செப்பினாரற், கவ்வை யொழியரங்கநா மானு
சப் போர்க் கலைவலோ னவைசெவியிற் கலந்த தாச, ரெவ்வமற வித
யனித்துங் குறைபா டின்றி யிருணிங்கு மனத்தினிடை யிசைவித்
தாரால். (௧௩)

இனிமுனி கருணையா லிப்பி றப்பெனு
நனியுறு துன்பமெய் நீங்கக் கோடமாந்
தனிசர ணாகதி தன்னைச் சேர்தலே
புனிதமக் கெய்தவேண் டுமென் றுன்னினார். (௧௪)

மந்திராராதனச் சருக்க முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் ௩௮௧.

## ௧௧- ஆழ்வார் வைபவச் சருக்கம்.

தாசர் குருவி னடிமலர்க டாழ்ந்து போற்றி யதிபதியி
னேச மிகுத்த சரித்திரமு ரைகில் பொய்கை யார்முதலாத்
தேசு திகழு மாழ்வார்கள் கதையுந் தெளிய வடியேற்கும்
பேசி யருள்க வெனவன்பு பெருகப் பணிந்து வேண்டினரால். (௧)

குரவ னென்னுங் கருணையல் கொழித்து நிலவும் பாநுகதி
விரவும் பிறந்தை கவிபொய்கை யாழ்வார் முதலா மெய்யன்பர்
பரவு சரிதை யெனு மமுதப் பெருக்கைத் தருக்கைப் பற்றறுத்துக்
கரவு நீக்கி யொளிருமனத் தாசர் களிக்க விநதன்றே. (௨)

முத்தி யளிக்கு நகரேழின் முதன்மை வாய்ந்த கச்சியினி
னத்து மிலிய நீர்ப்பொய்கை நளின மதனிற் றுலாமதியிற்



*பத்தி லிரண்டு முதனீறாம் பற்று நாள[illegible]மேனு
நித்த சூரி யமிசையெழி னிலவ வுதித்தார் பொய்கையார். (௩)

உலகை யளிக்கத் திருநெடுமா லோங்கு தலத்திற் றிருக்கவனார்ந்
திலகு பதியாங் கடன்மல்லை யென்னும்புரியி லைப்பசியிற்
குலவு மவிட்ட நன்னாளிற் கொங்கு விரியுங் குவளையத்தின்
மலருந் திகிலன் கதைக்கூறாய் மன்ன வுதித்தார் பூதத்தார். (௪)

மயிலைப் பதியி லைப்பசியின் மன்னுஞ் சதய நன்னாளிற்
கயல்க ளுகளுங் கிணற்றில்வெறி கமழு மாம்பற் பூவினிடைப்
புயலி னொளிய மாயவனுந் தகத்தி னடிமை பொலிந்தோங்க
மயிலை யுலகுக் கறுத்தருள்வா னந்தக் குதித்தார் பேயாழ்வார். (௫)

இந்த வாற்றி னவதரித்த வினையின் முனிவர் மூவர்களும்
பந்த வுலகர் தமைக்கூடிப் பற்றும் பாவ மெனநினைந்து
கந்த மலர்க்கட் கடவுளடிக் கமலத் துணையே துணையாகச்
சிந்தை திறுவிக் கடல்புடைசூழ் புவியிற் சரித்துச் சிறந்தனரால். (௬)

வேறு.

செங்கமலை சேர்மார்பர் செப்புமிவர் பாசுரமாம்
வங்கமது கொண்டெல்லை மன்னுபவக் கடலேற்றுத்
துங்கவுளத் தெனிமறையை மாருதந்தைத் தோற்றுவிக்க
இங்கவற்று ளிவர்கோவ லிடைகழியிற் கூடினரால். (௭)

அவ்வயினோர் தரியாமி யாசைசரு வேச்சரன்றூ
னெவ்வமிலன் றூர்கடிலி லெய்திநெருக் கந்தவலாற்
கவ்வையுறு மறைகாற்றிற் கஞ்சிவந்து கலந்தோனை
யிவ்வயினூர் நெருக்குகின்ற தெவனென்ன வினைதனரால். (௮)

நெருக்குறுதற் செய்தின்று ணிலையறியப் பொய்கையார்
நருக்குனினுமு விளக்கேற்ற வன்புகொடு பூதத்தார்
திருக்கொழிந்து ஞானமெனுந் திபிகையேற் றப்பேயா
ருருக்கமொடு திருக்கண்டே னெனவோதிப் போற்றினரால். (௯)

* பத்தின்கண் முதலினும் ஈற்றினும் இரண்டு பற்றுநாள் உ௰ ஆம்நாள்
அது திருவோணம்.

அன்னபொழு திற்கோவ லாயனார் மூவருக்குந்
தன்னொளிய மெய்யுருவந் தனைக்காட்டத் தொழுதவன்சீர்
மன்னவளத் திடைக்கொண்டு மகிழ்ந்துலக முய்யநாளு
துன்னுமெவண்பா வந்தாதி சொற்றனர்மூன் றனைமூவர். (௧௦)

திருக்கோவ லூருறையுந் திருமாலைத் தொழுதந்த
விருக்கோவ லிலாதுரைக்கு மிசைபாடி யியங்குமனத்
தருக்கோவு மானந்தந் தழைத்தோங்க வொருமூவர்
பெருக்கோலக் கடலுலகம் பிறங்குபயன் பெறச்சரித்தார். (௧௧)

வேறு.

உலகுறு பதிக டம்மி லுயர்திரு மழிசை மேவி
யிலகுறு தவத்தின் மிக்க பார்க்கவ னியற்றும் வேள்விக்
கலகில்சீர்த் திருவி னுத னருடர வாழி யஞ்சம்*
பலர்புகழ் தேவ மாதின் பாலனொன் பால னாக. (௧௨)

மகரமா மதியிற் சீர்த்த மகத்தவ தரிக்க மாதா
புகவிப னுலகிற் றந்தை போய்த்தவ மிழைக்கச் சாலில்
மிகவிளங் குழவி விம்மி யழக்கண்டு விமலை நாத
னுருகராத் தாப சோப முற்பரு னேக்கஞ் செய்தான். (௧௩)

அருள்பெறு மழிசை யாழ்வா ரெனுமபி தானச் சேயை
வெருடரு வட்டை செல்லோர் வேட்டுவ னேக்கி யற்றுன்
பொருள்கண்டா னென்னக் கொண்டு போந்துசே யில்லா ளில்லாள்
மருமலர்க் குழலிக் கீய வந்துபால் சுரந்த தன்றே. (௧௪)

சுரந்தபா லுண்ணு தாழ்வார் தோல்லுல கியம்பு தெய்வ
திரந்தாம் வளர்தல் கண்டு திரம்பமுப் பார்ச னார்த்தன்
பரந்துறு மன்போ டாவின் பாறின மளிக்க வுண்டார்
வரந்தரு மப்பாற் சேட மாதொடு விருத்த னுண்டான். (௧௫)

பயந்தரு சேட மில்வாழ் பயன்றரு வதுவா யன்றோர்க்
குயர்ந்தநன் மகவை யீய வுவர்கனி கன்னா ளொன்றும்
வயந்தரு நாமந் தந்து மைந்தனை வளர்க்க வன்னா
னயந்தரு நூல்க ளெல்லா கனியதிந் தொளிர்ந்தா னம்மே. (௧௬)

* அஞ்சம் - கூறு.



ஆயசீர் மழிசை யாழ்வா ராண்டேழுற் கலைகள் யாவு
மேயுமா றறிந்தே யெல்லாச் சமயமு மின்ன தன்மை
மேயவென் றவற்றி னுண்மை மேதக வாய்ந்து மாவாழ்
மாயவ னன்றித் தெய்வ மற்றிலை யென்று தேர்ந்தார். (௧௭)

பரம்பொரு ளாகி மோக்கம் பாலிப்பான் மாலே யென்னத்
திரம்பெற வுளத்து நாடித் தியானஞ்செய் மழிசை யாரைக்
கரம்பெறு களத்து முக்கட் கடவுள்வின் செல்வான் காணூஉ
வரந்தர வுவந்தேம் வேண்டும் வரமெம்பாற் கொள்க வென்றான். ( )

வேண்டுவ தில்லை யொன்றும் விருப்பபா வர்க்கத் தாமா
லீண்டதை யீய வல்லை யெனிலனித் திதை வென்ன
மாண்டரு மோக்க மீவான் மாலன்றி யிலெனன் றேறு
வாண்டதே லித்தப்* பொல்லத் தூசிபோ மாற்றி னாலும். (௧௯)

செலவருள் புரிதி யென்னச் செப்பலு முக்கட் டேவ
னிலவிய நெற்றிக் கண்ணி னெருப்பெழ நோக்க வாழ்வார்
குலவுகாற் கண்ணி னங்கி கொண்டதை வெல்லச் சூழு
மலைகயோ டாடு மால்பா லைந்தசல பத்தி யுள்ளாய். (௨௦)

ஆதலிற் பத்தி சார னெமன வைய நின்னை
யோதவில் லுலகென் றேத்தி யோங்குவேள்† தண்டம் புக்கான்
மாதவ யோகத் துற்றார் மழிசையார் முதலாம் வார்கள்
பூதலத் தலங்கள் போற்றிப் புகதிரு மழிசை போந்தார். (௨௧)

அப்பதி யுற்ற மாலை யன்பொடு பரவி போகத்
தப்புறப் புரியும் பத்தி சாரரைக் கண்ட னாவிச்
செப்பரு மல்லிக் கேணித் திருநகர்க் கவரோ டேகி
மைப்புயன் மேனி யானை மலரடி வணங்கி மூவர். (௨௨)

மற்றுள பதிக டாழ்வான் வழிக்கொள மழிசை யாழ்வார்
சுற்றுகாக் கச்சி மேவிச் சொன்னவா செய்த மாலி
னற்றுள வணியும் பாத நளினங்கள் போற்றி யோகம்
பற்றினர் பன்னா ளாண்டு பணிகனி கண்ணன் செய்ய. (௨௩)

* பொல்லம் - துவாரம் † வேதண்டம் - கைலைமலை.

இன்னணை நிகழு நாளிற் சென்னவர் நியற்று மெய்மான்
சன்னிதி மெழுகிக் கோலந் திருமொரு மூப்பி னூனி
மன்னுமிப் பணிகள் செய்ய மங்கையா யிறுதி யென்னச்
சொன்னலக் கவியோன் றூலே கணிகண்ணர் சொற்று ரன்றே. (௨௪)

அம்மையார் பாலை யாகி யாரிருத் தனியி னூனுந்
செம்மைசேர் பணிக ளாற்றுந் திறமதி பல்ல வக்கோன்
சும்மைகொண் மணியுந் தூசுங் கணிகண்ணர் துணைப்பொற் பாதத்
தம்மவே வைத்துப் போற்றி யருள்கவென வனமெற் றென்றான். ()

நின்னுரைப் படியான் செய்ய நேர்ந்திலே னென்ன மன்ன
னென்னுடை நகரமேவா தேகுதி புறத்தென் றேக
வன்னவர் செய்கை யென்ன வறைந்துமின் மழிசை யாழ்வார்
கின்னணை மரையன் செய்கை யெனக்கணி கண்ணர் சொற்றார். (௨௬)

அய்யநிற் குதவாத் தான மாகுமோ வெமக்குமென்னச்
செய்யவன் மனையன் முன்பு சென்றுமன் செயல்சொற்றன்பு
பெய்கணி கண்ண னோடு பெயரமால் விரைந்து தானும்
பைவிரி நாகப் பாயல் சுருட்டிப்பின் படர்ந்தா னன்றே. (௨௭)

மற்றுள பெரியர் மன்னன் மாலடி யார்பாற் குற்ற
முற்றன னின்னுன் றேத்தி இறைகிலோ மென்று போகத்
துற்றின பலவும் பாதந் தோன்றலும் வெகி இயம் மூவர்
பற்றிய வகுத்து நாடிப் பாதமீப் பணிந்து சொல்லும். (௨௮)

புருவதை யறியா தேழை புணர்த்திடு புன்க ணீக்கித்
தருமவகை யாளுந் தன்மை யடிகட்கே சரண்மற் றின்றேன்
றுருதரு கண்ணீர் மன்ன னுரைக்கவுள் விழைந்து மாயோ
னகுமடி யார்முன் போத நன்னினன் பொழில்சூழ் கச்சி. (௨௯)

வேறு.

கார்க்கணை வெருங்குபொழிற் கச்சிநகர் நீங்கிப்
பார்க்கவர் தருந்தனையர் பற்று* புலி யின்பே
ரூர்க்கிடை புகச்சுருதி யோதியிடு முன்னோர்
பேர்த்துரை யெடுத்திலர்கள் பின்னரிவு ரென்றே. (௩௦)

* புலியின்பேரூர் - பெரும்புலியூர்.



இந்நமுனி யின்பெருமை பிள்ளைதனை வாயா
வந்தவட சாரமத னன்மறையில் விட்ட
தெந்தவிட மென்றறியி லாதுநனி மாறச்
சிந்தையவர் தேறமுனி செய்தன னுபாயம். (௩௧)

என்னையெனி லோர்கருதி லேந்தினர் கந்தாப
பின்னமுறு மாறுபுரி யெற்றியி னுணர்ந்த
வன்னருதி பொன்னிமறை யசாதி யுற்றுர்
மன்னுபுலி யூரின்மக மாற்றுமயரி பத்தன். (௩௨)

அப்பதிய பொற்பதியி னுனைசிர மேற்றி
யிப்பெரிய மாமுனியை யெழுமகா சாலைக்
கொப்புமலி னிற்கொடிய சாருமுன மாற்றச்
செப்புமழு லோம்புமவர் சென்றனர் சினத்தே. (௩௩)

அன்னபொழு தங்கரி லச்சுதனை வாழ்வார்
தன்னையுல கோரவவர் தந்தகவி கேளா
முன்னருற வந்தருள மெய்த்தமுனி யோர்க
ளென்னவிது மம்பூதிலி தென்றெதிர்ந்தடி தாழ்ந்தே. (௩௪)

இத்தகைய மப்பெருமை யெய்துதிற மோரா
தத்தமபி ழைத்தமை தொன்றுபுல மீந்த
வைத்திடுக னிக்கமழி மைப்பெருமை வென்னச்
சித்தமகி முக்கருணை செய்தவரை யன்றோர். (௩௫)

அந்தகர் நீங்கியெழி லார்தரு குடந்தைச்
செந்திரு மறையனை சேவைபுரி யாவந்
குந்துபல வந்சரமி யோகினிடை யற்றே
யந்தமில் தாம்பர பதந்தையணி செய்தார். (௩௬)

வேறு.

உலகமிசை மழிசையர்கோ னுதித்தவுகந் துவாபரமா முறைந்த
காலங், கலியுகா ரம்பத்தே யேழுநூற் றிரண்டாண்டுடன் றி
சைக்கு நால்கள், மலர்புனையுந் திருவாயான் மலர்த்ததிரு வந்தாதி
தொண்ணூற்று றேறு, உலகிருச் சந்தத்தீற் கவியொருநாற் றிருப
தியா ராக்கி னுரால். (௩௭)

வேறு.

தென்ன விறைமை கொளுநாட்டிற் சிறந்திவ் வுலக திலகமெனத்
துன்னுங் குருகா புரியெனும்பேர்ப் பதியொன் றுளது துவாபரத்தின்
மன்னன் றரும புத்திரனு லரசு புரியு மாண்புடைய
தன்ன நகரிற் றிருவழுதி நாட னெனும்பே ரமர்சதுர்த்தன். (௩௮)

திருமால் பாத மலர்க்கன்பு செய்யு மவர்க்குக் குணக்கடல்போன்
றொருமா சேயொன் றதித்தமகி யுவப்பத் தரும முனைந்துதலாற்
றருமா நாமந் தருமதர னென்னத் தாங்கிச் சக்கரர
வருமா காமத் றரவன்று ளளித்தா னச்சு தன்றனையே. (௩௯)

அவனற் றனயன் பெயர்செந்த் னன்றன் பாட லாக்கனெனும்
புவனத் திரபம் புகழ்புதல்வற் பெற்று னவன்போர்க் கழியானென்
றவனிற் சிறந்த செய்தரவத் தவனுந் தான்செய் தவப்பேற்று
லிவனுக் கிணையா ருலகிலென் வெழிலார் காரி தனைத்தந்தான். (௪௰)

காரி புவியிற் கலிபிருளைக் கடிந்து கமலக் கணன்பாத
வேரி மலரி னறுந்துளப மிலைச்சித் திருவாழ் மார்பனருள்
வாரி யறவிற் கரியகுழன் மங்கை யுடைய நங்கையெனும்
பேரிற் கியைய வெக்குணமும் பெருக வுடையா டனைமணந்தான். ()

நங்கை பிறந்த வகத்திருந்து நாதன் குருகா நகர்க்குவரு
மங்க ளிடையிற் குறுங்குடியி னமரு நம்பி பதம்பணிந்து
செங்கட் கமலப் பெருமானை திருந்துங் குணமா ரொருமகவை
யெங்கட்கருள வேண்டுமென வேத்தித்தங்க விலஞ்சார்ந்தார். (௪௨)

வளத்திற் சிறந்த குறுங்குடியின் மன்னு நம்பி காரி நங்கை
யுளத்திற் கிடக்கை கிரப்பவெளி யோங்கு சேனு நாயகரா
மளத்தற் கரிய திறலானை யழைத்துக் காரி யார்மனைபாற்
கிளத்தற் கரிதா மன்புடையாய் கோடின் மகவாய்ச் செல்கென்றார். ()

வேறு.

*சாங்கியசௌ கதங்களினுற் றடுமாற் றலிந்துயர்னை
யோங்கியவே தாந்தமத முறப்புரிவா னுழவாரா

* சாங்கியம் - நிரீச்வரசாங்கியம். சௌகதம் - சுகதரூற் செய்யப்பட்ட டமதம்.



யாங்குரைச் சேனையர்கோ னருத்ததிய யனையக்கை
தாங்கு *வயின் வயின்மேவத் தழைத்தன்று லெழின்றும். (௪௪)

வேறு.

இந்த நாதரி கௌசலமுன் னிராமற் பெற்ற வொளாகனை
நந்து கலியே ழுநம்பிறந்த நாளு டந்த மூன்றுமா
றந்து மிடபு மதியில்விசா கந்சேர்ந் துலக்கும் பூரணையில்
வந்த †வுசனூர் வாரமதின் மகவை யுயர்த்தா னடவாரிலே. (௪௫)

பேச வரியார் பிறந்தவப் பேற்று லுலகம் பிறங்கமணம்
வீசி மந்த மாருதமு மெல்ல வியங்க மேலோர்க
ளாசின் மனமு மிகத்தெளிய வடுக்கற் றெவரிந் திசையனைத்தும்
வாச மலரை யமரர்குழாம் வானின் றிறைக்க வுறங்கிற்றும். (௪௬)

மன்னுந் திருமா லருளினுக்கா னுயர்வு மேதிலத்த
பொன்னங் குழவி யெனச்சேனை முதல்வர் புகுந்து செயலுற்றித
யன்று மோயா யிரந்தைவய பாப்பக்கரையக் குருகைநகர்த்தளநாள்
றன்னின் முன்றுந் ‡சிந்தைப்பேர்த் தருவாய்த் தோன்றித் தழைத்

மதியின் மயர்வை யொழித்தவெழிலு மதலை யமுத மனமுன்னைவ்
விதியி னுலக சிக்கலைப்போல் மேவ லின்றி மாறுதலாற்
புதிய செயலி னெனப்பெற்றூர் பொருந்த மாற னெனுநாமங்
கதியை யளிக்கு மதக்களித்தார் கான வியா முகியநாள். (௪௮)

தோயும் பகுதி விகாரமிலாத் தாய ஞானத்திருக்குழவி
வாயின் மலர்ந்த திவ்வியான் றும் மவுனித் §தனந்த வெகினத்தே
போயன் றிருந்து தன்ப் பொருவும் புருடற் கான யோகத்து
மாய னருளாற் பதினுறு வருடஞ் சமாதி மன்னிற்றால். (௪௯)

காரி மாற னிவ்வண்ணங் கலந்துச் சமாதி துவாபரத்தி
னீரில் குருகு மேனுமாம நீர்ப குரி திருக்கோளூர்
சாரும் பனவபுரக்குடர் தமக்கு மதுர கவியெனும்பேர்
சேரு மகவாய் மதிமேடத் சிறக்க வுதித்தார் சித்திரைநாள். (௫௰)

* வயின் வயின் - வயிற்றிடம். † உசனூர்வாரம் - சுக்கிரவாரம்.
‡ சிந்தகம் - புளி. § அனந்தவெகினம் - ஆதிசேடனுகிய புளி.

தமது சாம சாகைமுதற் சகல வேத பாரகரா
யமது பெருமா னுறைதலக்க ளிசையி னிறைந்த நறும்புனலகன்
சுமதி யுடைய மதுரகவி யாழ்வா ரந்நாட் டொழுகநளில்
யமதிக் கதவி லொருசோதி யெழுந்து நிலவிற் றினையிலதாய். ( )

அந்தச் சோதி தனைநோக்கி வருவா ரனவில் காவதங்கள்
பிந்தக் குருகை நகர்காணுடப் பெருகு மண்பாற் பணிந்தெழுந்தே
யிந்தப் பெரியோர் தத்துவத்தோ டிதமும் புருடார்த் தங்களுமென்
பந்தப் பகுதி யொழித்தருள்செய் பரம குரவ ரெனக்கொண்டார்.

கங்கை புகல்வர் மதுரகவி கண்ணுற் றெயமிலை புனற்றோர்ந்து
செங்கண் விழித்துப் புறநோக்கித் திருமாற் கடிய ரெனவொருவர்
கங்க னுடைந்தா மீனுமிழ்வா *னயனத் துவத்து நிறையுமருள்
பொங்கி வழியக் கடைக்கண்ணாற் பொருந்த நோக்கம் புரிந்தனரே.

முன்ன மியோகி னிடையந்த முனிக் கனையே பரனுவா
னென்ன வறிந்த வதுபவத்தை யெவிதர வுலக முணர்ந்துய்ய
மன்னு கமலை யகலாத மாய னுரையான் மாறனார்
சொன்னார் நான்கு மறைப்பொருளுந் துதைய நான்கு பிரபந்தம். ( )

சீர்பெற் றிலங்கு திருவிருத்த நூறு கவியா மாகிரியப்
பேர்பெற் றடைய கவியேழு பெரிய திருவந் தாதியெண்ப
தோர்பெற் றெண்பத் தேழாகு மிசைசேர் திருவாய் மொழிப்பாக்க
ளாயிரத் தனவை சகத்திரமு நூறுசதமுந் தமுந் சார்ந்தனவால். ( )

அந்தக் கவிக ளனைவொழிந்த காமர் பிரத்து முதநூறு
முந்த மதுர கவியோலை கொள்ள மொழிந்து முற்று பொரு
ளிந்த விதமா மிகற்கென்றே யிசைக்க வனைத்து முனக்காங்கிப்
பந்த மறுக்கு மாரியன்பேரற் பரமாம் பொருண்மற் றிலையென்று.

மாற னிடத்து மாருத மாற னிடத்து மாப்பணிவேய்த்
தூறு மன்பாற் கன்னிநுண் சிறுத்தாம் பென்னு முதலமுதலாக்
கூறு கவியா ளாழ்வாரின் குணமோ டருளைக் குறித்தவர்செய்
பீறு ஞான பாசுரங்கள் விருப்பி னோதி விளங்கினரால். (௫௭)

* நயனத்துவம் - கண்ணிரண்டு.



மறையின் பொருளை வெளிதெவரு மறையாப் பொருளா யறி
ந்தரியே, யிறைவ னென்று கொண்டுகதி யெய்தும் படித்தாய்ப் பி
றமதங்கள், குறையுற் றெதிரா தொழிந்தேகக் கூறு மாறன் கவிப்
பொருளாய்ந், தறைவர் பெரியார் பராங்குசனே யாகு நாம மிவர்க்
கென்ன. (௫௮)

முன்னருஞ் *சடங்கா லொழித்துதித்த முறைமை நோக்கிச் சடகோப
ரென்னும் பெயரு மாங்கிருக்க விசைப்பார் குருகை நகர்த்திருமான்
மன்னு மாழ்வார் கவிமகிழ்ந்து மணந்து மனைந்த மகிழ்மாலை
யன்ன வளித்தார் துளவமெனத் தலங்கிற் றந்தத் திருமாலை. (௫௯)

மாலை யழித்தார் தமக்குமகிழ் மாலை யளித்தார் மாலென்ன
வேலை யுலக மதிதானம் விளம்பி வருளா பரனெனச்
சால வுரைக்கக் குருகைநக ராதி நாதன் றனைப்போற்றி
மேல முப்பா னைந்தவை யாழ்வா ரிருந்த திவ்வயினே. (௬௦)

மலைய நாட்டில் வளர்ந்திறந்த வஞ்சி நகரிற் சேரர்குலத்
தலைமை பூண்டோன் மன்பதையாற் றனைவா வளிய துயர்வேய்ந்த
கலைக ளறிந்தோன் மால்பதத்துக் கலங்கா திலங்கு பத்திமையா
லுலக நாமத் திடவிரத னென்ன வோத வுளனொருவன். (௬௧)

கன்னு மனத்துக் கனிசிறந்த காலை மூன்றிற் குடமதிபி
லன்னு நாளப் புனர்பூசவி லியமா பகலாக் கவுத்துவத்தி
னென்னு மதிக மதிதான மேய்த்து குலசே கரனெனவிம்
மன்னி யுதித்த தகன்பெருமை வழுத்த யாவர் வல்லுநரே* (௬௨)

அந்தக் குலசே கரனும்பே ரரசர் தனுமா மறையினுட
னெந்தக் கலையு மறிந்துமுடி யேந்தி யகிலம் புரந்திடுனும்
பந்த மொழிக்கும் புராணதி படனம் பெரியார் பாலென்று
முந்து மன்பு கொடுகேட்பா னொருநா ளிராம கதையிடையில். (௬௩)

கானூர் முதலா மிராக்கதர்கள் கலந்த களத்திற் றுசாதி
புரானூர் படைகள் கூட்டின்றி யுடற்ற வின்று மொருவனேனும்
வரனூர் காதை செவிப்புதப் பெருகு மன்பின் மாவளிறுற்
புரானூர் சேனை யொருகாலுந் தம் பொருந்த கின்னே யெழுகென்றார். ( )

* சடங்கால் - சடமெனப் பெயரியதோர் வாயு.

சேனை யெழுக வெனச்சொன்னா தானு மெற்றும் புராணிகரோ
டேனை யவரு மன்பின்வழித் தின்ன திகழ்ச்சி யெனத்தேர்ந்து
சோனை மாரி பொழிந்தம்பாற் றுன்னா பிராம னொறுந்திய
மானை திகழுங் கரணுதி யவனை யழித்த தெனமகிழ்ந்தார். (௬௫)

அரியமா ராசன் வைணவர்க ளகலாத் தொடர்பா லித்திறத்தன்
முரியமா னவரைத் தோமின்றி முனிவை யுபாயத் தியற்றுதுமிக்
கெளிதா மென்ன வமாத்தியர்க ளெண்ணி யாரா தனப்பெருமா
னொளிதா மாரந் தனைமறைவா யுதுபோ யெழித்த தெனப்புகன்றார்.

புகல மதிய னவ்வண்ணம் போயிற் றூர மெனவவர்க
ளகல தில்லா வைணவரே யதனைக் கொண்டா ரவரென
விகலி துரைப்பீர் பானம்பா கொள்ளா ரிமியேனே றுனதற்குப்
பகர்வ னரவக் குடத்தினிடைப் பாணி புகுத்தக் கொணர்கென்றான்.

கொணர்ந்த குடத்திற் கரம்புகுத்திக் கூறு மடியார் பாற்சோர
மணந்த தில்லை யெனவரச னறைய வரவங் காமுகப்ப
வணங்கி யமைச்ச ரென்செய்வோ மன்ன னென்ன வுளதுரைப்பக்
குணங்க ளிறைந்தோ ரவர்புரியுங் குற்றம் பொறுக்குங் கொண்ட
னரால். (௬௮)

பின்னர்க் குலசே கரப்பெயர்கொள் பெரியார் தமது புதல்வனுக்கு
மன்ன னாக்கி முடிசூட்டி வைத்துத் துறந்து வளநகரைத்
துன்னு மடியா ருடன்பதிக டொழுவா னெழுந்து திருவரங்கம்
பன்ன வரிய புகழ்க்கச்சி பரமன் வடவேங் கடக்குன்றம். (௬௯)

இன்னும் பலவாம் பதிகளுஞ்சென் றெங்க டிருமால் பதம்போற்றி
மன்னு மறையின் பொருள்வாக்கி வைத்தாற் போல விருளிரிய
வென்ன வெடுத்துத் திருமொழியென் றிசைக்கு நாமப் பாமாலை
சொன்ன விலக்க மொருநூறே டைந்து சேரத் தொகுத்தனரால்.

செய்ய கமல வெனவாயன் றிருவார் பிடமாத் திகழ்கின்றோர்
வைய முய்ய வவன்பணியால் வந்து குலசே கரப்பெரி
னய்யைத் தாண்டு புவியிலமர்ந் தழியா வொளியே யெஞ்ஞான்றுஞ்
செய்யுந் தான மாம்புயமே யதற்றிற் கனியாய்ச் சென்றனரே. (௭௧)



தாழ்வ பரமாம் பொருளென்னுந் தன்மை யுலகுக் கறிவிப்பா
னூறு வடிவைப் *பெரியதிரு வடியை நோக்கி வில்லிபுத்தூர்
மாறு மறையோன் பரக்குடென்மன்னு மெண்பா லன்புடையோ
னூறு னலங்கா லவதரிப்பா யென்ன வறைந்தா †னரிந்தமனே. (

திருமா துறைவைச் சிரந்தாங்கித் திகழுங் கலியி றைப்பானை
வருமா வாண்டுக் கலிதனைமதி மன்னுஞ் சுவாதி நன்னுளி
லொருமா நாமம் பட்டர்பிரா னென்ன விதித்தங் கோத்துமுதற்
றருமா கலைகண் முழுதுமுணர் தக்கோ ராகூர் சான்றோரே. (௭௩)

அதலர்க் கமலை பகலத்தார்க் கடிமை முறைமை யெனவாய்ந்து
புகலாய்ப் புகுந்து நந்தனமொன் றியற்றிப் பூவின் மணமாலை
தொகலாய்த் தொடுத்து வடவிலைப்பிற் றுயில்வார் மணிக ளிராவிளையும்
பகலாக் கொளிய விமானத்தார் பாத மலர்க்கே தினமணிவார். (௭௪)

பூணும் வளைந்த தென்மதுரா புரிபி லரசு புரியவன்சீர்
சேணுஞ் செறுஞ்செவ் வேற்செழியன் செறியு மிரவி னகர்ச்செயலக்
காணு மாறு சரிக்கின்ற காலத் தோரந் தணர்பெருமான்
மாணுந் தத்வ ஞானவர்ம் வழங்க மகிழ்ந்து கேட்டனனால். (௭௫)

காலை யெழுந்து நாவலைமாய்க் கற்ற பௌரோ கிதர்த்தாழ்ந்து
சீல முடைய பரம்பொருளைத் தேவே தெரிய வொரபமெனக்
கேல வுரைக்க மென்சங்க மிங்குக் கட்டு கிழியறுப்பின்
ஞாலத் தெளிபு சிதெளிவாய் யாமுந் தெளிவே நன்றென்றார். (௭௬)

நன்று புரிது மெனவரச னலமைத்துப் பொற்கிழியை
யொன்றப் பரமாம் பொருளிதென் றோதி யுத்தே யறுக்கவலார்
சென்றிங் கணைக வெனச்செப்பச் சேர்ந்து புலவர் தத்தமதம்
வென்றி யடையு மெனக்கருதி வெவ்வே றுரைத்து வெல்கிலரால். ()

வேறு.

பட்டர்பிரா னென்னு நாமம் படைத்தபிரான் வடபெருந்துயில்வா
ரிட்டருளுங் கட்டளையா லெழுந்தருளிச் சங்கத்துச்
கிட்டச்சொற் கழமறைவோ ரதிச சிதரனேன் பரனென்னக்
கட்டியபொற் கிழியற்றுத் தானாட்டு வீழ்ந்தன்றால். (௭௮)

* பெரியதிருவடி - கருடாழ்வார். † அரிந்தமன் - திருமால்.

கண்டுமகிழ்த் தரசனொடு கவிஞர்களும் பட்டர்பிரான்
விண்டுசித்தர் பெரியாழ்வார் வில்லிபுத்தூ ரரெனப்பேர்
கொண்டவரே யெனவோதிக் குலவுமத களிறேற்றிக்
கொண்டலென வியமியம்ப நகரைவலங் கொளுவித்தார். (௭௯)

தென்மதுரா புரியைவலஞ் செய்யும்பொழுது *ககபதிமேற்
பொன்மருமப் பரந்தாமன் போந்தருளப் பட்டர்பிரான்
முன்மருவு ககனமிசை முகில்கமலம் பலபூத்து
மின்மருவப் பொற்குன்றின் மிசைவருவ தெனக்கண்டார். (௮௰)

உடங்குவரும் பரிசனத்தோ டுவகிருவர் தமைப்போற்றி
யடங்கிலாப் பேரின்பத் தாழ்ந்தபர வசராகி
மடங்கனுறு †விடங்கவலர் மங்கையோ முதலெல்லைக்குந்
‡சடங்கமறை கீர்பாவாற் பல்லாண்டு சாற்றினரால். (௮௧)

பல்லாண்டு பல்லாண்டே யெனப்பாடக் கேட்டருளி
மல்லாண்ட திண்டோளின் மணிவண்ணன் மகிழ்ந்தனனாற்
செல்லாண்ட கைச்செழியன் சித்தபர மாரியனே!
நல்லாண்டா னெப்பொருட்கு நாரணனே யெனத்தெளித்தாய். (௮௨)

என்றிறைஞ்சி யாழ்வாரை யினியிலருள் பெய்திடத்
சென்றுகிழி யறுத்தபிரான் வில்லிபுத்தூர் சேர்ந்தவிரை
யொன்றுமலர் தொடுத்தணியும் பணியொருவா துடையாற்கு
நன்றுபுவித் தனாசாளு நந்தனமும் வளர்த்தேத்த, (௮௩)

வளர்த்துவரு நந்தனத்தின் மண்மகளோர் பெண்மகளாய்
விளக்குமுறத் துழாய்மூல மேவினதோ ராற்றிடைக்
கிளக்காண்டி விக்கலியி லாடிமதிக் கேற்பூரத்
தளக்கரிய தேர்க்கொள்பெரி யாழ்வார்கண் டகமகிழ்ந்தார். (௮௪)

வேறு.

பெண்ணைக் கரத்தின் பிசைந்தாக்கிப் பேணிக் கொடுபோய்த்
தமதில்லி, லன்ன மூவத்திருக் கோதையெனு நாமஞ் சாற்றி வளர்த்
திடநா, ளெண்ணால் வட்டத் திரசாப்க் காழ்வார் தொடுக்கு மணமாலை
வண்ணக் குழலி லணிந்தழகி தென்னவைப்பா னடவரலே. (௮௫)

* ககபதி - பக்ஷிராஜன், † விடங்கம் - அழகு. ‡ சடங்கம் - ஆறங்கம்.



நாளு மிந்த வாறுபுரி நங்கை செயலை யாழ்வாரோர்
நாளி லுணர்ந்தில் வாறியற்ற நங்கா யடுக்கா தெனமொழியக்
*கோளி றுயில்வார் பெரியாழ்வார் கனவிற் போந்து கோதைகுழ
லாளுங் கோதை யேவிரும்பி யணியுங் கோதை யெமக்கென்றார். ( )

கேடிக் காணுப் பரம்பொருளைச் சேர்த்து கனவி லிந்தவுரை
பாடிப் போந்த திம்மங்கை பெருமை யறிய வரிதென்றே
சூடிக் கொடுத்தா ளெனும்பெயருஞ் சூட்டிப் போற்றச் சின்னாளிற்
கூடிற் றெக்க யௌவனமுங் கோதை யாரை யாழ்வார்தாம். (௮௭)

எவர் நமக்குக் கணவரென வினையுமுள்ளம் யாமந்தப்
†பாவ முனைா வுரைமினெனப் பகர்வார் மனிதர்ப் பற்றில்லேற்
றேவ தேவன் மணிவண்ணன் றிருமா றனக்கே யெனையளிக்க
லாவ தென்ன வெப்பதிவி லமர்வா னென்று னெனக்கேட்டார். (௮௮)

பொருந்துந் திருமா றலங்களைத்தும் புகல்க வென்னப் பெரியாருந்
திருந்து மங்கை யுரைப்படியே செப்ப மாது செவிக்குணவா
யருந்தும் பொழுதி லணியரங்க விபவங் கேட்டங் கதனாளி
யிருந்த பரிசை யுணர்ந்தெவ்வா றியையு மிதுவென் றெண்ணினரால்.

அந்தத் தினத்தி னள்ளிரவி லாழ்வார் கனவி லரங்கமுதல்
வந்தோப் பரிய நின்மகளாங் கோதை மாதை மணம்புரியு [ந்தன்
முந்தோப் பனையோ டப்பதிக்குக் கொணர்வா யென்ன மொழிந்தி
சொந்த வடிமைச் செயலினர்க்குஞ் சொற்றார் கனவி லமைத்திவெர்.

பெரியார் புலரி யெழுந்திரவிற் பெருமா னுரைத்த வுரைகடமக்
குரியார் பக்கல் விதந்தோதி யொளியால் விளங்கும் புவிமகட்குப்
புரியா நின்றார் மணவணிசில் போதி லரங்கர் பரிசனங்க
டிரியா வரிசை பலதாங்கிச் சென்று கண்டா ராழ்வாரை. (௯௧)

கண்டு பெருமா னியமனத்தைக் கழற வாழ்வார் மகிழ்மிக்குக்
கொண்டு வடத்திற் றுயின்மாய னருளுங் கூடக் கோதையையெண்
மண்டுஞ் சிவிகை மிசையேற்றி மன்னு மியமா தியமுழங்க
வண்டு பாடுந் துழாயரங்கன் வாழு நகரம் வந்தடைந்தார். (௯௨)

* கோளி - ஆல். † பாவம் - அபிப்பிராயம்.

வந்தா ரரங்கன் றிருத்தளியில் வழுத்து மழகார் மணவாளன்
செந்தா மரைசேர் துணையடியிற் சென்று வணங்கி நிற்கவெழில்
சிந்தாக் கோதை மணவாளன் றிருமுன் சென்று மறைந்தருள
முந்தா நரத்த வாழ்வாரே முதலோர் காணூஉ வியந்தனரால். (௯௬)

அப்போ தரங்க ருச்சகரா லாழ்வார் மாம ஞர்முறைமை
யிப்போ தாறு செயக்கென்ன விசைத்து மாலை முதல்வரிசை
கைப்போ தகத்தி லளித்துவிடை கழறக் கொண்டு பரவசரா
யொப்போ தரியார் புதுவைநக ருடன்வந் தவரோ டடைந்தனரால்.

அடைந்து தாமத் திருத்தொண்டை யயரா திப்பதி யென்ப தின்மேன், மிடைந்த வகவை யைந்துபுவி மேவிப் பரம பதஞ்சார்ந் தார், தொடங்கிப் பல்லாண் டெனநாலாற் றெழுபான் மூன்று சொற் றனர்பர், மடந்தை கோதை யாரொருநாற் றெழுபான் மூன்று வழங்கினர்பா. (௯௭)

உலகிற் சிறந்த திருமண்டங் குடியென் றுளதோர் பதியதனி
னிலவுங் கலியி லிரட்டநாற் றெண்பா றெண்பா னோராண்டிற்
பலனன் கலிக்கு மார்கழியிற் கேட்டை நாளிற் பராநாமன்
புலியும் வன்மா லையினமிசை மேவி யுதித்தா ரோர்புதல்வர். (௯௮)

பாரார் வியப்ப மறைமுதலாம் பலவாங் கலையு முணர்ந்துவிப்ர
நாரா யணரென் றொருநாம நன்னி யரங்க நியமனத்தாற்
சூரார் கந்த வனமொன்று நாமே யமைத்து மலர்கொய்தே
யோரார் பெரிய பெருமானி னிணைத்தாட் கென்று மிட்டுவப்பார். ()

இன்ன பெரியார் பத்தியதி விவைபுந் துறவு முணர்ந்தாசன்றோர்
நன்னர்த் தொண்ட ரடிப்பொடியென் றுரைத்தார் நாம நாரண னு
மன்னு பிரசா ருணப்பெருமை மாந்த ரறியச் செயவுளத்தி
லுன்னி நந்த வனத்தாழ்வா ருடனீர் பாய்ச்சு மொருத்தியின்பால்.

சால்விப் பிரநா ராயணரைத் தருமன் புடையா ராப்புரிந்தான்
மால்கொண் டவனை யவர்மருவி மகிழ்வுந் திடுக்கா லோர்நாளில்
வேல்கொண் டலவு விழிமடவாள் வேட்ட தளிக்குந் திறனிலராய்
மேல்கொண் டுற்ற வணங்கின்மன மெலிந்தா ரரங்க னோர்ந்ததனே.



மறையோ னொருவ னெனவடிவம் வாய்த்து தனது தளியிலுள
விறைசேர் கனகத் தொருவட்டி லெடுத்துத் தாசி யிலம்புகுந்
தொறைசேர் தொண்ட ரடிப்பொடியார் தந்த தென்று நுவன்றீய
முறைசே ருளந்தா ளாழ்வாரை முன்னி யிருக்க முயக்கினனால்.

வேறு.

அந்நிலையின் மற்றையநா ளரங்கர்திருத் தளியிலுளார்
பொன்னியற்று மொருவட்டில் போயிற்றே தெவர்கொண்டா
ரென்னவுற மிடைந்துருகி யெவ்விதிலுங் காணாராய்
மன்னியசீர்த் தொண்டரடிப் பொடியாழ்வார் மகிழ்தாசி. (௧௦௪)

மனைவயினிற் கண்டுவட்டி லுற்றவரோ டாழ்வாரை
வினையமெயல் புரிந்ததென்னே யெனவருத்த வவ்வருத்தந்
தனைவருத்த வரங்கோன் றசர்தமை வருந்தாதீர்
மனமெழுவா ரூழ்வார்க்கா மற்றதுசெய் தேதியாமே. (௧௦௫)

என்றுவின்னி யசரீரி யாயிசைக்க வந்தவத்தார்
நன்றுதெளிந் திறம்பூது நன்னிவிப்ர நாரணனை
யின்றுவிய தியாமிழைத்த பிழைபொறுக்க வெனத்தொழுதா
ரன்றரங்கர் திருவருளுக் ககமகிழ்ந்தே யாழ்வாரும். (௧௦௬)

மாதொருத்தி பால்வைத்த மையற்கயர்ந்து கழுவாயா
யோதுவிதிப் படிபுரிந்தவ் வும்பர்பிரான் கருணையினாற்
றுதலர்ந்த திருமாலைத் தனித்தொண்டு முன்னையிற்செய்
தாதரவால் வேதார்த்த மமைந்ததிரு மாலைப்பா. (௧௦௭)

திர்பெறுநாற் பானைந்துந் திருப்பள்ளி யெழுச்சிபத்து
மேர்பெறச்செய் தரங்கன்று ளிடைவிடா துளத்திருத்திப்
பர்பிலைசூழ் துறைத்தொண்டு பணியரங்கர்க் காற்றியபின்
றிர்விரிய பரமபதத் திருநாட்டிற் சென்றனரால். (௧௦௮)

வேறு.

செல்வமலி சோணாட்டுத் திருவுறந்தைத் திருப்பதியிற் றிருமா ன் மார்பில், னெல்லொலிய சீவற்ச நெடுமியச மொருமதலை யே யவச்செந் தாவி, கலிதோன்றி நிடைக்கலியின் முன்னுமூன் றா நாற்பத்து

மூன்றுமாண்டின், மல்கலங் *தேட்டங்கள் வருமுனோர் கனிகாளின் †மதலை தின்று. (௧௦௬)

உலகளிக்க வந்தருளு மொப்பிலார் வழியெல்லை யுதித்து மேவு, நிலவுதவத் தொருபாணன் றன்மனையோ டல்நெறியி னேரு மெல்லை, விலகுதயி ரிடைக்ககிரி னெழில்காட்டிக் குழவியைக்கண் டெடுத்து வந்தே, சுவசிகர் முகத்துணைவி காதலிக்க வவண்மகிழ்ந்து தாங்கிப் போந்தாள். (௧௦௭)

இருவருந்தாம் வதிசேரி யிடைப்புகுந்த பின்னல்லை யெழின் மைந் தாக்குப், பருகமுலைப் பாலளிக்க மைந்தருஞ்ஞ தந்தவுபசுப் பாலே யூட்டத், திருவமிக வளர்ந்துயர்வா ரோதாதே யனைத்துமுணர் திருப்பா ணாழ்வார், பெருகுபுனற் காவிரிப் புகுத்தாடித் திருவரங்கப் பெருமாள் மேவும். (௧௦௮)

ஆடகத்தி னொளிவிசும்பை யணவிப்பெறும் விமானத்தைப் பணிந் தேத்தி, மாடஞ்சேர் யாழ்வருடி விஞ்சையருமதிசயிக்க மாயோன் சீர்த்தி, பாடியுளங் கசிந்துருகி மயிர்பொடிப்பக் கண்ணருவி பாய்ந்து, நீடெழில்செ யடலணைப்பப் பரவசரா யசைவின்றி நிற்பர் மாதோ. (௧௦௯)

இவ்வண்ணம் வைகறையுங் காவிரியி னீராடி யிசைசேர் யாழுக் கைவண்ண மலர்க்கொண்டு திருவரங்கன் புகழ்பாடிக் களிக்குநாளின் மைவண்ணத் திருமாலு மலர்மாதுங் காணவிச்சை மகிழ்ந்து கேட்டா ருய்வண்ணந் தொண்டுசெயு முனிலோகசா ரங்கமுனிக் கோரிரவில்.

கனவிடைநம் பெரியபெரு மாடோன்றிக் காவிரிமாட் டெனுநிட் பாடு, மனமுருகு நம்பன்பன் பாணனவன் றனையேற்றி வருக வென்மு, மினமலர்வாய் மலர்ந்தருள வுணர்வாசா ரங்கமுனி யெழுந்து காலே, புனைவனத்துள் திருக்கோயிற் புகுந்தருளைத் திறம்பார்க்கும் புகன்றுன மன்னே. (௧௧௧)

இத்திறங்கேட் டதிசயிக்கு மேலோரை மம்முனிவ னெழுந்து பொன்னித், தத்துமலைக் கோடீணர்ந்து திருப்பாணர்க் கரங்கரிய மனத்தைச் சாற்றி, யெத்தவம்பா னரிந்தனன்கொ லிப்பணிக்கெ





ன் றாழ்வாரை யேற்றித் தோளின், முந்தித்தரு திருவரங்கன் றிரு முன்னர்க் கொடுபோந்து முறையி னுய்த்தான். (௧௧௨)

அரவணையிற் றிருக்கண்வளர்ந் தருள்பரம புருடனைக்கண் டன்பிற் பல்கால், பரவிவிழுந் தெழுந்துநின்றெம் பெருமானார் திருமேனிப் பண்பு நோக்கி, வரவமல னாதிபிரா னெனவெடுத்து மாண்பு பெற மலர்மென் வாயால்*, விரவிவர வாபாத முடமொரு பாப்பத் தால் விளம்பிப் போற்றி. (௧௧௩)

வேறு.

அங்குளார் பலருங் காண வாழ்வார்தென் னரங்கத் தெம்மான்
மங்கள மேனி புக்கு மறைந்தனர் மலரின் மாரி
புங்கவர் சொரிந்து நின்றார் புராணமாப் புருடற் பாடி
யிங்கிவர் புவியில் வாழ்ந்த திருபதாண் டென்ப மாதோ. (௧௧௪)

வேறு.

நீர்வளம் பொலிபொன்னிச் சோணாட்டின் றிலதமெனத் திகழ்ந்துமாலி
காடுதனிற் றிருநகரிப் பதிக்கிறைவ னானென்பா னொருமன்பு
கூடுவள வன்சேனைக் கதிபதியாய்க் குலவலைகள் கொழித்து முத்த
மாடுசெறி தடமன்னித் தென்பாலை மணிமாடமங்கை வேந்தாய்.

தேமருவு துழாயலங்கற் றிருமாலுக் கடிமைபுரி திறந்து நீல, நாமமுறு மொருசதுர்த்தன் புரிதவத்தா னளினமிறை தாங்கு சார்ங்க, மாமையுறு மமிசமொரு கான்முனைய பிரண்டொழிய மன்னு நாளா, ருமகவை தனிற்கலியிற் கார்த்திகையிற் கார்த்திகைநா ளெழுகுற் றோங்க. (௧௧௬)

திசையோங்கப் புவியில்வனுஞ் செழித்தோங்க வறமோங்கத் திருமால் பாத, மிசையோங்கு மன்பர்மன மிகவோங்க வந்தணர்க ளோதும் வேத, விசையோங்க வானவர்க ளிறைக்குமல ரோங்கமலை னவெங்கு மோங்க, நசையோங்குந் தந்தையுள நனியோங்க வுதித்தந்த நாளின் மன்னே. (௧௧௭)

மகவுதிக்க நீலனெனப் பெயரளித்து மறையவர்க்கு வழங்கிச் செம்பொன், மிசவுவப்பத் தானதயின மதியமெனத் திருமகனார் மே

ன்மே லோங்கித், தகவுநுமைக் தகவைப்புறக் தமிழ்மையிற் கணத்
தோடு தாமரை துன்னப், புகவுணர்ந்து தமக்குரிய பொருபடையின்
திறமுற்றும் போதக் கற்றார். (ககஅ)

தந்தையெனு நீலனுமப் பிளைச்சாரச் சோழன்பாற் றுனை வே
ந்தாய், மைந்தனர் றூகிறுந்த மதின்மங்கைப் பதிக்கரசா யமைச்
சர் நால்வர், சிந்தனைவிற் றேர்ச்சியுளா ருடைக்குறைய வாடன்மாச்
செலுத்திந் தெவ்வர், வெந்திறலை யொழித்திடலாற் பரகால னெனு
நாம மேவி னரால். (ககக)

விதுவனைய மலர்ச்சோலைத் திருநாங்கைத் திருவெள்ளக் குளத்
தின் மேவு, மதுவிரியு மலர்வாவிச் செங்குமுத மலர்மாட்டிடம் மா
யோ ளேன்வப், புதுவெழிலார் குழவியெனப் புத்தேன்மா தொருத்
தியுறப் போந்தாங் குற்ற, முதுவைசிய னெடுத்துமனை கரத்திந்து
*முதமுற்றுன் முனை கோண்பான். (கஉ0)

மகள்வடிவத் தாய்கோக்கி மகிழ்ந்துவளர்த் திடவாரு மாது மா
ங்கே, தகவுதரு மணப்பருவந் தனைமேவ யார்க்களிக்குந் தகையெ னெ
ன்ன, மிகவுமனத் திடைநாடித் தந்தைதாய் கவற்றிடுமவ் வேலை
தன்னில், விகல்கடிந்த பரகாலற் கிசைத்தனர்பல் லோரிம்மை யிப்பந்
கை தன்னை. (கஉக)

மாதிபற்கை திருச்செவிபிற் புகுமளவின் மங்கையர்கோன் மகி
ழ்ந்து காண, பீதிவரும் பெருவிழைவால் வேங்கடமா லுறைவெள்
ளக் குளத்தின் மேவித், தாதியலு மலர்க்கணைவே ளெனவென்றிக்
கொடிகோராத் தயங்குமாம்பற், போதில்வரு மடமானை யுயிர்வாய்ந்
த வோவியத்தைப் பொற்பக் கண்டார். (கஉஉ)

முக்கோலுங் கற்பாக்குங் கமண்டலமுங் கொண்டிடைய முனிவ
ரேனும், மிக்கோல மகட்காணி லென்புரிவ ரருந்தவமே யியற்றும்
யோகர், செக்கோல மனக்கதவந் திறக்குமவ்வி பெற்றுடைய செய்
ய கோலோ, வக்கோலக் கடலுலகி லங்கனர் செங்கோலோ வறியே
மென்றார். (கஉங)

* முதம் - மகிழ்ச்சி.



முத்தனைக் கரியகுழன் முழுமதிகேர் திருமுகத்தின் மானைத
முன்னி, லத்தனைய மங்கையரு மாடவராக் தன்மையிலை யென்னனி
னோற்பா, ரித்தகைய திருமகனிற் செவ்வண்ணக் கிடைத்தனளொன்
றிசைப்பத் தாதை, புக்கமுதத் தடவிலேனார் குமுதமல ரிடைக்கி
டைத்த புதுமை கூறி. (கஉச)

வனையாதி புயத்தேந்தி பூர்த்துவபுண் டரந்திட்டி மால்பா லன்
பே, புனைநுபி யவனடியார்க் கோதனமா தியவளிக்கு மொழுக்கி
னுற்றிவ், விளமாதர் மனையாவ ளெனுநியம முடையோனொன் றிசைப்ப
க் கேட்டே, புனமுழுமகிழ்க் குறைய நார்க்களிய வன்னவனை முறு
வ லென்ன. (கஉரு)

மெய்க்குரவன் றனையடைந்து விதிமுறையாற் பணிந்தேத்தி
மேவு சங்க, சக்கரலாஞ் சனராகிக் குமுதமல ரிடைப்பிறந்தா டா
ளை பால்வந், திக்குமதி மொழிமுகத்துன் மனனியம மெமக்கியைந்த
தியாமே கொள்ளத், தக்கவளம் படைமனைத் தருதியனை விழைமுழுக்
கத் தாழுகை யென்றார். (கஉசா)

அதற்கிசைந்து மலர்மகளை யவளளிக்க வதுவைவிதி வழுவா
தாற்றி, மதிற்குமிழை வடிவுடைய மனைமகளோர் மனைவியொடு மற்றந்
நூழ, *வதக்காவைக் கிறைதரு மொப்பரிய செல்வமங்கை யூர்வந்
தெம்மால், பதத்தார்வ முறப்பணிந்து வைப்பொனு மியற்றிநிதம்
பவனந்த சார்ந்தார். (கஉஎ)

வேறு.

குமுத வல்லி கொழுநப் பெருமுதனா
கமுத னுரை வற்றெண்ட ராயினர்க்
குமுத மெய்தக் கொடுத்தன் றிவைகளு
மமுத மேறு மருந்திலை யென்றனள். (கஉஅ)

நங்கை வாய்மொழி நம்பி நயந்தரு
டங்கு மாயவன் றொண்டப ராயினர்
துங்க வேதியர்க் கோதனந் தோயிலா
தங்க ளுறு மகமகிழ்ந் திட்டனர். (கஉகூ)

* உதக்காவைக்கிறை - வடபுலக்கோன் (குபேரன்)

இன்ன வாற்றி னிலங்கிழ் வெய்துநாட்
சென்னி மன்னன் பகுதி செலுத்தில
ரன்ன தானத் தமையு நிதியெலாந்
துன்ன வேசெல விட்டனர் சோழனும். (௧௩௦)

நின்ற தூதரை நேருற நோக்கிநீர்
சென்று நந்திறை சேனைக் கதிபனு
மொன்று நீல னுதவிலன் வாங்கியே
பின்று வம்பி னெனவவர்க் கோதினான். (௧௩௧)

காலிற் காலிற் கழிந்திய வேவலர்
வேலில் வீரம் விளக்கிடு மங்கைமன்
பாலி னெகிப் பகுதிப் பணமதை
நீல மேவச் செலுத்துதி யென்றனர். (௧௩௨)

தூதர் மாற்றந் துனைச்செவிக் கேற்றனர்
யாது மன்பன மென்வயி னின்றதீர்
போதி ரென்னப் புகன்று *படர்க் கொடு
மோதி மின்னை மெய்ப்பது நீர் தகவுறை. (௧௩௩)

போன தூதர் புகன்மொழி கேட்டது
மான சிற்றத் தரச னணித்தனா
சேனை நாத னெருங்குற்றுத் தேர்முத
லானை பாய்பரி பாய்படை கொண்டுமே. (௧௩௪)

ஆடல் மாவல் லும்பர காலனைக்
கூடி வென்றுகைக் கொள்வமென் றேகித்தன்
னாடு தாண்டித் தன்னெல்லையுடன் போர
கோட மங்கை வளநகர் முற்றினன். (௧௩௫)

மன்னன் சேனை வளநகர்ச் சூழ்தலு
மின்னு வாள்கர வேலிக் கலியனு
முன்னு மந்திரர் நால்வ ருடனாடைத்
துன்ன வாடற் பரியிசைத் தோன்றியே. (௧௩௬)

* படர் - கவலைகள்.



ஏற்றுச் *சென்னி யெதிரி லவன்படை
தோற்று மோடத் துணித்துத் தம் வாளிறை
கூற்று மென்னக் குலைந்திற மோர்ந்தொரு
மாற்ற மோதுவன் வஞ்சகங் கொண்டியன். (௧௩௭)

வெற்றி கொள்பர கால வியந்தனை
முற்ற நின்னுடை †யோதனந் தன்னையா
னிற்றி போரொழி கெய்க்கொண் முன்னையிந்
சற்று மஞ்சலை சாருதி நம்பதி. (௧௩௮)

என்று கன்னி யிசைத்திடு பொய்யுரைக்
கொன்று பட்ட வுளத்தொடு முன்செலச்
சென்று மன்பதி சேர்பர காலரை
யன்று தன்றிறைக் காக்கினன் காவலே. (௧௩௯)

காவ லிற்பர கால ரமைந்துழி
யோவ லின்றி யுருற்றன்பர் பூசனை
மேவு மூத விதமெண்ணித் துன்புளம்
பாவ லாளுள வுண்டிலர் பத்தர்தாம். (௧௪௦)

ஆம் காலையி லத்திகி ரிப்பதி
மேய பேரரு ளாளர் விமலர்தா
மேய மங்கைக் கரசர் நிலைதெரீஇப்
போயோர் மாற்றம் புகல்வர் கனவிடை. (௧௪௧)

மிக்க பத்திமை மேதகு நோன்மையே
தக்க செல்வ மெனக்கொளுந் தன்மையாய்
புக்கு நந்தளிப் பக்கற் பொருள்கொளீஇத்
தொக்க துன்பத் துடைத்தியென் றேகினார். (௧௪௨)

ஓது சொப்பன மோர்ந்தெங் கலியனார்
மாத வன்செயற் குள்ள மகிழ்ந்தியான்
கோதி லும்பரன் சொற்படி யென்னிறைசெய்விர்
போது மெம்மொ டென்புகன் றேகினார். (௧௪௩)

* சென்னி - சோழன். † ஓதனம் - போர்.



REGISTERED 14 DEC 1910

பொருவின் ஞானப் புரவலர் முன்செல
மருவு காவல்செய் வார்கள்பின் சென்றிடத்
திருவ மேவிச் சிறப்புறு கச்சியி
லொருவன் பேரரு ளாள னுறைதனி. (கசச)

மன்னிப் போற்றி வலங்கொடு மாவுடன்
பொன்னி றப்பெருந் தேவி புனைகழற்
சென்னி கொண்டு திருந்த வணக்குப
பன்னி யேத்தினர் பற்பல வாறரோ. (கசரு)

எந்தை யேயுல கெங்கு நிறைந்துளாய்
பந்த நீக்கும் பரம்பொரு ளேயெனச்
சிந்தை முற்றத் தெளிந்தவ ரோதுநின்
கந்த முந்து கழற்கு காக்கென. (கசசு)

அறைந்து போரு ளாள ரருளினான்
மறைந்து றைந்த நிதிகொண்டு மன்னனுந்
பறைந்த தாகும் பகுதி யடியர்கை
நிறைந்து மேவ நிரப்பிமற் றெஞ்சிய, (கசஎ)

செம்பொன் கொண்டு திரும்பித்தம் மூர்புகுந்
தும்பர் நாத னடியவர்க் கோதனம்
பம்பு மன்பிற் பரவி யளித்தனர்
வெம்பு காவலர் வேந்தன்மு னெய்தியே. (கசஅ)

வாங்கி வந்த வளநிதி யாவுமன்
பாங்கர் வைத்துப் பணிந்து நடந்தவவ்
வோங்கு மற்புதச் செய்கை யுரைசெய
வீங்கு காவிரி வேந்தன் வெரீஇ யெழீஇ. (கசகூ)

அன்ன பொன்றே டளவில் பொருள்கொடு
மன்னு மங்கையர் கோன்முனம் வந்துநின்
றென்னை யாளுதி யென்றிறை யாற்றியபி
பொன்னே யேற்றெனப் போற்றி வணங்கினன். (கரு0)



ஈனக்கு மன்னர்க் கருள்செய்து மங்கைமன்
மனக்கொ ளாம்பல் மலர்வரு மின்றிடே
யினங்கு வேதிய ராயிரர்க் கேற்றன
குடங்கொள் பூசை முறைவழு வாறுவான். (கருக)

வேறு.

கைப்பாலி னன்ன பொருளைக மன்னர் கவர்கொண்ட பொருளை வவ்வி, மெய்ப்பாலி னருளு மவர்கொள்ள வீதல் விதியென்ன வோது நூலின், செப்பாரின் மங்கை புரைவாக்க முன்ன முறைமுன்னி நிறன் மறைவான், அப்பான தாளு தவளீர் கடப்பன் றெலாத வல்வ முதகன். (கருஉ)

எனவேர்து காக்கு மதிநீத ரமைச்ச ரிவரோடு கூடி வழியின், மனமே யிரக்கி யளிபாரை மாலின் மதிமேவு தன்மை யிலரைத்,தின மோடு குக்கி நிதிகொண்டு செம்மை செறிபாக வதர்கள் பூசை, தினமே புரிந்து வருநாளொர் வைகல் செல்வோர் வருந்தி லரால். ()

பரிகின்ற தின்னு பகலென்ன வென்று புணர்பொன்று கொண்டோ தில்லின், விரிகின்ற சொல்லின் வரிசை மறைக்கொர் விதுவென்ற ராதவி தைவிடு, தெரிகின்ற வென்பொன் வளமொன்று கண்டு திருநாம நாகமி லினரிச், கரிகின்ற கூகர வெனவள்ள மங்குந் தெரா டரங்கை வவ்வு பொழுதில். (கருச)

அப்போது தன்செம் மலைமேல் பொன்கை யமர்வள்ள மன்ப ளிரியா ளிப்போது கொள்ளு கவியுற்ற தான தெனவொளி நின்ற மொழிகேட் டொப்பற் றிலாத திருமங்கை மன்ன ருளுபாக வருந்த டனைப *மொய்ப்பேடு கோர மெனகல்கி மீள னுற்றாற் சிறக்கு மதியார். ()

வள்ளத்தை யீந்து மதிநீத ரமைச்சர் வரதல்வர் காட்டு வழியே, யுள்ளாத்தி னெள்ளி வருவாரை நோக்கி யுறுகின்ற போழ்தில் மாயோன், † வெள்ளத்த பூவி லுறைவாரை மங்கை வேந்தா ருப் விக்கநிலையாக், கள்ளுற்ற சோதி மலைமங்கை மேய் கன்னியன்று வணிக டாங்கி. ()

* மெய்ம்பேடுகோரம் - உலகமாகிய மாப்படல். † வெள்ளத்தருவி லுறைவாரை - கடலையுடையபூமியி லொதுக்கின்றவர்களை.

வேறு.

தேவர்கள் சூழ்ந்து போதச் செகத்துமா னிடத்தை மேவிப்
பாவன ராகி மங்கைப் பதியுளார் வழியுங் காணி
லாவதோர் வழியீச் செல்ல வாடமா வலவர் நோக்கி
யெவரோ வருகின் றார்க ளெனமகிழ்ந் தாய்ந்து நால்வர். (கருஎ)

மந்திர ருடனே சென்று வழிவரு மவரை நோக்கி
யெந்திட மேகு கின்றீ ரேகன்மி னின்மி னென்று
முந்துற வுறுக்கி நுங்கள் முழுவிலைப் பணிகள் முற்றுந்
தந்திடு கென்று கேட்கத் தருதலும் வாங்கி யாழ்வார். (கருஅ)

பொற்புறு பேழைப் பெய்து புதம்பதை யெடுக்க வாரா
வற்புத நோக்கி யென்னே யசைத்தில திந்த மாய
விற்பனச் செய்கை செய்தான் வேறில னிவனே யென்றுந்
தற்பரன் றன்னை நோக்கிச் சாற்றென்மந் திரஞ் செய்தாய். (கருகூ)

என்றுகேட் டவளின் வாளை விருத்தலை நோக்கி வாளா
வின்றுனைக் கேளிலு கிற்ப விசைத்துநீ விரைந்தென் றேத
மன்றலந் துளபத் தெம்மான் மங்கைமன் செவித்த லத்தே
யன்றருள் புரிய வட்டாக் கரமெனு மனுவை யம்மா. (கசுo)

மந்திர மெவைக்கு மேலாய மனுதிருச் செவியி லேற
முந்தநாங் குருவாற் பெற்ற முதுமனு விதனை யென்னே
நந்தயாள் சமைய மென்ன நாடுதற் கியைபொன் றில்லா
விந்தமா னுடனு ரைத்தா னெனக்கலி கன்றி யாரும். (கசுக)

மனத்திகைக் கின்ற காலை மறைபுகல் செங்கண் மாலுங்
கனத்திரண் டனைய வைம்பாற் கமலையா ருடனே விண்ணிற்
றினஞ்செயுங் கதிரின் மிக்க சேயொளிக் கலுழ னேறி
யினைத்தரு தேவர் சூழ வெதிர்வந்து காட்சி தந்தான். (கசுஉ)

கண்டனர் காணுக் காட்சி கரைகடந் தன்பின் வெள்ள
மண்டிமேக் கெழுந்தா லன்ன மலர்க்கணீர் சொரிந்து செங்கேழ்
முண்டக மலர்த்தாள் பலகான் முறைமுறை பணிந்து போற்றி
யண்டர்கட் கரசே யோராவடி யெஞ்செய் பிழைகள் பாற்றி (கசுங)



ஆண்டரு ளென்று போற்றி யண்ணலைக் கமலை யாளை
மூண்டெழு பரம ஞான முதிர்தர மூல மான
மாண்டரு மனுவா மட்டாக் கரப்பொருள் வாய்ப்பக் கண்டே
யீண்டொளா ருய்ந் மாறெங் கலியனு ரிசைப்பா ரானார். (கசுச)

வாடினேன் வாடி யென்று மங்கையர் திருவாய் விண்டு
பாடினின் றேத்து மெல்லைப் பராற்பர னுரு மெய்மான்
கூடுதன் றிருக்க னெரக்கன் குறைவறப் புரிந்தெம் மன்ப
வாடன்மா வலனே யாம்பல் வல்லியோ டளவ வாவி. (கசுரு)

நற்றிருப் பணிகள் செய்து நான்மறைப் பொருள்கள் முற்றுஞ்
செந்தமிழ்ப் பாவா லோதித் திகழுமெஞ் சமைய நாட்டி
யிந்தநன் னிலத்திற் கின்று மிருத்துபின் னெமது வீடு
வந்தமீச ரென்று மறைந்தனன் கருணை வள்ளல். (கசுசு)

மாயவன் மறைந்த பின்னர் மங்கையூர்க் கரசு முன்போற்
றாயதா மறுக்கர் பூசை சோர்வின்றா தாற்றி விண்ணிற்
சேயொளி செய்வி மானஞ் சேர்திரு நகரி யெம்மாற்
காயகத் துறிபு துக்கி யக்கர் வைவிச் சென்றான். (கசுஎ)

வேறு.

அரியமது திருவனை வசலத்தான் முனைக் கூறும்
பெரியதிரு மொழிமுதலாம் பிரபந்த மினிதோதிப்
பொருவரிய திருப்பதிகள் புக்கிறைஞ்சு மவாவினராய்
விரிபொழில்சூழ் காழிநகர்ச் சீராம விண்ணகரில். (கசுஅ)

நிலவுதருங் குடைகவிழ்மி னிரப்புமொலித் திருச்சின்னம்
பலவிசைப்ப காலுகையிப் பரகாலர் போந்தாரென்
றலகறிய மாந்தர்முன் னேதவொழுக் குருள்போதித்
தலைமைகொடு திருஞான சம்பந்தர் தந்திருக்கால். (கசுகூ)

தடித்துவரும் புகலியர்கோன் றனக்கவியால் வெல்லையர்
கடத்திடன் மாலலீர் காலுகையிப் பெருமானென்
றெடுக்குரைக்கும் பெருமங்கை யிசைபுகல வேத்தப்போய்த்
தொடுத்ததுபாய்த் தாடாளன் றுணையடியின் பொடிதாழ்ந்தே. ()

ஒருசுநாமாவென்றெடுக்கே யொக்குந்தமிழ்ப் பாமாலை
விரியுமறைப் பொருள்விளக்க விளம்பியந்தப் பதிநின்று
பொருவரிய தொண்டர்குழாம் புடைசூழப் பொன்கொழித்தே
யிருமருங்கும் காவிரிசூ ழெழிலரங்கப் பதியணைந்தார். (கஎ௧)

திருவரங்கத் தரவணையிற் றிருக்கண்வளர்ந் தருள்வானைப்
பெருவரங்க ளளிப்பானை மணவாளப் பெருமானைக்
கருவரங்கிற் புகாவண்ண மடியவரைக் காப்பானை
யொருவரங்க முகந்தானை யுயருமன்பு கொடுபணிந்தார். (கஎ௨)

பணிந்தரங்கன் றிருத்தாட்குப் பண்ணிசைசேர் பாமாலை
யணிந்துயல வானுஞ் மங்கள்வா யமர்தாளிற்
றணிந்தமதிற் கோபுரமண் டபமாதி செயவுள்ளந்
துணிந்துபொருள் சேகரிப்பான் மந்திரியொடு சூழ்ந்து. (கஎ௩)

அலைகடற்சூழ் திருநாகைப் பதியணைந்தங் கமர்ந்தொழு
வலம்கொளா துனிதுறையு மழவியார் புகழ்பாடிப்
புலவுதிர்ந்த பவுத்தர்தமிப் பொருந்தாழி யெந்திரத்தை
நிலவுமதி புகுந்தா னிலைநீக்கி யாங்குள்ள. (கஎ௪)

பைம்பொனு லமர்விம்பம் பலகவர்ந்து தென்னரங்கத்
தெம்பிரான் றிருக்கோயிற் கிலங்குமதின் மண்டபமோ
டும்பர்செலுங் கோபுரமு முயர்பணிக ளநேகப்பலவும்
பம்புமலர்ப் பொழிற்குறைப் பரகாலர் புரிந்தனரால். (கஎ௫)

பொன்னினியற் றருவனைத்தும் போயொழிந்த தறிபுத்தர்
சென்னிமுனம் வந்தெய்தித் திருமங்கைக் கோன்கொணர்ந்து
மன்னவவெங் கடவுளரை மன்னு *சிவை யறுத்துருக்கித்
தென்னரங்கப் பணிபுரிக்க திறங்கேட்க வெனவுரைத்தார். (கஎ௬)

அவ்வுரைகேட் டாழ்வாரை யரசெதிர்ந்து சாக்கியர்சொல்
லிவ்வுரைக்கென் னிபமென்ன யான்கொணர்ந்து புரிபணியாற்
றெவ்வடுதோட் செம்பியனே ரியமுதச் சிவரருக
கவ்வையறத் தியாகதிலயக் கரன்றுயரென் றெனராவ். (கஎ௭)

---

* சிவை - உருக்குலை.



அன்னவுரை செவிப்புகுது மாவிலபுத்தர் மிக்கனன்றே
யென்னையிவர் பொருள்வவ்வி யெமதுமதந் தினைத்தாழ்வுஞ்
சொன்னவிதமெனக்கேட்கச் சோழனிடந் தாழ்வாரு
மன்னுமிவர் மீதப்பண்பு நமதுமத மாண்பினையும். (கஎ௮)

நீதிபுரி யரசிருவே நிகழ்த்தகுதி நீயிளனே
யோதுதிற னீயாய்வா யெனவுரைக்கப் புத்தர்களு
மீதுபுரி வோமென்று தங்கண்மதத் தியல்புரைக்க
வாதிலவ ருரைமறுத்து யாதவனே பரமென்று. (கஎ௯)

மங்கையர்கோன் றனதுவிசிட் டாத்துவித மாண்புநிறீஇ
யங்கவரை வென்றிடவு மவர்வெள்கிப் புறம்போகச்
செங்கதிரின் விழித்தோன்றல் சிந்தைமகிழ்ந் தாழ்வார்க்குந்
துங்கநிதி பலவளித்துத் தொழுதகல திடம்புகுந்தான். (க௮0)

மேதகைய மங்கையர்கோன் வேறுபல பணிகளும்பின்
சோதிமணி மார்பினர்க்குத் தொழுதுபுரிந் துறைநாளி
லோதுதிருக் கார்த்திகைநா ளுறவிழவிற் றேவியரோ
டாதிமறை புகழ்பெருமான் மஞ்சனங்கொண் டருள்காலை. (க௮௧)

புக்கிறைஞ்சிப் பரம்பொருளை பொருவிறிருக் குருகூர்வாழ்
தக்கவகு ளாபரணர் தமையிலங் னெழுவித்துத்
தொக்கதனு மதிபக்கஞ் சுக்கிலசே காதசியின்
மிக்கவிசை வேதமுடன் விளங்குதமிழ் மறையினையும். (க௮௨)

திருச்செவிக்கேற் றருள்கவெனத் திருமங்கைக் கோன்பணிந்து
பெருந்தொழுமன் போடுவேண்டப் பெரியபெரு மானுமனு
கிருத்துவப்பே யெமக்குமெனக் கலிகன்றி யாமகிழ்ந்தே
யருத்தியொடு பரமபதத் திருவாயி லமைத்தொன்று. (க௮௩)

ஆக்கெழில்கொள் பரமபதக் கம்மானைப் பதிட்டைசெய்து
நீக்கொழித்துக் கதியளிக்குந் திருக்குருகை மாறனைமே
யோங்காரக் கர்க்கைபூவித் தத்தியய ஞெற்சவத்தைப்
பாக்குபெற வேயொருபான் பகலட்டித் தமிழ்வேதம். (க௮௪)

ஒருபதுநூ றென்னணைந்த வொப்பில்திருப் பாசுரத்தைத்
தருமுறையிற் சாத்துமுறை செய்வித்துத் தாமாமல்
வருமாண்டோ வொன்றினுமிவ் வாறியற்று மாப்பிரித்து
திருமால்சேர் பதிதொழச் சென்றனர்நம் மங்கையர்கோன். (கஅ௦)

சென்றுபதி பலபணிந்து தேவர்மலர் தூய்ந்தாரு
நன்றுதொழ வருள்புரியு நம்பிதிருக் குறுங்குடிபுக்
கொன்றுபடு மனத்தினரா யுயர்ப்பமத் துறைமுகுந்தன்
றன்றுணைய குருமலர்த்தா டொழுது தாழ்ந்தனரால். (கஅக)

தாழ்ந்தெழுந்து சில்நாளத் தலத்திருந்து திருமாற்குப்
போழ்ந்திருளை யொளிவிரிக்கும் பொன்மதின்மண் டபமியற்றி
யாழ்ந்திடுமெய் யறிவார்த்த வாழ்வார்நாற் றைந்தாண்டிற்
சூழ்ந்துபர முத்தரென்றுந் தொழுந்திருநா டலங்கரித்தார். (கஅஉ)

வேறு.

பெரியதிரு மொழியோரா யிரத்தோடொன் பானூற்றைப் பிறக்கு
பாக்கு, ளரியவெழு கூற்றிருக்கை யொன்றுநெடுந் தாண்டகமா றை
ந்தா மெம்மாற், குரியகுறுந் தாண்டகமா லைந்தினைய மட்டமொடு மோ
திநாற்பான், பெரியதிரு மடலெழுபத் தெட்டுமங்கைப் பெருமான்
முன் பேசும் பாவே. (கஅ௩)

கக-வது ஆழ்வார் வைபவச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - கஅ௩.

# கஉ-எம்பெருமானார் வைபவச் சருக்கம்.

மன்னுதிரைக் கடல்புடைசூழ் வையமிசை வளமல்கு தொண்
டை நாட்டிற், பொன்னுறையு மருமத்துக் கேசவனார் மருவுபெரு
ம் பூதூர் தன்னிற், றன்னிகரா ரிதகுலத்தி லாசூரி கேசவப்பேர் சா
ருமவிப்ர, முன்னவர்க்கு நன்மனைப் பிராட்டிவயின் மாயனருண்
முதிர்ச்சி யாலே. (க)

கலியிரு லாயிரத்தோ டொருநூற்றி யெண்பான் கலக்கு
மாண்டில், வலிகெழுவு மேடமதி யாதிரைநா ளின்மிக்க மதியிற்
சீர்த்துப், பொலிபுமொரா யிரத்தலைய வரவரச ரவதரித்தார் புதல்
வ ராக, மலிமகிழ் வொடுதந்தை மறையவர்க்குப் பொன்முதல
வழங்கி னனல். (உ)

ஆறங்க நால்வேத மறிந்ததிரு மலைநம்பி யாங்குப் போந்து,
வீறங்க விலக்கணமுங் கமலமுகத் திருவழகும் வியந்து நோக்கிப்
பேறெங்கட் குளதிந்த வெழின்மகவா லெனவுரைத்துப் பெருக வெ
ண்ணி, மாறங்க விலாமைந்தர்க் கிளையாழ்வா ரெனுநாமம் வழங்கி
ச் சென்றார். (ங)

தந்தையார் புதல்வருக்குத் தருமுறையிற் சவுளமுப நயனஞ்
செய்து, சந்தமுறு மாறங்கஞ் சதுர்மறையு மோதுவிக்கத் தாமோர்ந்
தோதி, மைந்தனார் கலைபலவு முணர்ந்துமண வினைமுடித்து வாழ்நா
ளோர்நா, ளெந்தைதிருக் கச்சியில்வா ழேகதண்ட யாதவப்ர காசர்
ச் சேர்ந்து. (ச)

பொருளெளிதி லறிவரிய வேதாந்த நூலினுக்குப் பூர்வ பக்கந்,
தெருளுறநன் காய்ந்துவரு மிளையாழ்வார் தெரிந்துகோ விந்த பட்ட,
ரருள்புரிக வேதாந்த மடியேற்கு மெனவெதிரா லணைந்து கற்று,
ரிருவருமங் கோதவெதி பொருள்வேறு மொருசுருதிக் கிசைப்பக்
கேட்டே. (ரு)

எதுபொரு ளென்றுமென் றுரைக்கின்மறை யாதியநூற் கியை
வி ரோதம், போதவுள தெனவிரா மானுசனார் புகன்றனராக் காட்போ

யோர்தான், யாதவன்று மெதிகப்பி யாசமெனும் வாக்கியத்திற் கிசைய
பி தீதார், பேதவுரை சொலவலற்குத் தவிலபிடு மிளையாழ்வார்
பெருந்துன் புற்று. (௬)

வேறு

கன்வரு துள்ளி யாசான் கவானுற்று வெதுப்ப நோக்கி
யென்வரு துள்ளிக் கென்னே யியம்பென விளைய வாழ்வார்
மின்வரு முதய பானுக் கரங்களால் விள்ளுஞ் செம்மைத்
தண்மரை மலர்போற் கண்கள் சார்ந்துளான் பரம னென்ன. (௭)

செப்புமவ் வாக்கியத்தி னுண்மைக் கருத்திதெனத் திரித்துப் பாறு
விப்பொழுது துரைத்தல் கேட்டே யாள்வருந் தினமென்னோ தெ
வப்பெருமுனிவ னின்னே யுழப்பமெனம் மதமென்றுய்ந்தே
யொப்புறு சூழ்ச்சி யுள்ளத் துள்ளியோர் வினைமேற் செய்தான். (௮)

கங்கையில் வீழ்த்த வுள்ளங் கருதியவ் வூர்க் கோதித்
தங்குமா ணவர்கள் சென்று சாரவி யாதி மீள்வே
பிங்குளார் யாரும் வம்பி னைவிளை யாழ்வா ரோடு
மங்குநின் றெழுந்து மார்க்கத் தவர்களோ டேகிச்செல் காலை. (௯)

பாதவ நெருங்கு கானிற் படர்வுழி யிளைய வாழ்வார்
தீதுறு சவுச மாற்றச் சென்றனர் தனித்தல் வற்றம்
கோவில்கோ விந்த பட்டர் குறித்தெதி கொண்ட சூழ்ச்சி
யிதெனவுரைப்ப வோர்பால் மறைந்தில ரிருந்தா ராக. (௧௦)

எதிர்முத லாரேனேர் காணு தேகினர் கங்கை நோக்கி
மதியினிற் றிகழி ராமா நுசர்வந்து காப்பார் கச்சிக்
கதிபதி யன்றி யாரே யெனும்பொழு தன்மா தோடு
முதிர்கரு வேட வேட முற்றரு ளானார் வந்தார். (௧௧)

அவ்விரு வரையு நோக்கி யிலக்குவ ரன்போ டாங்க
ணெவ்வழி யுள்ளீர் நீவி ரெங்குச்செல் கின்றீ ரென்ன
வெவ்வயில் கச்சி யெக்கட் கிருப்பவ னோரு கின்றே
மவ்வயின் வருதல் வேண்டி னடைகவெம் முடனீ ரென்றார். (௧௨)

இன்னெறி கடந்து பின்னர்ச் செப்புவர் நீரின் வேட்கை
மன்னிய தெக்கட் கையாவ ழங்கென விளைய வாழ்வார்



நன்னவுர் சொற்ற வன்ன நேடுநீ ரளிக்க வன்றே
முன்னிது கச்சி யென்றே மொழிந்தவர் மறைந்தார் மன்னே. (௧௩)

சென்றபின் னிளைய வாழ்வார் திகைப்புடன் றிரும்பு தெரிந்தி
யொன்றிய துணையாய் வந்த வொப்பிலம் பதிக னந்தின்
குன்றுறை திருமா லென்னக் கொண்டடர்த் தச்சாலைக் கூடக்
றுன்றுநீ ரன்று கொட்டிச் சோர்வின்றி யளிப்பர் காணும். (௧௪)

கங்கையுற் றெதிதன் மாயக் கற்பிற்கோ விந்த பட்டர்
செங்கையிற் லிங்க மொன்று சேர்த்துமா சைவ ராகி
யங்குநின் றெழுந்து கச்சி யடைந்தினை யார்வர்க் கானுமப்
பங்கய ரிவரென் றுய்க்கு போதித்தார் பூர்வ பக்கம். (௧௫)

இன்னண நிகழு காலி * லிலக்குவர்க் காண வெண்ணி
மன்னிய வரங்க நின்று கச்சியைத் தாளை வந்தார்
பொன்னமர் மருமத் தெம்மாற் போற்றிநம் மிளையாழ் வார்க்கு
நன்னா தங் கருணை நோக்க நல்கிச்சீ ரரங்கஞ் சென்றார். (௧௬)

கச்சியி லரசு செய்யுங் காவலன் மகளோ யாரு
மச்சுறப் பிசாசம் பற்றி யாட்டயா தவன்சென் றோட்ட
வெய்ச்சுறு திருக்க மன்ன னிலக்குவர்க் கோதச் சென்று
இச்சிசெல் லென்னப் பேய்தான் சென்றது வொருவி யப்பா. (௧௭)

அரங்கனின் றுனை வந்தா ரிலக்குவர்க் கவேனாலிங் கென்னக்
கரங்கொடு வரைந்தோ லை விடுத்தன ரதனைக் காணுமச்
சிரங்கொடு திருமாற் போற்றிச் சென்றனர் செல்லு முன்னம்
பரம்பத மான வந்தார் பற்றினர் பார்த்தார் சென்று. (௧௮)

பார்த்தனர் வருந்திப் பல்காற் பணிந்தாள வந்தார் செங்கைச்
சீர்த்தமு விரல்ம டக்கித் திகழ்ந்தது மென்னே யென்று
கூர்த்தகல் லறிவி னுக்குக் குழுமிய பெரியார் தம்மை
யார்த்தியோ டிளைய வாழ்வார் வினவுற வவர்சொல் வார்மன். (௧௯)

பரமதப் பிரமசூத்ர பாஷ்யஞ் செயல்ப ராச
வரன்பெய ரொருமகற்கு வைத்தவன் கொள்கை தேற்றல்

* இலக்குவர் - இளையாழ்வாரவர்

குருகைநம் மாழ்வார் நாமம் கொடுத்தொரு வற்கன் னேனப்பாப்
பெருமையை விளக்கன் மூன்று முடித்திடப் பெட்ட லென்றார். ()

அன்னவே லவைகண் மூன்று மடியெனு லரங்கத் தெம்மான்
றன்னருண் முடிக்கு மென்று சாற்றமு கிரனி மிர்த்த
வின்னது கண்டு மேயோ ரிவையிவை முடிக்க வல்லா
ரென்னனு மரங்க கின்று மெழுந்தனர் கச்சி நோக்கி. (௨௧)

கச்சியம் பதியிற் புக்குக் காருத்தன் கமலை கொண்க
னச்சுதன் றிருத்தா ளேத்தி யச்சாலைக் கூவ தீர்த்த
மிச்சையோ டருளா ளர்க்கு நீருளங் களிக்கு நாளி
னச்சியெம் மானுக் கால வட்டமாப் பணியை நாளும் (௨௨)

தீர்விலா தியற்று மொப்பி றிருக்கச்சி நம்பி பாற்சென்
றார்வமே டவை யாவி யான்சொ னுமிவற்றை யெல்லாம்
பேரரு ளாளர் பக்கற் பேசியப் பெம்மா னேதுந்
தீரமாம் பொருளை யெந்துச் செப்புக வென்ன யந்தார். (௨௩)

அருளாளர் திருமுன் னம்பி யறிந்தவ ருரைத்த வாறே
தெருள்பர தத்வம் யாமே பேதமே யியமின் மோக்கம்
வருபிர பத்தி யேயு பாயமா மந்தி மத்திற்
கருதலா வசிக மன்று காண்பேத மேசிக் தாந்தாம் (௨௪)

ஆசானப் பெரிய நம்பி யாமென வார்த்தை யாறும்
பேசாநின் றனராற் கேட்டுப் பெருமுதத் திளைய வாழ்வார்
பாசார்செவ் வொளிய கச்சிப் பராம்பரற் போற்றி மிக்க
தேசார்சீர்ப் பெரிய நம்பி திகழ்பதி நாடிச் சென்றார். (௨௫)

சென்றிடு வருந்தின் மேவிச் சோமது ராந்த கப்பே
ரொன்றிய பதிக்கட் செல்ல வொப்பிலாப் பெரிய நம்பி
யன்றவ ணடையக் காணூஉ வடிபணிந் திளைய வாழ்வார்
நின்றிடு கச்சி மாயோ னியமனத் தடைந்த வாற்றை. (௨௬)

திருச்செவி சாத்த வென்னச் செப்பவுங் கேட்டு நம்பி
யருத்தியோ டிளைய வாழ்வார்க் கத்தலத் திராமன் கோவில்
விரித்திகழ் வகுள மூல மேவி* யையங்க மீந்து
தரித்திடப் பொருளி னோடு துவயமா மனுவுந் தந்தார். (௨௭)

* ஐயங்கம் - தாபம், புண்டரம், நாமம், யாகம், மந்திரம்.



ஆயபி னங்கு நின்ற நம்பியோ டடைந்து கச்சி
மேயபின் வியாச சூத்ர மெய்ப்பொருள் கேட்டு மாறன்
றாயவாய் மொழியே திற்கச் சொல்லிய மற்றை யோராறு
வாயிரம் பாவு மோர்ந்தார் நம்பிபா லிளைய வாழ்வார். (௨௮)

மனைமனைக் கியைபு மாறு புரிந்திலை ளவளை யாரின்
மனைபுக வகற்றி வேழ மலையரு ளாளர் முன்னர்த்
துனிபொழி யிளைய வாழ்வார் துரியவாச் சிரமம் பெற்று
ரெனையன்மா ரைக்கி யன்னார்க் கெதிபதி யெனப்பேர் வைத்தார்.

இப்பரி சுயர்ந்தா ரீந்த வெதிபதி யென்றி யாக
வப்பிர காசன் றுய்தன் மைந்தனை நோக்கி யின்னே
தப்பறு முனிவர் கோனைக் குரவனாய்ச் சார்தி யென்னச்
செப்பவுந் தருமீ தென்னச் சேர்ந்ததா காய வாணி. (௩௦)

யாதவ னிவர்தம் மார்க்க மழகிதே யைய மின்று
வேதமுங் கொண்ட தாகு மேவுதற் சுசுத்த னியானிப்
பூதலஞ் சுற்றிற் சுத்தம் பூணுவல் கால நீளு
மாதவிற் கழுவாய் வேறென் னருமென் றுயுங் காலை. (௩௧)

எதிபதி யாரைச் சூழ்ந் தியையுமக் கழுவா யென்ன
*நதிபதி தாரிலு நாத னியமிப்ப நன்கென் றேற்றுக்
கதியருள் தீர்த்தன் வேறு கண்டில னெனச்சூழ் வந்து
றுதிசெயா தவனுக் கந்த மைந்தையுந் துனைவி னல்கி. (௩௨)

முக்கோல நீக்கித் தம்போன் முக்கோல னாக்கி வைத்தார்
†தற்காத நினைத்து ளார்க்குந் தயைசெயன் மேலோர் மேற்றே
யக்காலை யரங்க நின்றெம் மரங்கனு ரரையர் கச்சி
புக்கார்வ மிக்கா ராகி யருளாளற் போற்றி நின்றார். (௩௩)

போற்றிய தென்னை வேண்டிப் புகல்கென வரையர் நாத
வேற்றமிக் குடைய ராமா னுசனையின் றெங்கட் கீயும்
பேற்றையே கருதி யென்னப் பேரரு ளாள ரந்தத்
‡தோற்றநீக் கெதியை யின்னே யுடன்செல்க வென்று சொற்றார்.

*நதிபதி - கடல். †தற்காத - தன்னைக்கொல்ல. ‡தோற்றம் - பிறப்பு.

அருளாள ரருளின் வண்ண மறையரோ டடைந்து கோயிற்
றெருளாளர் திருவ ரங்கன் றிருவடி வணங்கி நிற்ப
வொருவாத திருவ ணம்பின் வுபயவி பூதி நின்ற
னிருவாக மாகத் தந்தோ மடாத்தென நியமித் தெம்மான். (௧௫)

உடையவ ரெனவோர் நாம முவந்தருள் புரியத் தாங்கி
யடைவுட னடத்து கிற்பா ரியாதவ வெதியான் முன்னஞ்
சடைமுடிக் கடவுட் கன்பு சார்ந்தவ ரோவித்த பட்ட
ரடைதரத் தஞ்சித் தாந்தத் தாக்கினர் பெரிய நம்பி. (௧௬)

வேறு.

என்றதுகேட் டுளத்திறம்பூ தெய்துமெதி பதிநம்பி யிசைத்த வாறே, சென்றுதிருக் கோட்டிநம்பி தனைவணங்கி யுரைதிருமந் திரத்தி னோடு, மன்றநிந்து சரமசுலோ கத்தினருத் தத்தையுமவ் வாசான் யார்க்கு, மொன்றவெளி யிடலாகா தெனவுரைத்து முடையவரின் வுலகத் தோர்பால். (௧௭)

வைத்தபெருங் கருணையினா லுரைத்தருளக் கேட்டுமகிழ் மனத்த ரல்லே, ரித்தகைய ரெய்துக ருடையவர்மா மதமெனப்பே ரிதனுக் கென்ன, வைத்தனர்க ளிளையாழ்வா ராளவந்தார் திருவடியை வணங்கி வேத, மொத்ததிரு வாய்மொழியை யோதியுயர் திருமாலை யாண்டான் பாலில். (௧௮)

சென்றுதிரு வாய்மொழிக்குச் சிறந்தபொரு ளிதென்னத் தேர்ந்தா ராகி, வென்றிகொளு மாருத்தன் காதைதிரு மலைநம்பி விளம்பக் கேட்டே, தன்றனைத்தன் மதம்புகுந்த வுவகைமலாம் வென்றெக்ய ஏர்த்தி நாமம், துன்றுத தண்டியையும் விற்கொடுமுக் கோலவர்க்குத் துலங்க வித்தார். (௧௯)

இப்பெரியா ரியற்றியநூ லிருநான்கோ டொன்றென்ப வெண்ணி னமை, மொப்பரிய வேதாந்த சங்கிரக முயருமவே தாந்தசாரஞ், செப்பமிகும் வேதாந்த தீபஞ்சீ பாடியமே திகழுங் கீதைக், கொப்புமைபா டியங்கத்தி யத்திரய நித்தியமென் றுரைப்பார் தாமே. (௨௰)

வேறு.

வடதிசை சென்றவன் வந்த வாதிக
புடனழித் தேகிய செய்தொ *பாரதி

* பாரதியுட னுறைபீடம் - சரஸ்வதிபீடம். இது காசமீரத்துள்ளது.



யுடனுறை பீடம்புக் குற்ற காலவர்
மடனிகு மதிக்கயன் மனைபு வந்தரோ. (௨௧)

வேறு.

இளையாழ்வார் சூத்திரத்திற் கியற்றியருள் பாடியம்பார்த்
துளமகிழ்நா மகளிதுசீ பாடியமென் றுரைத்தவர்க்குக்
கிளர்தருபா டியகார ரெனநாமங் கிளக்கக்கொண்
டளவில்புகழ் திசையோங்க வமர்நாளிற் சிலர்மாற்றார். (௨௨)

வேறு.

வஞ்சகத் தெதிபதி யுயிரை வவ்விய
வெஞ்சலின் மாரண மியற்ற வாங்கவை
வஞ்சகர் தம்மையே மாறிச் சூழ்தரத்
தஞ்சமீ ரெனவவ ரிவரைத் தாழ்ந்தனர். (௨௩)

அஞ்சன்மி னென்றுரைத் தவர்கட் கங்கனே
யஞ்செனு மங்கழ மருளி மாயவன்
கஞ்சநாண் மலர்புரை கழற்க ணன்பையே
யெஞ்சலி லாதுற வியற்றுவித் தரோ. (௨௪)

வேறு.

மன்னுதிரு மலைநம்பி மைந்தர்க்குத் திருக்குருகைப் பிரான்பிள் ளானைப், பன்னுமபி தானமுமப் பட்டர்சேய்க் குப்பரா சரனே நாம, மென்னவுந்தந் தேபிரம சூத்திரத்திற் கின்னுரையு மியற்றி யிந்து, முன்னமெம தாளவந்தார் திருவுளத்துக் குறைமூன்று முற்றுவித்தார். (௨௫)

செகமளிக்கு மிவ்விபரன் சிவனேயென் றொப்புமெனச் செகத்துள் ளாரை, மிகவருத்துஞ் செயல்பூண்டா னெனவோர்ந்தில் விளையாழ்வார் மேலை நாட்டிற், புகவமணீ ராகு யிரவாவன் வாதேதிர்ந்து புரிந்து ளாரைத், தகவொழிய வென்றடிமை யாக்கினா ரனந்தனருத் தாங்கி மிக்கோர். (௨௬)

செல்வமலி *திலீபநக ருறைசெல்வப் பிள்ளையெனத் திகழு நாமத்
தொல்லையனைத் திருமாலை யதுகிரிக்க ணெழுவித்துச் சொன்னவாறே

* திலீபநகர் - டில்லிநகர் என இப்போது வழங்குகிறது.

யல்கலிலா வாகமத்தன் படி திருவா ராதனங்கண் டருளப் பண்ணி மல்குமடி யார்சூழ விளையாழ்வா ராவயினை வைகு நாளில். (௪௭)

அடல்கெழுமி வளர்புயத்த வபயன்றன் னேவலரை யடைவித் தேபோக்கிச், சுடரொளிசே ருலகின்மிசை யெம்மதத்தி னோர்பாலுந் தொடர்ந்து சீவிர், கெடலருமச் சிவத்திற்கு மேற்பொருள்வே றில்லென்னக் கிளத்தி யன்றே, ருடன்படுக வெறிவிப்பான் கைச்சாத்துங் கொண்மினென வுழையர் சென்றார். (௪௮)

சென்றுழையர் பலசித்தாந் திகள்பாலுங் கையொப்பஞ் சீவத்தின் மேலே, யொன்றுபொரு ளிலையென்ன விதில்வைம்மி னெனவெருவி யொப்பம் வைப்ப, வன்றரச னுரைத்த ணைக்கலக்க மடையாமற் கூரத் தாழ்வார், நன்றுசிவ மதன்மேலாய்த் துரோணமுள தெனவெழுதி நல்கி னாரால். (௪௯)

இவ்வாறிங் கிவரெழுதி யீந்தமைதா னவர்சேரற் கெய்தியோத, வெவ்வாறிவ் வாறெழுது கூரத்தாழ் வார்ச்சினவி யோங்கு சென்னி, செவ்வாறு செலநீர்ந்து கண்ணிரண்டு நீக்கினனத் திமையன்றாற், றவ்வாதக் கணங்கிருமி கண்டனாய்த் தமித்தேமனூர் சார்ந்தான் மன்னோ. (௫௰)

மேலைநாட் டெழுந்தருளு மெதிபதிகூ ரத்தாழ்வார் மேவுங்கண்க [ளை ளோர்கைநாட் டினிலழிந்த திறனறிந்து விரைந்தவர்பா லுற்றவ் வின் லேலைநாட் டேதருமோ வுமக்கென்னப் பரிந்தோதி யெழுந்து பன்ன சாலைமாட் டேற்றனரா லடியர்சூழத் தொழுமுக்கோ லுங்குமேலோர்.

தம்மாலே யொழிக்கவர்க டிருமாலே பரனுமைதாங் கெனன்னு, மம்மாவின் மதம்விசிட்டாத் துவிதமுல கிடைப்பரப்பி யழிவின் றோங்கச், சிம்மாச னதிபத்ய மெழுபானென் கடியவர்க்குச் சிறப்பளித்தே, யெம்மாலே ரதற்கரிய பாடியமா தியவுரா லியங்குவித்தார். (௫௨)

வேறு.

சொன்றினநீ யொழுகுக் நமதுசிக் தாக்க தரக்தர ராகியே சீர்த்தி, தன்னையெவ் வுலகுஞ் செலுத்திவர் தெதிர்க்கும் வாதிய ராக்குழு றணிப்பான், மன்னிய கொண்டிற வேனுமை யவரான் மாநிரு



பூதியுங் காத்துப், பன்னெடு நாளும் புகழ்நிறீஇப் பரம பதத்தினை யெய்திடு சாத்தார். (௫௩)

சித்திர பானுக் கெதிரொளி செய்யுந் தேசுடை முனிவரர் கோனார், நெத்தசீ ரரங்க விலக்குமே நாமத் துயர்தவத் தோங்கன்மெய்ப் புணர்வா, தனித்திற மாழ்வா ரெம்பெரு மானு ரிசைகெழு சரிதமென் னேற்க, வித்தக முடைய தாசர்கேட் டுள்ள மிகமகிழ்ந் திருந்தனர் மன்னோ. (௫௪)

எம்பெருமானார் வைபவச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - ௮௨௭.

---

## ௧௮—சரணாகதிச் சருக்கம்.

---

நிறைதவத்து முனிவர்வினை நிலந்தோய்த் தாழ்கரங்க ளேடுத்து கூப்பி, முறையினவன் கருணையினாற் முசர்குரு கூர்முனிவர் முதிருஞானத், திறைவர்திரு வாய்மொழியோ ராயிரமு மோதிமனத் திருத்திப் பின்னர், நிறைதருமொன் றிரண்டுநான் காவதா மாயிரமு மதிகரித்தார். (௧)

வேறு.

அப்பாக்கட் டிதுபொருளொன் றுறைபகவத் விடையமதைத்
தப்பாம லறியவெணித் தாசர்குரு வழ்பணியா
வொப்பாரு மிலாப்பரம வுரைத்தருள்க வெனவேண்ட
வெப்பாலு மேவர்சில மெய்த்தவத்தன் றறிகுரவன். (௨)

அறைதரலாம் வேதாந்தத் தருத்தமிவர்க் கெனவெகினத்
துறைதருநஞ் சடகோப முரைத்தருள்பா சுரமாதி
நிறைதருநா லாயிரமா நிகழ்த்துதமிழ் மறைப்பொருளு
முறையின்மொழி தரத்தாசர் முத்தார்வத் தொடுகொண்டார். (௩)

தேசிகன்சீர்க் கருணையினாற் றிரமிடவே தப்பொருளை
மாசகல வோதியவா மனப்படுத்தி மயர்வொழிந்த
பேசரிய புகழ்த்தாசர் பிரகிருதி பரிணாம
வாசரியா வுடற்றொடக்கை யறுத்திடுவான் சிந்தித்தார். (௪)

முன்னையியான் பசுப்பறவை முதலாய யோனிகளிற்
றுன்னுமலி பிறப்பிறந்தை தோய்ந்ததற்கோ ரளவின்று
மென்னிலையோ பலசெய்ஞைத் தியற்றுமறப் பெறுக
மன்னினெனுநீ இடைக்கரிய மானுடத்தை யிருஞான்று. (௫)

அறிவுடையோர் மானுடமே யவாவினதெல் லாமெளிதிற்
பெறவுரிய தவ்வமதி பிறவியெனுங் கடல்கடத்துந்
திறமுடைய தெனவுமுரை செய்வர்திரு மாற்கடிமை
யுறவுடையே னாகிலமே னுணர்வுடைய னாகிலனல். (௬)

பொருளிதுவே யெனவறிந்தும் பொருந்துசரீ ரத்தொருவன்
றெருளினனுப் பவவுததி தாண்டுதிரத் தேருமே
யருமந்த பிறப்பவமே யழிப்பதே யெனத்தாசர்
கருமந்த னக்காரு மாரியன்சீர்க் கழல்பணியா. (௭)

மாமுனிவர் தம்பெருமை வந்தடிமை யானேனுக்
காமுறையே *பரந்யாச மதுசெய்து காக்கவென
வேமமுறப் பணிந்திரப்ப வெழிற்கோவ லாயனும்
பூமகள்கேள் வன்கருணைப் படிகடக்கு மெனப்புகன்றான். (௮)

அந்தணரின் மேம்பட்ட வடிகருரை யிவ்வாறு
தந்தனராற் பரமபத சாதனமென் பாலென்றே
வந்தணைவ தெனத்தாசர் மனங்கவன்றே யுறைநாளிற்
பந்தமொழித் தருள்குரவன் பணிதாங்கிக் கடன்மல்லை. (௯)

தலசயனத் துறைபரமன் றனைவணங்கச் செலுமிடையி
லுலைவிறவ முடையோனு யுயர்கலைகட் குறைகளனுய்
நிலவுதிசை யிரைந்து நிறைந்தோங்கு புகழினனு
யலகில்கவி வாணரெலா மடிபணியும் பெருமையனுய். (௧௦)

சேனுலவு மொளியானைச் சமதமங்க டிறம்பானைக்
கோணிலுரைப் படிசௌசங் கொள்வானைக் குணக்கடலை
யேணிலவு தருந்தவளப் பரிமுகனுக் கினியானை
மாணிலவு மகிவருவார் சரண்புகுது மலர்ப்பதனை. (௧௧)

* பரந்யாசம் - ஆன்மாத்தன்பாரக்கலை ஆசிரியன்வாயிலாக ஈச்வரன் பால் வைத்தல்.



வேதமா மொருநான்கு மகத்துாலம் விளக்குவதாய்
காதயா முகமுதலா கவிர்கள் வருகுலனின்
மாதயர் வுடனுவற் பாக்ககர் வந்தருளி
யோதரிய வண்ணையா ரியனொப்பே ருகந்தானை. (௧௨)

எழுதாத மறையெனிக்கு காவானை யெதிர்காணுஉத்
தொழுதார்வ முறநிலத்திற் றோய்ந்தெழுந்து பரவசராய்
முழுதாய மகிழ்விளைவு முன்னிற்றுத் தாசர்தமைப்
பொழுதாரு மலர்க்கண்ணு னோக்கியவன் புகல்வானல். (௧௩)

ஏற்றமிகு தங்குரவ ரெழில்மேனி பாங்குடைத்தே
சாற்றுவரே யடியவர்க டமக்கரிய நாலெல்லாந்
தேற்றமுற வினவியவை தெரிந்தனவா லியாவினுநு
மாற்றலைய தருந்சரண மதியுடைய மேலனென்றான். (௧௪)

அவ்வுரைகேட் டரையன்ன வாரியனு மறையவனு
மெவ்வமிலி ரடிகளுமு யினைச்சார்பு நீக்கவிசீர்
செவ்வியதற் கிலமுனிக் கருணைக திறமென்னை
கவ்வையக நாத்செய்யல் கவல்கிலி ரெனவுரைத்தான். (௧௫)

மாடணையுங் கல்யாண மாபுரத்து வேதியர்தந்
தாடொழுவார் தமைநோக்கித் தாசருக்கும் பிரபதனம்*
கூடுறப் புரிவிப்பான் யானகறுங் கூற்றுக
விடொருங விலாவரங்க விலக்குவாக்குச் சென்னுமைபபிர். (௧௬)

*கன்றுரைப்ப விடைகொண்டு பெருந்தருண மனமேலைய
நின்றவரு மெய்யன்புக ளொடுங்கொள்ளப் பின்கொண்டு
துன்றுகடற் றலசயனத் திருமாலைத் தொழுதேத்திச்
சென்றணைநத் துன்றாசர் திருக்கோவற் பெரும்பதிக்கே. (௧௭)

அடிமையவ் வரங்கரா மானுசப்பே ராரியன்பாற்
போயடிக டொழும்பொழுது கல்யாண புரமறையோ
ராயகலை யுணர்நன்ன வாரியன்சொல் லிதுவென்ன
மாமைமொழிக் கருணைமுனி யவர்க்குரைத்து நின்றனரால். (௧௮)

* பிரபதனம் - பரந்யாசத்துக்கொரு பெயர்.

முக்கோல்கைக் கொள்வாரவர் மொழிகேட்டுந் தாசர்மிகத்
துக்கோராம் பாகவதர் தமதருளும் பெற்றனரான்
மிக்கார்வ முனக்கிடக்கை முற்றுமினி விரைந்தென்னப்
புக்கார நோக்கவர்பாற் புரிந்தனர்முன் னிறுமதிகம். (௧௯)

மற்றொருநாட் டியிலுமெதி வரனிடைச்சென் றியாரு
நிற்றுவரை யாய்தந்த திசையுமினித் தாசர்தமக்
குற்றவடைக் கலமாகச் செய்திமென வுரைத்தேதக்
கொற்றமுனி யாயனுரை குறித்துவியந் தனர்மன்னோ. (௨௰)

எம்பெருமான் பாகவத மாரியரென் றின்னோர்த
டம்பெருநோக் கிற்கிலக்கித் தாசரெனை நினைத்துனத்தே
யைம்புலனு மடக்குமுனி தாசரையங் கழைத்தின்னே
யும்பர்பிரான் றிருநோக்க மூழுமுமக்கென் றுரைத்தனரால். (௨௧)

வேறு.

சொலற்கரிய பெரியோர்க டிணையடியே துணையாகத் தொழுது பாய, விலக்ககல விலக்கியொளிர் தாசரைக்காத் திடுதகைத மேவுங் கோவர்த், றலைக்கணம ராயனுர் திருவடித்தா மரைமலரிற் சமர்ப்பித் தாரா, லலக்கினொழி யெதிவரா னருள்கருணைத் திறத்திலுமிழ் வடைந்தார் தாசர். (௨௨)

இனைந்தினமு மந்தனத்தனர்சீர் திருந்தி மலர்கொய்து திருத்த தாம வினைபலவுஞ் செய்துதிரு மாற்களித்துக் களிக்கவ்வர் தேவி யாய கனக்குழையாள் பெரியபலர் தாசர்திற மிற்றென்னக் கழறக்கேட்டு மனம்பழித்தா ளவ்வழிக்கே செல்லவினை நல்லூழ்முன் வந்ததாலே.

பற்றற்ற மேலோர்கள் பகருமுறை யாற்றெளிவுற் றமிழ்ப்பொன்பூ ணற்றமனை பகர்ந்திருஞ் சுபாவத்தை நிலைவிடுத்துத் தொலையாஞானங் கற்றதனை யர்ப்பரியா துறல்கருமம் மனைவுணர்ந்திற் கண்ணி பங்க ருற்றதிருக் கோவலுருரெழும்பதியை யடைந்தனளா லொட்பிதேவி.

வேறு.

திக்கெலாஞ் செலும்புகழ்த் தாசர்தேவிதம்
பக்கலவத் தொழுமொர் பணிசெய்திலள்
தக்கவை நாக்கியத் தன்றெந சிந்திலா
மக்களை மனத்திடை மதிப்பிலள் மன்னோ. (௨௫)



நாயகன் மனக்கொளாப் பவத்த னானவை
போமொழி தார்க்கிவை புரிவ னென்றெனி
யேயவி சாரிய விமலன் ருபதந்
தோயிரு பொழுதினுந் தொழுது சூழ்ந்தனள். (௨௬)

மற்றுமக் கங்கைமான் மலர்ப்ப தத்திடை
யுற்றமி லன்பின னாயன் *சேதிம
முற்றிய துகள்கழீஇ முறையொ டொப்பனை
பற்றிய பணிபல பரிந்தி யற்றுவாள். (௨௭)

இன்னணம் புரிதல்கண் டிசைகொ ளாரியன்
றன்னடிச் சார்புறு தாசர் தம்மையிந்
நன்னெறிப் படர்தரு நங்கை யாரெனை
யுன்னியிச் செயலவை யோரி லோதென. (௨௮)

தாசரு முனைப்பரித் தைய வென்னுடை
மாசறு மனைவியெனப் பிரிந்து வைகுவா
டேசிக ரடிமலர் சிரத்திற் றாங்குமவ்
வாசையொ டென்னைவிட் டகல்கி லாமையை. (௨௯)

என்னியென் றுரைத்தன ரெதிகள் கோனுமப்
பெண்ணினை யின்படி புரிவை பேச்சுறாப்
கன்னியு தேயென வருளத் தன்வயி
னன்னுது லொன்றையே மனக்கு கல்கினர். (௩௰)

பலபகல் கழிந்தபின் றாசர் பன்னியுண்
ணலனுடைத் தான்முனை கண்டி ஞரியார்
சொலுமுடைத் தெனவவர்த் தொழுது தன்மனைக்
குலவிச்சக் காப்பொரி யுதவ வேண்டுனர், (௩௧)

போதமர் [illegible]யுவித னம்மொழிக்
காதரம் புரிந்து[illegible]னடியார் தங்களி
லேதமில் [illegible]லநலத் தி[illegible] வா[illegible]
[illegible]தபா ரக்[illegible]தனை விளித்துக் கூறுவான். (௩௨)

*சேதிமம் - கோயில்.

வேறு.

தமத்திரம் பெறுஞான தாசரயனைக் கைப்பற்றுநேச
சமற்காரம் புரிகவெனச் சாற்றுரையைப் பற்றிசாற்கு
நமற்காரம் புரிந்தேதக நன்றாளி னென்றேட்குச்
சுமைத்தாமப் பவவனத்தைச் சுட்டொழிக்கு*மிலாஞ்சனையும்.

மேலேறும் புண்டரமு மந்திரமும் விதியின்வழித்
தாலேற வருளியின்னுட் டாய்த்தந்தை யிவராதி
மாலேறு முறவினொடு மற்றுள்ள பொருள்விடுத்துப்
பாலேறு கொழுநனையே பற்றினள்வை தேகியென. (௩௪)

எண்ணியவட் கவிதான மிசைத்தனர்சா னகியென்னப்
பெண்ணிவெழிற் றிருவனையாள் பின்னரெதி பதியடிக
ணண்ணினவணங் கினண்முனிவர் நற்கருணை யாதேற்கி
வண்ணமடவார்களவர் வழுத்திற்ற வுயர்வென்றார். (௩௫)

ஆசிரியன் றனைக்கிடமா யமையுமனை யாடனக்குப்
பேசுமவ னியமனத்தாற் பெறற்குரிய பணியனைத்து
நேசமுடன் புரிந்துதிப்ப பேர்த்தனளீ தாற்றென்ன
வோசைபெறு கடலாடை யுலகிலுய ரொருதாசர். (௩௬)

இன்னனநாட் சிலசெல்ல வெதிபதியத் திருக்கோயி
றன்னையெய்தி இத் திருவரங்க மெனுமகரந் தனைச்சார
வன்னவனை பரதெய்வ மாமெனக்கொ டம்பதிகள்
பின்வரவன் சாயையெனப் பெயராது பெயர்ந்தனரால். (௩௭)

அல்கவில்சீர்த் திருவரங்க மெனுமகரத் தாரியனை
மல்குமெழிற் றுபதத்தை மனைவியா ரொடுதாசர்
செல்கதிப்பே றிதுவென்னத் தினந்தொழுதல் வலம்வருத
லல்லவல கிடலாதிப் பணிபுரிந்து நாட்கழித்தார். (௩௮)

தள்ளரிய பெரும்பிறவிச் சலதிதனந் திடுதாச
ரெள்ளில்சர ணாகதிதன் னில்லினைக்குச் செய்விக்க
வுள்ளகினைத் துயர்குமவை ரெப்பினினைத் தாடாழ்ந்து
வள்ளவிது கேட்டருள்கவெனவழுத்தி யுரைத்தனளன்னே. (௩௯)

* இலாஞ்சனை - சங்கசக்கரப்பொறி.



வேறு.

பெண்ணிவ ளரிய ஞானப் பெரியவர் திருக்க ணோக்க
நண்ணுதல் வேண்டித் தன்னை யுய்விக்கச் செய்ய நாளா
லெண்ணின ளடிகள் பாத வினைகளை புனைமஞ் சிலனை
நண்ணுறும் பிறவிப் பௌவங் கடத்தற்கென் றுள்ளு நீரான். (௪௦)

எனச்சொலத் தாசராசா னின்செவிக் கேற்று நந்த
மனத்தெதனை முற்றுஞ் செந்தா மரையுளாள் கொழுந னன்பர்
நினைந்தவை யளிப்பளன்மை நேர்ந்தவர் நேரார் திமை [தோ.
வினைத்தொகை யொழித்தே யென்ன விளம்பினன் விருப்பின் மா

இவ்வுரை கூறி யொன்று மேதமில் சனகி யான்மாச்
செவ்விய பாத்திரை மல்லத் திருவரங் கத்து மேய
மைவண்ணத் தரங்கநாதன் மலர்க்கழல் சமர்ப்பித் தாறு
வெவ்விய மலிந்த சிந்தை முனிவர னருண்பயக் கம்மா. (௪௨)

அடிமையிற் சிறந்த நங்கை யாரிய னவின பாத
முடியுற வணக்கிச் செங்கை முகிழ்த்தன னின்று விண்ண
னடிகளாற் பாது தீர்த்த மளித்ததினை றுணக்கே பெற்றேன்
படியுளோர்க் கரிய தாய பாசமாப் பணமென் றுய்ந்தாள். (௪௩)

எதிபெறு மதியினெக்கத் திவர்களை யலையின் மாது
குதூகலித் தமிழ்ந்தா னென்னுங் கொள்கையைத் தாசர் காணூஉ
முதிர்சரை மரண மற்று முற்றுகிப் பிறப்பு நீத்தான்
விதியுமம் மேலோ னுள்ளு மொத்தவே யெனவி யந்தார். (௪௪)

தங்களை நன்கு காக்கத் தக்கதெய் வதமவ் வாசான்
பங்கயப் பதமே யென்னப் பணிபுரி தாசர் தம்மைப்
புங்கவ ரெவரு மம்ம நூகவி பொருவ ரல்லா
ரெங்கிவர்க் கிணையா ஞாலத் தெவரையா முரைத்து மென்பார். ( )

விட்டிய வுணர்ந்து பாச வினைதெறு முக்கோற் கோமான்
கோட்டமின் மனத்துத் தாசர் தன்னிடைக் கொண்ட வன்பு
நாட்டிதம் வயந்த ரல்லெ ரென்னவுள் ளூறும் பண்புங்
காட்டிய வடியா ரோடு கண்ணற்றும் பணிசெய் வென்றார். (௪௧)

என்றவ னுரைத்த மாற்ற மின்புறச் செவிக்க ணேற்றுத்
தன்றலை மீது தாங்கிச் சாற்றுமா புரிவே னென்று
மன்றலந் துளபத் தாமன் வாழ்பாடத் தலங்கள் சென்றே
யொன்றல பணிக ளன்று முவப்புறப் புரிந்தார் தாசர். (௪௭)

சரணாகதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - ௮௭௪.

## ௧௪- கைங்கரியச் சருக்கம்.

நித்த நியமத் துறைபொழுது தாச ராசா னிரமனம்போ
லொத்த பொழுதே மனத்தினிடைத் தாப மொன்று மொருங்கொட்
வித்த முடைய குரவரின் மிகவு மகிழ்வான புரியரங்க [டும்
டத்து மலரு மூலகரியச் சாற்றும் வண்ணந் துணிந்தனரால். (௧)

எந்தப் பதியி லுறைபெருமா னெளியேற் காசான் றனக்கொண்டு
சிந்தைத் திமிர மகற்றவொளிர் தீப மேற்றி வைத்தனரென்
றந்தப் பெருமான் றிருக்கோவ லாயன் றனியி லதுபுரிதன
முந்தப் பிறங்கும் பணியென்ன முதலுற் *றதனை யவன்புரிந்தார்.

மற்று மந்தப் பதியினிடை மாய னுவக்கும் பணியிதுவ
வுற்ற தாகுந் திருமாலைத் தொண்டென் றுள்ளந் திடையுணர்ந்து
முற்றும் வெறிய துழாய்குடச முல்லை மலரி வருளமொடு
நற்ற மலர்கள் சொரிநந்த வனமொன் றமைத்தார் துரிசற்றார். (௩)

வருக்கை கமுகு தெங்கரம்பை மல்கு மகிழ்த்த திருப்பதியிற்
றிருக்கை யதுக்கும் வேதாந்த குரவன் றேவ நாதர்க்கும்
பருப்பின் பொங்க திருமாலை வடையே கடலை பலவாதும்
விருப்பி னூரா தனகாலும் புரிய வியற்று வித்தனரால். (௪)

நிரம்பு வளத்த வப்பதியி னிகரில் பெரியோ ரினம்வணங்கும்
பரம்பு ஞான நிகமாந்த குரவன் பவனந் தொளிர்தீபங்
குரம்பை விரும்பாத் தவத்தாசர் குறையு மன்போ டேற்றுவித்தார்
வரம்பில் போதத் தேசிகர்க்குத் *தொழும்பர் புரிதல் வழக்கன்றே.

* திருநந்தாவிளக்குத்திருப்பணி.



ஆசான் முன்னந் தனக்கிவ்வா றுரும் பணிகள் செயவுரைத்த
தேசார் பதியாந் திருவரங்க நகர்த் துறையுந் திருமாலின்
வீசா ரிலைய வுலகளிக்க *மேவு முகிலின் முறையாக
வாசா ரன்பி னவனுவப்ப †முற்கோ தனக்கட் டளைவைத்தார். (௬)

தானே யொக்கும் பெரியநம்பி தன்பா லட்டாக் கரமுதலா
வானு மனுவை யுடையவர்சென் றடைந்த மதுரார் தகப்பதியின்
‡மாறு மந்த விளையாழ்வார் வருமா திரைமன் றுள்விழவை
மேனாட் டவரு மாம்பிப்ப விருப்பிற் புரிந்து களிப்புற்றார். (௭)

மண்ணிற் சிறந்த திருமலைநல் லானென் சக்ர வர்த்திகுலத்
தெண்ணும் பெரியோர் பல்லோருந் பணிந்த விலக்கு மீபுரத்தில்
வண்ணக் கமலத் துறைபிரமன் மாது மரங்க விலக்குவப்பே
யண்ணற் பெரிய முனிவர்கள் காசா குரவ ரவதரித்தார். (௮)

அன்ன பதியின் மறையாதி யனைத்து முணர்ந்து தன்பெருமை
யின்ன படியென் றிசைக்கரிய வெம்மா னும்மை தாங்குரு
வுன்னும் கருணை முதிர்ச்சியினு லொப்பி லருச்சை யுருக்கொண்டி
மன்னு மடியார் தமைப்புரக்க வதிவ செந்த னான்றிலுமே. (௯)

ஆமச் சர்வ தந்திர சுதந்த்ர ராமாநுசன்முன்
வாமப் புவியி லவதரித்த கன்னி [illegible] வருமோர்
நாமத் தாரா கணவிழவை நன்கு புரிந்து நாட்பத்தி
னேமச் சாதது முறைமுடித்து நீட அடக்கச் செய்தனரால். (௧௦)

சீத வனசத் தவன்பதியே பசைச்சி தழுன்று இரிவாளைர்
போது மூலங்கள் பரகையில மொட்பில் வீத்தை பரமதனை
மேத நீங்கும் பரமகதி யென்ன வுரைக்கும் குருவதனைக்
கோதில் கருணை யாற்கொண்டு குறைவின் றென்றும் புரக்கின்றான்

ஆய பெருமை கொளுமடிகட் குயிரும் பொருளு மர்ப்பணஞ்செய்
தேய வன்னவன் றிருவடிகட் கியையும் பணிகள் புரிதலையே
வீவில் பரமோ பாயமென்று மெய்ம்மை தேர்ந்த ஞானத்து
மேய பிரான் முக்தியில மேவற் கரிய தாமென்றாம். (௧௨)

* மேவுமுகிலில் - பிறந்தநாளில். † முற்கோதனம் - வருப்பண்ணம்.
‡ மாறன் - [illegible]

சேடன் குரவன் மணிமனைவி செல்வர்பண்டம் புத்தகமற்
றோடு நீர்த்த னுவப்பவைகள் பொருந்து மன்னன் றிருநாம
நீடு சிலங் குணமிவற்றை நினைந்து மாண்பு செய்கென்னுங்
கூடு மறிவின் மேதக்கோ ரெத்த ஞான்றுங் கூறுவரால். (கங)

ஆதல் பற்றி யெளியேனு நேயத் தாசா னவதரித்த
சீத வனசைப் பெயர்ப்பதியிற் செய்வல் பணியென் றுளநினைந்து
போத மிகுத்த வவ்வயினிற் பொருந்து மான்றோர் மனங்களிக்கக்
காதன் முதிர்வா லப்புரியி னொிக் காக்கோர் கரையமைத்தார். (கச)

காரி மாறன் றனையன்றிக் கடவு ளறியேன் மற்றென்ற
நேரின் மதுர கவியென்ன நிரம்ப வாசா னிட்டதன்பு
சாருந் தாச ரமரர்கணந் தனவா இன்றைஞ்சு மரங்கமதில்
யாரும் புகழ்வா னடிகளுறைந் தருள வன்மத்தா ராச்சிரமம். (கரு)

உடப்பி லழுந்து பக்தர்களு ளுவக்கும் *பெருமான் றிருமார்ப
னெய்பி திருவின் னகரிலகோ ராத்ர தீர்த்த வுயர்வாவி
செப்ப மமைய வெண்சிலையாற் றிகழும் படிக ளமைப்பித்தா
† ரிப்பர் குலத்தை விளக்கவெழு மிரவி நிகரும் புகழ்த்தாசர். (கசு)

கமலத் துறையும் விமலைதிருக் கரத்தாற் றழுவுங் கண்ணபுரத்
தமலப் பெருமா னெழிற்சவுரி ராசன் புயத்துக் கொடுக்கத்தால்
விமலக் கமல மலர்த்தொடையல் விழைவின் மிகையாற் செய்தளித்து
முமல மகற்றி யொளிர்தாசர் மொய்பூங் காவொன் றவணமைத்தார்.

போதி விருக்கு மிப்பிரியை புல்ல வொளிரும் பரம்பொருளை
யாதி மறைக டேடியின்னு மறியாச் சவுரி ராசனுக்குக்
கீத மணிசெய் மலர்த்தாமங் கிளரப் புனைந்தங் கணிபணியைப்
போத வந்தப் பதியினிடை விருட மிரண்டு புரிந்திருந்தார். (கஅ)

சகமா மடந்தை வதனமெனத் தயக்குங் குடந்தைத் திருப்பதியிற்
புகலோன் றில்லா வடியவர்க்குப் புகலாஞ் சார்ங்க பாணியினைத்
தொகுமா வன்பு பணிந்துதி வாழ்த்தி பிடிக்குந் தொழிலியற்றித்
தகவா ரகல மிரண்டாந்தத் தலத்திற் றாசர் வதிந்தனரால். (ககூ)

* [illegible] † [illegible]ர்-வணிகர்.



பொங்கிப் பரந்த நறும்புனல்சூழ் பொன்னி யொழுகுந் திருக்குடந்
தெங்கள் பெருமா னடியவர்க டாச ரியற்றும் பணிநோக்கி [சை
பங்க மிகந்த சாரங்க பாணி யாக வதரென்னுந்
துங்க மேய வபிதானந் துலங்க வவர்க்குச் சூட்டினரால். (உ0)

விதியா ராயிர வனைத்தினையும் விதிக்கும் விதிமுன் மகம்புரிந்த
பதியாங் கச்சி தனைப்பணிந்து பைம்பொற் கமலை பிரியாத
நதியார் பதத்து விளக்கொளியெம் பெருமான் றன்கா தனியேத்தி
முதியார் வணங்கு மக்*நியமம் புதுக்க மனத்து முன்னினரால். ()

முன்னித் தாசர் விளக்கொளியெம் பெருமான் றனிமுன் மண்டபத்
தின்னு முயர்வு தாழ்வுகழிந் தொத்த தனமா யுறவமைத்து [சை
மின்னுந் தீப வொளியன்ன மேவுங் கோட்ட மிகக்கிலமாய்
மன்ன னோக்கி முற்றுமதைப் பிரித்துப் புதுக்க மனத்தெண்ணி. (

கருவின் முதலா மண்டபங்கள் கட்டிக் ககன விமானமிதைப்
பொருவ லாகா தெனப்புகலப் பொற்பார் விமானம் புதிதமைத்துத்
தெருளு மன்பார் பூதவையார் கோன் செல்வி கோதை திருத்தளியைப்
பெருவில் விசும் விமானமொடு பிறங்கு மாறு கட்டுவித்தார். (உக)

மறைகள் பரம சோதியென வழுத்துந் தீப வொளிமெய்த்
திறைவன் பூவை மின்னுண்ட வெழில்வி யெழிலத் திசைசேய
நிறையத் தீப மொன்றமைத்தார் தாசர் நிமல னடிதுவக்கு [ஞெல்
முறைசெ யடியார்க் கெளியனென முனிவோர் மொழியை விளக்கின

குலவு மிகைய போக்கியமாய்க் குற்ற நீக்கி யுயர்வெய்த்து
பலவாம் வகைய போனகத்தைப் பரிந்து தாச நளிப்பிக்க
நிலவு கால மொருநூன்றுந் தன்கா னெடுமால் கொண்டிவப்பா
னுலகி னிறைவா ரவன்கொள்ள லுவக்குமன் செய்பாக் கியப்பேறு.

தொல்லை யுலக முயக்கச்சித் துப்புற் குலத்தி லவதரித்துச்
சொல்லுஞ் சர்வ தந்திரசு தந்திர னெனுநிவ் தாந்தகுரு
புல்லு நாம மினும்பலவாய்ப் புனையுங் குரவர் சிகாமணியை
யெல்லை யிலநா மவர்சரித நினைந்து தாச ரிறைஞ்சுகற்றார். (உ[illegible])

* நியமம்-கோவில்.

வையந் துதிக்கு நன்னடையு மான்ற குலனு மறையவர்க
ளுய்ய வணங்கு மடித்துணையு முயர்ந்த கங்கை யதிமதியுஞ்
செய்ய கவிகட் கொளிர்மணியாய்த் திகழ்வுமுண்டா லுவரொருவர்
பொய்யில் புண்டரீகாக்க திக்கு தப்பேர் புனைந்தவரே. (உஎ)

அந்த மறையோர் தவத்தோன்ற லாகிக் குணங்கட் காகரமாய்க்
கந்தங் குலவுங் குழற்றிருநா மங்கை கணவ ராய்த்தமது
சிந்தை விழையாட் டமர்தலைமாச் சிட வர்க்க மேவினரா
யிந்த மகிமை லவுகரித்தா ரனந்த சூரி யெனும்பெரியார். (உஅ)

மணிகள் வயின்றி யொழுகருவி வடவேங் கடமா ஞடையவரி
னணிகொண் மதத்தைத் தழைவிக்க வனந்த சூரி யார்வயினோர்
தனியின் ஞானத் தெழின்மகவைத் தருவா னன்றோர்க் கிறவுதனி
னனுகிக் கனவி லுறுதிசர் வார்த்தை யொன்று நவிலுற்றான். (உகூ)

கன்னி மதியில் வடமலையிற் கமலத் தயனு சியற்றுவப்ப
நன்னாட் புரியும் பெருவிழவை நறுமென் கூந்தன் மனைவியுடன்
றுன்னக் கண்டு தொழவருவாய் தோன்று நன்மை புனைகாதக [ன்.
லென்னை யுரைத்து மறைந்தனனவ் விமையோர்க் கரிய வெம்பெருமா

அனந்த சூரி யனந்தனுரைக் கும்பா னுரைத்த வுரையுளத்தி
னினைந்து நினைந்து வியப்புற்று நிறையார் மனைவிக் கதுபகன்று
புனைந்தா * வரிணை விழியுடனா ளுடங்குப் போதப் புறப்பட்டா
† னினன்று ‡ னரிவை யவனத்திற் கேய்த வடவேங் கடநோக்கி. ()

வருந்து நோக்கிச் சென்றுமலை காதங் கடந்து வைகுந்தம்
புகுந்த வவரு மீண்டுதொழப் போத நினைக்கும் வடமலையின்
மிகுந்த காத மூட்டேறி விழவு முடியத் தொழுதகத்துப்
புகுந்த மகிழ்வாற் றம்பதிக ளங்கட் கின்றுட் போக்கினரால். (ஙஉ)

அங்க ணிவர்க ளுறைந்தனரி லவர்பின் மங்கை மணவாளன்
றுங்க மறையோ னருவுகொடு தாயிலெர னைந்த சூரியபாற்
பொங்கு மருளா லெழுந்தருளிப் போந்து கனவி லவர்கரத்திற்
றங்க வளித்தா ருனதாரா தனத்துக் கேய்ந்த திருமணியை. (ஙங)

* அரிணம் - மான். † இனன் - சூரியன். ‡ அரிவை பவனம் - கன்னிராசி.



துயிலார் * கண்டை கரத்தேந்தி யெழுந்து மகிழ்வாற் றுணைவியிட
மயிலா ரன்பி னளிக்கவவள் வாங்கி மடியி லிருத்தவது
சுயிலா நோக்கோ டவிருருபத் தணைந்து மறைந்த தென்வியப்போ
வயிலார் மூன்று தொழில்களுந்தம் வயத்த ராவார்க் கிது புரிதல். ()

இந்த வாறு தாங்கண்ட கனவின் றிறத்தை யில்லினர்க்கு
முந்த வுரைத்துத் தொழுகுலத்து முதல்வன் மகிழ்ந்து காலையிற்செய்
சந்தி முதல நாளின்வழி தப்பா தியற்றித் தன்பவனத்
தந்தி விருந்தா ரவர்பெருமை யெம்மாற் புகலு மளவினதோ. (ஙரு)

என்னும் புலரி யெழுந்துதிரு மலையி லெம்மான் றிருக்கோயி
லென்று முறையைப் பரிசனத்தார் நாதற் குரிய மணியையவன்
கன்னிற் காணு திதுவென்னே யென்று கலங்கிக் கைவிதிர்த்த
யன்னா வறியே மொருநாளு மிந்த வாறென் றுகமெலிந்தார். ()

இவ்வா றிவர்கள் கூடியிருந் தெண்ணப் பெரிய சியரறிந்
தவ்வா றுரைப்பர் நம்பெருமா னகிலத் தவரைக் காக்கவினை
யொவ்வா வனந்த சூரியர்பா லுயர்வேய் மகவாய்ப் பிறக்கின்று
செவ்வே மணியைத் தான்கொடுபோய்க் கொடுத்தா னென்று செப்பினரால்.

பெரிய சியரு ரைகேட்டுப் பெருகு களிப்போ டியாவர்களும்
புரியிற் சிறந்த கச்சிநின்று போந்த வனந்த சூரிகடாம்
பிரியா நிறைய மிற்புகுந்து பாதம் பணிந்த னோர்பெருமை
விரிய வுரைத்துக் கனத்திறத்தை விண்டு திருவி யெகலுற்றார். (ஙஅ)

அந்த ஞானர் வந்துபணித் தகல வனந்த சூரியர்தாங்
கந்த வனமார் புயவடவேங் கடமாற் போற்றி விடைகொண்டே
யெந்தை கச்சி யருளாள ரினைத்தா டொழுவான் றேவியொடுஞ்
சிந்தை முதிரு மவாவினராய்ச் சென்றங் கடைந்தா ரின்றனில். ()

தோதா ரம்மை கருமத்தாற் றோன்று மனக்கே மதிபத்து
மாதா வுதரம் வதிதலிச்சை வழியாற் றோன்று மவற்கிலையென்
றோதா நின்ற நாற்பொருளை யுலக மறிய வுணர்த்துவார்போற்
றீதே வியவி ராகமைவைக் கருப்ப மார்ந்து திகழ்ந்தனரால் (சஉ)

* கண்டை - மணி.

என்னும் கவிகா லாயிரத்து முந்நூற் றெழுபத் தொன்றினுற
நன்னுஞ் சுக்ல வருடமதி கன்னி யோண நாள்வரச்
சன்னி யுயர்வு மொப்புமிலா வளவி லொளியார் ரொருமகவை
யின்று முலகுந் தொழத்தோதா ரம்மை யுயிர்த்தார் வியநிலகில். ()

உம்ப ருலவுந் தினகரனை யொளியாற் சமழ்க்கப் புரிவித்தும்
பம்பு மெழிலா லங்கனையைப் பரிக்கும் வேளைப் பரிபவித்தே
யிம்பர் வியக்கு மியற்கையுறி வேய்ந்து தழைக்குந் திருமகவை
யம்மைப் பழிக்கு மலர்விழியா ளேக்கித் தாய நகமகிழ்ந்தார். (சஉ)

தந்தை யனந்த சூரிகளுந் தனைய னுதித்த திறங்கேட்டுச்
சிந்தை யுவப்பத் தடக்குடைந்து திருமான் மகிழ நாவினுரை
தந்த படியே விரைதான முதல புரிந்து சாதகன்மஞ்
செந்தண் மறைநேர் முகமலர்ந்து சிறப்பச் செய்தார் தேர்ச்சியுளார்.

மஞ்சு தோயுஞ் சிகரவட மலையா னருளு மகவினுக்கு
வஞ்சு மடக்கு மந்தனர்மு னவன்பேர் வைப்ப லெனமதித்து
விஞ்சு மறிவார் தந்தைதிரு வேங்க டாசா ரியரென்னத்
தஞ்ச மளிக்குந் திருநாமம் பன்னிரண் டுநாட் சாத்தினரால். (சச)

இருநான் கென்ன வருமதியி னின்றேன் றயிர்செய் யிவைகளலித்
தருமா வனத்தை லவனுதி சாரா தாகத் திருமானுக்
கொருவா வனமின் முன்னரளித் தொப்பின மகற்குப் பின்னளித்துத்
திருவார் சவள மூன்றுண்டிற் செய்து முடித்தார் நற்றினத்தே. ()

ஒளியார் புதல்வர்க் குபநயன மொருவா வெட்டு வருடத்திற்
களியாப் புரிய வக்குமரர் கடாம்பி யப்புள் ளாரிடத்திற்
றெளிவாய் வேத நான்கோதித் தேர்வுற் றங்கே சிகளிடத்தே
யெளிதாய்த் தருக்கம் வியாகரண மீமா மிசையா மிவையுணர்ந்தார்.

பின்னர்ச் சீபா டியமுதலாப் பிறங்கு நால்க ளாரியன்பா
லன்னர்ப் பயிலு மிவர் தம்மை நோக்கி யுயர்ந்தோர் நால்வேதத்
தன்னில் வியாதன் பிருதிகளிற் றனைநேர் கில்லா மனுவேத்தன்
பன்னற் கரிய காவியங்க ளவற்றிற் பரவும் வான்மீகி. (சஎ)



ஓத வரிய வேதாந்தத் தோக்கு போதா யனமுனிவன்
போத வரிய வியாகரண மதனிற் பொற்பார் பாணினியே
யேத நீக்குந் தருக்கத்தி லிசைகொள் கணாத மாமுனியே
பேதஞ் சிறிது மிலையென்ன நன்கு நாளும் பேசுவரால். (சஅ)

மற்றித் தகைய வேதாந்த குரவர் மனத்துக் கியைந்தவொரு
பெற்றித் தாய குலம்பருவஞ் சீல மாதி பெருமையெலா
முற்றக் கொளுமோர் கன்னிகை முறையின் மணந்தேயவருள்ளம்
பற்றிக் களிக்கும் படியின்பம் பலவு மளிப்பர் பண்பினுறேம். (சகூ)

தேவர் முனிவர் தொழுமயிந்தைப் பதிக்கட் சென்று பரிவதன
மேவுந் திருமான் மந்திரத்தை மெய்யன் போடு பயிறலா
லேவ மகற்று மெய்ப்பெருமா னிவர்முற் றோன்றி யருள்புரிந்து
பாவு மதுர கம்பீர பண்பார் விமல வாக்களித்தார். (ருo)

சீரின் மன்னும் வேதாந்தந் தெளிவார்க் கணியாய்த் திகழுமிவர்
நேரி னியாய பரிசுத்தி நியாய சுத்தாஞ் சனநூல்கள்
பாரில் வாதி யாங்கயங்கள் பாற்றும் பஞ்சா னனங்களென
வாரும் புகழச் செய்தளித்தா ரளவின் ஞானக் குன்றனையார். (ருக)

இன்னார் கவிகள் வாதிகளுக் கேயு முதன்மைத் தனம்வாய்ந்து
பன்னே ரிகந்த கவிகள்பொழி பரிசு மோர்ந்து கச்சியில்வாழ்
தன்னே ரில்லாப் பேரருளர் சாருங் குணங்கொண் டபிதானம்
பொன்னேர் கவிதார்க் கிகசிங்க மென்ன மகிழ்வீற் புகன்றனரால். ()

தகவு நீங்கும் வாதியராந் தாவ மவிக்கச் சலதரமாய்
நிகழும் வாக்கே யிவர்புகழ்க்கு நீங்கா தழுக்கா றுற்றெதிர்த்து
திகழும் வித்தி யாரணிய வெதிலைச் செயிக்க வவர்தாழ்ந்து
மிகவு நட்பாய் நம்மைப்போன் மேதா வியரா ரெனத்துதித்தார்.

மாற்றற் கரிய வைராக்ய மான்ப ரிவரே யெனயார்க்குந்
தேற்றற் குரிய *கரிவிசய நகர்மன் றிருவேங் கடத்திலிவ
ரேற்றத் துறைநர் னெழுதிவிடு நிருப நோக்கி யிவர்மறுப்பார்
மாற்றத் தரைத்து விடுத்தவைராக் கியபஞ் சகமா மெனுநூலே. ()

* கரி - சாணை.

கோயின் ஞான வேதாந்த கூரவர் கந்தை காளிந்தி
யாதி நதிக டிளைக்குதிரு வயோத்தி முதல பதிதொழுது
மாதி யாக வடபுலத்து வருவார் தமையும் வென்றமரைப்
போதி லிருப்பார் பணிகச்சி புரிக்குச் சீட ருடன்புக்கார். (௫௫)

வேறு.

வெலற்கரிய புயவலியார் விசயநக ரரசனவை மேவி வாதம், விலக்கரிய தெனப்புரியும் வித்தியா ரணியனக்கோப் பியனின் றோர்க்குக், கலக்கமிலா திருநிலையு முணர்ந்துரைத்த வுரையொன்றே காண்போர்க் கின்றோர், கலக்கக்கார் கடிநிலையிற் றுலைபோல்வா றொரும்பொருளை நன்கு காட்டும். (௫௬)

இத்தகையார் திருவயிர்ந்தை நகர்க்கெய்திப் பரிமுகனை யேத்தியன்றான், வித்தகமார் மனுவேவாதிக் கவிகள்பல வன்னவர்க்கு விருப்பிற் செய்து, சித்தமகிழ் வடனற்றப் பதியிடைநாட் பலகழித்துத் தினஞ்செ யென்றாழ்*, மூத்தமமாங் குலவேந்தர் பணியரங்கன் றாயிலரங்க முற்றா மன்றே. (௫௭)

வேறு.

அந்நகரி னுற்றபெரி யாருளாயி லங்க
ணன்னருளு றேவனு தினந்தினமே வெய்த
மன்னு † கிருட் டிணமிச்சி ரனையழிய வாதிற்
றன்னிகரி லாதவிவர் வென்றனர் தமிழ்க்கே. (௫௮)

வாதிலிவர் மேம்படு திறத்தினை மதித்து
மாதுறை திறத்தரங்கநாதர்மகிழ் வெய்தி
மேதகுபொழில் வேதாந்த தேசிக னெனப்பே
ரோதினர்த மர்க்ககரி னைப்பிலுபரி சாக. (௫௯)

வேறு.

அந்தி லந்த வபிதான மளிக்க வரங்க நாயகியா
ரிந்தக் கவிதார்க் கிகசிம்மத் தியல்பு நோக்கிப் பரிசாகத்
தந்தாள் சருவ தந்திர சுதந்திர னென்னுந் தனிநாமந்
திந்தார் புவியில் வைணவத்தின் றிறத்தை விளக்குந் தேசிகர்க்கே. ()

* என்றாழ் - சூரியன். † கிருட்டிண மிச்சிரர் - பிரபோதசந்திரோதய நூலாசிரியர்.



நல்லையில்சீர்த் திருஞானத் திக்கூரவர் பெருமானே
சொல்லும்வகை பாதுகா சகத்திரமென் றொருநூல்செய்
தல்லுறப் * பதகமல சகத்திரரை யறத்தாழ்த்தி
வெல்லுதிற னறிந்தவர்க்கோர் மிக்கபரி வாற்புகழ்ந்தார். (௬௧)

மற்றொருநாற் றருக்கரிடு தூசகத்தான் மாலரங்கத்
துற்றவர்கட் குறையிடக்கண் டோமொழிய வரசவனை
பற்றுபர னைப்பாவாற் பரவியிவ ணமிடக்கண்
முற்றமொழித் தருளகர் முன்னையினுஞ் சிறந்தன்றே. (௬௨)

திருவரங்கப் பதிதுறந்து திருவனையக் காடியாய்க்
குருகைநக ராழ்வரைக் கும்பிட்டுச் சோலைமலை
மருவுதிருப் பதிகள்பல வணங்கியத்தி கிரிப்பெருமான்
திருவடித்தா மரைதாழ்ந்து திருக்கச்சி நகரணைந்தார். (௬௩)

அவ்வயினிற் றேசிகர்பா லழுக்காறு கொள்ளுமதித்
தெவ்வர்சில ரரவாட்டுஞ் செய்கையறன் மாறாக
மெவ்வயிறைந் திடவிவர்பா லேவவவற் றைத்தடுத்துச்
செவ்வயினிற் சேர்க்கருட தண்டகமொன் றுரைசெய்ய. (௬௪)

அக்கணத்தி லேசங்க பாலனொரு மாவமதைப்
புக்குவண னைடுத்தேதக்க ‡ கவுசிகனும் புல்லதிவேன்
பக்கலருள் புரிகவெனப் பாம்பதனை யேட்டித்துத்
துக்கமொழி கெனவள்க்கத் துதித்தவனு மேகினன். (௬௫)

கருநடநில கிருமெழிற் கன்னனுரைத் தருள்கீதை
திருவாகிந் முடையவர்செய் சிபாடியம்முதல
குருகைநகர்ச் சடகோபன் கூறுதிரு வாய்மொழியிற்
பொருள்பல நூலாய்ந்து நாட்களிவை போக்குவார். (௬௬)

பாதுகதி கவுத்துவத்தாற் பரிந்தன தொளிபதனாற்
சிலமுறும் பருணிதர்தம் வித்தையினாற் றிகழ்தலினாக்

* பதகமல சகத்திரர் - அழகியமணவாளப்பெருமாள்நயினார்; கவிசிம்மனென்றும் பெயர்.

‡ கவுசிகன் - பாம்பாட்டி.

கோலமுறும் புகழ்வரதா சாரியப்பேர் குமாரரித்த
காலமிசை மிகவிளக்கத் தந்தனர்நங் குரவர்பிரான். (௬௭)

இத்தகையா ரிப்பதியி லிவ்வுலகஞ் செய்தவத்தா
லுத்தமமா மருச்சையுரு வாய்பற்றி யொளிர்கின்றார்
சித்தமுவப் புடனிவர்க்குச் செய்பணியே பணியதன்மிக்
குத்தமமொன் றிலையென்னத் தாசருளத் தறவுன்னி. (௬௮)

தொழுதெழுந்து திருத்தளியைச் சூழ்வந்து பன்முறைகள்
பழுதறமித் திருக்கோயில் பாங்குபெறப் புரிவெனென
வெழுதரும்பே ராசையிற்றம் மினவணிகர் வாழ்நாட்டிற்
பொழிறிகழு மரியையெனுந் தாமுதித்த புரியணைந்தார். (௬௯)

வண்மையினிற் கன்னனையும் வடதிசைமன் னனைத்தனத்து
முண்மையினிற் பொருவாருக் குணர்த்தினர்தம் முளக்கிடக்கை
யெண்மையினிற் களிப்பினரா யிவர்பணிக்கு வேண்டுபொரு
ளொண்மையினி லீத்துவந்தா ரொப்பில்பெருங் குடிப்பிறந்தார். ()

மாசின்மதி யுடைத்தாசர் மனக்கொண்ட செயன்முடிப்பா
னேசமுடன் வணிகர்தரு நிதியங் கைக்கொண்டு
பாசமொழித் திடுபரம ஞானியர்பல் லோர்பயிலுந்
தேசுதிகழ் மணிமாடத் திருக்கச்சி நகர்சென்றார். (௭௧)

அங்கணைந்து நிகமாந்த வாசிரியற் கொளியோங்கு
பொங்கெழிலார் மண்டபமுங் கோபுரமும் புரிசைகளுந்
தங்குபெரு மன்றமிவை சார்ந்துளதா யொருகோயில்
புங்கவரு முளம்வியந்து போற்றிசைக்கப் புரிவித்தார். (௭௨)

விண்ணோங்கு கோபுரத்தின் மேனிலவு முடுக்கணங்க
டண்ணோங்கு வெண்டரளத் தாமமெனத் தயங்கியதன்
கண்ணோங்கச் சிகரியெழில் கண்டுமதி மேற்செல்லா
தெண்ணோங்க நிற்குமதற் கிசைத்தகடு மணியேய்ப்ப. (௭௩)

மேனிலவு * திரிபதகை முழுகியெழும் விபுதரதன்
பானிலவு மிச்சிகரிப் பொற்சிகரப் பந்தியினைத்

* திரிபதகை - கங்கை.



தேனுலவு பங்கயத்தின் செழுமொக்கு வெனநினையக்
கானுலவு தளிர்க்கரத்தாற் கனைத்துமுகங் களிகூர்வரால். (௭௪)

இசையளக்க வொளிவிடுத்தச் சேணிவர்ந்த சிக்கிடங்கொண்
டிசைவிளக்கப் படிகத்தா லியற்றிடுமவ் வெயினெறிக்கு
நசையளிக்கும் கதிராகி நன்னுதலாக் கந்துறந்து
வசையறுத்திம் மதிலிலா மகளிர்வினை யாட்டயர்வார். (௭௫)

விண்டலத்து மொளிவிடுக்கும் வேதாந்த குருநியமன்
கண்டுபணி தரில்விகல கன்மமதன் றொழிற்றிறமுட்
கொண்டுவியந் தெக்கலையுங் குடிகொண்ட குரவர்பிரான்
கெண்டகுசிற் பச்சிறப்பின் வியைந்ததனி தன்றென்பான். (௭௬)

இந்தியத் திடைக்குயிற்றும் பலமணிக ளியற்றுமொளி
யெந்நிலமும் பரவிபட விருளோச்சி யென்றாற்போற்
றன்னுகதி ரொருவாது சொரிதலினு மிரவிடத்தும்
மன்னுசல சந்தசக்ர வாளமுக மலர்ந்தொளிரும். (௭௭)

உயிரிருந்தா லெனுந்தகைய வொளியங்கள் பல்லிடமுஞ்
செயிரகந்து விளக்கவமை நோக்குதற்கே திகழ்மணிப்பூண்
வெயிலிலங்கு விபுதரெலாம் விழியிமையா திருப்பரெனி
னெயிலிலங்கு மிக்கோட்டத் தியல்பெவராற் சொலற்பாற்றே. (௭௮)

சித்தசனூர் கணையிலக்கைத் தீர்த்துதிகழ் தருதாசன்
சித்தமுவந் தித்தகைய சினகரத்தி லெழுந்தருளும்
வித்தகனை வேதாந்த தேசிகனை மெய்யன்பாற்
பத்தியுடன் மூவாண்டு பராவுயந்தப் பதிவாழ்ந்தார். (௭௯)

பாரெங்கும் புகழ்க்கச்சிப் பதியிலிவ ருறைநாளிற்
சாரங்க முதற்படைக டாங்குதிருக் கரத்தெம்மா
னாரங்கொ ழுமார்ப னருளாளன் றனைப்போற்றச்
சீரங்க விலக்குவப்போய்த் தேசிகரப் பதிக்கெழுந்தார். (௮௦)

எழுந்தருளித் திசைமுகனு மியற்றுமப மேதத்தச்
செழுந்தகைய வுத்தரவே திக்தலைத்தி லவதரித்த

தொழுந்தகைப்பே ரருளாளன் கமலேயிவர் துணைப்பதங்கள்
கெழுந்தகையன் பொடுபணிந்து *தாபதம்போய்க் கினர்ந்தனரால்.()

வேறு.

ஆசிரியர் தாபதம்புக் கடிபோற்றித் தாசருற வதன்பி னிங்ஙன்
றேசுபுரி தருதெய்வ நாயகனே யெனதான்மாத் திகழக் காத்தோ
ருசிவ னருளானே யவ்வரச சிராதிசுதி யனைபு மென்று
வேசிறன துளத்தெண்ணிக் கச்சிநகர் தனிற்குரவரிருந்தார்மன்னோ.

உலகுபுரி கருமமதற் கொருவரம்பாய் வேதமுத லுயர்நா லியாவு
மிலகியொளிர் தரற்கிடனாயினையயரங்கவிலக்குவப்பேரெதிகள்கோமா
னலகில்பெரும் புகழுடனேயவ்வமரர்கணமெதிர்கொண் டழைப்பச்சென்று
நிலவுமொளி திரியாத திருநாட்டை யலங்கரித்தானிகர்வேறில்லான்.

பார்த்தல்பரிசித்தலினுற்பவமகற்றிப்பவித்திரஞ்செய்பண்புவாய்ந்த
தீர்த்தன்விடு திருமேனி தனைக்கச்சி நகருறையுஞ் சீர்சால் மேலோர்
கூர்த்தமதி யுடைத்தாச ரியற்றுயிருந் தாவனத்திற் குன்று வன்பி
னீர்த்தவுல கிடையாருந் தொழுதுய்யவெழுந்தருளி நிலவச்செய்தார்.

வேறு.

பின்னர்த் தாசர்தம் பேசிடு தெய்வமாய்த்
தன்னு நீர்த்தனித் தொல்புவி நீத்தகை
யுன்னி யாரநு ருற்றவர் நல்லுரு
முன்னின் றேத்திக் களிப்பர் முறையினே. (அரு)

வேறு.

திருவனந்த வாவியிடைத் தினமாடித் தாசரப்பே
ரருளாளன் றிருவடிக ளிணைத்தேத்தி வைணவராந்
தெருளார்ந் மறையவர்தாள் சிரஞ்சேர்த்தி யிவ்வண்ணம்
பரிவாருந் தொண்டியற்றிப் பல்பொழுது கழிப்பாரால். (அசு)

கைங்கரியச் சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள் கக௦.

---

*தாபதம் - தவத்தினருறையுள்.

# கரு-வது பரமபதம் பெறு சருக்கம்.

அத்திகிரி முன்னுரைசெய் தாசருற வன்னோர்
பத்தினியெ னுஞ்சனகி யார்பிணிப்பற் றுன்று
மத்தலத்து றாய்மவுலி யண்ணலடி போற்றிச்
சித்தநலி வின்றியமர் செய்கையின ராவார். (க)

நோயிலொரு திங்கள்செல நோன்புடைய ராய
தாயனைய சானகி யெனும்பெயரி னார்க்குத்
தூயவடி தந்துசுக வாழ்வுதரு நோக்க
மேயதிரு மாலொரு வினைத்திற முவந்தான். (உ)

மிக்கநல முற்றொளிரும் வேங்கடவம் மாள்போர்ச்
செக்கமல நாபியுறை சிந்தையனாற் சிலை
சக்கர முதற்குறி தரித்தவள் சதுர்த்தை
மெய்க்கனவு புக்கொருரை விண்டனன் விரித்தே. (ஙு)

வேறு.

வளம்பயிலுங் கச்சியினில் வாரணமார்த் திடுமறுகின் மன்னு
மேல்பால், விளங்குமொரு மனையிலிரா மானுசதா சப்பெயரின் மே
லோர் வாழ்வா, ரவந்தறிந்தற் கரியபுக ழானந்தம தாம்பர மென்
பாற் சேர்ந்துக், கிளர்தொளிருங் கிருதார்த்தர் சுயம்பலமாங் கைங்
கரியங் கெழுமச் செய்வார். (ச)

வேறு.

ஆயபிழை பொன்றுயிறர்க் காற்றுகிலர் தம்பாற்
றீயநலி வெய்தவரு செய்கைசிலர் செய்யி
லேயகரு மப்பலனி தென்னுடைய தன்றூன்
மாயைபினின் மால்செய்வினை யாட்டென மதிப்பார். (ரு)

அருங்கலி றளித்தருளு மென்றனடி யார்கள்
விரும்புபணி யெய்தின்மகிழ் வெய்தியக திந்நேல்
வருத்துயர மெய்துவரன் னார்விடய போகத்
திருங்கவியு மின்மையையு மெய்துகில ரென்றும். (சு)

அல்லலொரு வர்க்குமில ராற்றில திருப்ப
வொல்லுகிய மின்றிமுனி வுற்றிடினு மன்றோர்ப்
புல்லியொரு புன்பிழை புரிந்திலெனிப் போழ்து
தொல்லைவினை போன்மது துறந்தருள்க வென்பார். (௭)

பராபர மறிந்துபுரு டார்த்தமிசை பண்பார்
விராவரு மவாவுடையார் மெய்யிலதை வேண்டி
யிராகமுறு வாரிட மிரங்கிமனி நிற்க
* வராடமதை வெஃகிலினை மாண்பென வியப்பார். (௮)

தூயதவ ளத்தவெழி லுற்றவிவர் கீர்த்தி
மேயவுல கங்களிடை மிக்கவிருள் போக்கச்
சாயுமிட மின்றியவை தாமதர்க ளுள்ளொன்
பாயதுகை யாயமலி பற்றியுறு மெய்யே. (௯)

இப்பரி சுயர்ந்தவவ ரன்பரெனக் காவ
ரப்பரிசில் யாமுமவர்க் கன்புடைய மன்னு
ரொப்பரிய தேசிமுனி யுற்றுடைய னீபோ
யிப்பொழு தியற்றுபணி யெற்கியற்ற லொப்பாம். (௰)

வேறு.

எனவருளு மருளாள னினியமொழி கேட்டுமகிழ்ந் தெழுந்து காலை, மனீவழுக்கற் றொளிர்தருமேங் கடவம்மான் மனக்கினியார் தமக்கிம் மாற்று மனக்குறைத் தனைக்கணவி லெனக்கூறிப் பெரும்பூதூ ரதனி னீங்கி, வினையொழித் திடுதாசர் மனக்கியைந்த பணிபுரிய விரைந்தா னன்றே. (௧௧)

இவட்குரைத்த வன்றிரவே யருளாளன் சானகியார் கனவி னெய்திப், பவக்கடனீத் திடுதங்காய் பருவரலுற் றனைநினக்கும் பணிசெய் தற்கிங், குவப்புடைய வேங்கடவம் மானென்பா னம்முறையா லுறுவா னன்பா ரவத்தனுவி லொன்பானு னம்மொளிரீ சார்வையெனச் சாற்றிப் போனான். (௧௨)

பெரும்பூதூர் நின்றுவரும் வேங்கடவம் மானெங்கள் பெம்மான் கச்சி, விரும்பியமர் தாசரொடு சானகியார் தமைப்போற்றி

* வராடம் - பலகறை.



விளைந்த கூறத், திருக்குமனத் தாசர்திரு மால்செயலை வியந்தனரா யச் செய்க வென்ன, வருந்துதிரேர் சானகியார்க் காயபணி யியற்றி னனவ் வணங்கு தானே. (௧௩)

பூதூர்மின் வேண்டுபணி புரிதரச்சின் னாளகன்று போயிற் றாக
மீதாரு நோயினுடன் மிகமெலியச் சானகியார் கணவர்ப் போற்றித்
தாதாரு மலரான்மன் றன்னடியி னெளியெனக்குத் தருதற் கின்றவ்
வேதாரின் மதியொன்பா னுளியைத் தனியமனன் கருள்கவென்றார்.

தாசரிவ்வா றுரைக்குமனை யாருரையு மவருடலின் றளர்வு நோக்கிப், பேசரிய பரலோக கமனத்தை மனக்கொண்டு பெட்போ டாசா, நாசகலக் கருணையினு லுரைத்தருளு முயர்நெறியை யன்போ டாங்குப், பாசவினை தெறுஞானச் சானகியார் களிமகிழப் பகர்ந்தார் மாதோ. (௧௫)

பலபலவாம் பிறந்தைதரு பவத்தினுக்குக் கழுவாயாய்ப் பரந்தி யாச நிலவுறக்கொண் டுநியமம் வழுவாதார்க் குறுதியினி னிமல மாகிக் குலவுதிரு வடியிணைக டருதிருமால் குரம்பையொழித் திடுதற் காகச் சலவுபிணி யாதியவா மொருநிபத்தை யஞ்ஞான்று குழச் செய்வார்.

இவ்வாற்றி னுடல்விடுங்கா லையபொழுதில் விமலையிறை யிவணி னின்றுஞ், செவ்வாய வறம்பவத்தைப் பிரித்தலையின் பலனுற்றார் செற்றார்க் கிந்து, தெவ்வோவா யிரங்கண்ணன் முக்கண்ணனெண்கண்ணன் றெற்கின் கண்ணாற், கெவ்வாறே வவ்வாற்றி னியமனின்றி யுடல்விடுமா றிசையிப் பானுல். (௧௭)

இந்தியங்கள் பத்தினையு மியைபமனத் திடைக்கூட்டி மனத்தைப் பின்னர்த், தொந்தமுறும் பிராணனிலும் பிராணனை யான் மாவிடத்துத் தொகுத்தான் மாவைப், பந்தமுறச் சூக்குமபூ தங்களின்பாற் படுத்திபிந்தப் படியாற் சிவ, னோர்துறலுக் கிரங்கினனாய்ப் பரமான்மா வதைத்தன்பா னன்னா வைத்து. (௧௮)

துயர்நீக்கி நாற்றொன்றுப்ச் சோலுப்பிரம நாடிவழித் துன்னவைப்பான், மயர்நீக்கு மவ்வமயம் வழிநடத்து மக்கியென்பான் வந்து போற்றி, யுயர்வாரு முபசார மீந்தநன தெல்லைவரை யுய்ப்

யான் பின்ன, ரியறருகற் பகனுத்த ராயணமான் டெனுமவற்றிற் கிசைதெய் வங்கள். (௧௯)

முத்திவழிச் செலுமிவனை முதத்தினராய்ப் புரிபூசை முற்று மாற்றி, நத்திவழி நடத்துகிற்பர் வாயுதே வனன்று*பிர பன்ன னுமிவ், வுத்தமனை யருச்சித்துத் தன்வருந்து வனைவிடுப்ப னுப்பா லின்னேன், சுத்தமுறுஞ் சக்கரத்தின் றுளைபோனும் வழிச்சென்று † சூரற் சேர்வான். (௨௦)

வேறு.

சேர்தருமவ் வாதவனுற் செய்சிறப்புப் பலபெற்று
வார்தருமா டம்பரத்தின் புழைபோனும் வழிச்சென்று
வர்தருதன் னிலமுன்ன ரெதிர்வந்து வணங்கியுள
சீர்தருமா வெண்மதியைச் செவ்வனே சென்றடைவான். (௨௧)

அப்பால்வின் னவர்வணங்கு மலகில்புக ழுடையோனு
யொப்போத லோவு‡மப வர்க்கவழி யுறுமிவனை
மைப்போதிற் கயிரவங்கண் மலர்விக்கு மதியெதிர்ந்து
தப்போதற் கருமுகமன் றந்துநெறி செலவிடுப்பான். (௨௨)

அவனின்றுந் துந்துபியின் புழைபோது மருநெறியி
லிவனைக ||வமானவனங் கெதிர்போற்றி யுடன்போதத்
தவனுற்றன் பரம்பரமன் றாமரைத்தா ளிணையினில்னவப்
பவனுமிவ் வான்மாவைப் புனற்கிறைவன் பரிவினெடும். (௨௩)

புக்கெதிர்ந்து போற்றிசைத்துத் தன்¶னடவைப் புறத்தப்பான்
றக்கவமா னவனுடனே சார்தருமிப் பிரபனனை
முக்கடம்பெய் வெண்களிற்று முதல்வனருக் கியமாதி
மிக்கபல பணிபுரிந்து தன்§வயவை யீகிடுப்பான். (௨௪)

* பிரபன்னன் - பிரபத்தியுடையான். † சூரன் - சூரியன்.

‡ அபவர்க்கம் - மோக்ஷம்.

|| அமானவன் - விரசையினக்கரையிலிருந்து தன் கரஸ்பரிசத்தால் பிராகிருத சரீரம் போக்கும் ஓர் நித்ய சூரி.

¶ நடவை - வழி.

§ வயவை - வழி.



அன்னணமங் கெய்துகின்ற வெழிற்சூரி தனைப்பிரமன்
முன்னணைந்து தொழுதெழுந்து தனதாக்க முழுதளித்துத்
தன்னுகளி பயமன்பு தொருபத்தி வணக்கமிவை
மன்னினனுய்ப் பின்றொடர்ந்து வருவான்ற னெல்லைவரை. (௨௫)

பின்னிவனைம் பூதமுய ரண்டமவற் றிடைப்பிறங்குந்
துன்னுபல வுலகமண்ட கடாகமொடு சூழுமா
மன்னுமுமா வரணம்போய் வைகுந்தத் தெல்லையுறுந்
தன்னிகரி லழுதாரும் விரசைநதி தனைச்சார்வன். (௨௬)

சார்ந்ததிரு மமைதூரந் தன்னமையுறு மதின்மூழ்கிச்
சேர்ந்தருக் குமவுடலர் தீர்த்துவிணை விளிற்கடந்து
நேர்ந்தவமா னவன்கைதொட வரிட்டமதை நீத்தனனு
யார்ந்திடுசா லோக்கியசா ரூப்பியமு மடைவானல். (௨௭)

வேறு.

ஆய சிறப்பின் வைகுந்த வுலகந் தமர்ந்த தாய்த்திருமான்
மேய விருப்பிற் பொருந்துவதாய் மெய்ம்மை ஞானந் தினர்க்கன்றி
யேய வரிதாய்க் காணரி தாம மிலதா யெஞ்ஞான்றுந்
தூய தாகிச் சுயவொளியாய்ச் சொல்லு மூன்று சுடர்களுக்கும். ()

மேலாய்ச் சுத்த தத்துவத்தை மேவி யோகர்க் காக்கரிதா
யேல வுயர்வுற் றுயரின்ப மியையு நகர மெதிர்நோக்கிச்
சால வணங்கிப் பிராகிருத சரீர நீத்தோன் செல்காலை
யோல மிகுத்த வரம்ணியமென் றுரைசா லிரண்டு கடல்களையும். ()

நறையா ருய்யா னனங்களையு நன்று மணிமா வரைகளையுங்
குறையா வாறு குளங்களையுங் கும்பிட் டேத்தி யகங்களித்து
நிறையா வரம் மதியமெனுஞ் சரசை யடைந்து நிகரரிய
இறையார் சோம சவனமதை யேற்ற மகிழ்வோ டெய்துவனல். ()

அந்த வனத்தைத் யடைகாலை யன்னை லருளா லைஞ்ஞூறு
சந்த மிகுத்த வரமகளிர் தயங்கு பொன்னி னடைகலன்
முந்து மினவகள் கைக்கொண்டு முறையி னிவனை யலங்கரித்த
றந்த பின்னர்த் தில்லியப்போர் தாங்குந் தருவா தியசார்வான். (௩௦)

சார்ந்திதம் பெருமான் றிவ்யமணக் தகைசா லிரத மொப்பிலொளி
சேர்ந்த திறத்தாற் சீரகுணஞ் சிறக்க மிக்கோ ளுகிலயலா
மோர்ந்தங் கயோத்தி யெனும்பெயரி னொருமா நகரை யடைகாலைப்
போந்தப் பரம பதநின்றாம் பிரசா பதியிற் றிரளென்னும். (௩௨)

தேவ ரிருவர் வருகவெனச் செப்பத் திகழு மத்தலைத்து
மேவும் பண்பார் சூரிகளு மிக்க முகமன் செய்தழைப்ப
யாவ ருடனு மடைந்தின்றே னெழில்கொள் பரம பதம்புகுந்து
தாவி னகரின் மணிக்கிரிபோற் றயங்கு மாட மறுகணைவான். (௩௩)

ஏய காலை யத்தலத்தி னிமையோ ரின்றேன் றிருவடியைத்
தூய நீர்கொண் டேனிலக்கத் துலங்குந் தீப மரமகளி
ராய மேந்தி யெதிர்கொள்ள வழகார் விமானந் தனித்தாக
வாய பந்தப் பிரபணனைப் பிரம சித்தி யடைந்திடும்பின். (௩௪)

வணங்கி மணிமா மண்டபத்தின் மருங்கிற் போதச் சண்டன்முதற்
குணங்கொ ளொவார பாலகருங் குமுத ருதி கணதிபரு
மிணங்க நோக்க விவன்பெருகு மின்ப வெள்ளத் திடைமூழ்கி
மணங்கொ டாரார் பெரியதிரு வடியை யடைந்து மகிழ்வானால். ()

பின்னர்ப் பராப ரன்குணத்தைப் பேசிப் புகழப் பிராகிருதர்
துன்னு மவையை யடைந்தணியின் வடிவு திகழுஞ் சூரிகளோ
நன்ன ரேத்தக் குரவர்பரம் பரையை நண்ணித் தொழுதப்பா
லுன்னற் கரிய வெம்பெருமா னுவப்பி னுறைசிம் மாசனமாம். (௩௬)

முந்துந் தகையா தாரசத்தி முதலாந் தத்து வங்களுக்கு
வந்தித் தொழுகு மதிட்டான தெய்வந் தம்மை வயங்கியுறு
மந்த மமரு மங்கங்க ளாக வுடைத்தா யமர்ந்தொளிசெய்
விந்தை யுலவும் பரியங்க மேவல் காணூஉ மகிழ்வானே. (௩௭)

நன்னு மந்தி விதவெட்டு நறுமென் பொகுட்டு முடைக்கமலத்
தென்னும் மிதழ்க ளெட்டிடத்து மிலங்கு தாமப் பொகுட்டிடத்தும்
வன்ன மகளி ரொன்பதின்மர் மருவக் கவரிக் கரத்தினராய்க்
கண்ணிற் கண்டு சொலற்கரிய முத்தன் களிக்கு மறப்பால். (௩௮)

மணிக ளோரா யிரமுடியும் வயங்குஞ் சுவேத வொளிகளுவி
யணிகொ ளுருவு மமைந்ததிரு வநந்தாழ் வானும் வழுதிமைந்



திணையில் கருணை யலைகொழிக்கு நீனக்கண் ணேறாகி நிலக்காதி
துணைகொள்காங்கள் குவித்தின்றேன் றொழுதமலர்த்தாணிற்பானால்.

ஓங்கு குரவன் றிருநோக்கா லொப்பி லின்றேன் பரிசிக்கத்
தேங்கு சுகமோ டமுதுயர்வு செம்மை மனமா ரனத்தன்பிலைசப்
பாங்க ரிமையோர் வணங்குபர வாசு தேவன் பாலணைந்தே
யாங்கு சமீபத் திருத்தலெனுஞ் சாமீப் பியமு மடைவானே. (௪௰)

வேறு.

தெய்வநிக ழிடதுதிரு வடியை நீட்டி வலதுதிரு வடிமுடக்கித் திகழ்வ லக்கை, மொய்யொளிசெய் முழந்தாளின் மீது வைத்து மொய்ம்புபெறு மனத்தனுடை யிடக்கை யூன்றிச், செய்யகடா விடுந் திகிரி சங்க மற்றைத் திருக்கரங்க ளிரண்டினுமுஞ் சிறக்கத் தாங்கித், துய்யமனை பூணுநிறு மேவும் பரவாசு தேவனையிச் சுகுணன் காண்பான். (௪௧)

வேறு.

வடிவங் குளிர்ச்சி கம்பீரம் வாய்ந்த பகவன் கண்ணருட்கு
விடய மான விவனவன்றன் விமலப் பதங்கள் சிரம்வைத்து
முடிவி லின்ப மடைந்தபரி யங்க மேறி மொழிசனகன்
மடியின் மேவி மகிழ்பிள்ளங் குழவி நிகர வயங்குவனால். (௪௨)

தேவ தேவ னிவன்மொழியைக் கேட்க வுளத்துச் சிந்தித்தி
யாவ னுவாய் நீயென்ன விவனே விளைவுத் தேவரீர்
கோவில் தாச னடிகளவ தார மாகு முயர்குரவன்
றாவி லருளா லுமதுதிருச் சரண்க ளடைந்தே னென்மொழிவான்.

கோதி லிந்த மொழியையிவன் கூறத் திருமா றிருவருளா
லேது நீங்க லிவனெடுமா ளென்னி யவாவுங் கைங்கரியப்
போத மடைந்தே பேரின்பப் புணரி திளைத்துப் பிறப்பகன்று
நாத னுறைப்பப் போகங்க ளன்று நான்காம் பதம்பெறுவன். (௪௪)

என்று சொற்ற தன்கணவ ரினிய மொழிகள் செவிக்கொண்டு
துன்று நிறையார் சானகியார் துணைவர் துணைத்தா டொழுதேத்தி
நன்று குரவன் றனையிதப் நன்னா ளைந்தில் வடலெழுந்தே
யென்றுங் கலங்காப் பரமபத மெய்திச் சிறந்தா ரிணையில்லார். (௪௫)

போற்றுந் தகைசால் மாநுசனார் புனிதமா நீத்த மனைவியர்க்கந்
தேற்ற மபரக் கிரியைகளை யியற்றிப் பெரியோர் விடைபெற்றே
யூற்று நறவந் துழாய்மவுலி யுறையு மரிமை வரவுன்னித்
தேற்று மாசான் முடநரும் பிருந்தா வனமுஞ் சேவித்து. (௪௬)

புறத்திற் போந்து வழிக்கொண்டு பொருந்து மிடையி னுளபதிகள்
சிறக்கத் தாழ்ந்து திருமாப்பன் செந்தா மரைசே ரடியிணைக்கட்
டுறந்த விழைபுனற் றினம்பணியுஞ் செம்மை யோர்க ளுறைநீபோ
யறத்திற் றிரியா ரமராரிமையப் பதியைத் தாச ரடைந்தனரால். (௪௭)

குலவு மந்தப் பதியுறையுங் கொண்டல் வண்ண னிணையடிக
ளிலவு வகத்துக் கொண்டேமகிழ் கிரம்பி யெம்மா னருச்சகரா
னலமொ டளிக்குந் துழாய்தீர்த்தஞ் சந்தஞ் சடாரி சுயங்கேற்றுத்
தலைமிற் சிறந்த மிசுதாசர் தமதாச் சிரமந் தனைச்சார்ந்தார். (௪௮)

பொய்கை யாழ்வார் முதலானோர் புகலு மறைசேர் பாசுரங்க
ளைப்பும் வகைய தெனப்பொருளோ டோதி யதனைப் பரிபொழித்து
வைய மேத்து மல்வாழ்வார் வருநாள் விழவை மானுவப்பச்
செய்யு நெறிகள் வழுவாது சிறப்பிற் புரிந்த ரப்பதியில். (௪௯)

மற்றப் பதியி னிகமாந்த குரவன் பவனி வரற்குரித்தாய்
முற்றும் பணியா லோரிரத முடித்துக் கன்னி மதியோனுந்
துற்ற விழவைப் புரிவித்தே யொழியா தகவு தொழும்புரியச்
சொற்ற தனமு மளித்துள்ளார் சோர்வின் றின்று மிசழுமது. (௫0)

ஓதுமரியை யெனும்பதியி லோக்கும் அணிகர் தலைக்கொண்டு
வேத நாதன் றிருத்தளியில் விளங்கு மதின்மண் டபமாதி
போதச் சிறந்து முன்னைவிழாப் பொலியப் புரிவித் தனர்மேலோர்க்
கேதுநீக்கு மானுவக்கும் பணியை யியற்ற வியல்பாமே. (௫௧)

கரியா னுவானு னவதீதக் கையா னாடி னடித்தானை
யரிதப் புனைபுரிந்தன் பேயா டாழ்வார் திருப்பா சுரப்போலிப்
பெரியார் பாக வதர்களையும் பெரியா ராவி வணங்கிநிலை
திரியா திந்த வாழுதினக் காலங் கழிப்பர் செவ்வியிலே. (௫௨)

மிக்க வொளிசேர் டிவ்வனமாம் விளங்கு நாளிற் பதுமைமிறை
செக்கர்க் கமலத் தன்னடியி லிணைக்கச் சேர்க்கச் சிந்தித்தே



யொக்கு மிவர்க்குத் தம்முட்ல மொழியுங் கால மளித்தாலிப்
புக்க திறனை யளவறிந்து கொள்ளு மாறு புரிவித்தான். (௫௩)

அறியுந் தாசர் புலிக்குன்றத் தமருந் வங்கி புரமுடைய
நெறியி னீங்கா வேதாந்த சாரி யார்செய் நிறைந்தகலைச்
செறிவி னறிவார் திருமலையா சாரி யாரைச் சென்றேத்தித்
துறையை விளக்கும் பரமபத சோபா னத்தை யோதினரால். ( )

உணரு நாளின் மித்திரரா மொருவர்க் கிவர்தாம் பரமபதம்
புணருந் திறத்தை வேறுய பொருளா லுணரத் தமதிலெரி
புணவாக கொள்ளப் படுஞ்சின்னு ருள்ளே யதனைப் புத்தகங்க
ளனைவும் பெட்டி முதலவற்றை யப்பா லுய்ப்பெ னவுரைத்தார்.

நேச நிறைந்த மனத்தினராய் நிலவுந் திருமா ளரிபுகுந்தே
யீச னடிகள் பணிந்தேத்தி யிணைந்த மாலை துழாய்தீர்த்தம்
பாச மொழிக்குஞ் சடாரிபரி வட்டம் *பமரம் பரிந்தேற்றுத்
தாசர் மலர்க்கை குவித்தொருவின் னைப்பாந் தாழ்ந்து சாற்றினரால்.

கருணைக் கடலே யடியார்வினை கடத்துந் திருவேங் கடத்தானை
யருணைப் பதுமந் திகிரிவளை யாதி ரேகை யமர்கரத்தா
யிருணேர் ஞால மிதுநீக்கி யொளியேன் பரம பதமடைந்துன்
றருணமலர்ப்பொற்பதஞ்சிரத்துத்தாங்கிமகிழும்வேட்கையுளேன்.

என்று புகன்றாச் சகராதி யிவர்பாற் கச்சி நகர்க்கடியே
னின்று செல்லு மாசையுளே னிக விடையென் றேற்றவனந்
தின்றந் நகரிற் பெரியோனைத் தொழுது நம்பா லறிந்தறியா
தோன்றச்செய்தபிழைகளுளங்கொள்ளாதருண்மென்றோதினரே.

மும்மை புணர்ந்த பிரபன்ன முகுந்த னுவப்ப வுடல்விடுக்காற்
செம்மை புதுமா தானங்கள் செயற்பாற் றென்று நூல்சொலலான்
மெய்ம்மை யறிந்த தாசருநல் விழுப்பம் வாய்ந்த வேதியர்க
டம்மிற் சிலர்க்கு வேண்டுபொரு டனையளித்தேயுளந்தளிர்த்தார்.

* பமரம் - சந்தனம்.

வையம் புகழும் வேதாந்த குரவன் றிருவாய் மலர்ந்தருளால்
பொய்யி லன்பிற் கேட்டவர் போக்கிற் றடத்த மதியினராய்
மெய்மை யுணர்ந்துந் தன்னுசான் விமலப் பதங்க ளுளத்தென்னி
யெய்துங் கால மெதிர்நோக்கி யிருந்தா ரறிவி னிலையில்லார். (௬௦)

இறுதி யெய்த வொருநிபத்தை யின்றி யெய்தா தாதலினே
பொறிசேர் மாய னேர்மான நியித்த மிவர்க்குப் புகச்செய்ய
வறிவி னிவரு மனுபவித்தற் காமி தென்றே யகத்தெளிந்து
பறையுங் காலங் குறித்தமனை மதனை யெதிர்பார்ப் பவரானார். ()

திருமா னீர்த்தஞ் சீபாத தீர்த்த மெருந்தித் துளபவிரைந்
மருவார் பதும பவித்திரமா மாலை யணிந்து துவையமது
வொருவா தன்பிற் றிருவாக்கி னுரைத்து மலர்மின் பதியடிக
டிருகா வுளத்தின் மிசைவைத்துத் திகழ்ந்தா ரெவருந் திகரில்லார்.

நிகரி லொளியார் பரமபத நெறியிற் புகுந்து மங்கிபகல்
புகரி லொளிகா னடவையணம் புகலு மகமை மருத்திரவி
நகல்செய் மதிய மின்வருண னிந்த்ர னாடாள் புருகதன்
பகரில் பிரம னின்னோரைத் தாசர் பரிவின் மகைப்படுத்தி. (௬௩.)

விரசை குளித்தன் மானவனே மேவ லுடனன் குழம்பெறுதல்
வரைசெய் துரைத்தற் கரியபரி யங்க மருவல் வாகீசனு (ஞுப்க
னுரைசெய் சோமான் றனையடைத லொழியாப் பிறவி யொருவினை
கரையில் போக சாயித்தைக் கைக்கொ டினிவ் வெளிக்களித்தார்.

என்றுங் கவிபி லேர்தொழிய விவையு மையா பிராமண்டிற்
கன்று மிதுவ மதிரின்மனே கலனு யுதநற் பரிசனத்தோ
டென்றும் பெருமான் றனையுலந்தி லமைத்த விராமா னுசதாசர்
கன்று முடலம் விடுத்தேகிக் கலங்காப் பெருநன் னகரடைந்தார். ()

கடவுள் கனைக்க ளெடுத்துரைத்துக் களித்தற் கரிய வுயர்கடையுந்
திடனுர் வைராக் கியஞ்சாந்தி செப்பும் பொறையா தியகுணங்கட்
கடலார் கடலே நிகர்தாச ரழியா விசையா லமைந்துனவ்
வுடலே யிக்க வுலகினிதீது மென்றும் விளக்க முறுவாரால். (௬௬)



மதிய மிரவி யுள்ளவரை வாழி யுலகி லிச்சரிதந்
துதிகொ ணிவிர்த்தி தருமமிகத் துலங்கி வளர நாளுரும்
பதிநன் றிருமா லின்னுரலைப் பற்றி யுவக்கத் திருவுளத்துக்
கதியை யுதவு மவனடியார் கணங்கள் வாழி வாழியவே. (௬௭)

அரியைப் பதியன் றனவணிக னலர்மேன் மங்கை மணவாள [பேர்ப்
னுரிய திருமாற் கடிமையென்று முருற்றுங் குலத்தன் கிருட்டினப்
பெரியன் புதல்வன் ருசருக்குப் பெயர னின்னூ லான்றேர்ச்சி
புரிக வென்னப் புரிந்தனன்பேர் புகல்வ ரரங்க நாதனென்றே. (௬௮)

பரமபதம் பெறு சருக்கம் முற்றிற்று.

இச்சருக்கம் பதினொன்றுக்குச் செய்யுள் ௬௦௮.

இராமாநுஜதாசர் சரிதை
முற்றுப்பெற்றது

# இராமாநுஜதாசர் துதி.

மன்னுதிரை சூழாழி வையத்தின் மேலாய
வடமலையி னின்ற வொருவன்
மனமுவந் தினிதுவந் தருள்கின்ற தாமரையை
மாப்பதியின் மன்னர் பின்ன
ரென்னவரு வம்சத் தினிற்சுமித் திரைவயி
னிலக்குவ னுதித்த நாள்மிக்
கிலங்கவந் தவதரித் தவனென்ன மானுக்
கிசைந்தசீர்ப் பணிகள் செய்தே
தன்னிகரி லாதபுகழ் நாமமுமி ராமாநு
சத்தாச ரென்ன வாய்ந்து
தாழ்விலாக் கவியப்த மைக்கொழியை யாயிரஞ்
சார்ந்தஜய வாண்டி லானி
பன்னுமத் தெய்தியி ராயபூ ரட்டாதி
பகர்கிருஷ்ண சஷ்டி நாளிற்
பாங்குடன் றிருநா டடைந்தநந் தேசிகன்
பதமலர் பழிச்சி வாழ்வாம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 3 | பொருவா | பொருவர் |
| 12 | 22 | கரணி | கரிணி (இக்கணம் வருமிடக்கோரும் கொள்க) |
| 14 | 30 | கட்டவர் | காட்டவர் |
| 30 | 20 | விளககி | விளக்கி |
| 41 | 21 | லவுவயவ | லவயவ |
| 47 | 12 | தாகிக் | தாகிச் |
| 71 | 19 | களந்த | கனந்த |
| 86 | 8 | யகனை | யகனைப் |
| 95 | 1 | வைபவக் | வைபவச் |
| ,, | 9 | வுதந்தேம | வுவந்தேம் |
| 112 | 9 | னவவர் | னவவர் |
| 115 | 8 | மவா | மவர் |
| 116 | 5 | வாடமா | வாடன்மா |
| 136 | 12 | கரிய | கறிய |
| 142 | 20 | தொப்பின | தொப்பின் |
| ,, | 21 | சவள | சவுள |
| 144 | 3 | டினைந்து | டுனைந்து |
| ,, | 16 | முற்றூா | முற்றூர் |
| 150 | 8 | பிலைத | பிலைத |
| 152 | 11 | சென்றே | சென்றே |